

பூங்கொடி பதிப்பகம்
பவானி
லக்ஷ்மி

குறிப்புதவி நூல்

578/24

894.8113

## நூல் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | பவானி |
| நூல் ஆசிரியர் | : | லக்ஷ்மி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாண்டு | : | நான்காம் பதிப்பு ஆக. 1984<br>ஐந்தாம் பதிப்பு ஜூன் 1987<br>ஆறாம் பதிப்பு ஜூலை 1993<br>ஏழாம் பதிப்பு மார்ச் 1995<br>எட்டாம் பதிப்பு செப்டம்பர் 2001<br>ஒன்பதாம் பதிப்பு சனவரி 2003 |
| உரிமை | : | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| வெளியீடு | : | பூங்கொடி பதிப்பகம்<br>14, சித்திரைக்குளம்<br>மேற்கு வீதி, மயிலாப்பூர்,<br>சென்னை-600 004. |
| பக்கங்கள் | : | 192 |
| நூலின் அளவு | : | கிரவுன் 18.5 × 12.5 செ.மீ. |
| எழுத்து | : | 10 புள்ளிகள் |
| தாள் | : | 10.9 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| அச்சிட்டோர் | : | நடராஜ் ஆப்செட்<br>சென்னை-5. |

விலை ரூ. 50-00

குறிப்புதவி நூல்

## பதிப்புரை

திருமதி ''லக்ஷ்மி'' அவர்கள் முதன் முதலில் எழுதிய நாவல் என்ற பெருமையை ''பவானி'' பெறுகிறது. பவானி தொடர்கதை ''ஆனந்த விகடன்'' வாரப் பத்திரிகையில் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் வெளிவந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டதாகும்.

இந்நாவலில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களான கதையின் நாயகி பவானி, அவளுடைய காதல் கணவர் சுந்தரவதனம், ஷண்முகம், வனஜா ஆகியோர் இந்நாவலுக்கு உயிரையும் சுவையையும் ஒருங்கே ஊட்டுபவர்களாவார்கள்.

இந்நாவலை வெளியிட அனுமதித்த டாக்டர் கே. மகேஸ்வரன் அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகும்.

— பதிப்பகத்தார்

## ''லக்ஷ்மி''யின்

## 'பூங்கொடி'' வெளியீடுகளில் சில...

| | ரூ. | பை |
|---|---|---|
| அடுத்த வீடு | 100 | 00 |
| அரக்கு மாளிகை | 125 | 00 |
| ஸ்ரீமதி மைதிலி | 95 | 00 |
| பண்ணையார் மகள் | 85 | 00 |
| பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு நூல்) | 50 | 00 |
| ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 75 | 00 |
| அத்தை | 28 | 00 |
| இரண்டாவது மலர் | 90 | 00 |
| இரண்டு பெண்கள் | 27 | 00 |
| உறவின் குரல் | 31 | 00 |
| கடைசி வரை | 25 | 00 |
| கதவு திறந்தால் | 54 | 00 |
| கூறாமல் சன்னியாசம் | 35 | 00 |
| திரும்பிப் பார்த்தால் | 30 | 00 |
| தை பிறக்கட்டும் | 21 | 00 |
| நதிமூலம் | 21 | 00 |
| நீலப்புடவை | 21 | 00 |
| பவளமல்லி | 50 | 00 |
| புதைமணல் | 32 | 00 |
| மாயமான் | 15 | 00 |
| மீண்டும் பிறந்தால் | 60 | 00 |
| மீண்டும் பெண்மனம் | 40 | 00 |
| முருகன் சிரித்தான் | 24 | 00 |
| மோகத்திரை | 32 | 00 |
| வனிதா | 36 | 00 |
| வசந்திக்கு வந்த ஆசை | 39 | 00 |
| உறவுகள் பிரிவதில்லை | 20 | 00 |
| வடக்கே ஒரு சந்திப்பு | 18 | 00 |
| வாழ நினைத்தால் | 18 | 00 |
| வீரத்தேவன் கோட்டை | 18 | 00 |
| ஜெயந்தி வந்தாள் | 24 | 00 |
| அவளுக்கென்று ஒரு இடம் | 42 | 00 |
| கழுத்தில் விழுந்த மாலை | 36 | 00 |
| இருளில் தொலைந்த உண்மை | 37 | 00 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 24 | 00 |



பச்சைப்பசேலென்று கண்ணைக் கவரும் பூஞ்சோலையின் மத்தியில் வெள்ளை வெளேரென்று ஆகாயத்தை நோக்கிக் கம்பீரமாக நிற்கும் அந்தக் கட்டடங்களைப் பார்த்த உடனே அது ஒரு சர்க்கார் கட்டடம் என்று சொல்லி விடலாம். ஆம் அது பெண்கள் கலாசாலை ஒன்றைச் சேர்ந்த ஹாஸ்டல் கட்டடம்.

அஸ்தமிக்கும் சூரியன் தன் பொன் மயமான கதிர்களை நாலாபுறமும் வாரி வீசிக் கொண்டிருந்தான். துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் மனத்தையும் மகிழ்ச்சி அடையச் செய்யும் அந்த இன்பமான வேளையில் ஹாஸ்டலே குதூகலத்தில் மூழ்கி இருப்பதுபோல் தோன்றியது.

கலகல என்று வெண்கலச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு டென்னிஸ் விளையாடும் நங்கைகளையும், மரத்தடியில் தரைமீது கும்பலாக உட்கார்ந்துகொண்டு சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் பெண்களையும், மேலும் கீழும் ஒய்யாரமாக அசைந்து உலாவிக் கொண்டிருக்கும் நாகரிகமணிகளின் தோற்றத்தையும் பார்த்தால் 'இவர்களுக்குக் கவலை என்பது கிஞ்சித்தும் கிடையாதோ' என்ற எண்ணமே சாதாரணமாகத் தோன்றும். அன்றுதான் வருஷப் பரீட்சைக்கு பிறகு கலாசாலையை மூடுகிறார்கள். மாணவிகள் யாவரும் பரீட்சையின் தொல்லையிலிருந்து விடுபட்டுத் தத்தம் ஊர்களுக்குப் போகப் போகிறார்கள். அவர்கள் குதூகலமாக இருப்பதைப்பற்றிக் கேட்பானேன்.

தோட்டத்தின் ஒரு கோடியிலிருந்த பெரிய மாமரத்தினடியில் மணற்பரப்பின் தரைமீது நாலைந்து பெண்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்குள் தாராளமாக சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

''ரமணி! இந்த வருஷத்துடன் உன் படிப்பு முடிந்து விடுகிறதே, பிறகு நீ என்ன செய்யப் போகிறாய்'' என்று பங்கஜம் கேட்டாள்.

''பிற்காலத்தைப்பற்றி ஒன்றும் திட்டமாகச் சொல்ல முடியாது. என் அப்பாவின் இஷ்டப்படி நடப்பேன்'' என்று கவலையுடன் பதில் அளித்தாள் ரமணி. அவளுடைய பதில் மற்றப் பெண்கள் மனத்தில் தங்களுடைய பிற்காலத்தைப் பற்றிய எண்ணத்தைக் கிளப்பியது. ''படிப்பு படிப்பு என்று மூச்சுவிடாமல் படித்தோம்! அதற்கும் இப்போது முடிவு வந்துவிட்டது. இனி என்ன செய்யப் போகிறோம்?' என்ற கவலை எல்லோருடைய மனதிலும் ஏக காலத்தில் எழுந்தது.

''நீ என்ன செய்யப்போகிறாய், மீனு?'' என்று பங்கஜம் மற்றொரு பெண்ணைப் பார்த்துக் கேட்டாள்.

''நான் கல்யாணம் செய்துகொண்டு புருஷனுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருக்கப் போகிறேன்'' என்று மீனு துணிச்சலாகப் பதிலளித்ததைக் கேட்ட மற்ற எல்லாப் பெண்களும் சிரித்தார்கள்.

பேச்சின் நடுவே திடீரென்று பங்கஜம் கொஞ்ச தூரத்தில் ஒரு முல்லைக் கொடியருகில் நின்று கொண்டிருந்த ஒரு பெண்ணை எல்லோருக்கும் சுட்டிக்காட்டி ''பெண்ணாய்ப் பிறந்தாலும் பவானியாய்ப் பிறக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டாள்.

''ஏன்? நாம் பெண்ணாய்ப் பிறந்ததில் என்ன குறைவு ஏற்பட்டதாம்? என்று துடுக்காகக் கேட்டாள் வைதேகி.

''ஏனோவா? பவானியைப் போன்ற அழகுள்ள பெண்ணை நம் கலாசாலையிலேயே நான் பார்த்ததில்லை. நடுத்தரமான உயரம்; உயரத்திற்கேற்ற பருமன்; எடுப்பான மூக்கு; அகன்ற நீண்ட கண்கள்; இடுப்புவரை தொங்கும் பின்னல் ஒன்றின் அழகு மட்டுமே எல்லோருடைய இதயத்தையும் கவர்ந்து விடுமே'' என்று பங்கஜம் வர்ணித்துக் கொண்டிருக்கையில் வைதேகி அவளை இடைமறித்து ''போதும்! உனக்கு பவானியை மிகவும் பிடிக்குமென்றால் அதற்காக இப்படிப் பைத்தியம் மாதிரி



அவள் அழகை வர்ணித்துக் கொண்டிருக்க வேண்டாம். நீ சொல்வதுபோல் பவானி பிரமாத அழகி ஒன்றுமில்லை. கவர்ச்சிகரமான தோற்றம் இருக்கிறது. அவ்வளவுதான்'' என்று கோபமாகப் பேசினாள்.

''இல்லை, வைதேகி. நம் கலாசாலை பிரின்ஸ்பால ருக்மணி அம்மாள்கூட அன்று சொல்லிக் கொண்டிருந்தாள். பவானியின் கண்களைப் போன்ற அழகிய கண்களை அவள் இதுவரை பார்த்ததே இல்லையாம்! அதனால் அதை நீ ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்'' என்று சமாதானம் பேசினாள் மீனு.

''நீ என்ன சொன்னாலும் சரி, நான் ஒத்துக்கொள்ளப் போவதில்லை. 'அண்ணாரை கண்டேரி' யாராயிருந்தாலும் கொஞ்சம் மையை ஏராளமாகப் பூசிக்கொண்டால் கண்களுக்கு அழகு கொடுத்து விடுகிறது. பவானியின் அழகு முழுதும் செயற்கையே என்பது என் அபிப்ராயம்'' என்று பிடிவாதமாக வைதேகி சொன்னது அதுவரை பேசாமல் உட்கார்ந்திருந்த ஜானகியின் கோபத்தைத் தூண்டிவிட்டது

''ஆமாம்! நீ கூடத்தான் அன்று நடந்த டீ பார்ட்டிக்குக் கண்களில் மையை அப்பிக்கொண்டு வந்திருந்தாய். ரொம்ப அழகாயிருந்தாய் என்று நினைத்துக் கொண்டாயாக்கும்! பாதிக் கன்னம்வரை வழிந்த மையுடன் நீ பூனைக் குட்டி மாதிரி இருந்ததை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறதே! எல்லா நாகரிகமும் சில பேருக்குத்தான் பொருந்தும். அதையாவது ஒத்துக் கொள்கிறாயா? என்று கேட்டாள்.

எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள். வைதேகியின் முகம் அவமானத்தினால் கருத்தது. ஆனாலும் தொடர்ந்து பிடிவாதமாக, ''நீங்கள் எல்லோரும் என்னதான் சொன்னாலும் நான் பவானியை ஒரு அழகி என்று ஒப்புக் கொள்ள மாட்டேன். அவள் செய்கிறதெல்லாம் டாம்பீகமும் கர்வமுமாய்த்தான் இருக்கிறது. அவள் ஒற்றை மூக்கில் அணிந்திருக்கும் வைர எட்டுக் கல் பேசரி

யையும், காதுகளிலே மின்னும் வைரத் தோடுகளையும், நீக்கி விட்டால் அவள் நம்மைப்போல் சாதாரண ரகத்தைச் சேர்ந்தவள்தான்'' என்று வைதேகி மடமட என்று பேசினாள்.

இதைப் பொறுக்க மாட்டாமல் கோமதி திடீரென ''அதெல்லாம் கிடக்கட்டும், வைதேகி! பவானியின் அழகை விட்டுத் தள்ளு. அவள் மற்ற விஷயங்களிலாவது நம்மைவிட உயர்ந்தவள் என்பதை ஒப்புக் கொள்கிறாயா? வகுப்பில் அவள் மிகவும் கெட்டிக்காரியாக இல்லையா? பி.ஏ. படித்தும் நாலு வாக்கியம் சேர்ந்தாற்போல் இங்கிலீஷில் பேசத் தெரியாமல் தப்பும் தவறுமாக உளறும் சில பெண்களைப் போலில்லாமல் பவானி இங்கிலீஷில் பேசினால் இன்று முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாமே! தமிழில்தான் சொல்லேன்; அவளுக்கு இருக்கிற தேர்ச்சி உனக்கும் எனக்கும் எங்கே இருக்கிறது?'' என்று கூறி முடித்தாள்.

''மற்ற விஷயங்களை விட்டு விட்டாயே, எவ்வளவு இனிமையாகப் பாடுவாள் எப்படி அற்புதமாக வீணை வாசிப்பாள், தெரியுமா? எல்லா விதத்திலும் அவள் கெட்டிக்காரி, அதிர்ஷ்டசாலிதான். அப்பாவிற்கு ஒரே பெண், செல்லப் பெண்; பணக்காரி. அவளைக் கல்யாணம் செய்து கொள்கிறவன் கொடுத்து வைத்தவன்'' என்று ஜானகி சொல்லிப் பெருமூச்சுவிட்டாள்.

''நீங்கள் எல்லோரும் பவானியின் 'விசிறி'கள் போலிருக்கிறது. அதனால்தான் ஒரே முட்டாக இப்படி அவளைப் புகழ்கிறீர்கள்! அவளுக்குத் 'தான்' என்ற கர்வம் அதிகம் உண்டு. எப்போதும் அவள் குடும்பப் பெருமைதான் அவளுக்கு. எல்லோரையும்விட தான் ஒருபடி உயர்ந்தவள் என்ற எண்ணம்...என்ன இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அகம்பாவம் ஆகாது!'' என்று வைதேகி கூறி, உதட்டைப் பிதுக்கித் தலையை ஆட்டினாள். இப்படி எதிர் வாதம் செய்ததனாலோ என்னமோ அவளுக்கு மூச்சுத் தடுமாறியது.



இதுவரை தூரத்தில் தனியாக உலாவிக்கொண்டிருந்த பவானி தன் சிநேகிதிகள் மாமரத்தடியில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்து, அந்தப் பக்கம் வரத் திரும்பினாள்.

''போதும்! பவானி வருகிறாள். அவளைப்பற்றி இனியும் பேசிக் கொண்டிருக்க வேண்டாம்'' என்று மீனு எச்சரிக்கவே, பவானியின் அழகைப்பற்றிய விவாதம் முடிவிற்கு வந்தது.

## 2

பவானி தன் சிநேகிதிகள் பக்கம் வந்தவள் புன்னகையுடன் தானும் அந்த மரத்தடியில் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''இந்த வருஷம் படிப்பிற்குப் பிறகு மீனு கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாளாம். நீ என்ன செய்யப் போகிறாய், பவானி?'' என்று பங்கஜம் எடுத்த எடுப்பிலேயே கேட்டாள்.

பவானிக்குப் பேச இடம்விடாமலே வைதேகி, ''மேலே எம்.ஏ.க்குப் படிப்பாள் போலிருக்கிறது'' என்று கூறினாள்.

''இல்லை! பி.ஏ. பட்டத்துடன் நான் வீட்டில் இருந்து விடப்போகிறேன். ஆசைக்காக நான் படித்தேனே ஒழிய உத்தியோகம் செய்யப் படிக்கவில்லை அதனால்...'' என்று பவானி பனிச்சென்று பதிலளித்தாள்.

''வீட்டில் இருக்கப் போகிறேன் என்றால் என்ன அர்த்தம்? கல்யாணம் செய்துகொள்ளப் பொகிறேன் என்று சொல்லிவிட்டுப் போயேன், பவானி'' என்று கோமதி பரிகாசமாகக் கேட்டதும் பவானியின் முகம் நாணத்தால் சிவந்தது.

''இப்பொழுது கல்யாணம் செய்து கொள்வதாக உத்தேசமில்லை'' என்று பவானி இழுத்தாற்போல் சொன்னாள்.

''இப்படிச் சொன்னவர்கள் எத்தனையோ பேர்! சிவகாமியைத் தெரியாதா உங்களுக்கு? மூன்று வருஷங்

களுக்கு முன்பு இதே கலாசாலையில் படித்து பி. ஏ. பட்டம் வாங்கினாள். அடிக்கடி அவளுந்தான் 'சீ இதென்ன வாழ்க்கை! ஸ்திரீகள் என்று ஜன்மம் எடுத்துவிட்டால் எவனையாவது கல்யாணம் செய்து கொண்டு, குழந்தை குட்டிகளுடன் சம்சார சாகரத்தில் உழல வேண்டும் என்ற விதியா? நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை. வாழ்நாட்களைச் சமூகத் தொண்டில் கழிக்கப் போகிறேன்' என்று பீத்திக் கொள்வாள். நேற்று அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. கல்யாணமாகி மூன்று வருஷங்கள் ஆகவில்லை. இரண்டு குழந்தைகளுக்குத் தாயாராகி விட்டாள். 'பொதுஜன சேவையாவது மண்ணாங்கட்டியாவது! குடும்பத்தைச் சரிவரக் கவனிப்பதைவிட ஸ்திரீகளுக்கு உலகில் முக்கிய வேலை வேறொன்றுமில்லை என்பது என் அபிப்பிராயம்' என்று எழுதி இருந்தாள். இப்படியேதான் எல்லோரும்?'' என்று பரிகாசமாகச் சிரித்தாள் வைதேகி.

பவானிக்கு அவள் தன்னைக் குத்திப் பேசியது பிடிக்கவில்லை. ''நான் சிவகாமியைப்போல் சன்யாசினியாக இருக்கப் போவதாகப் பிதற்றவில்லையே! இப்பொழுது கல்யாணம் பண்ணிக்கொள்வதாக உத்தேசமில்லை என்று தானே சொன்னேன்?'' என்று சுடச்சுடக் கேட்டாள்.

''ஏன் இப்படிக் கோபித்துக் கொள்கிறீர்கள்! கல்யாணம் என்பது லேசா? கடைத்தெருவில் விற்கும் சாமானா, விலை கொடுத்து வீச நாழிகையில் வாங்கிவிட?'' என்று மீனு நடுவில் கேட்டு வைத்தாள்.

''படிப்பு படிப்பு என்று மூச்சுவிடாமல் விழுந்தடித்துக் கொண்டு படிக்கிறோம். அதற்கும் ஒரு முடிவு வந்து விடுகிறது. அதற்குப் பிறகு என்ன செய்வதென்ற யோசனை வந்து மனதைக் கவலைக் குள்ளாக்குகிறது. படிப்பிற்குப் பிறகு உத்தியோகம் செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்போதும் நம் வாழ்க்கையின் இலட்சியத்திற்கு முடிவு ஏற்படவில்லைபோல் தோன்றுகிறது. என்னதான் படித்தாலும் நமக்கு நம்மைக் காத்துக்கொள்ளும் சக்தி



கிடையாது. ஒரு துணை வேண்டுமென்று கல்யாணம் செய்து கொள்ள உத்தேசிக்கிறோம்'' என்று பிரசங்கித்தாள் கோமதி.

''புருஷத் துணைக்காக என்று நீயாக யோசித்துக் கல்யாணம் செய்துகொள்ளும் வரை உன்னை யார் விட்டு வைக்கிறார்கள்? வீட்டில் இருக்கும் அத்தைக்கும் பாட்டிக்கும் நம்மை இல்லறத்தில் வீழ்த்துவதைவிட வேறு என்ன வேலை இருக்கிறது? நம் சமூகத்தில் கன்னிகையாகவே காலங்கழிக்கும் ஸ்திரீகள் மிகவும் கொஞ்சம். ஐரோப்பா அமெரிக்காவிலேதான் சரியான புருஷன் கிடைக்காவிட்டால் ஸ்திரீகள் கன்னிகையாகவே இருந்துவிடுவார்களாம். பூனைக்குட்டிகளுக்கும் பைத்திய ஆஸ்பத்திரிகளுக்கும் கடைசி காலத்தில் தங்கள் சொத்தை எழுதி வைத்துவிட்டுப் போவார்களாம்'' என்று மீனா 'லெக்சர்' செய்தாள்.

''ஹைஸ்கூலில் சின்னஞ்சிறு பெண்ணாகப் படிக்கும் போதுதான் 'உத்தியோகம் செய்யவேண்டும், கல்யாணமே செய்துகொள்ளக் கூடாது' என்ற எண்ணம் தோன்றுகிறது. அதற்குப் பிறகு கலாசாலையில் காலை வைத்ததும் உலகமே காதல் மயமாகத் தோற்றம் அளிக்கிறது. கலாசாலைப் படிப்பு முடிந்ததும் நமக்கு வாழ்க்கையில் ஸ்திர எண்ணம் ஏற்படுகிறது. கல்யாணம் செய்துகொண்டு எல்லோரும் போல வாழவேண்டும் என்ற ஆசை நமக்கும் ஏற்பட்டு விடுகிறது. இதை எல்லாம் பார்த்தால் சில சமயம் இவ்வளவு கஷ்டப்பட்டு எதற்காகப் படித்தோம் என்று கூடத் தோன்றி விடுகிறது. பேசாமல் வீட்டிலிருக்கும் அம்மாக்களைப்போல் பதினைந்தாவது வயதிலேயே கல்யாணம் பண்ணிக் கொண்டு குடித்தனம் செய்ய ஆரம்பித்திருந்தால் பிற்கால வாழ்க்கையைப்பற்றித் தற்போது நமக்கு ஏற்பட்டிருக்கும் கவலைகூட ஏற்பட்டிருக்காது'' என்று பங்கஜம் சொன்னாள்.

''வீட்டில் குடித்தனம் செய்யும் ஸ்திரீகள் மட்டும் ரொம்ப விச்ராந்தியாக இருந்து விடுகிறார்களாக்கும்! அவர்களும்தான் 'என்ன வாழ்வு' வேண்டி இருக்கிறது விடிந்

ததும் விடியாததுமாகப் புருஷனுக்குப் பொங்கிப் போட்டுக் கொண்டு, உல்லாசமாக ரிக்ஷாவில் உட்கார்ந்துகொண்டு அடுக்குப் புஸ்தகங்களை மடிமேல் தாங்கிக் கொண்டு உலகத்தையே அலட்சியமாக நோக்கும் பாவத்தில் நகத்தைக் கடித்துக் கொண்டு கலாசாலை செல்லும் பெண்களைப்போல் நாமும் இருக்கக் கூடாதா? எதற்கெடுத்தாலும் கலகல என்று பல்லைக் காட்டி நகைக்கும் இவர்களுக்கு வீட்டில் உப்பில்லை, பருப்பில்லை என்ற கவலை ஏதாவது உண்டா? என்று நம்மைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்களே! ஆகமொத்தத்தில் எல்லோருடைய வாழ்க்கையிலும்பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. எப்பொழுதும் தூரத்துப் பச்சை கண்களுக்குக் குளிர்ச்சியாகத் தோன்றும்'' என்று பவானி பேசினாள்.

''அதெல்லாம் விட்டுத்தள்ளு! இப்போது நாம் எல்லோருமே கல்யாணம் செய்துகொள்ளப் போகிறோம் என்று வைத்துக் கொள்வோம். எங்கே ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட கணவன் வேண்டும் என்பதை மறைக்காமல் சொல்லுங்கள். ஒவ்வொருவருடைய இலட்சியங்கள் மற்றவருக்குத் தெரியட்டும்'' என்று வைதேகி சொல்லவே, எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.

பங்கஜம்தான் எல்லோருக்கும் முதலாகப் பேச ஆரம்பித்தாள். ''நான் கல்யாணம் செய்துகொள்ளப்போகும் புருஷன் இருபத்தைந்து வயதிற்கு மேற்பட்டிருக்கக் கூடாது. சிகப்பாகவும், ஒல்லியாகவும், உயரமாகவும் இருக்க வேண்டும். சுருட்டைக் கிராப்புத் தலையும், புல் ஸூட்டுமாக நாகரிக ரகத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். பெரிய வேலையில் இருக்கவேண்டும்? நாத்தனார், மாமியார் முதலிய பிக்கல் பிடுங்கல்கள் இருக்கக் கூடாது...?''

''இவ்வளவு குணம் பொருந்திய புருஷன் உன்னை என்னத்தைக் கண்டோ கல்யாணம் பண்ணிக்கொள்ள வருகிறான்? இருந்தாலும் உனக்கு ரொம்பப் பேராசை'' என்றாள் வைதேகி.



''என் இலட்சியக் கணவன் இருபத்தெட்டு வயதிற்கு மேற்படாத ஒரு ரயில்வே இன்ஜினியர். மாமியார் நாத்தனார் இருந்தால்கூடப் பரவாயில்லை. அவர்களை என் கைக்குள் போட்டுக் கொள்ள எனக்கு சாமர்த்தியமுண்டு'' என்று மீனு சொன்னாள்.

''நான் ஒரு டாக்டரைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். மேல் படிப்பெல்லாம் படித்துவிட்டுப் பெரிய ''பிராக்டிஸ்'' உடைய அழகிய இளைஞரான டாக்டர்தான் என் இலட்சியப் புருஷர்'' என்றாள் வைதேகி.

''பேஷ், வைதேகி! உனக்கு ஆசை கொஞ்ச நஞ்சமல்ல. பெரிய பிராக்டிஸ் உடைய டாக்டர்கள் எல்லோரும் முக்கால்வாசிப் பேர்கள் கிழவர்களாகத்தான் இருப்பார்கள். ஆழம் பார்த்துக் காலை வை'' என்று ஜானகி பரிகாசமாகச் சொல்லவே எல்லொரும் கொல்லென்று சிரித்தார்கள்.

பவானியின் முறை வந்தபோது அவள், ''என் இலட்சிய புருஷர் குறைந்தது முப்பத்தைந்து வயதாவது இருப்பார். அவருடைய அழகைப்பற்றியும் அந்தஸ்தைப் பற்றியும் எனக்குக் கவலை கிடையாது. ஆனால் அவர் பரந்த நோக்கமுடையவராகவும், நன்றாகப் படித்தவராகவும், ஆழ்ந்த அறிவுடையவராகவும் இருக்க வேண்டும். அவரை நான்...'' என்று ஆரம்பித்தாள்.

ரேணுகா கையைக் கொட்டிக்கொண்டே, ''நீசொல்வது வேடிக்கையாக இருக்கிறதடி! முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர் கிட்டதட்டக் கிழவராச்சே! அநேகமாக அந்த வயதுடையவர்களுக்குக் கல்யாணமாகி இருக்குமே! எல்லா பெண்களும் சின்னஞ்சிறு யுவர்களைத்தான் மணந்து கொள்ள விரும்புவார்கள். நீ சொல்வது ரொம்ப அதிசயமாயிருக்கிறதடி!'' என்றாள்.

''ஒருவேளை பவானிக்கு 'வாலிபனின் அடிமையாக இருப்பதைவிடக் கிழவனின் காதலியாக இருக்கலாம்' என்று யோசனை இருக்கும் போலிருக்கிறது'' என்று கேலியாக வைதேகி பதில் அளித்தது பவானிக்கு ரோஷமுண்டாக்கியது.

''அப்படி ஒன்றுமில்லை! இருபத்தைந்து வயது வாலிபனை மணந்துகொள்ள நாம் எல்லோரும் பதிமூன்று வயது குழந்தைகளா? பி. ஏ. படித்து முடித்து கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற முடிவிற்கு வருவதற்குள் நமக்குக் கிட்டத்தட்ட இருபத்திரண்டு வயதாவது ஆகிவிடுகிறது. அதற்கு மேல் இருபத்தைந்து வயது வாலிபனை எப்படி மணந்துகொள்வது? புருஷர்கள் குறைந்தது முப்பது வயதாவது தாண்டாதவரையில் அறிவில் முதிர்ச்சி அடைவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் அசட்டுக் குணமும், வாழ்க்கையில் ஸ்திர எண்ணமும் இல்லாத சின்ன வயது வாலிபனை மணந்து கொள்வதைவிட, நல்ல ஆழ்ந்த அறிவுள்ள புருஷர் சற்று வயதானவராக இருந்தால்கூடப் பரவாயில்லை; மணந்து கொள்ளலாம் என்றுதான் சொல்வேன்'' என்று காரமாகச் சொல்லி முடித்தாள்.

''அப்படி நீ சொல்லும் அந்த ஆழ்ந்த அறிவுள்ள ஞானி முப்பத்தைந்து வயதுவரை பிரம்மச்சாரியாக இருப்பது நமது சமூகத்தில் துர்லபமே. அதற்கென்ன செய்யப் போகிறாய், பவானி?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டாள் மீனு.

''இரண்டாவது விவாகம் செய்து கொள்பவராக இருந்தாலும் எனக்குப் பரவாயில்லை. ஒருவருடைய குணம் தெரியாமல் கல்யாணம் செய்துகொள்ள என் மனம் சம்மதிக்காது'' என்றாள் பவானி.

''நீ சொல்வதைப் பார்த்தால் உனக்கு ஒரு புருஷன் மேல், அவருடைய ஆழ்ந்த அறிவிற்காகக் காதல் ஏற்பட வேண்டும். அவர் குணம் பிடித்திருக்க வேண்டும். பிறகு தான் கல்யாணம் செய்து கொள்வாய் போலிருக்கிறது. 'கண்டதும் காதல்' என்கிறார்களே, பவானி! அதற்கென்ன சொல்வாய் நீ?'' என்று கேட்டாள் ஜானகி.

''அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. என் மனதைக் கவரும் புருஷர் என்னைவிட அறிவில் உயர்ந்தவராய் இருக்க வேண்டுமென்பது ஒன்றுதான் முக்கியம்.



படித்த பெண் ஒருத்தி சாதாரணமாகத் தன்னைவிட அதிகம் படித்தவரையேதான் விரும்புவாள். அசடனுடன் வாழ்க்கை நடத்த அவளால் முடியாது. ஆனால் ஒரு பெரிய ஞானி, படிப்பில்லாத ஒரு ஸ்திரீயுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தக்கூடும். மனிதன், ஒரு ஸ்திரீ தனக்கு சமமாக இருப்பதிலேயே பெருமை கொள்கிறான் ஆனால் ஸ்திரீயோ மனிதனுக்கு எப்பொழுதும் தாழ்ந்த ஸ்திதியில் இருந்து அவனால் ஆளப்பட ஆசைப்படுகிறாள். இது உலகில் நெடுங்காலந் தொட்டு ஏற்பட்ட ஓர் உணர்ச்சி. இதை மறந்து நாம் எப்படி வேறுவிதமாகப் பேச முடியும்?'' என்று நீண்ட பிரசங்கம் ஒன்று செய்து முடித்தாள் பவானி.

''நீ சொலவது வாஸ்தவமென்றாலும், உன் கொள்கை என்னவோ எங்களுக்கு விசித்திரமாகத்தான் தோன்றுகிறது'' என்று வைதேகி சப்புக் கொட்டினாள்.

''எல்லோருமே ஒருவிதமான அபிப்ராயம் கொண்டிருந்தால் அப்புறம் உலகத்தில் சுவாரஸ்யமிருக்காதல்லவா? அதற்காக நான் விசித்திரமான கொள்கைகளைக் கொண்டிருக்கிறேன்'' என்று எகத்தாளமாகவே பவானி சொல்லிவிட்டு, மேலே வளர்த்த இஷ்டமில்லாதவளாகச் சட்டென்று அவ்விடத்தைவிட்டு எழுந்து அப்பால் சென்றுவிட்டாள்.

அவள் சென்றதும் வைதேகி மற்ற பெண்களின் பக்கம் திரும்பி, ''பார்! நான் சொன்னதில் என்ன தப்பு? பவானிக்கு எப்பவும் கர்வம் உண்டு என்றேனே! கல்யாணத்தைப்பற்றிய தன் அபிப்ராயங்கூட நம்முடையதைவிட ஒருபடி உயர்ந்தது என்ற அர்த்தத்தில் பேசிவிட்டுப் போகிறாளே! வீண் கர்வி! தேவலோகத்திலிருந்து குதித்தவள்போல் நினைவு! ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் இவள் அகம்பாவம் அடங்காமல் போகாது!'' என்று படபடத்தாள்.

''போதும்! எனக்குத் தலைவலியே வந்துவிட்டது! வாருங்கள், போகலாம்'' என்று மீனு சொல்லவே பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள் வைதேகி.

# 3

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே இருபத்தெட்டு மைல்கள் ஒரே திசையாகப் போனால் ஒரு ரமணியமான கிராமம் கண்களில் தென்படும். அதுதான் பூஞ்சோலை என்று பெயர் கொண்ட கிராமம்.

இந்தக் கிராமத்தின் வளமை பெருமை எல்லாம் என்னால்தான் ஏற்பட்டது என்று கர்வத்துடன் கூறிக்கொண்டு ஒய்யாரமாகப் போவது போன்றிருக்கும் ஊருக்கு ஒரு மைல் தூரத்தே ஓடும் காவேரி நதியின் வெள்ளப் பெருக்கு. அக்கரை தெரியாது அவ்வளவு அகலமாக வியாபித்துக் கொண்டு ஜிலுஜிலுவெனப் புது மணலரித்துச் செல்லும் காவேரி நதியைக் கிராமவாசிகள் 'அகண்ட காவேரி' என்று செல்லப் பெயரிட்டழைப்பார்கள். கரை ஓரத்தில் செழித்து வளர்ந்திருக்கும் தர்ப்பைப் புதர்களும், சவுக்கு மரங்களும், கிளிமூக்கைப்போன்ற சிவந்த பழங்களைக் கொண்ட கொடுக்காய்ப்புளி மரங்களும் அந்தப் புனித நதிக்குத் தாங்கள் அழகு செய்ய பின்வாங்கிவிட மாட்டோமென்பது போல் உல்லாசமாகக் காற்றில் அசைந்து கொண்டு ஓங்கி உயரமாக நிற்கும் காட்சி கண்களுக்கு ஒரு விருந்து என்று சொல்லலாம்.

அகண்ட காவேரி தீர்த்தத்தில்தான் ஆத்மாக்கள் அமைதியைக் கண்டன என்பதுபோல, கரை ஓரத்தில் ஒரு பக்கமாக வெள்ளை அடிக்கப்பட்ட பல சமாதிகள் செடி கொடிகளால் மூடப்பட்டுக் கொஞ்சம் கொஞ்சம் இங்குமங்கும் தென்படும். அந்தக் கிராமவாசிகளுக்கு மட்டும் நதியில் கண்ணை மூடி இறங்கி விட்டால் காவேரி அம்மன் மோக்ஷ லோகத்தில் கொண்டு போய்த்தான் நிறுத்துவாள் என்பது நிச்சயம்.

நதிக்கரையை விட்டுக் கொஞ்சம் உள்ளே வந்து பார்த்தால், ஆகா எப்பேர்ப்பட்ட அற்புதக் காட்சிகள் தென்படும்! பச்சைப் பசேலெனக் கண்களுக்கெட்டிய தூரம்வரை ஒரே வெற்றிலைக் கொடி மயந்தான்!



இணைபிரியாத தோழி போன்று அகத்திச் செடிமீது படர்ந்துகொண்டிருக்கும் வெற்றிலைக் கொடியில் தளிர் இலைகள் இளஞ்சூரிய வெளிச்சத்தில் தங்கத் தகடுகள் போல் மின்னுவதைக் கண்டால், கிராமத்தின் செல்வம் முழுவதும் வெற்றிலைக் கொடியிலிருந்துதான் வந்தது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். இந்தக் கிராமத்திற்குப் பூஞ்சோலை என்ற பெயரைவிட வெற்றிலைச் சோலை என்ற பெயர் மிகப் பொருந்தும் என்றுகூடத் தோன்றும்.

''ஏறு மயிலோனே...ஒண்ணு!
எனக்கு உன் அருள் தாராய் இரண்டு!!''

என்ற கீதம் அதிகாலையில் காதில் விழுந்தால் சிவஞானம் பிள்ளையின் வெற்றிலைக் கொடிக்கால்களுக்கு நாச்சியப்பன் தண்ணீர் பாய்ச்சுகிறான் என்று அர்த்தம்.

பசுமையான வயல்களுக்கு அப்பால், ஊருக்குச் சற்று ஒதுக்குப்புறமாக நிற்கும் நீலக் கட்டடந்தான் 'பவானி விலாஸ்' என்னும் சிவஞானம் பிள்ளையின் பங்களா. பிள்ளையின் பெயரைக் கேட்டால் அழுத பிள்ளையும் வாயை மூடும் என்பார்கள் கிராமவாசிகள். அவ்வளவு செல்வாக்கு உடையவர். அவரை ஊர் ஜனங்கள் 'பெரிய வீட்டுப்பிள்ளை' என்றுதான் சொல்லுவார்கள். கிராமத்தில் உள்ள முக்கால்வாசி வெற்றிலைக் கொடிக்கால்களும், சுமார் நானூறு ஏக்கர் நஞ்சை நிலங்களும் பிள்ளை அவர்களைச் சேர்ந்தவையே.

சிவஞானம் பிள்ளைக்கு வயது ஐம்பதாகிக் கொண்டிருந்தது. பார்ப்பதற்கு உயரமான கம்பீரமான தோற்றமுடையவர். விசாலமான நெற்றியும் எடுப்பான மூக்கும் அவர் பால்யத்தில் மிக ரம்யமான தோற்றமுடையவராயிருந்தார் என்பதை எடுத்துக்காட்டின. வெள்ளைக்கதர் வேஷ்டியின் ஓரத்தைக் கையில் பிடித்துக்கொண்டு அவர் நிதானமாக நடந்து வருவது 'ராஜபார்ட்' வேஷக்காரன் மேஜைமீது ராஜநடை நடப்பதைத் தோற்கடிக்கும்.

பிள்ளைக்கு, பவானியைத் தவிர வேறு சந்ததி கிடையாது. அவருடைய பரந்த நெற்றியில் விசனத்திரைகள் விழுந்திருப்பதன் காரணம் அவர் இல்லத்தில் ஏற்பட்ட ஒரு கொடுமையான சம்பவமே.

நளினதயாக்ஷி அம்மாளைப் போன்று அழகிலும் குணத்திலும் யாரும் அந்த ஜில்லாவிலேயே கிடையாது என்று பிரசித்தம். அப்படிப்பட்ட மனைவியுடன் தஞ்சை ஜில்லாப் போலீஸ் சூப்ரண்டென்ட் வேலை பார்த்து வந்தார் பிள்ளை. பூஞ்சோலை கிராமம் எதற்காவது பெருமை அடித்துக் கொள்ள வேண்டுமானால் அது சிவஞானம் பிள்ளையைப் படிப்பிற்காகச் சீமைக்கு அனுப்பினதற்காகத் தானிருக்கும். கிராமத்தில் பிறந்த நாட்டுப்புற மிராசுதாரின் மகனான சிவஞானம் பிள்ளை சீமைக்கு சென்று படித்துவிட்டு எடுத்த எடுப்பில் *'சர்க்கிள்'* வேலையை ஒப்புக் கொண்டு ஒரே வருஷத்தில் டிப்டி சூபரண்டாகி விட்டார் என்றால் ஏன் ஜனங்கள் மூக்கின்மீது விரலை வைக்க மாட்டார்கள்!

நளினதயாக்ஷிமீது பிள்ளை அவர்கள் உயிரையே வைத்திருந்தார். இரண்டு வருடங்கள் வாழ்க்கை சொர்க்கமாகப் பிரமை அளித்தது பிள்ளைக்கு. பவானி பிறந்தாள். அதற்குப் பிறகுதான் அந்தச் சம்பவம் நடந்தது! பிள்ளை மனத்தை விட்டு அதன் கொடூரம் ஒருநாளும் அகலவில்லை!

அந்த வருஷம் முழுவதும் பிள்ளைக்கு வேலை அபாரமாக இருந்தது. குமரத்தேவன் என்ற ஒரு பெரும் கொள்ளைக்காரனைப் பிடிப்பதில் அப்போது மும்முரமாக ஈடுபட்டிருந்தார். வீட்டில் தங்கியதுமில்லை. தங்கினாலும் அதே கவலையாய் இருந்தார். திருடனுடன் நட்பு வைத்துக் கொண்டிருந்த நீலாம்பாள் என்ற தாசியை, திருடனைப் பிடிக்கும் நிமித்தம் உளவுகள் விசாரிக்க வேண்டியிருந்தது. அது விஷயமாக நீலாம்பாளைத் 'தாஜா' செய்ய சிவஞானம் பிள்ளை அவள் கிரகத்திற்கு அடிக்கடி போக நேர்ந்தது. தன்னுடன் புருஷன் சரியாக முகங்கொடுத்துப் பேசாததும் நீலாம்பாள் வீட்டிற்குப் போகிறார் என்று சில வம்பர்கள் சொன்னதும் நளினதயாக்ஷி அம்மாளுக்குத் தன் கணவனின் நடத்தையைப் பற்றித் தவறான சந்தேகம் கொள்ளப் போதுமான அத்தாட்சிகளாக அமைந்தன.



ஒரு வெள்ளிக்கிழமை தினம் சாயங்காலம் கொள்ளைக்காரனைக் கைது செய்துவிட்ட சந்தோஷ சமாசாரத்தை மனைவியிடம் சொல்லி மகிழ ஓடிவந்தார் பிள்ளை.

''நளினா! என் மனம் சந்தோஷத்தால் துள்ளுகிறது!'' என்று பிள்ளை தமது மனைவியிடம் குஷியாகப் பேசினார்.

''பொறுங்கள்! இன்னும் கொஞ்ச நேரத்தில் சந்தோஷம் முழுவதையும் அடையப் போகிறீர்கள்'' என்று அவள் பதில் சொன்னது அவருக்கு அப்போது விளங்கவில்லை.

''ஐயோ நளினா! இதென்ன!'' என்று கத்திக்கொண்டு பிள்ளை அவள் அருகில் ஓடிச் சென்றார்.

''நீலாம்பாளிடம் செல்லுங்கள். நளினா என்னத்திற்கு உங்களுக்கு? பெட்ரோலை மேலே விட்டுக்கொண்டு நெருப்பை...'' என்று திணறிய வண்ணம் நளினதயாக்ஷி கீழே சுருண்டு விழுந்துவிட்டாள். குபீரென்று அவள் ஆடைகள் தீப்பற்றி எரிந்தன. பிள்ளை நெருப்பை அணைக்க வேண்டி அவளைக் கட்டிப் பிடித்தார். அதற்குள் வீட்டில் ஏக ரகளையாகி விட்டது. வேலைக்காரர்கள் எல்லோரும் ஓடிவந்து ஜ்வாலை விட்டெரியும் தீயை அணைக்க முயற்சித்தனர்.

பிள்ளை கண்களை விழித்துப் பார்த்தபொழுது தமது கைகள்மீது பலத்த கட்டுப் போடப்பட்டிருப்பதையும், மனைவி தம்மைத் தவிக்கவிட்டு மறைந்து விட்டாள் என்பதையும் உணர்ந்தார். கையிலே பட்டிருந்த புண்ணைவிட, பிள்ளையின் நெஞ்சிலே ஆழமான புண்ணை ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டாள் அவர் மனைவி. ''பேதைப்பெண், வீணாகச் சந்தேகப்பட்டுக் கொண்டு உயிரைத் துறந்தாளே!'' என்று அவர் மனம் இடிந்து போனார்.

இதற்குப் பிறகு அவருக்கு வாழ்க்கையின்மீதே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இரண்டு வருடங்கள் பல்லைக்

கடித்து கொண்டு வேலை பார்த்து வந்தார். யார் என்ன சொல்லியும் அவர் மறுமணம் செய்து கொள்ள மறுத்து விட்டார். பூஞ்சோலையில் தமது தந்தையும் இறந்து விடவே, வேலையை ராஜிநாமா செய்துவிட்டுத் தமது பூர்வீக கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்.

கடவுள் அவரை மேலும் சோதித்தார். அவருடைய ஒரே தங்கையான சிவகாமி அம்மாள் புக்ககம் போன ஆறாவது மாதத்திலேயே விதவையாகிப் பிறந்தகம் வந்து சேர்ந்தாள். சகோதரியின் வாழ்க்கையில் ஏற்பட்ட துக்கமும் சேர்ந்து கொள்ளவே, பிள்ளைக்கு உலகில் கொஞ்ச நஞ்சமிருந்த பற்றும் போய்விட்டது.

கிராமத்திற்கு வந்து பதினெட்டு வருஷங்களாகியும் பிள்ளை தாமுண்டு; தமது பங்களா உண்டென்று இருப்பார். புஸ்தகங்கள் படிப்பதும் தினமும் ஒருமுறை தோட்டங்களைச் சுற்றிப் பார்ப்பதும்தான் அவருடைய முக்கிய வேலைகள். கிராமக் கொண்டாட்டங்களில்கூட அவர் அதிகமாகக் கலந்து கொள்வதில்லை.

மாடி மீதிருந்த தனது அறையின் கட்டிலிலே சோம்பல் முறித்துக்கொண்டு படுக்கையை விட்டு எழ மனமில்லாமல் புரண்டு கொண்டிருந்தாள் பிள்ளையின் செல்வப் புதல்வி பவானி!

சித்திரை மாதத்தின் தொடக்கமாதலால் குப்பென்று பங்களாத் தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் வேப்ப மரங்களினின்று மெல்லிய பூங்காற்று அவள் முகத்தில் வீசியது. வேப்பம் பூவின் புது மணத்தில் ஈடுபட்டவளாய் ஜன்னல் வழியாகத் தூரத்தே தெரியும் பங்களாத் தோட்டத்தை நோக்கினாள்.

அவளுடைய அத்தை சிவகாமி அம்மாள் இடுப்பில் கையை வைத்துக்கொண்டு அதிகார தோரணையில் மாட்டுக்கார பையன் குப்பனை அதட்டிக் கொண்டிருந்த காட்சி பவானியின் கண்களுக்குத் தென்பட்டது.

ஸ்நானம் செய்த கூந்தலை கோடாலி முடிச்சிட்டு நெற்றியில் பட்டை பட்டையாக விபூதியுடன் சிவப்பழமாக



நின்ற அத்தையைக் கண்டு பவானியின் மனம் அவளைப் பற்றி சிந்தித்தது.

'நாற்பது வயதாகியும் அத்தைக்கு இளமையின் அழகு பூராவும் அழியாத தோற்றம். கரு, கருவென்ற கூந்தல். அண்ணனைப் போன்ற சாயல். பாவம், அத்தை வாழ்க்கையில் என்ன சுகத்தைக் கண்டாள்!' என்று எண்ணிக் கொண்டு பவானி படுக்கையில் புரண்டாள்.

''ஏண்டா குப்பா! உனக்கு எத்தனை வாட்டி படிச்சுப் படிச்சு சொல்றது? அந்தச் சின்ன கன்னுக்குட்டியை அடிக்காதேன்னு சொன்னது உன் காதுலே விழலேயாடா. தறுதலை! அதன் காலை ஒடிச்சுட்டியேடா. பாவி! இப்படியா ஒரு கன்னுக்குட்டியை அடிப்பே?'' என்று அத்தை உரத்த குரலில் கோபமாகக் கத்திக்கொண்டிருந்தாள்.

''நான் அடிக்கலே, அம்மா! முனுசாமிதான் அடிச்சான் ''என்று குப்பன் சொன்னான்.

''எவன் அடிச்சானோ, தெரியாது. நீ இனிமேலே வேலை செய்ய வேண்டாம். போயிடு! உன் சம்பள பாக்கியை மானேஜர் ஐயாகிட்ட வாங்கிக்கிட்டு நட. நல்ல எளவு! உங்களோடு நித்தம் நித்தம் போராட என்னால் முடியவில்லை'' என்று வெடுவெடுத்தாள் அத்தை.

''அம்மா, இந்த வாட்டி என்னை விட்டுடுங்க. என் அப்பனுக்குத் தெரிஞ்சா முதுகுத் தோலை உரிச்சிடுவாருங்கோ. இனிமேலே ஒளுங்கா இருக்கேனுங்க'' என்று மாட்டுக்காரப் பையன் கெஞ்சின வண்ணம் காலடியில் விழுந்து தேம்பினான்.

''இப்படித்தான் நீ எப்பவும் சால்ஜாப்பு சொல்லிக் கொண்டு வரே! போ- தொலை! பீடை சனியன்! இனிமேலேயாவது புத்தியோட இரு. அடுத்த வாட்டி ஏதாச்சும் குத்தம் பண்ணினயோ, நான் பொறுக்க மாட்டேன்!'' என்று மிரட்டிவிட்டுத் திரும்பினாள் அத்தை அம்மாள்.

பவானி தனக்குள்ளே லேசாகச் சிரித்துக்கொண்டாள். ''அத்தையின் கோபமும் அதிகாரமும் ஒரு கெஞ்சல் வார்த்தையைக் கேட்டவுடன் பறந்துவிடும். படபடப்பெல்லாம் வெறும் வேஷம். ரொம்ப இரக்கப்பட்டவள் உள்ளூர!'' என்று பவானி தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

சோம்பல் முறித்துக்கொண்டு படுத்துக் கிடந்த பவானியின் முன் இப்போது அத்தை வந்து நின்றாள்.

''மணி எட்டாகிறதே, உனக்குத் தெரியவில்லையா பாப்பா? நல்ல தூக்கம்! குளிக்க வெந்நீர் போட்டுவச்சு ஆறி அவலாப் போகிறது. பெண் எழுந்திருக்கிற லட்சணத்தைப் பார்!'' என்றாள். மடமடவென்று அத்தை மாடியேறி வந்ததால் அவளுக்கு மூச்சுத் தடுமாறியது.

''காலங் கார்த்தாலே மாட்டுக்காரப் பையனுடன் போட்ட சண்டை போதாதா, அத்தை! என்னோட கூடக் கோபித்துக் கொள்ளுகிறீர்களே'' என்று பவானி சிரித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்திருந்தாள்.

''போதும் பாப்பா! நீ பண்றது ஒண்ணும் எனக்குப் பிடிக்கலை. ஒரு சமயம் இன்னிக்கு உங்க அத்தான் ஷண்முகம் வருதோ என்னவோ, தெரியலை. நீ பல் கூடத் தேய்க்காமல் உட்கார்ந்திரு!'' என்று அதட்டியவண்ணம் புருவத்தை உயர்த்தினாள் சிவகாமி அம்மாள்.

''ஷண்முகம் வந்தால் எனக்கென்ன அத்தை! நீங்க இருக்கிறீங்க, மருமகனை அழைத்து உபசரிக்க மாட்டீங்களா?'' என்று குறும்புத்தனமாக பவானி, சிரித்துக் கொண்டு அத்தையின் அருகில் வந்தாள்.

சிவகாமி அம்மாளின் முகத்தில் கோபத்தின் அலை அடிப்பதைக் கண்ட பவானி, ''அத்தை, என்னத்திற்கு இப்படிக் காலங்கார்த்தாலே என்மேல் கோவிச்சுக்கிறீங்க'' என்று கொஞ்சிக்கொண்டே அத்தையின் கைகளைப் பிடிக்க வந்தாள்.

''பாப்பா! என்னைத் தொட்டுத் தொலைச்சுடாதே. பூஜைக்குத் தயாராக நான் ஸ்நானம் பண்ணி இருக்



கிறேன். போ, கிட்ட வராதே'' என்று அத்தை தன் புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு ஒரு துள்ளலில் நகர்ந்து கொண்டாள்.

''என் மேலே கோவிச்சுக்கொண்டால் உங்களைத் தொட்டுவிடுவேன்'' என்று பவானி அத்தை அருகில் ஓடி வந்து பாய்ச்சல் காட்டி விளையாடினாள்.

அத்தை அம்மாளுக்குக் கோபத்தின் நடுவே சிரிப்பும் வந்தது. ''போ! பாப்பா! நல்ல விளையாட்டு எங்கிட்ட வந்து. வேலை தலைமேலே கிடக்கிறது எனக்கு. சமையலுக்கு எண்ணெய் எடுத்துக் கொடுக்கணும். தோட்டக்காரனுக்குக் கணக்குப் பார்த்துச் சம்பள பாக்கியைத் தீர்க்கணும். கண்ணோல்லியோ, பாப்பா, என்னைத் தொட்டு விடாதே. மறுபடியும் முழுகிப் பூஜை பண்ண நேரமில்லை'' என்று அன்பாக அத்தை கூறினாள்.

பவானி மான்போல் துள்ளிக்கொண்டு மாடிப்படியில் தடதடவென்று இறங்கினாள். மாடிப்படியிலிருந்தபடியே அத்தை கீழே வேலைக்கார மாரியாயிக்கு உரத்த குரலில் உத்தரவிட்டாள். ''பாப்பா வருது குளிக்க, சோப்புப் பெட்டி, டவல் கிவல் எல்லாம் ரெடியாய்க் கொண்டு வை பாத்ரூமிலே!''

மாரியாயி சோப்புப் பெட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு குளிக்கும் அறைக்கு இரண்டு பாய்ச்சலில் ஓடினாள். அத்தை அம்மாள் என்றால் அவளுக்கு நடுக்கம்.

தவிசுப்பிள்ளை பரமசிவம் பவானிக்காக ஸ்பெஷல் காப்பி கலக்கும் அவசரத்தில் ஒரு சொம்புப் பாலைக் கீழே தவறிக் கவிழ்த்துவிட்டு, அத்தை அம்மாள் கண்டால் கண்களில் விரலை விட்டு ஆட்டிவிடுவாளே என்ற பயத்தில் சுருணையைப் போட்டு அவசர அவசரமாக அதை ஒற்றி எடுத்துக்கொண்டிருந்தான். பங்களா வேலைக்காரர்கள் எல்லோருக்கும் சிவகாமி அம்மாள் என்றால் கிலி! வேலை வாங்கும் விஷயத்தில் மிகவும் கண்டிப்பான பேர்வழி அத்தை அம்மாள். இடுப்பில் சாவிக்கொத்தைச் சொருகிக்

கொண்டு ராணிபோல் அந்த வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பை பதினெட்டு வருஷங்களாக அவள் தாங்கி வந்திராவிட்டால், சிவஞானம் பிள்ளை திண்டாடிப் போயிருக்க வேண்டியதுதான்!

## 4

பகல் போஜனத்திற்குப் பிறகு முத்துப்பிள்ளை தமது பாட்டனார் விட்டுப்போன பரம்பரை சொத்தான ஒடிந்த பிரம்பு நாற்காலி ஒன்றில் சாய்ந்து கொண்டிருந்தார்.

வயிறு குளிரச் சாப்பிட்டுவிட்டு தம் வாய் குளிர வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு அவர் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென்ற எண்ணத்துடன் அவர் மனைவி அபிராமி அம்மாள் வந்து தரையில் எதிரில் உட்கார்ந்து கொண்டாள்.

"இன்னிக்கு சமாசாரம் என்ன? ஒண்ணும் சுகமில்லே போலிருக்கு" என்று மனைவியைப் பரிகாசம் செய்த வண்ணம் தமது பாதி நரைத்துப்போன மீசையை ஆசையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டார் முத்துப்பிள்ளை.

"சிவகாமி அக்காவிடமிருந்து கடிதாசு வந்திருக்கு. பவானி லீவுக்கு வீட்டிற்கு வந்திருக்காம். நம்ப தம்பியை இது சமயம் அனுப்பி வைச்சால் தேவலைன்னு எழுதியிருக்கு அக்கா. உங்க யோசனை எப்படின்னு கேட்கலாமின்னு வந்தேன்" என்று சொன்னாள் அபிராமி அம்மாள்.

"என் யோசனையைக் கேட்டால், தம்பி அந்தப் பக்கமே போக வேண்டாமின்னுதான் சொல்லுவேன். உனக்கு என்னத்துக்கு இவ்வளவு பேராசை? பவானி ஜமீன்தார் பெண்ணு. உன் மகனை ஏறெடுத்தும் பார்ப்பாளா அவள்?" என்று உறுமினார் முத்துப்பிள்ளை.



"ஷண்முகம் அந்தப் பெண்ணுக்கு என்ன விதத்திலே குறைஞ்சு போயிடுத்து? பி. ஏ. படிச்சிருக்கு. வயசு இருபத்தஞ்சு கூட ஆகல்லை. பையன் பார்க்க லட்சணமாயிருக்கிறான். பவானியையும் தம்பியையும் கல்யாணப் பந்தலிலே வச்சு பாத்தா இரண்டு கண்கள் போதாதுன்னு சிவகாமி அக்கா போன தை மாசங்கூட என்கிட்ட ரகசியமாகச்சொல்லித்து" என்று மூச்சுவிடாமல் பேசினாள் அபிராமி அம்மாள்.

"அந்தப் பொண்ணு கூடத்தான் பி.ஏ. படிச்சிருக்கு. பி. ஏ. படிச்சுட்டா உன் மகன் பெரிய கோட்டையைக் கட்டி விட்டானாக்கும்! போயேன் சும்மா! அவர்களுக்கும் நமக்கும் மலைக்கும் மடுவுக்கும் வித்தியாசம். கோயம்புத்தூர் ஜில்லா மூலையிலிருக்கும் லக்ஷ்மிபுரத்து குப்பைக் காட்டு பையன் ஷண்முகத்திற்கு, அவன் பத்துக் காணி நிலத்தை நம்பி பெண் கொடுக்க வருகிறாரோ சிவஞானம் பிள்ளை! போ உலேளே. நீ மூளை கெட்டுப் பேசறே! நம்ம அந்தஸ்துக்கு நாம் அந்த வீட்டுப் பெண்ணைக் கேட்கத் தான் வாயேது?" என்று முத்துப்பிள்ளை கோபமாகப் பேசினார்.

"சிவகாமி அக்கா பவானியை ஷண்முகத்துக்குன்னு தீர்மானிச்சு விட்டது. அது மனசுப்படிதான் அண்ணவ சிவஞானமும் நடக்கும். அதனாலே சொல்றேன்" என்றாள் அபிராமி அம்மாள்.

"பெண் கல்யாண விஷயத்திலே சிவகாமி அம்மாள் பேச்சை ஒன்றும் சிவஞானம் பிள்ளை கேட்கமாட்டார். அந்த அம்மாள் பேச்சைக் கேட்காமலே தானே பெண்ணை பி.ஏ. வரை படிக்க வைச்சார்? அதுபோல கல்யாண விஷயத்திலும் தன் இஷ்டப்படிதான் நடப்பார். போதாதற்கு பவானிக்குப் பிடித்த பையனுக்குத்தான் அவர் கட்டிக் கொடுப்பார். அவர் சீமைக்குப் போய்ப் படித்த ஆசாமி, இல்லையா?" என்று படபடத்தார் பிள்ளை.

"சிவகாமி அக்கா சொல்றதுதான் என்ன? 'பவானி வந்திருக்கு. பையனை அனுப்பி வை. கொஞ்சம் ரெண்டு

பேரும் தாராளமாகப் பழகட்டும். பிறகு இந்தக் கல்யாண மாசங்களிலேயே ஒரு முகூர்த்தத்தில் விமரிசையாகக் கல்யாணம் பண்ணி விடலாம்' அப்படின்னுதான் சொல் லித்து. இப்ப அதைக் குறிச்சி ஒரு கடுதாசும் போட்டிருக்கு அதனாலே தம்பியைக் கொஞ்ச நாள் பூஞ்சோலைக்கு. அனுப்பி வைக்கலாமின்னு உங்க யோசனையைக் கேக்க வந்தேன். அதிலே என்ன பிசகு?'' என்று அபிராமி அம்மாள் விடாப்பிடியாகச் சொன்னாள்.

''எட்டாக் கொம்புக்கு நீ இப்படி ஏன் ஆசைப் படறயோ தெரியலை. கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு ஏன் அலையணும்! வீட்டிலே இருக்கிற வனஜாக்ஷியை ஷண்முகத்துக்கென்று நான் நிச்சயம் பண்ணியிருக்கையிலே உனக்கு ஏன் குருட்டு யோசனை தோணுதோ, தெரியவில்லை'' என்றார் முத்துப்பிள்ளை.

''நான் சொல்ற பேச்சை எல்லாம் கேட்காமல் உங்க இஷ்டப்படி நடந்துதானே இந்தக் கதிக்கு வந்து சேர்ந் தோம்? சோயா பீன்சை பயிரிடறேன், சுண்டக்காயைப் பயிரிடறேன்னு என் பேச்சைக் கேட்காமலே ஆரம்பிச்ச வேலை ஏதாச்சும் உருப்பட்டதா? கண்ட குருட்டு வேலை களிலே இறங்கி, ஊரிலே மிட்டாதார் கணக்கா இருந்த சொத்தெல்லாம் தோத்துப்பிட்டு இப்போ இருபதினாயிரத் துக்குக்கூட லாயக்கில்லாமல் இருக்கிறோம். உங்க பாட்டன் சொத்திலே மிஞ்சினது இந்த உடைஞ்சு நாற்காலி தான். வனஜாக்ஷியை வேறே யாருக்காவது கொடுக்கறது. அதுக்காக பவானியையும் அவ சொத்தையும் விட்டுவிடச் சொல்றீங்களா?'' என்று ஆத்திரத்துடன் கத்தினாள் அபிராமி அம்மாள்.

''உன் இஷ்டம். உன் பிள்ளையைவிட்டு பவானியை வலை போட்டுப் பிடி. அந்தப் பூஞ்சோலை சொத்து வந்து எனக்கொன்றும் ஆக வேண்டாம். நீ வேணுமானால் சம்பந்தி வீட்டுக் காரில் ஊரைச் சுற்றி ஊர்கோலம் வா, எனக்கு நம்ப வீட்டு காங்கேயத்து மாட்டு வண்டியும், இந்த உடைஞ்ச நாற்காலியும் போதும். போ?'' என்று பரிகாசமாய்ச் சொல்லி முடித்தார் முத்துப்பிள்ளை.



துர்வாசரைப் போன்ற குணமுடைய தன் கணவன் அன்று ஏதோ நல்ல குஷியான மனதுடன் இருந்ததால் தான் இவ்வளவு சுலபத்தில் தன் பேச்சைக் கேட்டார் என்று மகிழ்ந்த அபிராமி அம்மாள், ''வனஜா! சட்புட்டென்று தோசை வார்த்துக் காப்பி போடு. தம்பி ரயிலுக்குக் கிளம்பணும்'' என்று அதிகாரம் செய்துகொண்டு எழுந் தாள்.

அதுவரை அவர்கள் பேசின விஷயங்களை சமயலறைக் கதவு மறைவில் நின்றுகொண்டே கேட்டுக்கொண்டிருந்த வனஜாக்ஷி வெதும்பிய மனதுடன் காரியங்களைக் கவனிக் கச் சென்றாள்.

வனஜாக்ஷி முத்துப்பிள்ளையின் தங்கையான ரங்கம் மாளின் மகள். பதினெட்டு வயதாவதற்குள் வனஜாக்ஷி உலகக் கஷ்டங்களை அனுபவித்து விட்டாள். ரங்கம்மாள் ரங்கூனில் ஒரு பிரபல வர்த்தகருக்கு வாழ்க்கைப்பட்டிருந் தாள். பர்மாவில் ஏற்பட்ட குண்டு வீச்சில் தாய்நாடு திரும் பியவர்களில் ரங்கம்மாள் குடும்பமும் ஒன்று.

மலேரியா ஜுரத்திலும், களைப்பு, பட்டினி மேலிட்ட தனாலும் ரங்கம்மாளும் அவள் புருஷனும், மற்ற குழந்தை களும் முறையே வழியில் ஒவ்வொருவராக இறந்துவிடவே வனஜாக்ஷி மட்டும் உயிருடன் தப்பித்துக்கொண்டு லக்ஷ்மி புரத்திலிருந்த தனது மாமன் முத்துப் பிள்ளையிடம் அடைக்கலம் புகுந்தாள். முத்துப்பிள்ளை வனஜாவை ஏற்றுக்கொண்ட அன்றிலிருந்து, அவள் ஷண்முகத்திற்குத் தான் என்று தீர்மானித்துவிட்டார். ஆனால் மாமி அபிராமி அம்மாளோ வேறு இடத்தில் பெண் தேடிக் கொண்டிருந்தாள்.

இரண்டு வருஷங்களாக மாமன் வீட்டில் தங்கியிருந்த வனஜா தன் இதயத்தை ஷண்முகத்திடம் பறிகொடுத்து விட்டாள். அவனுக்குச் சிசுருஷை செய்வதென்றால் அலாதி இன்பத்துடன் அவள் கைகள் செய்யும். ஷண்முகம் மட்டும் தனக்குரிய கணவனாக வாய்த்தால் பட்ட துன்பங் கள் எல்லாவற்றையும் மறந்துவிடலாமே என்று அவள் பேதை மனம் எண்ணும்.

வீட்டில் வனஜா என்ற ஒரு பெண் இருக்கிறாள் என்பதைத் தவிர ஷண்முகம் அவளைப்பற்றி வேறு விதமாகச் சிந்தித்ததே கிடையாது. மேலும் வஜனா ஷண்முகத்தின் எதிரேகூட அதிகமாக வந்ததில்லை.

இலையில் தோசையையும் பக்கத்தில் காப்பியையும் வைத்துவிட்டு, காமிரா உள்பக்கம் சென்று கதவோரத்தில் மறைந்துகொண்டாள் வனஜா. ஷண்முகம் இலை முன் உட்கார்ந்து கொண்டதும், அபிராமி அம்மாள் பக்கத்தில் வந்து தரையில் உட்கார்ந்து கொண்டு பூஞ்சோலையில் அவன் எப்படி எல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்பதை உபதேசிக்க ஆரம்பித்தாள்.

காமிரா உள்கதவு மறைவில் நின்றுகொண்டிருந்த வனஜாவின் கண்களிலிருந்து இரண்டு துளி கண்ணீர் பொட்டென கீழே உதிர்ந்தது. ''பவானி என்ற பெண் ஏன் எனக்குப் போட்டியாகப் பிறந்தாள்?'' என்று அவள் பேதை மனம் வேதனைப்பட்டது.

## 5

எண்ணெய் தேய்த்த கூந்தலை உலர வைத்துக் கொண்டு மாடி அறையில் பவானி ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தாள். அவள் கையில் அவளுடைய அப்பா படிக்கக் கொடுத்த மனோதத்துவ சாஸ்திர புஸ்தகம் ஒன்று விரித்தபடி இருந்தது. அப்பாவிற்காகத்தான் அவள் அந்தப் புஸ்தகத்தை சிரமப்பட்டுக் கொண்டு படிக்க முயன்று கொண்டிருந்தாள். சிவஞானம் பிள்ளை தமது பெண்ணை எல்லா விஷயங்களிலும் மிகவும் தேர்ச்சி உடையவளாக ஆக்க வேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அதனால் அவர் அவ்வப்போது தாம் படிக்கும் புஸ்தகங்களில் உயர்ந்த கருத்துள்ளவைகளைத் தமது மகளிடமும் கொடுத்துப் படித்துப் பார்க்கும்படி மிகவும் வற்புறுத்துவார். படித்த பிறகு அதைப்பற்றி அவளிடம் சர்ச்சை செய்வதும் வழக்கம்.



புஸ்தகத்தின் சாராம்சத்தை அந்த வெய்யில் வேளையில் மூளையில் ஏற்றிக்கொள்ள இஷ்டப்படாத பவானி அறையை விட்டு வெளியே வந்து மாடி வராந்தாவின் கோடிப் பக்கத்தில் அமைந்திருந்த தன் தந்தையின் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் எதிர்பார்த்தபடியே அங்கே சிவஞானம் பிள்ளை மேஜை அருகில் உட்கார்ந்து கொண்டு ஆழ்ந்த சிந்தனையுடன் ஏதோ விறுவிறு என எழுதிக் கொண்டிருந்தார்.

''என்ன அப்பா, இந்தக் காகிதப் பஞ்ச காலத்தில் இப்படிப் பேப்பரை வீணாக்குகிறீர்களே'' என்று அன்புடன் கடிந்து கொண்டே பவானி தந்தையின் நாற்காலியின் கையின்மீது உட்கார்ந்து கொண்டவள். அவர் எழுதிக் கொண்டிருந்த கடிதத்தைப் படித்துவிட்டுக் கலகலவென்று சிரித்தாள்.

'நியூயார்க் மெயில்' என்னும் அமெரிக்கப் பத்திரிகை ஆசிரியரான 'வில்லியம் மூர்' என்பவருக்கு பூஞ்சோலை கிராமவாசியான சிவஞானம் பிள்ளை எழுதிக் கொண்ட கடிதம் அது. இந்திய சுதந்திரப் பிரச்சினையைப்பற்றிக் கேவலமாக அந்தப் பத்திரிகை தலையங்கம் எழுதியிருந்ததைக் கண்டித்துப் பிள்ளை இந்திய சுதந்திரத்தின் லட்சியங்களைத் தெளிவாக விளக்கிக் கொண்டிருந்தார் அந்தக் கடிதத்தில்.

''கட்டில் சேராத கடிதங்களை எதற்காக அப்பா எழுதுகிறீர்கள்? காகிதந்தான் வீண்'' என்று பவானி சிரித்துக் கொண்டே அவர் எழுதியிருந்த கடிதத்தை எடுத்து மடித்து மேஜை அடியிலிருந்த குப்பைக் கூடையில் போட்டாள்.

''பொழுது போக வேண்டாமா எனக்கு, பவானி? அந்தப் பத்திரிகையைப் படித்தேன். கோபம் கோபமாக வந்தது. உணர்ச்சி வேகத்தில் உட்கார்ந்து கடிதத்தை எழுதினேன்'' என்று சொல்லிவிட்டு லேசாகப் புன்னகை செய்தார் பிள்ளை.

அப்பாவின் குணம் பவானிக்கா தெரியாது, அப்பா இப்படித்தான் பத்திரிகைகளைப் படித்துவிட்டுத் துள்ளிக்

குதித்துக் கொண்டு மணிக்கணக்காக மூச்சுவிடாமல் கடிதங்கள் எழுதுவார். உணர்ச்சியின் வேகத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதங்கள் அந்த வேகந் தணிந்ததும் குப்பைக் கூடையில்தான் போய் விழும். பவானிக்குத் தெரிந்தவரையில் இந்தியாவிலிருக்கும் அத்தனை தலைவர்களுக்கும் சிவஞானம் பிள்ளை கடிதங்கள் எழுதிவிட்டார். கட்டில் சேராத ஒரு குறையைந் தவிர அந்தக் கடிதங்கள் எல்லாம் சரியான சந்தர்ப்பத்தில்தான் எழுதப்பட்டன. 'கிரிப்ஸ் திட்டம்' பற்றிப் பத்திரிகை உலகமே திமிலோகப்பட்ட பொழுது பிள்ளை எழுதிய கடிதங்கள் கணக்கில் அடங்காதவை.

'கிரிப்ஸ் திட்ட'த்தைப் பற்றி மகாத்மா காந்தி அவர்களுக்கும், ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களுக்கும் எழுதிய கடிதங்கள் எத்தனை! இவைகளைத் தொகுத்துப் பிரசுரித்தால் எத்தனையோ புஸ்தகங்கள் ஆகியிருக்கும். அவ்வளவு கடிதங்கள்!

எல்லாவற்றையும் நினைத்துக்கொண்ட பவானி சிரித்த வண்ணம், ''அப்பா, நீங்கள் கொடுத்த புஸ்தகத்தில் சில இடங்களில் எனக்குப் புரியவில்லை. நீங்கள்தான் வாசித்துச் சொல்லவேண்டும்'' என்று கூறிய வண்ணம் அவருடைய தோள்மீது தனது கரங்களை அன்புடன் வைத்துக் கொண்டாள்.

''கொத்துச்சாவியை எங்கே வைத்தேனோ, தெரியாது, நீ எங்கேயாவது பார்த்தியா? பாப்பா'' என்று கேட்டுக் கொண்டே சிவகாமி அம்மாள் அந்த அறைக்குள் வந்து நின்றாள். அவர்களுடைய வலது கையில் மஞ்சள் தடவின காகிதக் கட்டொன்று இருப்பதைக் கண்ணுற்ற பிள்ளை, ''அது என்ன சிவகாமி? கையிலே கல்யாணக் கடுதாசியாட்டம் இருக்கிறதே?'' என்று கேட்டார்.

சிவகாமி அம்மாளின் முகத்தில் பெருமை பொங்கி வழிந்தது. ''நம்ப பாப்பா ஜாதகத்தையும் தம்பி ஷண்முகத்தின் ஜாதகத்தையும் ஜோசியர் கோபாலய்யர் கிட்டே காண்பிச்சேன். நல்ல பொருத்தமிருக்குன்னு சொல்றார்,



பீரோவில் திருப்பி வைக்கறதுக்காகச் சாவியைத் தேடறேன் காணவில்லை. எங்கே வச்சேனோ! ஞாபகமறதி இந்த வயசிலே எனக்கு இவ்வளவு வேண்டாம்'' என்று அலுத்துக் கொண்டாள் அத்தை அம்மாள்.

''பீரோவின் உச்சியிலே சாவியைப் பார்த்தேன், அத்தை! வெளியே தேடினால் கிடைக்குமா?'' என்று பவானி பதிலளித்தாள்.

''அதை யார் அங்கே கொண்டுபோய் வச்சது? நான் அங்கே வச்சதாக ஞாபகமில்லையே'' என்று சொல்லிக் கொண்டே அத்தை அம்மாள் திரும்பினாள்.

'நான்தான் அங்கே வேணுமென்று வைத்தேன்' என்று பவானிக்கு ஒத்துக்கொள்ள இஷ்டமில்லை. அதனால் குற்றவாளிபோல் அவள் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே தனது 'தந்தையை நோக்கினாள். பிள்ளையும் தனது மகளின் குறும்புத்தனத்தை நினைத்துக் கொண்டு புன்னகை பூத்தார்.

கீழே போவதற்காகத் திரும்பின அத்தை எதையோ நினைத்துக் கொண்டவள் போன்று திரும்பி, ''பாப்பா நீயும்தான் கீழே வாயேன். தலையைப் பின்னி விடறேன். வந்து நாலு நாளாகிறதே, ஒரு புடவையைக் கட்டிக் கொண்டு, நகையைப் போட்டுக்கொண்டு அத்தைக்குக் காட்டுவோம்; இல்லாட்டி கொஞ்சம் வீணையாவது வாசிப் போங்கறது இல்லாமே, எப்பவும் ஒரு புஸ்தகத்தை வச்சுக்கிட்டு உட்கார்ந்து கிடக்கியே! போன லீவின்போது மூடிக் கட்டிவச்ச வீணை அது. ஒரே தூசியும் தும்பலுமா கிடக்கு-உனக்குப் போய்ப் பணத்தைச் சேலவழிச்சுப் பாட்டுக் கத்து வச்சேனே, அதைச் சொல்லு!'' என்று அதட்டிய வண்ணம் பவானியை நோக்கினாள். பவானி மனமில்லாமல் அத்தையின் பின்னால் நடந்தாள்.

புதிதாக வாங்கியிருந்த பட்டுப் புடவை ஒன்றை உடுத்திக் கொண்டு தன் உத்தரவுப்படியே பவானி தன் முன்னால் உட்கார்ந்து கொண்டு வீணை வாசிக்கும் அழகில் லயித்துப்

போய் அத்தை அம்மாள் மனம் பூரித்து அசைவற்று வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள். ஒரு பாட்டு முடிந்தது. பவானி தந்திகளை மீட்டிய வண்ணம் அடுத்த பாட்டு எதை எடுக்கலாம் என்று யோசிக்கலானாள்.

அத்தை அப்போது, ''பாப்பா, இந்த வர்ணம் உனக்குப் பிடிக்குமுன்னுதான் உறையூரானிடம் வாங்கி வச்சேன்'' என்று குதூகலத்துடன் சொல்ல வந்தவள் சட்டென்று நிறுத்தி கொண்டாள். அவளுடைய பெருவிழிகளிலிருந்தும் கண்ணீர் கரகரவென வழிந்து கன்னங்களில் ஓடியது. இதைக் கண்ட பவானி வீணையைக் கீழே வைத்துவிட்டு ஓடோடியும் வந்து அத்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''என்னத்துக்கு அத்தை வருத்தப்படுறீங்க?'' என்று பவானி அன்புடன் வினவினாள்.

''உன்னை இப்போ பார்த்தா அவளைப் பார்க்கறாப் போலவே இருக்கு. அந்தப் பாவி உசிரோட இருந்திருக்கப் படாதான்னு நினைச்சுக் கொண்டேன். மனசை வேதனை பண்ணித்து!'' என்று சிவகாமி அம்மாள் தொண்டை அடைக்கக் கூறி, கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

பவானிக்குத் தன் தாயைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நளினதயாக்ஷி இறந்தபொழுது பவானி சின்னஞ் சிறு குழந்தை. அத்தையின் கைகளினால் வளர்க்கப்பட்ட பவானிக்கு, அத்தை அம்மாள்மீதுதான் பாசம். இறந்து போய்விட்ட தன் தாயாருக்காகத் துக்கப்படுவதாக அவள் ஒரு நாளும் நடித்ததில்லை. சிவகாமி அம்மாள் தன் தாயின் பொருட்டு வருத்தப்படுவதைக் கண்டு மனம்கசிந்த பவானி, அத்தை அம்மாளைச் சந்தோஷப்படுத்த எண்ணியவளாய், ''அத்தை, நீங்கள் இப்படி முழங்கைவரை கைவைத்த மல் ரவிக்கைகள் போட்டுக் கொள்வதைவிட்டு, என்னைப்போல் நாகரிகமாக ஜாக்கெட்டுகள் தைத்துப் போட்டுக் கொண்டீர்களானால் இன்னும் சின்னப் பொண்ணாகி விடுவீர்கள். அத்தை உங்களைப் பார்த்தா, கல்யாணம் பண்ணலாம்



போல அவ்வளவு சின்ன வயசாத் தெரிகிறது'' என்று கொஞ்சிச் சிரித்துக்கொண்டு பேச்சை மாற்றி, அத்தையின் கழுத்தை மேலும் இறுகக் கட்டிக்கொண்டாள்.

''சீ பாப்பா! உனக்கு இத்தனை வயசாகியும் சின்னக் குழந்தைபோல கன்னாபின்னான்னு பேசறயே, விடு என் கழுத்தை, நல்ல விளையாட்டு'' என்று அன்புடன் கடிந்து கொண்டே சிவகாமி அம்மாள் பவானியின் அன்புப் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்தாள்.

அதுசமயம் ''லக்ஷ்மிபுரத்தய்யா வந்திருக்காங்க! பெட்டி படுக்கை எல்லாம் எங்கே வைக்கிறதுன்னு சொல்லுங்க'' என்று கேட்டுக் கொண்டே வேலைக்காரன் கந்தன் ஹால் வாசற்படியண்டை வந்து நின்றான்.

ஷண்முகம் வந்துவிட்டான் என்றதைக் கேட்டவுடன் சிவகாமி அம்மாள் ஒரே தாண்டலில் வாசற்பக்கம் ஓடினாள் ''வா தம்பி! வா உள்ளே! அம்மா அப்பா எல்லோரும் சௌக்கியம்தானே!'' என்று வாஞ்சையுடன் வாயெல்லாம் பல்லாகக் கேட்டு, அவனை ஹாலுக்குள் வரவேற்றாள். ஷண்முகம் உள்ளே நுழைவதைக் கண்ட பவானி, இரண்டே எட்டில் மாடி அறைப்பக்கம் ஓடி மறைந்தாள்.

## 6

லக்ஷ்மிபுரத்து முத்துப்பிள்ளையைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டி இருக்கிறது. முத்துப்பிள்ளையின் குடும்பத்தினருக்கு லக்ஷ்மிபுரத்தில் ''கணக்கப்பிள்ளை வீட்டவர்கள்'' என்று பெயர். ஆனால் முத்துப்பிள்ளை என்னவோ ஒருவருக்கும் கணக்கெழுதிக் கொண்டிருக்கவில்லை. அவர் மூதாதையர்களில் ஒருவர் ஆலங்குடி ஜமீன்தாரிடம் கணக்கெழுதிக் கொண்டிருந்தாராம். அதனால் அவர்கள் குடும்பத்தினருக்கே தலைமுறை தலைமுறையாகக் கணக்கப்பிள்ளை என்ற பட்டம் ஸ்திரமாக நிலைத்துவிட்டது.

சாப்பாட்டிற்கும் துணிக்கும் பஞ்சமில்லாமல் நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டு உல்லாசமாகப் பொழுதைப் போக்கும் மிராசுதாரர்கள் ரகத்தைச் சேர்ந்தவர் முத்துப்பிள்ளை. அவரது மனைவி அபிராமி அம்மாள், பூஞ்சோலை சிவஞானம் பிள்ளையின் ஒன்றுவிட்ட சகோதரி.

முத்துப்பிள்ளைக்கு இரண்டு பெண்களும் ஒரு பையனும்தான் சந்ததிகள். பெண்கள் மூத்தவர்கள். கல்யாணமாகிப் புக்ககத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். பையன்தான் கடைக்குட்டி; அபிராமி அம்மாளின் ஆசைக்குகந்த செல்லப்பிள்ளை ஷண்முகம்.

முத்துப்பிள்ளைக்கு வயது ஐம்பத்தைந்திற்குமேல் ஆகிக்கொண்டிருந்தும் கண்ணாடியின்றிபுத்தகங்கள் வாசிப்பார். அவருடைய கண்களின் தீட்சண்யத்தைப்பற்றி அவருக்கு ஓர் அலாதிப் பெருமை. அந்தக் காலத்தில் மெட்ரிக்குலேஷன்வரை படித்தவர். அவருக்கு நாட்டு வைத்தியத்தின்மீது அபார மோகம். நன்னாரித்தைலமும், காட்டாமணி லேகியமும் தாமே செய்து அதை யாருக்கேனும் கொடுத்துப் பரிசோதித்துப் பார்ப்பதில் பரமதிருப்தி அவருக்கு. அவருடைய வைத்தியத்தையும் நம்பி இரண்டொரு ஜனங்கள் அவருடைய லேகியங்களை வாங்கிச் சாப்பிடுவதைக் கண்டு அபிராமி அம்மாள் ஆச்சரியமடைவதுண்டு.

''உங்களுக்கு வைத்தியம் என்னா தெரியும்? பிரமாதமாக ஒரு புத்தகத்தைப் படிச்சுவிட்டுத் தழைகளைக் கொண்டு வந்து வீட்டை ஏன் குப்பை அடிக்கிறீங்க?'' என்று அபிராமி அம்மாள் அடிக்கடி கூக்குரலிடுவாள்.

''சே! நீ சும்மா இரு! நான் ஏதாவது செய்துகொண்டிருந்தா, அது உன்னை என்னா செய்யுது?'' என்று பிள்ளை பதிலுக்குக் கத்துவார்.

''நான் செத்தாக்கூட உங்ககிட்ட ஒரு மருந்தும் வாங்கிச் சாப்பிட மாட்டேன்'' என்று எரிச்சலுடன் அவள் பதிலளிப்பாள்.

''வேண்டாமே! என் மருந்துகளைச் சாப்பிட வனஜா இருக்கு. உனக்கும் உன் மகனுக்கும் 'டஸ் புஸ்' ஸுனு இங்கிலீஷ் பேசற வைத்தியன் கிட்டத்தான் நம்பிக்கை. அவங்க கொடுக்கற பச்சைத் தண்ணிக்குப் பணத்தை அள்ளிக் கொடுத்து நன்னா வாங்கிக் குடியுங்க'' என்று சளைக்காமல் இரைச்சல் போடுவார்.



ஷண்முகத்திற்கும் முத்துப்பிள்ளைக்கும் இது விஷயமாக வாக்குவாதங்கள் அடிக்கடி ஏற்படுவது உண்டு. சில சமயங்களில் விஷயம் பிரமாதமாகிச் சண்டையில் முடிவதும் உண்டு.

''அப்பா, நீங்க என்ன சொன்னாலும் சரி, நாட்டு வைத்தியன்கள் என்று சொல்லிக்கொண்டு இந்த கிராமாந்திரப் பக்கத்தில் ஒரு பட்டுத் துணியையும், ஒரு தகரப் பெட்டியையும் தூக்கிக்கொண்டு திரிகின்றான்களே சில பொதுஜன விரோதிகள், அவர்களைப் பிடித்துக் கட்டி வைத்து உதைக்க வேண்டுமென்பேன் நான். இதனால் எனக்கு ஆயுர்வேத வைத்தியத்தில் நம்பிக்கை இல்லை என்று அர்த்தமில்லை. வியாதியைத் தீர்க்கும் வைத்தியம் எதுவானாலும் அதை மனப்பூர்வமாய் நான் ஆதரிக்கிறேன். இந்திய வைத்தியப் பரிட்டைக்கு ஐந்து வருஷம் கஷ்டப்பட்டு படித்தவர்கள்தான் ஆயுர்வேத வைத்தியத்தைச் சரிவர அறிந்தவர்கள் என்பது என் எண்ணம். அவர்கள்தான் கீழ்நாட்டு வைத்தியத்தையும் மேல்நாட்டு வைத்தியத்தையும் ஒத்திட்டு அனுபோக முறையில் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுக் கொள்கிறார்கள். அவர்களும் வைத்தியர்கள்; ஒரு புத்தகத்தைப் படித்துவிட்டு, பலவித தைலங்கள் செய்ய முயற்சிக்கும் நீங்களும் வைத்தியர் என்றால் இது கேலிக்கூத்தாக அல்லவோ இருக்கிறது? நான் மட்டும் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் உங்களைப் போல் இரண்டு விஷயங்களைத் தெரிந்துகொண்டு தமது அரைகுறை வைத்தியத்தால் ஜனங்களுக்கு அபாயம் விளைவிக்கின்ற நாட்டு வைத்தியர்களைப் பிடித்துத் தூக்கில் போட்டு விடுவேன்!'' என்று படபடவென்று பொரிந்து தள்ளுவான் ஷண்முகம்.

முத்துப்பிள்ளைக்குக் கோபம் பொங்கி வரும். மீசை துடிக்கும். ''காவாலிக் கழுதை! அதிகப்பிரசங்கி நாய் பேச்சைப் பார், பேச்சை!'' என்று பல்லைக் கடிப்பார்.

''அப்பா! உங்களுக்கு விட்டுக்கொடுக்கும் தன்மையும், குற்றத்தை உணர்ந்து திருந்திக் கொள்ளும் மனப்பான்மையும் இல்லை'' என்று பையன்சுடச்சுடப் பதில் அளிப்பான். முத்துப்பிள்ளை பதிலுக்குக் கத்துவது பத்து வீடுவரை கேட்கும்.

வனஜாவின்மீது அவருக்கு அபாரப் பிரியம் ஏற்பட்ட தன் இரகசியம் வேறொன்றுமில்லை. வீட்டிலிருக்கும் மற்றவர்களைப் போலில்லாமல் அவருடைய வைத்திய விஷயத்தில் தனக்குப் பிடித்ததோ பிடிக்கவில்லையோ, ஒன்றுமே அபிப்ராயம் சொல்லாமல் மௌனமாக இருந்து விடுவாள்! பகல் வேளைகளில் அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அவர் லேகியம் தயாரிக்கும் முறைகளைப்படிக்கும் போது, சிவனே எனப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருப்பாள்.

''காட்டாமணி லேகியம் பண்ணும் விதம் எப்படி என்றால் மூன்றுபடி தேனில், கால்படி காட்டாமணிச் சாற்றைவிட்டு, அரைப்படியாகக் காய்ச்சி...'' என்று முத்துப்பிள்ளை 'குடும்ப வைத்தியன்' என்ற புத்தகத்திலிருந்து உரக்கப் படிப்பார். அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் வனஜாவின் உதடுகளில் ஓர் அழகியபுன்னகை தவழும்.

சில சமயங்களில் வனஜாகூட அவருடைய லேகியத் தயாரிப்பில் உதவி செய்ய நேரிடும். ''இந்தப் பச்சிலையை வைத்து அம்மியில் 'வெண்ணெ' யாக அரைத்துக்கொண்டு வா, அம்மா. இதைப் போட்டு ஒரு தைலம் காய்ச்சித்தான் பார்க்கலாம். இந்தத் தைலத்தை ஒரு மண்டலம் சாப்பிட்டு உப்பில்லாப் பத்தியமும் இருந்தால் காசநோய் பஞ்சாய்ப் பறக்கும். சுப்புப்பண்டாரத்தின் ரகஸ்ய வைத்தியமுறை இது'' என்று முத்துப்பிள்ளை ஒரு கூடை பச்சிலைகளை வனஜாவிடம் கொண்டு வந்து கொடுப்பார்.



''ஏண்டி பெண்ணே! உங்க மாமாதான் அரைக்கச் சொன்னாருன்னா உனக்கு எங்கேடி புத்தி போச்சு? அரைக்கிற அம்மியிலே இந்த எளவெல்லாம் வச்சு அரைச்சா, அதிலே என்ன விஷம் கிஷம் இருக்கோ? நல்ல தைலம் காய்ச்சிறார் இந்த மனுசரு! காப்பிக்கு வச்சிருக்கிற பாலுக்கு இப்ப சைத்தான் பிடிச்சுருக்குன்னு சொல்லு! போ, முதல்லே போய் இந்தத் தழையை எல்லாம் குப்பை மேட்டிலே கொட்டிவிட்டு வேறே வேலையைப் பார்!'' என்று அபிராமி அம்மாள் அதட்டுவாள்.

வனஜாவின் பாடு திண்டாட்டமாகிவிடும். மாமியின் பேச்சைக் கேட்டால், மாமா கோபித்துக் கொள்வார்; மாமாவின் பேச்சைக் கேட்டால் மாமி காளிபோல் கத்துவாள். இதுமாதிரி சந்தர்ப்பங்களில் அவளுக்கு 'நாம் ஏன் உயிருடன் ரங்கூனிலிருந்து வந்தோம்?'' என்று கூடத் தோன்றிவிடும். இன்னும் என்ன கஷ்டமெல்லாம் அனுபவிக்க வேண்டுமோ என்று தனிமையில் கண்ணீர் விடுவாள், வனஜா.

ஷண்முகத்திற்கு அடுத்தபடியாக வனஜாவிற்குப் பிடித்த பொருள் அந்த வீட்டுக் கொட்டிலில் நின்று கொண்டிருந்த கன்றுக்குட்டிதான். 'மணி! மணி!' என்று அவள் கூப்பிட்டால் போதும், நாய்க்குட்டிபோல் குதித்துக் கொண்டு அது பின்னால் ஓடி வந்துவிடும். விளையாட்டாக அவளை முட்டித் தள்ளப் பார்க்கும். சில சமயங்களில் தலைப் பின்னலில் தொங்கும் ரிப்பனைப் பிடித்திழுக்கும்.

அன்று தன் ஆசை மணிக்கு வனஜா புல் அள்ளிப் போட்டுவிட்டு, அதன் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்துக்கொண்டு கொட்டிலில் நின்று கொண்டிருந்தாள்.

''இந்தக் கடுதாசியைச் சித்த படிச்சுச் சொல்லம்மா, உங்க மாமாவைக் கேட்டா வள்ளுன்னு விழறாரு'' என்று அபிராமி அம்மாள் அன்று தன் பேருக்கு வந்த கடிதம் ஒன்றை வனஜாவிடம் கொடுத்தாள்.

ஷண்முகத்தின் கையெழுத்தைக் கண்ட வனஜாவின் இதயம் தீவிரமாக அடித்துக் கொண்டது. கடிதத்தைப் படித்தாள். அபிராமி அம்மாளின் முகம் அதைக் கேட்டதும் பிரகாசமடைந்தது. ''நல்ல சங்கதிதான், போ! எப்படியாவது பையன் சுகமாயிருக்கணும். அதுதானே நான் வேண்டறது? இது தெரியாமெ உங்க மாமன் புத்திகெட்டு உளறிக்கிட்டிருக்கார்'' என்று பெருமையுடன் கூறிக் கொண்டு, கடிதத்தை வாங்கி மடித்துச் சேலை மடிப்பில் வைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

பூஞ்சோலையிலிருந்து ஷண்முகம் தன் தாயாருக்கு எழுதிய கடிதம் அது. பவானியைத் தனக்குப் பிடித்திருக்கிறதென்றும், அவளுக்கும் தன்னைப் பிடித்திருப்பதாக ஊகிக்க இடமிருக்கிறதென்றும் எழுதி, இன்னும் அவள் அழகைப்பற்றியும், குணத்தைப்பற்றியும், ஏகமாக வர்ணித்திருந்தான் ஷண்முகம்.

கடிதத்தைப் படித்த வனஜாவின் மனம் துக்கத்தில் ஆழ்ந்தது. பவானி என்ற பெண்ணை அவள் பார்த்ததே இல்லை. ஷண்முகத்தின் கவனத்தைக் கவர வேண்டுமானால் அவள் தன்னைவிட அழகியாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தாள்.

வாழ்க்கை என்பது எத்தனை விசித்திர உணர்ச்சிச் சுழல்கள் கொண்டது! ஒரு பேதைப் பெண் தன் இதயத்தையே ஒருவன் காலடியில் வைத்துப் பூஜிக்கத் தயாராக இருக்கிறாள்! ஆனால் அவனோ இன்னொரு மங்கையின் எழிலில் மயங்கி இருக்கிறான்.

இவ்வண்ணம் பலவிதமாகச் சிந்தித்துக்கொண்டு கீழே உட்கார்ந்த வனஜாவின் கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் வழிந்து அவளுடைய கன்னங்களை நனைத்தது. பக்கத்தில நின்று கொண்டிருந்த மணி அவளது கன்னத்தை அன்புடன் நக்கிக் கொடுக்க வந்தது.

''மணி! மணி! உனக்காவது என்னைப் பிடித்திருக்கிறதே! கடவுள் உன்னைப்போல் என்னையும் கள்ளங்



கபடமற்ற ஒரு பிராணியாகப் படைத்திருக்கப்படாதா?'' என்று கன்றுக்குட்டியின் முகத்தைத் தன் முகத்துடன் சேர்த்து வைத்துக்கொண்டு விம்மினாள் வனஜா.

## 7

ஷண்முகம் பூஞ்சோலைக்கு வந்து பல நாட்கள் ஆகிவிட்டன. பவானி தன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அறிய மனம் துடித்தது. பவானியும் ஷண்முகமும் நெருங்கிப் பழக பல சந்தர்ப்பங்களை அத்தை சிவகாமி அம்மாள் ஏற்படுத்தியும் ஷண்முகத்தினால் அவைகளை உபயோகித்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

அத்தை அம்மாள் பகல் போஜனத்திற்குப்பின் ஹாலில் வந்து ஷண்முகத்துடன் உட்கார்ந்து கொள்வாள். தங்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்ளுமாறு ஜாடையாக பவானியையும் அழைப்பாள். ஷண்முகம் தொண்டையைக் கிழித்துக்கொண்டு சளசளவென்று ஏதாவது சரடுகள் விட்டுக்கொண்டிருப்பான். அத்தை அம்மாள் அவைகளைக் கேட்டு ஆனந்தப்படுவாள். ஆனால் பவானியின் முகம் மட்டும் விருப்போ, வெறுப்போ ஒருவிதமான சலனமுமற்றுச் சிலையைப் போலிருக்கும். தன்னைப்பற்றி பவானி என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறாள் என்பதை அறிய அவன் மனம் துடித்ததில் ஆச்சரியமொன்றுமில்லை.

அவளுக்குப் பிடித்தமான விஷயங்கள் எல்லாவற்றையும் பேசித் தீர்த்துவிடுவதென ஷண்முகம் கங்கணங்கட்டிக் கொண்டிருந்தான்.

'புஸ்தகங்களைப்பற்றி பேசுவதுதான் அவள் மனதைக் கவரும் வழி' என்று எண்ணிய ஷண்முகம் ஒருநாள் அவளிடம் தன் புஸ்தக அனுபவங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டான்.

''உனக்குத் துப்பறியும் நாவல்கள் என்றால் பிடிக்குமென்று நினைக்கிறேன், பவானி!'' என்று ஷண்முகம் கேட்டபொழுது பவானியின் உதடுகளில் ஒரு அலட்சியப் புன்னகை தவழ்ந்தது. ''துப்பறியும் நாவல்களைப்போன்ற குப்பைகளைப் படித்து நான் பொழுதை வீணாக்குவதில்லை'' என்று அவள் மிடுக்காக பதிலளித்தது ஷண்முகத்திற்குச் சுருக்கென்றிருந்தது.

'எவ்வளவு கர்வம் இவளுக்கு! துப்பறியும் நாவல்கள் படிப்பது கேவலம் என்றல்லவா பேசுகிறாள்? என்று மனதிற்குள் அவளைச் சபித்துக்கொண்டு வெளியில் சிரித்த வண்ணம், ''இல்லை பவானி துப்பறியும் நாவல்கள் படிப்பது கேவலமல்ல; சிலர் உன்னைப்போல் அப்படித் தப்பாக நினைக்கிறார்கள். உண்மையில் சில ஆசிரியர்கள் எழுதின துப்பறியும் நாவல்களில் பொதிந்து கிடக்கும் கருத்துக்கள் பெரிய இலக்கியங்களில் கூடக் கிடையாது. உதாரணமாக...'' என்று ஷண்முகம் மேலே பேசுவதற்குள், ''தயவு செய்து என்னிடம் துப்பறியும் நாவல்களைப்பற்றிப் பிரசங்கிக்காதீர்கள்'' என்று துடுக்காகக் கூறிக்கொண்டு பவானி இடத்தைவிட்டு எழுந்திருந்தாள்.

ஷண்முகம் ஏமாற்றம் அடைந்தான். இருந்தபோதிலும் பவானியின் அபிமானத்தை எப்படியாவது அடைந்துவிடுவதென்ற உறுதியைக் கைவிடவில்லை.

இன்னொரு நாள் சாயங்காலம் பவானி மட்டும் தனியே மாடி வராந்தாவில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட ஷண்முகம் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென்று தானும் அங்கே வந்து அவள் எதிரில் ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். பவானி மரியாதையை உத்தேசித்து, ''உங்களுக்கு இந்த ஊரின் சீதோஷ்ண நிலை பிடித்திருக்குமென்று நினைக்கிறேன்'' என்று சொல்லி விட்டாள். அவ்வளவுதான், ஷண்முகம் பூஞ்சோலையின் அழகைப்பற்றிப் பேச ஆரம்பித்தவன் சளசளவென்று வாய் ஓயவில்லை.



''கதாசிரியரைப் போலல்லவா எங்கள் கிராமத்தைச் சித்தரிக்கிறீர்கள்?'' என்று பவானி லேசாகச் சிரித்துக் கொண்டு சொன்னாள்.

ஷண்முகத்திற்குச் சந்தோஷம் பிய்த்துக் கொண்டது. ''ஆமாம்! என் சிநேகிதர்கள்கூட என்னைக் கதாசிரியன் என்றுதான் கூப்பிடுவது வழக்கம். நான் கலாசாலையில் படிக்கும்போது வியாசங்களில் எப்பொழுதும் முதன்மையாகவே இருப்பேன். நான் மிகவும் ஹாஸ்யமாகப் பேசுவேன். ஆதலால் என் நண்பர்கள் என்னை எப்போதுமே கொண்டாடுவார்கள். வகுப்புகளில் ஏதாவது துஷ்டத்தனம் செய்ய வேண்டுமானால் என்னைத்தான் ஏவுவார்கள்'' என்று தன் பிரலாபத்தைப்பற்றிப் பிரசங்கிக்க ஆரம்பித்தான்.

''உங்களிடம் கதாசிரியருக்கு வேண்டிய சகலவிதமான அம்சங்களும் இருக்கின்றன'' என்று பவானி இழுத்தாற் போல் கூறினாள்.

''அப்படியா, பவானி?'' என்று சந்தோஷத்துடன் கேட்டான் ஷண்முகம்.

''ஆமாம், ஆசிரியருக்கு வேண்டிய அம்சங்களான கதர் வேஷ்டி, பச்சை மூக்குக் கண்ணாடி முதலியன இருக்கின்றன. ஆனால் கற்பனாசக்தி மட்டும் இல்லை'' என்று கூறிவிட்டுச் சிரித்தவண்ணம் பவானி நாற்காலியைவிட்டு எழுந்திருந்தாள்.

ஷண்முகம் அவளுடைய பரிகாச மொழிகளைக் கேட்டு அவமானமடைந்தான். ''இருக்கட்டும், கல்யாணமாகட்டும் சொல்கிறேன்'' என்று மனத்திற்குள் கருவினான்.

ஒருநாள் காலையில் பவானி தனது படுக்கையைவிட்டு எழுந்திருந்தவள் தனது அறைக்கதவைத் திறந்தாள். தொப்பென்று கதவிடுக்கிலிருந்த ஒரு கடிதம் அவள் காலடியில் விழுந்தது. தனது விலாசமிட்ட அந்தக் கடிதத்தைக் கண்ட பவானி ஆச்சரியம் மேலிட்டவளாய்க் கதவை மறுபடியும் சாத்திக் கொண்டு அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

''என் இதயத்தைக் கவர்ந்த பவானி !

உன்னை நான் இப்படி அழைப்பதற்காக நீ கோபித்துக் கொள்வதில் பயன் இல்லை. உன்னுடைய பேச்சிற்கும், எழிலுக்கும் நான் என் மனதை இரண்டு வருஷங்களுக்கு முன்பே பறி கொடுத்து விட்டேன். பவானி! உன்னுடைய எண்ணந்தான் என்ன? நீ கட்டாயம் என்னை வெறுக்கமாட்டாய் என்பது நிச்சயம். உன் மனதை அறிய நானும் விளையாட்டைப்போல இங்கே வந்து தங்கி ஒரு மாதமாகிவிட்டது. நேரிடையாக என் எண்ணத்தை எடுத்து சொல்லச் சந்தர்ப்பமில்லாமையால் இந்தக் கடிதம் எழுதலுற்றேன்.

பவானி! உன்னைக் கடவுள் இத்தனை அழகாக ஏன் சிருஷ்டித்தார்? என்போன்ற வாலிபர்களைப் பித்தர்களாக ஆக்குவதற்காகவா? உன் கண்கள் இருக்கின்றனவே அவைகளே போதும், மனிதனை உயிருடன் வைத்துக் கொல்லும் ரகசியம் அவைகளுக்குத் தெரியும் போலும்! துக்கத்தின் சாயை படிந்த கருவண்டை நிகர்த்த உன் இரு கண்களை அலங்கரிக்கும் இமைகள், பட்டுப்பூச்சினன் சிறகையடித்துக் கொள்வதைப்போன்று லாவகமாக மூடிக் கொள்ளும் போதெல்லாம் என் உயிரையும் வைத்து மூடிக் கொள்கின்றனவே!

ஒருமாத காலமாக இந்த உக்கிரமான வெயிலையும், உன் அத்தையின் தொண தொணப்பையும் சகித்துக் கொண்டு நான் உன் பொருட்டே இருந்தேன் என்று சொல்லத் தேவையில்லை. சிவகாமி அம்மாளை நான் கட்டோடு வெறுக்கிறேன். சிலர் உலகில் பிறருக்குத் தலைவலி உண்டாக்குவதற்கென்றே பிறந்திருக்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம்.



அந்த ரகத்தை சேர்ந்தவர்கள் உன் அத்தையும் என் அப்பாவும். தாயுமானவர் பாடலுக்குக் கலாசாலைப் பரிட்சையுடன் முழுக்குப் போட்டாகிவிட்டதே! அந்தப் பழைய விஷயங்களைப்பற்றி உன் அத்தையுடன் தர்கித்துக் கொண்டிருக்க யாருக்குப் பொறுமை இருக்கும்? அத்தைக்குக் கொஞ்சம் தமிழ் படிக்கத் தெரிந்தது எனக்கல்லவோ ஆபத்தாக முடிந்துவிட்டது! திலகவதியாரைப்பற்றியும், காரைக்கால் அம்மையாரைப்பற்றியும், தினம் சொன்னவைகளையே திருப்பித் திருப்பி எனக்குச் சொல்லி காதைப் புளிக்க வைத்துவிட்டார்கள். இனிமேல் இந்த வீட்டில் ஒரு நிமிஷம் தங்குவதுகூட ஆபத்தென்பதை நேற்று உணர்ந்தேன். நாளையிலிருந்து நான் சிவகாமி அம்மாளுக்கு இராமலிங்க சுவாமிகளின் ஜீவிய சரித்திரத்தைப் படித்துக் காட்ட வேண்டும். இதற்காகவா லக்ஷ்மிபுரத்திலிருந்து வந்தேன்? பவானி நீ என்மேல் இத்தருணம் கருணை செய்ய வேண்டும். உன் மனத்தைப்பற்றி நான் நாளை சாயங்காலத்திற்குள் அறிய வேண்டும். ஒரு முடிவுக்கும் வராமல் நான் இப்படியே எத்தனை நாட்கள் இங்கே தங்க முடியும்? உடனே பதில்.''

இப்படிக்கு
அன்புள்ள
ஷண்முகம்

கடிதத்தைப் படித்த பவானிக்குச் சிரிப்பும் கோபமும் ஒரே சமயத்தில் தோன்றின. கன்னா பின்னாவென்று தனக்கு கடிதம் எழுதத் துணிந்த சண்முகத்தை நினைத்துக் கொண்டதும் அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால் அவன் அத்தை அம்மாளைப்பற்றி எழுதியிருந்த அபிப்ராயத்தை நினைத்துக் கொண்டதும் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''வேண்டும் இந்த அத்தைக்கு! பிறருக்கு அளவின்றி அதிகப்படி உபசாரங்கள் செய்யும் மனிதர்களின் கதி இது தான். பாவம்! பையன் பகல் வேளைகளில் பெரிய பங்களா வில் துணையின்றிப் பொழுதைப் போக்கக் கஷ்டப்படு கிறானே என்று அத்தை ஏதோ தனக்குத் தெரிந்த விஷயங் களைப்பற்றி அவனிடம் பேசி வாங்கிக் கட்டிக் கொண்டது வசைதான்'' என்று பலவாறு சிந்தித்த பவானி, அந்தக் கடிதத்தை சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டாள்.

## 8

அன்று சாயங்காலம் காவேரியாறுப் பக்கம் பொழுது போக்கிற்காகப் போய் வருவதென்று அத்தை அம்மாள் தீர்மானித்தாள். பெட்ரோல் செலவு செய்யக் கட்டா தென்றும் சாதாரண காலங்களில் உபயோகப்படுத்தும் மாட்டு வண்டியில்தான் போய்வர வேண்டும் என்றும் சிவகாமி அம்மாள் கண்டிப்பாகக் கூறிவிடவே, வண்டியி லேயே ஆற்றுப் பக்கம் போவதென எல்லோரும் கிளம்பி னார்கள்.

பங்களா வாசல் பக்கம் தயாராய் வந்து நின்ற சிவகாமி அம்மாளுக்கு அப்பொழுதுதான் வண்டியோட்டும் அங்கமுத்துவிற்கு இரண்டு நாளாக ஜுரம் என்ற விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

''வண்டியோட்டக்கூட ஆள் இல்லையே. என்ன செய்யலாம்?'' என்று அத்தை அங்கலாய்த்துக் கொண் டாள்.

''அப்படியானால் இன்னொரு நாளைக்குப் போகலாம் அத்தை'' என்று பவானி அன்று வெளியில் போவதை ஒத்திப்போட முயற்சித்தாள்.

''பெரியம்மா! எனக்கு வண்டியோட்டத் தெரியும் எங்க வீட்டு வண்டியை நானேதான் ஓட்டுவேன். நீங்க



வாங்க, அம்மா'' என்ற ஷண்முகம் பிடிவாதமாக அத்தை அம்மாளை அழைத்தான்.

''அதுகள் புது மாடுகள், அப்பா! அதுக்காகத்தான் யோசிக்கிறேன்'' என்று அத்தை இழுத்தாற்போல் கூறினாள்.

''பாருங்கள், என் சாமர்த்தியத்தை. எப்பேர்ப்பட்ட முரட்டு மாடுகளும் என்னைக் கண்டால் நடுங்கும்'' என்று ஷண்முகம் தைரியம் சொல்லவே அத்தை மனமில்லாமல் வண்டியில் ஏறிக் கொண்டாள். அதற்கு மேலும், மறுத்துக் கூற இஷ்டப்படாத பவானி மௌனமாக வண்டியில் அத்தையின் பக்கம் உட்கார்ந்து கொண்டாள். ஷண்முகம் மூக்கணாங் கயிற்றை இழுத்துப் பிடித்துக் கொண்டு ஓடத் தயாராய் நின்று கொண்டிருந்த மயிலைக் காளைகளைத் தட்டிவிட்டான். ''ஜில் ஜில்'' என்று சலங்கை நாதம் காதைப் பிளக்க மாடுகள் இரண்டும் காவேரியாற்றை நோக்கிப் பறந்தன.

அந்தி சூரியன் தன் சிவந்த கிரணங்களை நதியின் மீது வீசிக் கொண்டிருந்த நதிக்கரையில் அவளையும் ஷண்முகத்தையும் தனியே விட்டு அத்தை அம்மாள் எங்கேயோ மறைந்து விட்டதை உணர்ந்து பவானி திடுக்கிட்டாள்.

அத்தை எங்கே போயிருக்கக் கூடும் என்று அவள் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த சமயம் ஷண்முகம் அவள் அருகில் வந்து நின்று கொண்டு, ''பவானி! நான் எழுதிய கடிதத்தை படித்திருப்பாய் என்று நினைக்கிறேன்'' என்றான்.

''படித்தேன்'' என்று பட்டெனச் சொல்லிவிட்டு பவானி அத்தை அம்மாளுக்காகச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கள். நான் ஆலமரத்தடிவரை போய் வருகிறேன்'' என்று அத்தை என்னிடம் சொல்லிவிட்டுத்தான் போனார்கள். அதனால் நீ கவலைப்பட வேண்டாம்'' என்று ஷண்முகம் சொல்லி விட்டு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

பவானிக்கு அந்த வார்த்தைகளைக்கேட்டதும் சிவகாமி அம்மாள்மீது ஏற்பட்ட கோபம் கொஞ்ச நஞ்சமல்ல.

''வாருங்கள், அத்தையைப் போய்க் கூட்டி வருவோம். வீட்டிற்குத் திரும்ப நேரமாகிவிட்டதே!'' என்று பவானி சொன்னதும் ஷண்முகம் சிரித்தான்.

''கடிதத்தைப் படித்தாயே பவானி அதைப்பற்றி ஏன் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறாய்?'' என்று அவன் விடாமல் கேட்டான்.

''அசட்டுக் கதாசிரியர் அபத்தமாக உளறி இருக்கும் ஒரு அத்தியாயத்தைப் படித்தேன். அவ்வளவுதான்'' என்று பவானி எரிச்சலுடன் பதிலளித்தாள்.

''பவானி! உன்னை நான் எவ்வளவு தூரம் காதலிக்கிறேன் தெரியுமா?'' என்று துணிவுடன் ஷண்முகம் கேட்டான்.

''அதற்கு நானென்ன செய்யட்டும்!'' என்று பவானி சலிப்பாகக் கூறியது ஷண்முகத்திற்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது.

''பவானி நீ என்னை காதலிப்பதாக ஒரு வார்த்தை சொல், போதும்'' என்று அவள் முன் நின்றுகொண்டு அவன் கெஞ்சத் தொடங்கினான்.

பவானி மிகவும் மனக்கிலேசம் அடைந்தாள். ''நல்ல அத்தை. இப்படி சங்கடத்தில் என்னை மாட்டிவிட்டுப் போய் விட்டாங்க'' என்று சிவகாமி அம்மாளை மனதில் சபித்துக்கொண்டு, மிஸ்டர் ஷண்முகம்! வெகு வேடிக்கையாயிருக்கிறது, நீர் கேட்கும் கேள்வி! உம்மைப்பற்றி என் மனதில் அப்படிப்பட்ட எண்ணம் ஒன்றும் ஏற்பட்டதில்லை. அப்படியிருக்கையில் என்னைக் கட்டாயப்படுத்திக் கேட் பதில் என்ன உபயோகம்!'' என்று மிகவும் கோபமாகச் சொன்னாள்.

''அப்படியானால் பவானி! நீ என்னைக் காதலிக்கவில்லை என்றா சொல்லுகிறாய்?'' என்று ஷண்முகம் அலறினான்.



''நான் உம்மை சகோதரன்போல் பாவிக்கிறேன். இத்துடன் நீர் இந்த சம்பாஷணையை நிறுத்திக்கொள்ளும்'' என்று வெடுவெடுத்தாள் பவானி.

அவள் பதில் ஷண்முகத்திற்கு ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. ''பவானி! நான் உனக்கு எந்தவிதத்தில் குறைந்து விட்டேன்? ஏன் உனக்கு என்மேல்இஷ்டமில்லை? உன் மனதை வேறு யாராவது கவர்ந்து விட்டார்களா?'' என்று பிடிவாதமாக அவன் கேட்டது பவானியின் முகத்தைக் கோபத்தினால் சிவக்கடித்தது.

''நீர் பேசுவது விசித்திரமாகத்தான் இருக்கிறது. உம் மேல் பிரியம் இல்லை என்றேன். 'ஏன் இல்லை' என்று கேட்டால் நான் என்ன அதற்குப் பதில் சொல்ல முடியும்? ஒருவர் மேல் இஷ்டப்படுவதற்கும், இஷ்டப்படாததற்கும் காரணங்கள் சொல்லமுடியுமா? நான் தனியாக இருக்கிறேன் என்ற தைரியத்தில் நீர் மனக்கிலேசத்தை உண்ணு பண்ணும் கேள்விகளைக் கேட்கிறீர். உமக்குப் பதில் சொல்ல நான் தயாராயில்லை'' என்று சொல்லிவிட்டுச் சீற்றம் தாங்காதவளாய்க் காவிரி நதிக் கரையை விட்டு சாலைப் பக்கம் திரும்பினாள்.

ஷண்முகம் பைத்தியக்காரன்போல் ஆனான். ஏமாற்றம், ஆத்திரம் முதலிய பல உணர்ச்சிகளின் வசப்பட்ட அவன் சட்டென்று ஓடி அவள் முன் நடந்து வழியை மறித்துக் கொண்டு, ''பவானி, உன் அப்பாவும் அத்தையும் நம் விவாகத்தை நடத்தி வைத்தால் அப்போது நீ என்ன செய்வாய்? உன் அத்தை நமது விவாகத்தைப்பற்றித் தீவிரமாய் முயற்சிக்கிறார் என்பது உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்று துடுக்காகக் கேட்டான்.

''என் அப்பா என் இஷ்டப்படிதான் நடப்பார். அத்தையின் முயற்சிகளைப்பற்றி நான் கவலைப்படவில்லை. வழியை விடுங்கள். நான் போக வேண்டும்'' என்று பவானி பல்லைக் கடித்தாள்.

''பவானி! என்ன இருந்தாலும் நீ குடும்பத்தின் கௌரவத்தை உத்தேசித்தாவது முறைப் பையனான என்னை மணந்துதான் ஆகவேண்டும். நமது கலாசாரங்களை நீ கைவிடமாட்டாய் என்று நான் நினைக்கிறேன்'' என்று ஷண்முகம் மேலும் பேசிக்கொண்டு வரவே பவானியின் துவேஷம் அதிகரித்தது.

''குல ஆசாரங்களை பார்க்கப்போனால் கல்யாணமாகாத பெண் நான் உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதே பெரிய தவறு. அதனால் போகிறேன். வழி விடுங்கள்'' என்று அவள் சுடச் சுடப் பதிலளித்தாள்.

''பவானி! நீ என்னை மணந்து கொள்வதாக வாக்களித்தாலொழிய நான் போக மாட்டேன்'' என்று அவன் பிடிவாதமாகச் சொன்னதைக் கேட்ட பவானி பத்திரகாளியாக மாறிவிட்டாள்.

''நீர் எனது தனிமையான நிலையை நினைத்துப் பயமுறுத்த வேண்டாம். அதோ தெரியும் மாந்தோப்பில் எங்கள் குடியானவன் சோமு இருக்கிறான். ஒரு கூச்சல் போட்டேனானால் நூறு பேர்கள் வந்து உமது முதுகு எலும்புகளை நொறுக்கி விடுவார்கள். படித்திருந்தும் நீர் இப்படி அகௌரவமாக நடந்து கொள்ள வேண்டாம். நகர்ந்து நில்லும்? என் வழியை மறிக்க வேண்டாம்.'' என்று உரத்த குரலில் கத்தினாள்.

ஷண்முகம் பயந்தே போய் விட்டான். எப்பவும் சிரித்த முகமாக வினயமாகப் பேசும் பவானி, தன் முன் ராட்சஸி போல் நிற்பதைக் கண்டு நடுங்கியவனாய் அவளது வழியினின்றும் நகர்ந்து கொண்டான்.

பவானி கோபமும் மனக்கிலேசமுமடைந்தவளாய்க் கரையை விட்டு மாடுகள் கட்டப்பட்டிருந்த ஆலமரத்தடியை நோக்கி விடுவிடென நடந்தாள். அங்கே சிவனே என்று உட்கார்ந்திருந்த அத்தை அம்மாள் முகத்தில் பவானியைக் கண்டதும் அசடு வழிந்தது. அப்போதிருந்த மனநிலையில் தன் அத்தையிடம் ஒன்றும் பேச இஷ்டப்



படாத பவானி ''வீட்டிற்குப் போக நேரமாகிவிட்டது அத்தை'', என்று மட்டும் சொன்னாள்.

ஷண்முகம் பெரும் குற்றவாளிபோல் நடுங்கிக் கொண்டே பவானியின் பின்னால் மெதுவாக நடந்து வந்தான்.

திரும்ப வண்டியை வீட்டிற்கு ஓட்டத் தன் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்ட ஷண்முகத்திற்கு தன் ஏமாற்றத்தினால் ஏற்பட்ட உணர்ச்சியை அடக்க முடியவில்லை. மாடுகளின் முதுகின்மீது சாட்டையைச் சுளீரென வீசினான். ரோஷம் தாங்காத மாடுகள் மிகவும் வேகமாக ஓட ஆரம்பித்தன.

''மெதுவாக அப்பா, ஷண்முகம்! மாட்டை அடிக்காதே. முரட்டு மாடுகள், அதுகள் எங்கேயாவது தள்ளிவிடப் போகிறதுகள்'' என்று அத்தை அம்மாள் வண்டியிலிருந்த வண்ணம் கூக்குரலிட்டாள்.

''பயப்படாதீங்க, பெரியம்மா! எனக்குத் தெரியும்'' என்று பல்லைக் கடித்துக்கொண்டே ஷண்முகம் மறுபடியும் சாட்டையால் மாடுகளின் முதுகின்மீது சொடேரென்று ஒரு அடி கொடுத்தான். அதே சமயம் பங்களூர் நோக்கிப் போகும் ஒரு மோட்டார் ரஸ்தாவில் கனவேகமாக 'பம்பம்' என்று அலறிக்கொண்டு போகவே, புது மாடுகள் இரண்டும் மிரண்டு போய், சாலையோரமாக இருந்த ஒரு கிடுகிடு பள்ளத்தை நோக்கித் தலைதெறிக்க ஓடின.

''ஐயோ அத்தை! செத்தோம் நாம்!'' என்று கத்திக் கொண்டு பவானி வண்டியிலிருந்து தொப்பென்று குதித்து விட்டாள். ஷண்முகம் துணிச்சலாக ஒரே பாய்ச்சலில் வண்டியைவிட்டுக் குதித்துவிட்டான். அத்தை சிவகாமி அம்மாள் மட்டும் 'ஐயோ அப்பா' என்று கூக்குரலிட்டுக் கொண்டு வண்டியிலிருந்து விட்டாள். வண்டி பெரும் ஓசையுடன் பள்ளத்தில் சாய்ந்துவிட்டது.

குறிப்புதவிநூல்

# 9

பூஞ்சோலையில் வண்டி சாய்ந்த இரண்டு தினங்களுக்குப் பிறகு ஒருநாள் காலை லக்ஷ்மிபுரத்து பிள்ளையின் வீட்டில் ஏக அமர்க்களமாக இருந்தது.

''நான் அப்பவே சொன்னேனே, 'பையனை அனுப்பாதே வேண்டாம் அவங்க வீட்டு சம்பந்தம் நமக்கு'ன்னு! என் பேச்சை யார் கேட்டாங்க? படுங்க இந்த அவஸ்தையை!'' என்று முத்துப்பிள்ளை கூடத்தில் மேலும் கீழும் உலாவிக் கொண்டு தொண்டை கிழியக் கத்தினார்.

முற்றத்தின் தரைமீது உட்கார்ந்திருந்த அபிராமி அம்மாள் ஏற்கெனவே நடந்த சம்பவங்களைக் குறித்து மனம் நொந்து போயிருந்தாள். பிள்ளை கத்தினது இன்னும் அவள் மனதைப் புண்படுத்திவிடவே தாளமாட்டாதவளாய், ''இப்படி நடக்குமின்னு யார் ஜோஸியம் பார்த்தாங்க? அந்தப் பெண்ணை யாரு வண்டியிலிருந்து எக்கச்சக்கமாக குதிக்கச் சொன்னாங்க? சிவனேன்னு சிவகாமி அக்கா வாட்டமா வண்டியிலேயே உட்கார்ந்திருக்கப்படாதா? அவங்களுக்கு ஒரு காயமும் படலையாம். மணல் மூட்டையாட்டமா அப்படியே உருண்டுட்டாங்களாம். அது தலை எழுத்து காலு ஒடியணுமின்னு...'' என்று பதிலுக்குக் கத்தினாள்.

''உன் மகன் மேலே பிசகு இருக்கையிலே அந்தப் பெண்ணின் தலை எழுத்தை ஏன் இழுக்கறே? வண்டியோட்டத் தெரியாத இந்த நாய்ப் பயல் ஏன் முரட்டு மாட்டை அடிக்கணும்?'' என்று பிள்ளை சப்தமிட்டார்.

கூடத்தின் ஒரு மூலையில் பெஞ்சிமீது முகத்தில் அசடு வழிய உட்கார்ந்திருந்த ஷண்முகத்திற்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது.

''மாடு மிரண்டு கொண்டால் நான் என்ன செய்யட்டும் அப்பா? வண்டியிலிருந்து குதித்த எனக்குக் கூடத்தான்



578124

கொஞ்சம் காயம் பட்டுவிட்டது. மரத்து வேரில் கால் பட்டுக் குதிகால் சதை அப்படியே பிய்த்துக்கொண்டு விட்டது!'' என்றான்.

894.8113 LAK

''சே! நீ வாயை மூடுடா. உனக்குப் பேசக்கூட வாய் இருக்கா, இனிமேலே அந்தப் பொண்ணு கால் எலும்பு ஒடிஞ்சு போச்சுன்னு டாக்டர் சொல்லிட்டாராமே! இனி மேலே நாம் பூஞ்சோலைப் பக்கம் தலைகாட்ட முடியுமா? சாவுற மட்டும் சிவகாமியம்மா நம்ப குடும்பத்தை வேரோட கெல்லிக் கொண்டிருக்க மாட்டாளா... அற்பப்பயல்! அங்கே போனதில் பெரிய விரோதமல்லவா சம்பாதிச்சுக்கொண்டு வந்துவிட்டான்? ஒருசாண் கயிற்றை எடுத்து நான் நாற்து கொள்றதைவிட்டு வேறு வழியேது இப்போ?'' என்று பிள்ளை மீசை துடிதுடிக்கப் பேசினார்.

ஷண்முகம் வாயடைத்துப் போனான். அபிராமி அம்மாள் புருஷனுடைய கோபத்தை மேலும் தூண்ட இஷ்டப்படாதவளாய் இடித்தபுளி மாதிரி உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையவில்லை. சமையலறையில் காய் கறிகள் நறுக்கிக்கொண்டிருந்த வனஜாவின் மனம் மட்டும் சந்தோஷத்தால் குதித்துக்கொண்டிருந்தது. பவானி என்ற பேச்சு இனி அந்த வீட்டில் இல்லை என்று எண்ணி அவள் மனம் மகிழ்ந்தாள்.

இந்தச் சம்பவத்திற்குப்பிறகு ஒருநாள் முத்துப்பிள்ளை ஒரு கூடை வேர்களுடன் கூடத்துத் தரையில் பாயை விரித்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தவர், பொறுமையுடன் பேனாக் கத்தியால் அவற்றை ஒவ்வொன்றாக வெட்டி சம அளவுள்ள துண்டுகளாக்கிக்கொண்டிருந்தார். பக்கத்தில் வனஜா அவர் போட்டக் குப்பைகளைப் பெருக்கி ஒரு தட்டில் சேர்த்துக்கொண்டிருந்தாள்.

''உங்களைத்தானே?'' என்று கூப்பிட்டுக்கொண்டு வந்த அபிராமி அம்மாள், வனஜா குப்பைகளைக் கொட்டுவதற்காகக் கொல்லைப்பக்கம் சென்ற பிறகு, ஃபோட்டுர்

CONNEMARA PUBLIC LIBRARY

மிட்டாதார் கடைசிப் பொண்ணுக்கு கல்யாணம் ஆகலை யாமே? எதிர்விட்டு நாகம்மா இப்ப மோட்டூரிலிருந்து வந்தது, சொல்லிச்சு'' என்று சொன்னாள். அவள் முகத்தில் புன்னகை பொங்கியது.

முத்துப்பிள்ளை தமது கையிலிருந்த பேனாக்கத்தியைக் கீழே வைத்துவிட்டு மனைவியை முறைத்துப் பார்த்தார்.

''என்னாங்க அப்படி முழிக்கிறீங்க!'' என்று பல்லைக் காட்டினாள் அவள்.

''இனிமேலே நம்ப பையனுக்கு வெளியிலே பொண்ணு தேடற விஷயத்தை விட்டுடுன்னு அன்னிக்குத்தானே சொன்னேன்? அதற்குள்ளேயா நீ மறந்திடுவே?'' என்று முத்துப்பிள்ளை எரிச்சலுடன் கேட்டார்.

''அப்ப உங்க எண்ணந்தான் என்னன்னு ஒரு முடிவா சொல்லிவிடுங்களேன்'' என்று பொறுமை இழந்த அபிராமி அம்மாள் கேட்டாள்.

''வனஜாவைக் கட்டிவைத்து விடுவதுன்னு ஒரே தீர்மானம் பண்ணிவிட்டேன்'' என்று பிள்ளை கண்டிப்பான குரலில் கூறினார்.

''தம்பிக்கு வனஜாமேலே அவ்வளவு பிடித்தமுன்னு சொல்ல முடியாது'' என்று மெதுவான குரலில் அபிராமி அம்மாள் புருஷனிடம் கூறினாள்.

''அவனுக்கு அந்தப் பூஞ்சோலைப் பெண்மேல் இத்தனை நாள் கண் இருந்தது. அதனாலே வீட்டிலே இருந்த வஸ்துவின் அருமை தெரியலை. அதான் போச்சே! இனிமேலே கூட அவன் அந்தப் பெண்ணை நினைக்க முடியுமா? இந்த மாசக் கடைசியிலேயே ஒரு முகூர்த்தத்திலே தம்பிக்கும் வனஜாவிற்கும் கல்யாணத்தை நடத்தி விடலாமென்று முடிவு கட்டிவிட்டேன்'' என்று பிள்ளை கூறியதைக் கேட்ட அபிராமி அம்மாள் திடுக்கிட்டாள்.



''வனஜா எதற்கு வந்து சேர்ந்தாள் இந்தக் குடும்பத்திற்கு?'' என்று அங்கலாய்த்தாள் அபிராமி. நசித்துப் போன தனது குடும்பத்தை மறுபடியும் பழைய ஸ்திதிக்குக் கொண்டு வர அவள் தன் பிள்ளைக்கு ஒரு ஜமீன்தார், அல்லது மிட்டாதாரின் ஏக புதல்வியைக் கட்டிவைத்து விடுவதென்று பல மனக்கோட்டைகள் கட்டியிருந்தாள். அவைகள் எல்லாம் வனஜாவினால் பொடியாகவல்லவா போய்விட்டன என்று எண்ணிய அவள் மனம் சஞ்சலப் பட்டது.

வனஜாவைத் தன் மகனுக்கே கல்யாணம் செய்து வைத்தால் எல்லாச் செலவும் தங்கள் தலையிலல்லவா விழும். பெண்ணுக்கு மூக்குத் திருகாணி முதற்கொண்டு செய்து போட்டாக வேண்டும். 'நல்ல பெண்! ஒரு கந்தையைக் கட்டிக்கொண்டு மாமன் வீட்டிற்கு வந்து விட்டாள். வந்த வேளை என்ன வேளையோ தெரியவில்லை. எடுத்த காரியமெல்லாம் கோளாறாக முடிகிறது' என்று மனதில் வனஜாவை சபித்துக் கொண்டு அபிராமி அம்மாள் புருஷனிடம், ''உங்க இஷ்டப்படி செய்யுங்க. பையனுக்கென்னவோ வனஜாமேலே அவ்வளவு இஷ்டமில்லை'' என்று பெருமூச்சு விட்டாள்.

''உன்னைக் கட்டிக்கொண்டபோது ரொம்ப இஷ்டப் பட்டுத்தான் கட்டிக் கொண்டேனாக்கும்? எல்லாம் கல்யாணம் ஆனபிறகு காலக்கிரமத்திலே இஷ்டம் ஏற்பட்டு விடும். நீ சும்மா போ!'' என்று கூறிவிட்டுப் பிள்ளை சிரித்தார். அவருக்குத் தமது பால்ய லீலைகளைப் பற்றி ஞாபகம் வந்தது.

அபிராமி அம்மாளும் கடந்துபோன பழைய நாட்களை நினைத்துக் கொண்டவள் சிரித்த வண்ணம், ''கறுப்புப் பெண்ணு வேண்டாம் என்று சொல்லி விட்டீங்க என்னை முதல்லே'' என்றாள்.

''அப்புறம் நீயே எனக்கு ரதியாகிவிடலையா! அப்படித்தான் போ எல்லாருக்கும்'' என்று சொல்லிவிட்டுப் பிள்ளை வாய்விட்டுச் சிரித்தார்.

''போதும் போங்க, உங்க புராணத்தை எடுத்து விடாதீங்க, அதையெல்லாம் கேட்கக்கூட எனக்கு வெட்கமா இருக்கு'' என்று அபிராமி அம்மாள் கூறிக்கொண்டு கூடச் சிரித்தாள்.

குப்பையைக் கொட்டிவிட்டு உள்ளே திரும்பிய வனஜாவிற்கு மாமனும் மாமியும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த காட்சி வியப்பாக இருந்தது. இரண்டு வருஷங்களாக அந்த வீட்டில் தங்கியிருக்கும் அவள், ஒரு நாளாவது அவர்கள் சண்டையிட்டுக் கொள்ளாமல் சிரித்துப்பேசிக்கொண்டிருந்ததைக் கண்டதில்லை. எந்த அற்ப விஷயத்திற்கும் இருவருக்கும் தர்க்கந்தான். ''ஏது, மாமாவும் மாமியும் சிநேகமாக இருக்கறாப்போல் இருக்கு! இது நல்லதற்கு அறிகுறியா? கெட்டதற்கு அறிகுறியா?'' என்று அவள் மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

அந்த மாதக் கடைசி வாரத்தில் முத்துப்பிள்ளை வீட்டில் பல ஆர்ப்பாட்டங்கள் செய்து கொண்டிருந்தார். கல்யாணத்திற்குத் தேதி வைத்தாகி விட்டது. கேட்பானேன்! அவருக்கு ஓய்வு ஒழிச்சலில்லை. இங்குமங்கும் தமது மகன் கல்யாணக் காரியங்களைக் குறித்து அலைந்து கொண்டிருந்தார்.

''முத்துப்பிள்ளையின் குமாரனான சிரஞ்சீவி ஷண்முகத்திற்கும் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை புத்திரியும் எனது சகோதரியின் குமாரத்தியுமான திருநிறைச்செல்வி வனஜாவுக்கும் திருமணம் செய்வதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு'' என்ற விவாக அழைப்புப் பத்திரிகையைப் படித்த வனஜாவின் மனம் குதூகலத்தினால் பூரித்தது. தான் காண்பது கனவோ நனவோ என்றுகூட அவளுக்குச் சந்தேகமாயிருந்தது. தன்னைப்போல் பாக்கியவதி உலகில் யாரும் இல்லை. கடைசியில் ஷண்முகமே தனக்கு கணவனாகப் போகிறான் என்று ஆனந்தவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தாள்.

# 10

சேர்வராயன் மலையடிவாரத்திலே இருந்த மின்னூர், பத்து வருஷங்களுக்கு முன்பு ஒரு சின்னஞ்சிறு ஊராக இருந்தது. பத்தே வருஷங்களில் அந்த ஊர் கிடுகிடுவென்று முன்னேறி ஒரு பெரிய டவுனாகி விட்டதென்றால் மிகவும் அதிசயமே. அது தன்னுடைய நாகரிக வளர்ச்சியில் சேலம் டவுனையே தோற்கடித்து விட்டதென்றால் மின்னூரின் பெருமையைப்பற்றி அதிகம் பேசுவானேன்!

சேலம் ஜில்லாவைச் சேர்ந்தது மின்னூர். அதில் சுமார் முப்பதினாயிரம் ஜனங்கள் வசித்துக் கொண்டிருந்தார்கள். சேலம் ஜில்லாவிலே வேலைபார்த்து, உத்தியோகத்திலிருந்து ரிட்டையர் ஆன பெரிய ஆபீஸர்கள் எல்லாரும் மின்னூரில்தான் பங்களாக்கள் கட்டிக்கொண்டு தமது வாழ்நாட்களைக் கழித்து வந்தனர்.

பத்து வருஷ காலத்திற்குள் கட்டப்பட்டதாகையால் மின்னூரிலிருக்கும் பங்களாக்கள் எல்லாம் புது மாடல் கட்டடங்களாகத் திகழ்ந்தன. வரிசையாகத் தோன்றிய பங்களாக்கள் நிறைந்த அந்த இடத்திற்கு 'மின்னூர் எக்ஸ்டென்ஷன்' என்று பெயர்.

மின்னூர் எக்ஸ்டென்ஷனில் வசிக்கும் ஆபீஸர்கள் எல்லாரும் பெரிய இடத்து ஆசாமிகள். அவர்களுடைய மனைவிமார்கள் பெரிய இடத்துப் பெண்கள். அவர்களுக்குப் பொழுது போக வேண்டாமா? அதனால் மின்னூர் லேடீஸ் கிளப் ஒன்று சில வருஷங்களுக்கு முன் தோன்றியது. இன்னும் மின்னூர் சங்கீதசபையொன்றும், 'மின்னூர் டாக்கீஸ்' என்ற சினிமாக் கொட்டகையும், மின்னூரை நாகரிகத்தின் முன்னணியில் நிற்கச் செய்தன.

மின்னூரில் இன்னும் இரண்டு விசேஷ அம்சங்கள் இருந்தன. ஒன்று 'சேர்வா பிலிம்ஸ் கம்பெனி' யாரின் 'சேர்வா ஸ்டூடியோ.' நாலைந்து வருஷங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட அந்தக் கம்பெனி சுமார் இருபது படங்

களை எடுத்துத் திரையுலகிற்கு வீசிவிட்டது. சினிமா கலை வளர்ச்சியில் தானும் மற்ற டவுன்களுக்கு எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை என்று மின்னூர் கர்வப்படுவதைப் போலிருந்தது சேர்வா ஸ்டுடியோவின் படப்பிடிப்பின் ஆர்ப்பாட்டம்.

இன்னொரு அம்சம் மின்னூர் நர்சிங் ஹோம். டாக்டர் சுந்தரவதனம், எம். பி. எம். பி. எச். (ஆர்த்). எப். ஆர். சி.எஸ். (எடின்) அவர்கள் அங்கே பெரிய 'நர்சிங்ஹோம்' ஒன்றைக் கட்டி மிகத் திறமையுடன் நடத்தி வந்தார். மூன்று வருஷ காலத்திற்குள் அந்த நர்சிங் ஹோமின் புகழ் பல ஜில்லாக்களுக்கு எட்டிவிட்டது. சேலம் ஜில்லா வாசிகளும், கோயம்புத்தூர் ஜில்லா பணக்காரர்களும், திருச்சி ஜில்லா ஜமீந்தார்களும் மிட்டாதார்களும் ''மின்னூர் நர்ஸிங் ஹோமில் ஒரு தடவையாவது ஆரோக்யத்தைக் குறித்துத் தங்காத ஜன்மம் மனித ஜன்மமல்ல'' எனக் கருதி வந்தார்கள். ஆகையால் மின்னூர் நர்சிங் ஹோமில் எப் பொழுதும் நோயாளிகள் கூட்டம் அதிகம். சில சமயங் களில் அவசரக் கேஸ்களுக்குக்கூட இடம் கிடைக்காது. மின்னூர் நகரவாசிகள் டாக்டர் சுந்தரவதனத்திடம் சிகிச்சை பெறுவதை ஒரு பெருமை எனக்கருதி வந்தார்கள்.

''டாக்டர் சுந்தரவதனந்தான் 'கான்ஸர்னு' 'டயக் னோஸ்' பண்ணினார் என்று ரிட்டையர்டு டிப்டிகலெக்டர் மனைவி, ராவ்பகதூர்'' ராமாமிர்தத்தின் மனைவியிடம் பெருமையாகத் தன் வியாதியைப்பற்றிச் சொல்லிக் கொள் வாள்.

''எனக்கு 'அபெண்டிஸைடிஸ்' வந்தபோது டாக்டர் சுந்தரவதனந்தான் ஆபரேஷன் பண்ணினார்'' என்று பெரு மிதத்துடன் தனது வியாதியை விஸ்தரிப்பாள் மிஸஸ் சுவர்ணாராமன். ''என் 'டான்ஸில்' ரொம்ப 'டிரபிள்' கொடுத்துண்டு இருந்தது. டாக்டர் சுந்தரவதனத்திடம் காட்டினேன். ஆபரேஷன் பண்ணிவிடணும் என்று சொல்லி விட்டார்!'' என்று மிஸஸ் சோணாசலம் ஸ்ரீமதி அமிர்த வல்லியிடம் ஒரு மணி நேரம் சலிக்காமல் பிரசங்கம்



செய்வாள். இதுதான் மின்னூர் லேடீஸ் கிளப்பில் தினம் பேசப்படும் விஷயம். மின்னூர் ஆபீசர் மனைவிகளுக்கு இப்படிப் பேசிக் கொள்வதிலேயே அலாதிப் பெருமை.

மோட்டுவளையையே பார்த்துக்கொண்டு யோசனை யில் ஆழ்ந்துகிடந்த நோயாளி பவானியை, ''மிஸ் பவானி! இன்றைக்குத் தாமதமாக வந்ததற்கு மன்னிக்கவும்'' என்று உரத்த குரலில் சொல்லிக்கொண்டு நர்ஸ் ஜானகி உள்ளே நுழைந்தாள்.

''பரவாயில்லை, எனக்கு ஒன்றும் இப்பொழுது தேவை யில்லை'' என்று கூறிவிட்டு, பவானி கட்டிலில் படுத்த வாறே மறுபடியும் சிந்தனையுலகில் மூழ்கிவிட்டாள். அவள் அங்கே நோயாளியாக வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட் டனவே! அதற்குள் எத்தனை மாறுதல்கள் அவள் மனதில் ஏற்பட்டு விட்டன.

பவானி பணக்கார வீட்டுப் பெண்ணாதலால், நர்ஸிங் ஹோமில் தனி அறையில் வைத்துச் சிகிச்சை செய்யப் பட்டாள். விஸ்தாரமானதொரு தனி அறை அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அறையிலிருந்தவாறே வெளிக் காட்சிகளைக் கண்டு ஆனந்திக்கும்படி படுக்கை எதிரில் ஒரு பெரிய ஜன்னல், வலது பக்கம் கண்ணாடி தாங்கிய மேஜை ஒன்று இடது பக்கத்தில் நோயாளியைப் பார்க்க வருபவர்கள் உட்கார்ந்து பேச ஒரு நாற்காலி. படுக்கையிலிருந்து கைக்கெட்டிய தூரத்தில் ஒரு சிறுபீரோ. அதில் நோயாளிக்கு வேண்டிய பழங்களும் படிக்கக் கதைப் புத்தகங்களும் இருந்தன.

வண்டி பள்ளத்தில் சாய்ந்தபோது என்ன நேருமோ என்ற பயத்தில் பவானி, வண்டியினின்று எக்கச்சக்கமாகக் குதித்துவிட்டாள் அல்லவா? சாலையோரத்தில் செங்கல் காளவாய்க்காக மண் எடுப்பவர்கள் வெட்டி விட்டுப் போயிருந்த குழியொன்றில் தாறுமாறாகக் குதித்ததினால் ஒரு கால் பள்ளத்திலும் ஒரு கால் தரையிலுமாக அவள் இருந்த அந்த அலங்கோல நிலைமையைச்சமாளிப்பதற்குள்

பள்ளத்திலே சாய்ந்து கொண்டிருந்த அந்த வண்டியின் சக்கரமொன்று கிடுகிடுவென அவள் வலதுகால்மீது உருண்டோடி அப்பாற்போய் படார் எனச் சாய்ந்தது. அப்பப்பா! எப்பேர்ப்பட்ட வலி அப்பொழுது பவானிக்கு ஏற்பட்டது! 'அத்தை!' என்று வீறிட்டாள் அவள். மண் மூட்டையைப் போன்று கீழே விழுந்த அத்தை சிவகாமி அம்மாள் பவானியின் கூக்குரலைக் கேட்டு எழுந்து ஓடோடியும் வந்தவள், அவளுடைய நிலைமையைக் கண்டு பதறிப் போனாள்.

''ஐயோ அத்தை! காலை வலிக்குதே, என்னைத் தூக்குங்கள் இந்தப் பள்ளத்திலிருந்து'' என்று பவானி கண்ணீர் விட்டாள். வண்டி சாய்ந்ததையும் அத்தை அம்மாள் போட்ட கூக்குரலையும் கேட்டு சாலையோர வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த குடியானவர்களில் சிலர் ஓடி வந்து, தங்களால் ஆன உதவியைச் செய்தனர்.

மிகவும் பத்திரமாக பங்களாவிற்குக் கொண்டு வரப்பட்ட பவானியின் காலைப் பரிசோதித்துப் பார்த்த உள்ளூர் டாக்டர், வலது காலின் எலும்பொன்று இரண்டாக ஒடிந்துவிட்டதென்றும், பெரிய ஆஸ்பத்திரியில் வைத்துச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்.

டாக்டர் சுந்தரவதனம் ரண வைத்தியத்தில் மிகவும் நிபுணர் என்று சிவஞானம்பிள்ளை கேள்விப்பட்டதும் தாமதமின்றி பவானியைக் காரில் படுக்க வைத்து, அத்தை அம்மாள் சகிதம் பூஞ்சோலைக்கு ஐம்பதாவது மைலில் இருந்த மின்னூர் நர்ஸிங்ஹோமிற்குக் கிளம்பிவிட்டார்.

அன்று குளோரோபாரத்தின் மயக்கும் சக்தியில் தன் நினைவை இழந்துவிட்ட பவானிக்கு என்ன நடந்ததென்று தெரியாது. கண்ணை விழித்துப் பார்த்தபொழுது, ஒரு விஸ்தாரமான அறையில் தான் ஒரு கட்டிலில் படுத்திருப்பதையும், தனது வலது காலில் ஒரு பலத்த கட்டுப் போடப்பட்டு அது ஆடாமல் அசையாமலிருக்க வேண்டி ஒரு இரும்பு பிரேமில் இணைக்கப்பட்டிருப்பதையும் உணர்ந்தாள்.



மயக்க மருந்தினால் ஏற்பட்ட அருவருப்பும், காலில் ஏற்பட்டிருந்த வலியும், படுக்கையிலே அசையாது கிடக்க வேண்டுமே என்ற விசனமும் சேர்ந்து கொள்ளவே, பவானிக்கு அந்த நர்ஸிங்ஹோமின் வாழ்க்கை கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

'இந்த மருந்தைச் சாப்பிடுங்கள்' என்று ஒரு நர்ஸ் ஏதோ ஒரு திரவத்தை அவள் கண் விழித்துக்கொண்டதும் கொண்டு வந்து வாயில் ஊற்றினாள். சப்பை மூக்கும், மாநிறமும், மேட்டு நெற்றியுமாயிருந்த நர்ஸைக் கண்டதும் பவானிக்கு அவளிடம் பேசக்கூட வெறுப்பாக இருந்தது.

கைதியைப்போல் ஒரு அறையில் 'கட்டுப் போடப்பட்டு' உற்சாகம் அளிக்கக்கூடிய தோற்றமில்லாத ஒரு நர்ஸ் உதவி செய்ய, இன்னும் எவ்வளவு நாட்கள் அங்கே இருக்க வேண்டுமோ என்று கவலை கொண்டவளாய் பவானி கண்களை மறுபடியும் மூடிக்கொண்டாள். அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. ஒரு சமயம் அவள் நொண்டியாகவே காலங்கழிக்க நேரிட்டால், வாழ்க்கை மிகவும் பயங்கரமாக அல்லவோ இருக்கும்? அதை நினைத்துக்கொண்ட பவானியின் மூடியிருந்த விழிகளில் கண்ணீர் பொங்கிக் கன்னங்களில் வழிந்தது.

''நர்ஸ்! நோயாளி எப்படி இருக்கிறார்கள்! நன்றாக ராத்திரி தூங்கினாங்களா?'' என்று கேட்ட வண்ணம் அறையின் கதவைத் திறந்துகொண்டு வந்து நின்றார் டாக்டர் சுந்தரவதனம். அதிகாரமான குரலும் 'டக் டக்' என்ற பூட்ஸின் சப்தமும் கேட்ட பவானி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

வாலிபத்தையெல்லாம் படிப்பிற்கு அர்ப்பணம் செய்துவிட்டு வற்றிச் செத்த குச்சிகள் போலிருப்பார்கள் வைத்தியர்கள் என்ற அபிப்பிராயம் கொண்டிருந்த பவானி தன் முன் நல்ல உயரமும், உயரத்திற்கேற்ற பருமனும், கம்பீர

மான தோற்றமும் கொண்ட டாக்டர் சுந்தரவதனம் நிற்பதைக் கண்டு ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போனாள்.

''நன்றாகத் தூங்கினார்கள்! கவலைக்கிடம் ஒன்றுமில்லை'' என்று அந்த நர்ஸ் பணிவாகப் பதிலளித்தாள்.

''சந்தோஷம்'' என்று கூறிவிட்டுத் திரும்பினார் சுந்தரவதனம். பவானி திடீரென, ''டாக்டர்! என் கால் சரியாகிவிடுமா! தயவுசெய்து உண்மையைச் சொல்லி விடுங்கள்!'' என்று கெஞ்சின குரலில் கேட்டாள்.

சுந்தரவதனம் திரும்பி, ''சரியாகிவிடும்! பயப்பட வேண்டாம்'' என்று அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். பவானியின் முகம் குப்பென்று சிவந்தது.

''மிகவும் வந்தனம்!'' என்று கூறிக்கொண்டே அவள் தனது முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

பவானியுடன் அவள் அத்தை அங்கேயே தங்கியிருந்தாள். அத்தை அம்மாளுக்கு நர்ஸிங்ஹோமிலேயே ஒரு தனியறை கொடுக்கப்பட்டிருந்தது. காலையில் டாக்டர் தமது 'ரவுண்ட்'ஸுக்கு வந்துபோன பிறகு சிவகாமி அம்மாள் பவானிக்கு காப்பி, பலகாரம் முதலியவைகளைத் தானே தயாரித்துக்கொண்டு வந்து கொடுப்பாள். பிறகு பகல் போஜனம் தயாரிக்கப் போய்விடுவாள். சாயங்காலம் முழுவதும் நோயாளியின் அருகில் உட்கார்ந்து பழம் நறுக்கிக் கொடுத்தும், படுக்கையை தட்டிச் சரிப்படுத்தியும் மற்றும் பலவிதமான சிசுருஷைகள் செய்தும் வந்தாள். இரவில் பவானிக்குத் துணையாக அந்த அறையிலே படுக்கை விரித்துப் படுத்துக்கொள்வாள். சிவஞானம் பிள்ளை மட்டும் பூஞ்சோலையிலிருந்து வாரம் இருமுறை வந்து மகளைப் பார்த்துவிட்டுப் போவார். இதையெல்லாம் யோசித்துக் கொண்டு படுத்திருந்தாள் பவானி.

# 11

லக்ஷ்மிபுரத்தில் முத்துப்பிள்ளையின் வீட்டு வாசலில் போடப்பட்டிருந்த கொட்டாரப் பந்தல், அவருடைய அருமைக் குமாரன் திருமணத்திற்கு இன்னும் இரண்டே நாள்கள்தான் இருக்கின்றன என்று அறிவிப்பதைப்போல் மிகவும் அலங்காரமாக விளங்கியது. முத்துப்பிள்ளை தனது ஒரே மகனின் விவாகத்தை விமரிசையாகச் செய்யத் தீர்மானித்திருந்தார். ஆதலால் அவருக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாமலிருந்தது. கல்யாண ஊர்வலத்திற்கென்று பிரபல நாதஸ்வர வித்துவான் ஒருவரை அமர்த்திவிட்டு அப்பொழுதுதான் அவர் வீடு திரும்பி ஆயாச மிகுதியினால் தமது சாய்வு நாற்காலியில் வந்து படுத்துக்கொண்டார். முன்னால் அபிராமி அம்மாள் வந்து முகத்தைச் சுணங்கிக் கொண்டு நின்றாள்.

''என்ன சமாசாரம்! பெண்ணுக்குப் பிடித்தமான புடவை எடுத்தாச்சல்லவா? எல்லா வேலையையும் என்னாலேயே செய்ய முடியாது. புடவை விஷயம் வீட்டுப் பெண்களைச் சேர்ந்தது'' என்று படபடவென்று பேசிக்கொண்டு தமது ஜரிகை அங்கவஸ்திரத்தினால் முகத்தில் வடிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டார் பிள்ளை.

''ஒரு பேச்சு, கொஞ்சம் சத்தமிடாமல் கேளுங்க'' என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே சொன்னாள் அபிராமி அம்மாள். ''பையனுக்கு இந்தக் கல்யாணத்து மேலே மனசேயில்லை. இதை நிறுத்திவிட்டா தேவலை'' என்று ரகசியமாகக் கூறினாள்.

பிள்ளை நாற்காலியிலிருந்து துள்ளிக் குதித்தார். ''என்ன சொன்னே, கலியாணத்தை நிறுத்துவதா?'' என்று கத்தினார். அவ்வளவுதான்! வீட்டில் கல்யாணத்திற்காக நாலு நாள் முன்னதாகவே வந்திருந்த அவருடைய பந்து ஜனங்கள் எல்லாரும் கூடத்திற்கு ஓடிவந்து விட்டார்கள்.

அவருடைய இரு மூத்த பெண்களும் அடுக்களையிலிருந்து கூடத்திற்கு ஓடினார்கள்.

''என்னப்பா சங்கதி, ஏன் இப்படிக் கோவமாயிருக்கிறீங்க?'' என்று அவர்கள் பதறுவதைக்கூடக் கவனியாமல் முத்துப்பிள்ளை, ''எங்கே ஷண்முகம்! கூப்பிடு அவனை இங்கே!'' என்று தொண்டை கிழியப்போட்ட அதட்டலைக் கேட்டு, அதுவரை 'நொய்நொய்' என்று நச்சரித்து அழுது கொண்டிருந்த விருந்தாளி ஒருவரின் குழந்தையொன்று கூடப் பயந்துபோய் 'கப்சிப்'பென்று வாயை மூடிக் கொண்டது.

வாசல்புரத்து அறையிலே உட்கார்ந்து பவானியை நினைத்துக்கொண்டிருந்த ஷண்முகம் தந்தையின் கோபக் குரலைக் கேட்டு பயந்தவனாக கூடத்துப் பக்கம் வந்தான்.

கல்யாணப் பெண் என்ற உரிமைபெற்ற வனஜா தன்னை சிங்காரித்துக் கொண்டிருந்தவள் கூடத்தில் நடக்கும் கலவரத்தைக் கண்டு திகிலடைந்து போய் காமிரா உள்ளிருந்து மெல்ல எட்டிப் பார்த்தாள்.

''என்னடா சொல்றே! இந்தக் கல்யாணத்திலே உனக்குப் பிரியமில்லையாமே? வனஜாவைக் கட்டிக்க உனக்குக் கசக்குதோ?'' என்று முத்துப்பிள்ளை தமது மகனைப் பார்த்து இரைந்தார்.

வீட்டிலிருக்கும் எல்லோருடைய கண்களும் ஏககாலத்தில் தன்னை நோக்குவதைக் கண்டு ஷண்முகம் மனம் கூசினவனாய், ''எனக்கு இப்போ கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டமில்லை. அவ்வளவுதான்?'' என்று பதிலளித்தான்.

''உன் இஷ்டத்தையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் நான் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யணுமாக்கும்! பேஷ்! பேஷ்! என் ஏற்பாட்டின்படி நீ வனஜாவைக் கட்டிக்கொண்டால் என் பிள்ளை; இல்லாட்டி நாயே! நட வீட்டைவிட்டு! எனக்குப் பிறந்த மகன் செத்துவிட்டான்னு நினைச்சுக்கிறேன்'' என்று முத்துப்பிள்ளை உரக்கக் கர்ஜித்தார்.



ஷண்முகத்தை அவமானம், கோபம், எரிச்சல் முதலிய பல உணர்ச்சிகள் ஏக காலத்தில் தாக்கின. என்ன பதில் அளிப்பது என்று அவன் சிவந்த முகத்துடன் தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைப் பார்த்து விழித்துக்கொண்டு நின்றான்.

''என்னடா முழிக்கிறே! காவாலி நாயே! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வாயடைச்சா போச்சு?'' என்று பிள்ளை மீண்டும் சீறினார்.

ஷண்முகத்திற்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. தகப்பனாருக்குச் சுடச்சுடப் பதிலளிப்பதற்காகத் திரும்பினவன், காமிரா உள்வாயிற்படியண்டை நீர் மல்கின கண்களுடன் வனஜா தன்னையே பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டான். அவன் மனதில் அது சமயம் இரக்கத்திற்குப் பதில் வனஜா கோபத்தையே தூண்டினாள். 'இவளால் அல்லவா இவ்வளவு கலவரமும்' என்று தனக்குள் எண்ணிப் பல்லைக் கடித்துக்கொண்டே, ''வனஜாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும், அவ்வளவுதானே? அப்படியே செய்கிறேன்! அதற்காக நீங்கள் இப்படி ஏழு ஊர் கேட்கிறாப் போல கத்த வேண்டாம். நம்ம வீட்டில் ஏதோ கொலை நடந்து விட்டதென்று பக்கத்து வீட்டுக்காரர்கள் நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்'' என்று துடுக்காகப் பதில் அளித்து விட்டு வெளியே போய்விட்டான்.

வனஜாவிற்குப் போன உயிர் வந்தது. பிள்ளை நாற்காலியில் தொப்பென்று சாய்ந்துவிட்டார். கல்யாணம் நின்று விடுமோ என்ற பயத்தினால் கூச்சல் போட்ட அவருக்கு அந்தச் சிரமத்தைத் தாங்க முடியவில்லை.

''என்னாங்க, இப்படியா பையன் மேலே கோவிச்சுக்கிறது. அவன் அறியாப் பையன். ஏதோ உளறினால் நீங்கள் பெரியவங்க அதைப் பாராட்டிப் பேசலாமா!'' என்று முத்துப்பிள்ளையின் மருமகன்களில் ஒருவர் சமாதானப்படுத்தும் தோரணையில் பேசினார். அபிராமி அம்மாள் காரணமின்றி விம்மி விம்மி அழுவதைக் கண்ட அவளுடைய மூத்த பெண், ''என்னத்துக்கு அம்மா நீ அழு

றாய்? தம்பிதான் வனஜாவைக் கட்டிக்க சம்மதித்து விட்டதே! நாளுங்கிழமையுமா அழுகிறது நல்லாவா இருக்கு?'' என்று தாயாரைத் தேற்றினாள்.

விவாகம் விமரிசையாக நடந்தேறியது. இரவுஊர்வலத்திற்காகத் தருவிக்கப்பட்டிருந்த முத்து விமானம், பாசிமணிகளையும், கொரநாட்டு வர்ணத் தகடுகளையும் தாங்கி, விளக்கொளியில் ஜிலுஜிலுவெனப் பிரகாசத்துடன் வாசலில் நின்று கொண்டிருந்தது. அதனுடைய அழகில் மயங்கிப் போன ஊர்ச் சிறுவர்கள் விமானத்தின் சொந்தக்காரன் அசந்திருக்கும் சமயம் பார்த்து சரம்சரமாகத் தொங்கும் கெட்டி மாலைகளையாவது, பாசிமணிமாலைகளையாவது, அறுத்துக்கொண்டு ஓடிவிட வேண்டுமென்ற அல்ப ஆசையுடன் அதைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

''பூமாலையை இப்படிப் போட்டு மறைச்சா நகையெல்லாம் மூடிக் கொள்ளுமே. தலைப்பின்னலைப் புடவைக்குள்ளே மூடிக்கொள்ளவா நான் இம்பிட்டு நேரமாகப் பின்னினேன்? பின்னலை வெளியே விட்டுக் கொள்ளம்மா', என்று வனஜாவை நாத்திமார்கள் இருவரும் சிங்காரித்துக் கொண்டிருந்தனர். பெண்கள் உட்கார்ந்திருந்த அறைக்குள் எட்டிப் பார்த்த முத்துப்பிள்ளை தமது மருமகளின் அழகைக் கண்டு பூரித்துப் போனவராய், ''வாங்க எல்லாரும்! ஊர்வலத்திற்கு நேரமாகலை!'' என்று குதூகலத்துடன் அழைத்தார். வனஜா நாண மிகுந்தவளாய் அறையை விட்டு வெளியே வந்தாள். அவளைச் சுற்றியிருந்த பெண்கள் பட்டாளம் அவளைப் பரிகாசமும் வேடிக்கையுமாய்ச் சிரிப்பு மூட்டிக் கொண்டிருந்தது.

''ஐயோ! தம்பியைக் காணோம்! எங்கே போனான்?'' என்று கவலை கலந்த குரலில் அபிராமி அம்மாள் அலறிக் கொண்டு வந்தாள். எல்லோரும் ஏக காலத்தில் ஷண்முகத்தைத் தேட ஆரம்பித்து விட்டார்கள். கலவரமடைந்த முத்துப்பிள்ளை ஒரே எட்டில் வாசலறைப் பக்கம் ஓடினார். ஷண்முகத்தை அங்கே காணோம், மேஜைமீது தனது



விலாசமிடப்பட்டு ஒரு கவர் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் அவர் படபடத்த நெஞ்சுடன் அதைப் பிரித்துப் படித்தார்.

அப்பாவுக்கு ஷண்முகம் எழுதிக் கொண்டது.

தங்கள் இச்சைப்படி நான் வனஜாவைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டேன். தங்களுடைய ஆசை பூர்த்தியாகிவிட்டது. சுதந்திரமற்ற இந்த வீட்டில் இனி இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. நான் போகிறேன். எங்கே போவேனோ தெரியாது. என்னைத் தேட முயற்சிப்பது வீண் தான்.

இப்படிக்கு,
ஷண்முகம்

முத்துப்பிள்ளை தன்னை ஒரு பேயறைந்து விட்டதைப் போன்ற பயங்கரமான தோற்றத்துடன் அறையை விட்டு வெளியே வந்தார்.

ஷண்முகம் எங்கேயோ போய்விட்டான் என்ற சங்கதியைக் கேட்டதும் அபிராமி அம்மாள் அலறிக் கொண்டு கீழே விழுந்துவிட்டாள். வஜனா ஊர்வலத்திற்குத் தயாராகக் கழுத்தில் பூமாலையுடன் நின்று கொண்டிருந்தவள் இச் சங்கதியைக் கேட்டதும் கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள்.

தனது மருமகள் அழுவதைக்கண்ட அபிராமி அம்மாளுக்கு அகங்காரம் பொத்துக்கொண்டு வந்தது. ''அழுடியம்மா அழு! உன் கழுத்திலே மாங்கல்யம் ஏறிய வேளை நல்ல வேளைதான்! புருஷனையே வீட்டை விட்டுத் துரத்திவிட்ட தரித்திரமே; சதா அழுதுகொண்டிரு'' என்று தான் எத்தனையோ நாளாக அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தையெல்லாம் வெளியே வாரிக் கொட்டினாள். வனஜா தனது மாமியின் கூரிய சொற்களைக் கேட்டு, துக்கந்தாங்காதவளாய் மேலும் மேலும் முகம் சிவக்க அழுதாள்.

''எங்கே போய்விடப்போகிறான் அவன்? தானே வந்து விடுவான் அழாதே!'' என்று கல்யாணத்திற்கு வந்திருந்த ஒரு கிழவி வனஜாவைத் தமது தோளில் சாத்திக் கொண்டு சமாதானம் செய்ய முயன்றாள்.

## 12

முதன் முதலில் பவானிக்கு 'நர்ஸ்' ஜானகியைப் பிடிக்கவில்லை. ஆனால் நாளாவட்டத்தில் அவள் பவானியின் ஆருயிர்த் தோழியானாள் என்றால் மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

ஜானகி முகத்தோற்றத்தில் அழகு இல்லாவிடினும் பேசுவதில் மிகவும் கெட்டிக்காரி. கடகடவென்று அவள் வாய் ஓயாது; கதை அளப்பதில் கைதேர்ந்தவள். பவானி அவள் சொல்வதையெல்லாம் கேட்டு மகிழ ஆரம்பித்துவிட்டாள்.

'நர்ஸ்' ஜானகியின் மூலம்தான் பவானி டாக்டர் சுந்தரவதனத்தைப்பற்றிய சகல விவரமும் அறிந்து கொண்டாள்.

''அவருக்கு வயது முப்பத்தைந்தாகிறதாம். பார்த்தால் முப்பது வயதுகூட மதிக்க முடியாத அவ்வளவு இளமையுடன் இருக்கிறார் அல்லவா? ரொம்ப நல்ல குணம் அவருக்கு! சில வைத்தியர்களைப்போல் நர்ஸ்கள்மீது 'லொள் லொள்' என்று விழமாட்டார். ஆனால் பெண்களைக் கண்டு பல்லிளித்துப் பேசும் சில கசடர்களைப் போலவும் நடந்து கொள்ளமாட்டார். மிகவும் கண்டிப்பான ஆசாமி. இவர் கீழே வேலை பார்க்கிற மூன்று டாக்டர்களுக்கும் இவரைக் கண்டால் கொஞ்சம் நடுக்கந்தான்.

''ஆபரேஷன் பண்ணினார் என்றால் இன்று முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம்; அவ்வளவு அழகாக செய்



வார்! மின்னலைப்போல் கைவேகம். அத்துடன் நல்ல கைராசிகூட. அதற்காகவே டில்லியிலிருந்து போன வாரம் பணக்காரியான ஒரு மார்வாரி ஸ்திரீ ஆபரேஷனுக்கு வந்திருந்தாள். நல்ல வரும்படி எங்க டாக்டருக்கு!'' என்று மூச்சுவிடாமல் ஜானகி டாக்டர் சுந்தரவதனத்தைப்பற்றிச் சிலாகித்தாள்.

அவரைப்பற்றி இன்னும் அதிகம் கேட்க பவானியின் மனத்தில் ஆவல் எழுந்தது. நர்ஸ் பேசிக்கொண்டே தனது வேலைகளையும் செய்து கொண்டிருந்தாள். மேஜை மீதிருந்த பீங்கான் கிண்ணத்தில் கை கழுவுவதற்குத் தண்ணீர் நிரப்பிக் கொண்டிருந்த ஜானகியை பவானி பார்த்து, ''டாக்டரின் மனைவி அவரைப்போலவே அவ்வளவு சிகப்பாகவா இருப்பார்கள்?'' என்று கேட்டாள்.

''இல்லை. அது ஒரு கதை. சுந்தரவதனம் மிகவும் ஏழைவீட்டுப் பையனாம். அவருக்குத் தூரபந்துவான ஒரு பெரிய மிராசுதார் தமது பெண்ணைக் கொடுக்க எண்ணிப் பையனைப் படிக்க வைத்தாராம். அவர் வைத்தியப் பரிட்சைக்குப் படிக்கும்பொழுதுதான் கல்யாணம் ஆயிற்றாம். மாமனார் செலவு செய்து, மேல்படிப்புக்குச் சீமைக்கு அனுப்பினாராம். பெரிய பட்டம் பெற்றுக்கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்ததும் சுந்தரவதனம் தமது மனைவி நோயாளியாகப் படுத்தபடுக்கையாகியிருப்பதைக் கண்டார்.

''அவர் மனைவியின் பிறந்த வீட்டவர்கள் சுத்த அநாகரிகம் பிடித்தவர்கள். அவளுக்குச் சரியான வைத்தியம் செய்யாமல் பிசாசு பிடித்துவிட்டதென்று பேர் வைத்து, மந்திரவாதிகளை வைத்துப் பிசாசு ஓட்டிக்கொண்டிருந்தார்கள்.

சுந்தரவதனம் தமது மனைவியை வந்து பார்த்த பொழுது அந்தம்மாள் முற்றின க்ஷயரோகத்தால் மிகவும் பலஹீனமான நிலையிலிருந்தாள்.

''மனைவியின் பணத்தைக் கொண்டுதான் மூன்று லட்ச ரூபாய் செலவு செய்து இந்த 'நர்ஸிங்ஹோம்' கட்டினார். 'எக்ஸ்ரே' 'ரேடியம்' முதலியவைகள் வைத்துக்கொள்ள

ரொம்ப பணச் செலவு ஏற்பட்டது. எடுத்த உடனேயே சீக்கிரத்தில் நல்ல 'பிராக்டிஸ்' ஏற்படவே 'நர்ஸிங்ஹோம்' நன்றாக மேலும் மேலும் சீர்திருத்தப்பட்டு நல்ல உன்னத நிலைமையடைந்தது.

''பணம் வந்தென்ன, புகழ் வந்தென்ன? பாவம்! மனுஷர் வாழ்க்கையில் சுகமடையவில்லை. அவர் சீமையி லிருந்து திரும்பியதிலிருந்து பெண்ஜாதிதான் படுத்த படுக்கையாகி விட்டாளே! வியாதி நீடித்துவிட்டதனால் அந்தம்மாளை இன்னும் விகாரப்படுத்திவிட்டது. கண்டவர் வியக்கும் தோற்றத்தையுடைய சுந்தரவதனத்திற்கு அந்தம்மாள் ஏற்ற மனைவியேயல்ல.

''நான்தான் அந்தம்மாளுக்கும் சிசுருஷைகள் செய்ய வேண்டியிருந்தது. டாக்டர் எவ்வளவோ பாடுபட்டார். ஒன்றும் பலிக்கவில்லை. இந்த 'நர்சிங்ஹோம்' வைத்த எட்டாவது மாதத்தில் கோதை உயிரை விட்டுவிட்டாள்!'' என்று கூறிப் பெருமூச்சுவிட்டாள் ஜானகி.

''பாவம் குழந்தைகள் ஏதாவது உண்டா?'' என்று பவானி கேட்டாள். அவளுக்கென்னவோ டாக்டர் சுந்தர வதனத்தின்மீது கரைகாணா அனுதாபம் பிறந்துவிட்டது.

''ஒன்பது வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது'' என்றாள் ஜானகி.

''வீட்டில் தற்போது யாரும் இல்லையா?'' என்று பவானி மேலும் கேட்டாள்.

''இல்லாமல் என்ன! டாக்டருடைய தாயார் இருக் கிறார்கள். அந்தப் பெண் குழந்தை இங்கில்லை. தனது பாட்டனார் வீட்டில் இருக்கிறதென்று நினைக்கிறேன்!'' என்று ஜானகி பதிலளித்தாள்.

''மனைவி இறந்து இரண்டு மூன்று வருஷங்களுக்கு மேலாகிறதென்று சொல்லுகிறாய்! இன்னுமா டாக்டர்



மறு விவாகம் செய்து கொள்ளாமலிருக்கிறார்?'' என்று பவானி தன்னையுமறியாமல் ஓர் அசட்டுக் கேள்வியைக் கேட்டாள்.

''உங்களைப்போன்ற ஒரு அழகான பெண்ணிற்காகக் காத்துக்கொண்டிருக்கிறாரோ, என்னவோ! இன்னும் மறு கல்யாணம் செய்து கொள்ளவில்லை'' என்று ஜானகி சொல்லிவிட்டுக் குறும்புத்தனமாக கண்ணைச் சிமிட்டினாள்.

பவானியின் முகத்தில் குபீரென ரத்தம் ஏறியது. ''நர்ஸ்! இந்தமாதிரி அசட்டுத்தனமாக விளையாடாதே என்னிடம்'' என்று பொய்யாகக் கோபித்துக்கொண்டாள்.

நர்ஸ் ஜானகி, பவானியின் கோபத்தையோ, எச்சரிக்கை களையோ லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. இரண்டு மாதங்கள் பவானியிடம் பழகிவிட்டதனால் தைரியமாகவும் தாராளமாகவும் தன் மனதில் தோன்றினபடி எல்லாம் பரிகாசமாகப் பேசும் துணிவை அடைந்துவிட்டாள். முதலில் கோபிப்பதுபோல் பாசாங்கு செய்துகொண்டிருந்த பவானி, நாளாவட்டத்தில் ஜானகியின் மொழிகளைக் கேட்டு மகிழ ஆரம்பித்துவிட்டாள்.

அன்று காலை நர்ஸ் ஜானகி வழக்கமாகத் தன் வேலை களைச் செய்ய உள்ளே நுழைந்தபோது பவானி தயாராக உடுத்திக்கொண்டு படுக்கையில் படுத்திருப்பதைக் கண் டாள். ''என்ன பவானி! இன்றைக்கு அலங்காரம் பலமாக இருக்கிறாப் போலிருக்கிறதே! நான் வருவதற்குக் கூடக் காத்திராமல் தலைபின்னி உடைமாற்றிக்கொண்டு தயாராக இருக்கிறாயே! டாக்டர் தமது 'ரவுண்ட்ஸு'க்கு வர இன்னும் எவ்வளவோ நாழி இருக்கிறதே!'' என்று கேட்டு விட்டுச் சிரித்தாள்.

''அத்தை விடியற்காலையிலேயே வந்து தலை பின்னி விட்டு, உடைமாற்ற உதவி செய்துவிட்டுப் போனார்கள். நீ அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும்'' என்று பவானியும் கூடச் சிரித்தாள்.

''நல்லவேளை! எனக்காகத்தான் இந்த அலங்காரமெல்லாம் என்று சொல்லாமல் போனீர்களே!'' என்று நர்ஸ் மேலும் கேலி செய்துகொண்டே தன் வேலைகளில் முனைந்தாள்.

''போதும், ஜானகி. நீ ரொம்ப அதிகப் பிரசங்கியாகிவிட்டாய்!'' என்று பவானி சிரித்துக்கொண்டு கூறினவள் ஒரு புஸ்தகத்தை எடுத்துப் படிப்பதாகப் பாவனை செய்தாள்.

அந்தச் சமயம், ''நர்ஸ்! கடைசி அறையிலிருக்கும் நோயாளி ஊருக்குப் போக விரும்புகிறார். அவரை அனுப்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டும்!'' என்று உத்தரவிட்டவண்ணம் டாக்டர் சுந்தரவதனம் அறைக்குள் நுழைந்தார். சுந்தரவதனம் வருகிறார் என்றால் ஏன் பவானியின் இதயம் இப்படித் தடதடவென்று ஓடுகிறது! அவரை ஒருநாள் பார்க்காவிட்டால் அவளுக்கு நர்ஸிங்ஹோமே இருண்டுவிட்டதைப்போன்ற உணர்ச்சி ஏன் தோன்றுகிறது?

ஜானகி, டாக்டர் உத்தரவுப்படியே அந்தக் கடைசி அறை நோயாளியின் சௌகரியத்தைக் கவனிக்க அறையைவிட்டு வெளியே சென்றாள்.

கவர்ச்சிகரமான தோற்றத்துடன் கட்டிலில் படுத்திருந்த பவானியை ஒரு தடவை நன்றாக நோக்கிய சுந்தரவதனம், ''மிஸ் பவானி! உங்களுக்கு வீணை வாசிக்கத் தெரியும் என்று நினைக்கிறேன்!'' என்று திடீரென கேள்வியொன்றைக் கேட்டார்.

''தெரியும்!'' என்று பவானி முகம் சிவக்கப் பதிலளித்தாள்.

''உங்கள் மெல்லிய கைவிரல்களைப் பார்த்தால் வீணை வாசிப்பவர்போல் தோன்றியது. எனது ஊகம் சரியா என்பதற்காகவேதான் கேட்டேன்'' என்றார் சுந்தரவதனம்.

தன் முகத்தை ஊடுருவிப் பார்க்கும் அவருடைய கண்களைச் சந்திக்கச் சக்தியற்ற பவானி, ஜன்னல் பக்கம் பார்வையைச் செலுத்தினாள்.



சற்றுநேரம் அங்கே மௌனம் நிலவியது. பிறகு திடீரென்று தமது உணர்வு பெற்றவர்போல் சுந்தரவதனம், ''கால் எலும்பு சரியாகக் கூடி பலம்பெற இன்னும் குறைந்தது நான்கு மாதங்களாவது ஆகும். அதுவரை அசையாமல் படுத்துக் கிடக்க வேண்டும். என்ன செய்வது, உங்களுக்காக நான் வருந்துகிறேன்!'' என்று சொல்லிவிட்டு வெளியே சட்டென்று போய்விட்டார்.

''நான்கு மாதங்களில் சரியாகிவிடுமா? அதற்குள்ளாகவா இங்கிருந்து போகவேண்டும்! அப்படியே நோயாளியாகவே, அவரைத் தினம் தரிசித்துக்கொண்டே வாழ்நாட்களை கழித்துவிடலாமே!'' என்று எண்ணிய பவானி 'சீ, இதென்ன பயித்தியக்காரத்தனம்! அவரைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்க நான் யார்?... அவரை நினைக்கும்போதெல்லாம் தோன்றுகிறதே ஒரு புதிய இன்பஉணர்ச்சி, அதைத்தான் காதல் என்று சொல்லுகிறார்களா? இது அப்பாவுக்குத் தெரிந்தால் அப்பா என்ன நினைத்துக் கொள்வார்? அவர்தான் ஆகட்டும், ஏன் அப்படிப் பார்க்கிறார்? பெண்களையே ஏறெடுத்தும் பார்க்க மாட்டாராம். வேலையில் மிகவும் கண்டிப்பான ஆசாமியாம். எப்படிப்பட்ட கண்டிப்பான ஆசாமியும் ஏதாவது ஒரு பெண்ணிடம் தமது கண்டிப்பான போக்கை காட்ட முடியாது தோல்வியடைகிறார்கள்!' என்று தன்னுள்ளே யோசித்துக் கொண்டிருந்தாள்.

அறைக்குள் மறுபடியும் நுழைந்த நர்ஸ் ஜானகி ''அதற்குள்ளாகவா டாக்டர் இங்கிருந்து போய்விட்டார்!'' என்று கேட்டாள்.

''ஆமாம்! பெண்களிடம் பல்லிளித்துப் பேசும் சுபாவந்தான் உங்கள் டாக்டரிடம் கிடையாதே! அதனால் தமது காரியத்தை முடித்துக்கொண்டு சட்டென்று போய்விட்டார்'' என்று பவானி பரிகாசமாக மொழிந்தாள்.

''அப்படிப்பட்ட கண்டிப்பான ஆசாமியிடம் பவானி என்னும் ஒரு பெண் சில மாறுதல்களை உண்டாக்கி

விட்டாள். என்ன செய்வது, அவர் முன் இருந்ததைப் போல் இப்பொழுது இல்லையே!'' என்று ஜானகி கூறி விட்டுச் சிரித்தாள்.

பவானி முகத்தைப் புத்தகத்திற்குள் மறைத்துக் கொண்டு, 'நர்ஸ்' இப்படி எங்கள் அத்தை அம்மாள் முன்பு பேசி வைக்காதே. இந்தப் பரிகாச வார்த்தைகள் எல்லாம் எங்கள் வீட்டவர்களுக்குப் பிடிக்காது!'' என்று கண்டிப்பான குரலில் சொன்னாள்.

## 13

இரவு போஜனத்திற்குப் பிறகு போர்ட்—பாம்பேயிலிருந்த நாஷனல் கபேயின் மூன்றாவது மாடி அறையொன்றில் ஷண்முகம் படுக்கையில் படுத்தவண்ணம் கதைப் புத்தகம் ஒன்றைப் படிப்பதற்காகத் திறந்தான்.

பொத்தென்று அதிலிருந்து ஒரு போட்டோ அவனது முகத்தின்மேல் விழுந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தபோது அவன் திடுக்கிட்டுப் போனான். வனஜாவின் போட்டோ அது. எப்படி அவன்வசம் அது வந்திருக்கக் கூடும் என்று யோசித்த அவனது மூளையில் பளிச்சென்று சில சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தன.

ஊரைவிட்டு ஓடிவரும் அவசரத்தில் அவன் தன் கைப் பெட்டியில் வாசல் அறை அலமாரியிலிருந்து அள்ளிப் போட்டுக்கொண்ட வஸ்துக்களில் அந்த புஸ்தகமும் ஒன்று என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தான். ஆமாம், அந்தப் புஸ்தகம் வனஜாவினுடையது! ரங்கூனிலிருந்து திரும்பி வந்த அவள் கொண்டு வந்த பொக்கிஷங்களில் அந்தப் புஸ்தகமும் அவளுடைய போட்டோவும்தான் முக்கியமானவைகள்! போட்டோவைப் பார்த்தவுடன் ஷண்முகத்துக்கு வனஜாமீது கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அந்தப் பெண்ணால் அல்லவா அவன் லக்ஷ்மி புரத்தை விட்டு திருடனைப்போல் ஓடிவர நேரிட்டது.



கையிலிருந்த போட்டோவைக் கோபமாக இரண்டு துண்டாகக் கிழித்து; ஜன்னல் வழியே வெளியே எறிய எழுந்திருந்தான். அதுசமயம் அவனுடன் அந்த அறையில் வசிக்கும் மற்ற இரு சகாக்களும் போஜனம் செய்துவிட்டு வந்துவிடவே, கிழிந்த போட்டோ துண்டுகளை அந்தப் புஸ்தகத்திலேயே வைத்துத் தலையணைக்கடியில் சட்டென மறைத்துக் கொண்டான்! போர்வையினால் முகத்தை மூடிக் கொண்டு தூங்க முயற்சித்த அவன் மனம் என்னவோ நடந்த விஷயங்களைக் குறித்து திரும்பத்திரும்ப சிந்தித்துக் கொண்டிருந்தது.

அன்று சாயங்காலம் லக்ஷ்மிபுரத்தை விட்டுக் கிளம்பினவன் ஒரே மூச்சில் பம்பாய் வந்து சேர்ந்தான். பம்பாயில் அவனுக்கு யாரையும் தெரியாது. ஆகவே நாஷனல் கபேயில் ஒரு அறை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தனது கவலைகள் எல்லாவற்றையும் மறக்க எண்ணி உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க ஆரம்பித்தான்.

பம்பாயின் பல இடங்களைச் சுற்றிப்பார்த்து அலுத்துப் போன ஷண்முகம் ஒருநாள் சினிமாக் கொட்டகை ஒன்றிற்குள் படம் பார்க்க நுழைந்தான். படம் பார்த்துவிட்டு வெளியே வந்தவன், தனது தோளை யாரோ தொடுவதை உணர்ந்து அவசரமாகத் திரும்பிப் பார்த்தான்.

கலாசாலையில் படித்த பழைய நண்பர்களில் ஒருவனான வில்லியம் ஞானாதிக்கம் தன் பின்னால் சிரித்துக் கொண்டு நிற்பதைக் கண்டான்.

ஷண்முகம் திகைத்துப் போய் தன்னையே முறைத்துப் பார்ப்பதைக் கண்ட வில்லியம், ''என்னாங்க பிரதர் ஷண்முகம், என்னை அடையாளம் தெரியல்லீங்களா?'' என்று பல்லை இளித்தான்.

''தெரியாமல் என்ன? நீ இங்கே எதற்காக வந்தாயென்றுதான் ஆச்சரியமாயிருக்கிறது'' என்று ஷண்முகம் தடுமாறினான்.

''இங்கே வருவதா? நான் இரண்டு வருஷமாக இங்கேதானே இருக்கிறேன்! எனக்கு இன்ஷூரன்ஸ் கம்பெனியில்

வேலை'' என்று வில்லியம் கூறிவிட்டு, தனது வெண்மையான பற்களை மறுபடியும் காட்டினான்.

''அப்படியா சமாசாரம்? எனக்குத் தெரியாதே'' என்று மென்று விழுங்கினான் ஷண்முகம். தன்னை அறிந்தவர்களே இல்லாத ஒரு புது இடத்திற்கு போக வேண்டுமென்று அவன் பம்பாய்க்கு வந்திருந்தான். அங்கேயும் ஒரு சிநேகிதனைச் சந்தித்தால் அவன் மனநிலை எப்படியிருக்கும்.

''உன்னை வந்து பிறகு பார்க்கிறேன்'' என்று மெல்லத் தட்டிக் கழித்து நழுவிவிட முயன்ற ஷண்முகத்தை வில்லியம் விடவில்லை. பிடிவாதமாக அவனுடைய ஹோட்டல் விலாசத்தை வாங்கிக் கொண்டு, தன்னை வந்து பார்க்கும் படி தன் வீட்டு விலாசத்தையும் கொடுத்துச் சென்றான்.

ஷண்முகம் வில்லியம் கொடுத்துச் சென்ற விலாசத்தை வழியிலேயே எங்கேயோ காற்றில் பறக்க விட்டுவிட்டான். அவனை சந்திக்க முயற்சி செய்யுவில்லை.

கையில் கொண்டு வந்த பணம் வெகு சீக்கிரத்தில் கரைந்து விட்டது. இனி என்ன செய்யலாம் என்று ஷண்முகம் கலங்கிக் கொண்டிருந்த சமயம் அவனை ஒரு நாள் வில்லியம் தேடிக்கொண்டு வந்து நின்றான்.

''வாப்பா! வில்லியம். மன்னிக்க வேண்டும்.உன்னை வந்து பார்க்க எனக்கு இதுவரை சௌகர்யப்படவேயில்லை. ஏதாவது ஒரு நல்ல வேலை கிடைத்தால் தேவலையென்று அலைந்து கொண்டிருந்தேன்'' என்று புளுகினான் ஷண்முகம்.

''அடாடா! அப்படியா? ரொம்ப சந்தோஷம். நம்ப கம்பெனியில் குமாஸ்தா வேலை செய்பவர்களில் ஒருவரான முன்ஷி என்பவர் மாரடைப்பினால் போன வாரம் இறந்து விட்டார். அவர் வேலை காலியாக இருக்கிறது. கம்பெனி



முதலாளி எனக்கு மிகவும் வேண்டியவர். உங்களுக்குச் சம்மதமானால் அந்த வேலைக்கு சிபாரிசு செய்கிறேன். இந்தக்காலத்தில் கூடவா வேலைக்கு அலையவேண்டும்?'' என்று வில்லியம் படபடவென்று பேசி முடித்தான்.

வில்லியம் சுபாவத்தில் பிறருக்கு உதவி செய்யும் பொருட்டு அனாவசியமாகக் கஷ்டங்களில் தலையிட்டுக் கொள்ளும் பிரகிருதிகளின் கோஷ்டியைச் சேர்ந்தவன். ஆகவே, தன் பழைய நண்பன் ஷண்முகத்திற்கு அவன் உதவி செய்ய முன் வந்ததில் ஆச்சரியமில்லை.

ஷண்முகத்துக்கு வில்லியத்தினுடைய உதவியால் மாதம் எழுபது ருபாய் சம்பளம் கொண்ட அந்த வேலை கடைசியில் கிடைத்துவிட்டது. ''உத்தியோகம ஒன்றைத் தேடிக் கொண்டுவிட்டோம்'' என்ற சந்தோஷம் ஷண்முகத்திற்குத் தாங்க முடியவில்லை. நாட்கள் மிகவும் குஷியாகச் சென்றன.

ஆறு மாதங்கள் சென்றன. இதற்கிடையில் ஷண்முகத்திற்கும் அவனுடைய நண்பனான வில்லியத்திற்குமிடையே இருந்த நட்பு மிகவும் பலப்பட்டு விட்டது. ஷண்முகம் வில்லியத்தின் சகோதரனைப் போலக் கருதப்பட்டான் என்றால், அந்த நட்பின் பெருமையைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை.

''இதோ பாருங்கள், பிரதர்... நீங்கள் கட்டாயம் எங்கள் வீட்டில் இன்று சாப்பிட்டுப் போக வேண்டும். நீங்கள் என்னை வேற்று மனிதனாக நினைக்கப்படாது!'' என்று வில்லியம் பிடிவாதமாக ஒரு நாள் ஷண்முகத்தைத் தன் கிரகத்திற்கு அழைத்துச் சென்றான்.

வில்லியத்துடன் சிநேகமாயிருந்தும் அன்றுதான் முதன் முதல் ஷண்முகம் அவனுடைய வீட்டிற்குச் சென்றான்.

''பாரதி! இவர்தான் என்பிராண சிநேகிதர் ஷண்முகம். அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பேனே, அந்த ஆசாமி இவர்தான்'' என்று தனது மனைவிக்கு வில்லியம் ஷண்முகத்தை அறிமுகம் செய்து வைத்தான்.

''உட்கார்ந்து கொள்ளுங்கள்! எங்கள் வீட்டிற்கு நீங்கள் வந்ததற்கு மிகவும் சந்தோஷம்'' என்று விநயமாக பாரதி அவனை உபசரித்தாள்.

அன்று சாயங்காலம் முழுவதும் அங்கேயே தங்கி சந்தோஷமாக அந்தத் தம்பதிகளுடன் வார்த்தையாடி விட்டு ஹோட்டலுக்குத் திரும்பின ஷண்முகத்தின் மனதிற்குள் அர்த்தமில்லாத ஏக்கம் ஒன்று குடிகொள்ள ஆரம்பித்து விட்டது.

வில்லியம் ஞானாதிக்கம், தமிழ்க் கிறிஸ்தவ வகுப்பைச் சேர்ந்தவன். பார்ப்பதற்குக் கறுப்பாக இருந்தாலும் சிரித்துக்கொண்டு மரியாதையாகப் பேசும் தன்மை வாய்ந்தவன். அவன் மனைவி பாரதி ஞானாதிக்கம் உயரமாகவும் ஒற்றை நாடியாகவும் இருந்தாள். மாநிறம்; அவள் பார்ப்பதற்கு கவர்ச்சியாகவும், சதா புன்னகை முகத்துடன் இருப்பதாகவும் ஷண்முகத்திற்குத் தோன்றியது. அவர்களுடைய வீடு சின்னஞ்சிறு இரு அறைகள்தான். அதைத்தான் அவள் எவ்வளவு அழகாக வைத்துக் கொண்டிருந்தாள்! பேசும்பொழுது என்ன மரியாதை! எல்லாவற்றையும் விட தம்பதிகள் இருவர்களுக்குள்ளும் என்ன அன்பு! ஒருவரையொருவர் அறிந்து கொண்டு நடந்து கொள்ளும் சாமர்த்தியந்தான் என்ன! இப்படியெல்லாம் பலவாறு வில்லியத்தையும் பாரதியையும்பற்றி நினைத்துக் கொண்டே அவர்களுடன் தன்னுடைய பாழான வாழ்வையும் ஒத்திட்டுப் பார்த்து மனம் வெதும்பினான் ஷண்முகம்.

கடந்துபோன விஷயங்களை எல்லாம் திரும்பத் திரும்ப எண்ணிப் படுத்துக்கொண்டிருந்த ஷண்முகத்தின் மனது லக்ஷ்மிபுரத்தைக் குறித்து சிந்தித்தது. பிறந்து வளர்ந்து பால்யத்தின் கொஞ்ச நாட்களை சந்தோஷமாக அவன் கழித்த இடம் லக்ஷ்மிபுரம். அதை எப்படி மறக்க முடியும்? அவன் மனக்கண்முன்னால் அவனுடைய வீடும் அதிலுள்ள ஆத்மாக்கள் யாவரும் ஒருவர்பின் ஒருவராகத் தென்பட்டார்கள். தன் தாயார் அபிராமி



யம்மாளை நினைத்துக்கொண்ட அவன் மனம் கரைகாணப் பச்சாதாபம் கொண்டது. பாவம் அவள் தனது பிரிவைக் குறித்து எப்படித் தவித்து துடிக்கிறாளோ! பேதை, மகன் மேல் எவ்வளவு பாசம் அவளுக்கு!

அவன் தாயைப்போல் பூலோகத்தில் மகன்மேல் உயிரையே விட்டுவிட சித்தமாயிருக்கும் தாய்மார்கள் இருக்கிறார்களா? ''தம்பி ஆடைத் தயிர் உனக்கு பிடிக்குமேன்னு எடுத்து வச்சேன், அப்பா. இன்னும் கொஞ்சம் சாப்பிடு. உடம்பு துரும்பாக இளைத்துப் போகுதே!'' என்று தினம் அவனுக்கு அவள் எவ்வளவு உபசாரங்கள் செய்வாள். பாவம்! இப்படி ஷண்முகத்தின் சிந்தனைகள் ஓடின. துக்கம் பொத்துக்கொண்டு வந்தது.

''மனம் இடிந்து போயிருக்கும் அவளுக்கு, தான் உயிரோடு பம்பாயில் சௌக்கியமாயிருப்பதாக ஒரு கடிதம் எழுதிப் போட்டால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்! கட்டாயம் நாளைக்குத் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட வேண்டும்'' என்று தீர்மானித்த பின்னரே அவன் நித்ராதேவி வசமானான்.

## 14

பவானி கட்டிலில் படுத்தவாறே வலது பக்க மேஜை மீதிருந்த அந்தக் கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்துக்கொண்டாள். நோயாளியாக அவள் ஆறுமாதங்கள் படுத்த படுக்கையாயிருந்தாள் என்று சொல்ல முடியாதவாறு அவள் முகம் செழுமையாகத் தோன்றியது. உண்மையைச் சொல்லப் போனால் முன்பு இருந்ததைவிட இன்னும் கொஞ்சம் பூசினாற்போல் பருத்திருந்தாள் அவள்.

ஆறுமாத காலம் அங்கே நர்ஸிங்ஹோமிலா இருந்தாள்! இன்பமயமான ஒரு பூங்காவனத்தில் படுத்திருந்ததைப் போலல்லவா காலம் அதிவேகமாகச் சென்றுவிட்டது.

டாக்டர் சுந்தரவதனம்கூட மாறித்தான் போய்விட்டார்! ஒளி குன்றிச் சதா சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்த

அவர் முகம் இப்பொழுது களைபெற்று விளங்கியது. அதிகாரம் தொனிக்கும் அவருடைய குரலில் குதூகலம் கூத்தாடியது. இதற்கெல்லாம் காரணபூதம் நான்தான் என்பதை பவானி எப்பொழுதோ அறிந்துகொண்டு விட்டாள்.

டாக்டர் சுந்தரவதனம் தனது கண்டிப்பான உள்ளத்தைப் பவானியிடம் பறிகொடுத்துவிட்டார் என்பதை ஜானகியும் வெகு சீக்கிரத்தில் கண்டுகொண்டு விட்டாள். பழகின காரணத்தினால் அவளுக்கு பவானிமீது அபரிமிதமான அன்பு ஏற்பட்டிருந்தது. பவானி சுந்தரவதனத்திற்கு ஏற்ற மனைவிதான் என்று ஜானகி அடிக்கடி மனதிற்குள்ளே எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

ஜானகி தன்னையும் சுந்தரவதனத்தையும் குறும்புத்தனமாகப் பார்ப்பதை பவானி அடிக்கடி ஜாடையாகக் கவனித்திருக்கிறாள். என்னதான் மறைத்தாலும் பவானியின் உள்ளக் கிளர்ச்சிகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் ஜானகிக்கா கிடையாது? அவளும் ஒரு பெண்தானே!

நெற்றியின்மீது தவழ்கின்ற கூந்தலைச் சரிப்படுத்திக் கொண்டே பவானி முதல்நாள் தான் பாதி தைத்து வைத்திருந்த 'எம்ராய்டரி' வேலையை எடுத்துத் திரும்பத் தைக்க ஆரம்பித்தாள்.

பட்டுப்பூச்சியின் சிறகொன்றை நானாவித வர்ணநூல்களால் அழகுபடுத்த முயற்சித்துக் கொண்டிருந்த அவளை, நர்ஸ் ஜானகி, ''பவானி! இந்த வேலையெல்லாம் இப்போ எதற்கு? கண்ணை வலிக்கும். டாக்டர் வருகிறார்'' என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

''வரட்டுமே! நீ என்ன அவருக்குப் பராக்கு சொல்ல வேண்டுமா?'' என்று பவானி கேலியாகப் பதிலளித்துவிட்டுச் சிவந்த கன்னங்களுடன் தனது பூவேலையில் ஈடுபட்டாள்.

''எச்சரித்து வைத்தால் கண்களுக்கு இன்னும் கொஞ்சம் மை நீட்டிக் கொள்வீர்கள் என்றுதான்



சொன்னேன்'' என்று குறும்புத்தனமாக சிரித்த ஜானகி, பீங்கான் கிண்ணங்களில் கைகழுவ ஜலத்தை ஊற்றி மருந்துகள் விட்டு வைப்பதில் முனைந்தாள்.

தன் வேலைகளையெல்லாம் முடித்துவிட்ட ஜானகி திரும்பிப் பார்த்தாள். பவானி மௌனமாகத் தனது தையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். ''நேற்று நான் ஒரு சினிமாப் படம் பார்த்தேன். அதில் எனக்கும் என் சிநேகிதிக்கும் ஒரு விவாதம் ஏற்பட்டது'' என்று ஜானகி பவானியின் மௌனத்தைக் கலைத்தாள்.

''அப்படியா? என்ன விவாதமோ'' என்று கேட்டு பவானி தன் புருவத்தை ஒய்யாரமாக வளைத்தாள்.

''கதையில் வரும் கதாநாயகன் ஒரு டாக்டர். நோயாளி ஒருத்தியை அவன் காதலிக்கிறான். எங்கேயாவது டாக்டர் ஒருவர் நோயாளிமீது காதல் கொள்வாரா என்று சொல்லி என் சிநேகிதி கதையின் போக்குத் தப்பு என்று என்னிடம் விவாதம் செய்தாள். நான் சொன்னேன். உண்மையாக வாழ்க்கையிலேயே இதைப்போல் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. சொல்லப்போனால் கதைகளைவிட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள் இன்னும் விசித்திரமானவை என்று. ஏன் பவானி நீங்களே சொல்லுங்கள். ஒரு டாக்டர் நோயாளி ஒருத்தியைக் காதலிக்க முடியாதா?'' என்று குறும்புத்தனமாகச் சிரித்துக்கொண்டு கேட்டாள்.

பவானிக்கு அவளுடைய கேள்வி மிகவும் சங்கோஜத்தை உண்டு பண்ணியது. ''நீ மகா பொல்லாதவள். உனக்குப் பதில் சொல்ல எனக்குத் தெரியாது'' என்று அன்புடன் கடிந்தவண்ணம் தன் பூ வேலையை உற்று நோக்கினாள்.

''சரி உங்கள் இஷ்டம்!'' என்று சிரித்துக்கொண்டே பதிலளித்த ஜானகி, அடுத்த அறை நோயாளிக்குக் காலை வேலையில் தான் செய்ய வேண்டிய சிசுருஷைகளின் நிமித்தம் பவானியின் அறையைவிட்டு வெளியே சென்றாள்.

ஜன்னல் வெளியே தெரியும் அந்த நர்சிங்ஹோமின் வாசல் புறத்தையே உற்றுப் பார்த்தாள் பவானி. அங்கே

தினம் அவள் கண்களில் தென்படும் ஒரு குருவி ஜோஸ்யக் காரன் கேட்டின் பக்கத்திலிருந்த நெட்டிலிங்க மரத்தடியில் உட்கார்ந்திருந்தான்.

சாதாரணமாக ஈ ஓட்டிக் கொண்டிருக்கும் அவனுக்கு அன்று மிகவும் கிராக்கி போலத் தென்பட்டது. அவனைச் சுற்றி நாலைந்து கூலியாட்கள் உட்கார்ந்து கொண்டு ஜோஸ்யம் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பவானி ஒரு கருப்புக் கார் கேட்டிற்குள் நுழைவதைக் கண்டாள். அதுதான் அவருடைய கார். தினம் காலை எட்டு மணிக்கு டாக்டர் சுந்தரவதனம், வீட்டிலிருந்து தாமே காரை ஓட்டிக் கொண்டு நர்சிங்ஹோமிற்கு வருவார். முதல் முதல் அவர் வந்து விசாரிக்கும் நோயாளி பவானிதான்.

காரைக் கண்ட பவானியின் முகம் மலர்ந்தது. தினம் அப்படித்தானே அவர் வருகையை அவள் எதிர்பார்த்து நிற்கிறாள்? என்ன கட்டுப்படுத்தியும் அவள் மனம் அவர் பெயரைக் கேட்டதும் இன்பவாரியில் தத்தளிக்கின்றதே! 'இனி அதைப் பழையபடிக்குக் கொண்டு வருவதென்பது முடியாத காரியம் போலும்!' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். மறு நிமிஷம் வராந்தாவில் டக் டக் என்று பூட்ஸ் சத்தம் கேட்டது. பவானியின் இருதயமும் அத்துடன் போட்டி போட்டது.

''எப்படி இருக்கிறீர்கள் மிஸ் பவானி? நாளையிலிருந்து நீங்கள் கொஞ்சம் நடக்க முயற்சிக்க வேண்டும். நர்ஸின் உதவியோடு வெளியே கொஞ்சம் நடந்து பழகினால்தான் கால் சதைகள் உறுதிபெறும்'' என்று புன்னகையுடன் கூறியவண்ணம் டாக்டர் சுந்தரவதனம் உள்ளே நுழைந்தார்.

''சரி அப்படியே செய்கிறேன்'' என்று பவானி பதிலளித்தாள்.

விசாலமான தமது நெற்றியில் அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே அவர்



பவானியின் கையிலிருந்த பூ வேலையை எட்டிப் பார்த்துவிட்டு, ''பட்டுப்பூச்சி பறக்கத் தயாராகிவிட்டது போலிருக்கிறதே'' என்று சிரித்தார்.

பவானி தன் கையிலிருந்த பூ வேலையைப் பக்கத்தில் வைத்துவிட்டு அவரை நோக்கினாள். ''அவர் மனம் விட்டுச் சிரிக்கும்பொழுது சிறு பையனைப் போலல்லவா மாறிவிடுகிறார்!'' என்று மனதில் எண்ணியவளாய் ''அதோ பாருங்கள், மரத்தடியில் அந்தக் குருவி ஜோஸ்யக்காரனுக்கு இன்றைக்கு ஏக கிராக்கி! சரியாக நடக்கமுடிந்தால், நான்கூடப் போய் ஜோஸ்யம் கேட்கலாமென்று நினைத்திருக்கிறேன்'' என்று சொல்லிப் புன்னகை பூத்தாள்.

''எதைப்பற்றி ஜோஸ்யம் கேட்க வேண்டும்? டாக்டர் சுந்தரவதனம் சொல்வது போல் கால் எலும்புகள் நிஜமாகவே கூடிவிட்டதா என்று தெரியவா, மிஸ் பவானி?'' என்று அவர் பரிகாசமாகக் கேட்டார்.

''இல்லை, இந்தப் பட்டுப்பூச்சிகள் பறக்குமா என்றுதான் கேட்கலாமென்று நினைக்கிறேன்'' என்று பவானி குறும்புத்தனமாகக் கூறியதைக் கேட்ட சுந்தரவதனத்தின் முகத்தில் பல உணர்ச்சியலைகள் வீசின.

அவளையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்த அவர் சட்டென்று ''அந்த ஜனங்கள் தங்களுடைய பிற்காலத்தைப் பற்றி அறிய ஆவல் கொண்டிருப்பது சகஜந்தானே? குருவி ஜோஸ்யக்காரன் தனது வரும்படியை உத்தேசித்து 'உனக்கு அடுத்த மாதம் நல்ல காலம் பிறக்குதடா, தம்பி!' என்று எல்லோருக்கும் ஒரே பாட்டைப் பாடுகிறான். இருந்தபோதிலும் இனிமேலாவது நல்ல காலம் பிறக்கும் என்ற நம்பிக்கை அவர்களை எவ்வளவு உற்சாகப்படுத்துகிறது? வரப்போகும் நாட்களிலாவது நல்ல காலத்தை எதிர்பார்ப்பது மனிதர்களுடைய இயல்புதானே!'' என்று அந்த மரத்தையே பார்த்துக்கொண்டு பேசினார்.

பவானிக்கு மட்டும் அவர் பேச்சின் அர்த்தம் விளங்கியது. தனக்கும் இனிமேல் ஒரு நல்ல காலம் பிறக்கும்

என்று அவர் நம்பிக் கொண்டிருக்கிறார் என்று தொனித்த அந்த வார்த்தைகளைக் கூர்ந்து கேட்ட அவள், 'கூடகமாக இப்படிப் பேசாமல் பளிச்சென்று மனதில் உள்ளதைச் சொல்லிவிட்டால் என்ன?' என்று அவரை மனதிற் குள்ளேயே கடிந்து கொண்டாள்.

''ஸார் எட்டாவது அறையிலிருக்கும் நோயாளிக்கு ராத்திரியெல்லாம் தூக்கமில்லையாம். தலைவலி மண்டையைப் பிளக்கிறதாம். ஏதாவது மருந்து கொடுத்தால் தேவலையென்று அந்த அம்மாள் கேட்கிறாள்'' என்று சொல்லிக்கொண்டு ஒரு நர்ஸ் அவசரமாக உள்ளே நுழைந்தாள்.

''அந்த அம்மாளுக்கு ஹிஸ்டீரியா! தலைவலி என்று நினைத்துக் கொண்டால் தலையை வலிக்கத்தான் செய்யும். இவர்கள் எல்லாம் ஏன்தான் நர்சிங்ஹோமிற்கு வந்து பணத்தைச் செலவழிக்க வேண்டுமோ தெரியவில்லை. நான் வருகிறேனென்று போய்ச் சொல்!'' என்று சலிப்பாகக் கூறினார் டாக்டர்.

''உங்களுடைய வைத்திய சாஸ்திரத்திற்கு எட்டாத வியாதிகளையெல்லாம் ஹிஸ்டீரியா என்று சொல்லி விடுவதாக்கும்? நல்ல வைத்தியர்கள்! புருஷர்களுக்கு மட்டும் ஹிஸ்டீரியா வியாதி வருவதேயில்லையா? பார்க்கப் போனால் முக்கால்வாசி டாக்டர்களுக்கே ஹிஸ்டீரியா இருக்கிறது!'' என்று சொல்லிப் பவானி சிரித்தாள்.

அவளுடைய பேச்சின் திறமையைக் கேட்டு ஆனந்திப்பதுபோல டாக்டர் சுந்தரவதனம் அவளையே கண்கொட்டாது நோக்கினார். பவானி பேசி முடித்ததும், ''பெண்கள் கட்சியை விட்டுக் கொடுக்காமல் பேச இப்படித் திறமை வாய்ந்த வக்கீல் இருக்கிறார் என்று முன்னமே தெரிந்திருந்தால் அந்த நோயாளியைப்பற்றி அப்படிப் பதட்டமாகக் கூறியிருக்க மாட்டேன். மன்னிக்கவேண்டும்'' என்று அவர் சிரித்துக்கொண்டு பதிலளித்தார். பவானி அவருடைய கண்களைச் சந்திக்க வெட்கித் தலைகுனிந்து கொண்டு, பூ வேலையை மறுபடியும் கவனிக்க ஆரம்பித்தாள்.



''ஸார், மாடியறை நோயாளிக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது'' என்று ஒரு நர்ஸ் கலவரமாகக் கூறிக் கொண்டு ஓடி வந்தாள்.

''இதோ வருகிறேன்!'' என்று டாக்டர் சுந்தரவதனம் மின்னலைப்போல் அந்த அறையை விட்டு வெளியே சென்றார்.

''கால் சரியாகி விட்டதே! கூடிய சீக்கிரத்தில் மின்னூரை விட்டுப் போக நேரிடுமே!'' என்று நினைத்த பவானிக்கு அவளை அறியாமல் ஒரு பெருமூச்சு எழுந்தது.

## 15

பவானி இப்பொழுது நர்ஸ் ஜானகியுடன் மெதுவாக நடக்கப் பழகிக் கொண்டாள். பல நாட்களுக்குப் பிறகு பூமியில் காலை ஊன்றி நடக்கும்போது தரை கிடுகிடுவென ஆடுவதைப்போன்ற உணர்ச்சியே ஏற்பட்டது அவளுக்கு. ''அப்பாடா! கடைசியில் நொண்டியாகாமல் தப்பினோமே'' என்று அவள் மனம் குதூகலித்தது.

அன்று அவள் நர்ஸிங் ஹோமிலிருந்து விடுவிக்கப் பட்டாள். ''இனிமேல் பயமில்லை. ஊருக்குப் போகலாம்'' என்று டாக்டர் தீர்மானமாகக் கூறிவிடவே, அவளை அழைத்துப்போக சிவஞானம்பிள்ளை காருடன்வந்து சேர்ந்தார். ஆறுமாத காலமாக பூஞ்சோலையைவிட்டு விட்டு பவானிக்காக அந்த நர்சிங்ஹோமில் தங்கி அலுத்துப் போன அத்தை சிவகாமியம்மாள் அவசர அவசரமாக மூட்டையைக் கட்டிக் கொண்டாள்.

''ஊருக்குப் போய்விட்டு வருகிறேன், நர்ஸ்! இதை வைத்துக் கொள்!'' என்று தனக்கு அத்தனை நாட்களாகச் சிசுருட்சைகள் செய்து வந்த, ஜானகிக்குப் பணம் கொடுக்க கையை நீட்டினாள் பவானி.

''என்னத்திற்கு இதெல்லாம், பவானி? உங்களுக்கு அபிமானத்தினால் நான் சிசுருட்சைகள் செய்தேனே ஒழிய பணத்திற்காக அல்ல. மேலும் எனக்கு நோயாளிகளைக்

கவனித்துக் கொள்வதற்காக டாக்டர் சம்பளம் கொடுக்கிறாரே!'' என்று ஜானகி பவானி கொடுத்த பணத்தை வாங்கக் கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

''பணம் வாங்காவிட்டால் போகிறது. இதையாவது நீ கட்டாயம் அங்கீகரித்துக் கொண்டுதானாக வேண்டும். இல்லாவிட்டால் எனக்கு மனம் மிகவும் கஷ்டப்படும்'' என்று கூறிக்கொண்டே தனக்கென்று வாங்கப்பட்டிருந்த புதுப் புடவையொன்றை எடுத்து நர்ஸ் ஜானகியின் கையில் வைத்தாள்.

''பவானி! உங்களிடம் ஒரு பொருளும் வாங்க நான் ஊழியம் செய்யவில்லை. எனக்கு இதெல்லாம் வேண்டாம். நீங்கள் இங்கிருந்து போகிறீர்கள் என்பதே என் மனதை வாட்டுகிறது'' என்று கண்ணீர் ததும்ப புடவையையும் எடுத்துக்கொள்ள நர்ஸ் மறுத்துவிட்டாள்.

''ஜானகி, நீ இதை எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். உனது ஊழியத்திற்காக இதைத் தரவில்லை. என்னை ஞாபகம் வைத்துக் கொள்வதற்காகவே தருகிறேன் மறுக்காதே, ஜானகி!'' என்று பவானி அவள் முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள்.

அவள் அளித்த பரிசை ஏற்றுக்கொண்டு ஜானகி, ''இரண்டு ஆத்மாக்கள் உங்கள் பிரிவால் இனி வருந்தப் போகின்றன. ஒன்று நான்; இன்னொன்று டாக்டர் சுந்தரவதனம்'' எனறு சொல்லிவிட்டுக் கண்ணீரிடையே தனது சுபாவமான குறும்புத்தனத்துடன் சிரித்தாள்.

பவானியின் முகம் சிவந்தது ''சுந்தரவதனம்! ஆமாம், அவரை விட்டுப்போக வேண்டுமே!'' என்று நினைத்த போது பவானியின் மனதில் விவரிக்கமுடியாத ஏக்கமொன்று குடிபுகுந்தது. அவள் மேலே பேசமுடியாமல் ஆயத்தமாகத் தனது பெட்டி படுக்கை முதலியவைகளை ஊருக்குப் போக எடுத்து வைத்துக் கொண்டாள்.

தமது மகளை அழைத்துச் செல்ல வந்த சிவஞானம் பிள்ளை டாக்டருக்குத் தமது நன்றியைத் தெரிவித்து



விட்டு அவருக்குச் சேரவேண்டிய 'பில்'லையும் தாராளமாகக் கொடுத்தார்.

''நீங்கள்எல்லோரும் இன்று எங்கள் வீட்டில்போஜனம் செய்துவிட்டுத்தான் போகவேண்டும்'' என்று சுந்தரவதனம், சிவஞானம் பிள்ளையை மிகவும் வற்புறுத்தி அழைக்க அவர் அதைத் தட்ட முடியாமல் ஒப்புக்கொண்டார்.

'நர்ஸிங்ஹோமி'லிருந்து மூட்டைகளைக் கட்டிக்கொண்டு தங்கள் காரில் புறப்பட்ட பவானி, சிவகாமி அம்மாள் முதலியவர்கள் மின்னூர் எக்ஸ்டென்ஷனிலிருந்த சுந்தரவதனத்தின் பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள். சுந்தரவதனம், தமது விதவைத் தாயார் கனகவல்லி அம்மாளுக்கு பவானி, சிவஞானம்பிள்ளை, அத்தை சிவகாமியம்மாள் முதலியவர்களை அறிமுகப்படுத்தினார்.

தன் அத்தை சிவகாமியம்மாள் எதிரில் சிறு பூனைக்குட்டி போலிருந்த கனவல்லியம்மாளை பவானி பார்த்து, ''இவளா டாக்டர் சுந்தரவதனத்தின் தாயார்'' என்று ஆச்சர்யமடைந்தாள். கைக்கு அடங்கிவிடும் பொம்மையைப் போன்ற சிறு தோற்றம். வாயதிர்ந்து போய்விடுமோ என்று மெதுவாகப் பேசினாள் அந்தம்மாள். அவர்களுடன் அத்தையம்மாள் தொண்டையைக் கிழித்துக் கொண்டு உச்சஸ்தாயியில் பேசியது பவானிக்கு அவமானமாகக்கூட இருந்தது. ''டாக்டர் சுந்தரவதனம் என்ன நினைத்து கொள்வார்? சிவஞானம்பிள்ளை வீட்டுப் பெண்கள் அடக்கமற்றவர்கள் என்று நினைத்துக் கொண்டு விட்டால்!'' என்றுகூட அஞ்சினாள்.

போஜனத்திற்குப் பிறகு விருந்தினர்கள் கொஞ்ச நேரம் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதற்குள் அத்தையம்மாள் கனகவல்லியம்மாளுடன் ஏதோ உறவு கண்டு பிடித்துவிட்டாள்.

''அடாடா! டாக்டர் நம்ம உறவு மனுஷராகப் போய்விட்டாரே! இந்த அம்மாளுடைய நாத்தனார் பேத்தியைத்தான் எங்கள் கொழுந்தன் பிள்ளைக்குக் கொடுத்ததாம்.

இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே?'' என்று அத்தையம்மாள் உரத்த குரலில் எல்லோரையும் பார்த்துக் கூறினாள்.

''அப்படியா! ரொம்ப சந்தோஷம்'' என்று சிவஞானம் பிள்ளை கனகவல்லியம்மாளைப் பார்த்து வினயமாகச் சொன்னார்.

அதேசமயம் சுந்தரவதனத்தின் பக்கம் திரும்பிய பவானி அவர் தன்னையே கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருப் பதைக் கண்டு நாணமடைந்தாள்.

அத்தையம்மாளும், சிவஞானம் பிள்ளையும், டாக்டரை யும் அவரது தாயாரையும் கட்டாயம் பூஞ்சோலைக்கு வந்து சில நாட்கள் தங்கவேண்டுமென்று மிகவும் வருந்திய யழைத்து விட்டு விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறி னார்கள்.

ஒரு வினாடி சுந்தரவதனத்தின் கண்களும் பவானியின் கண்களும் சந்தித்தன. மறுகணம் கார் 'விர்' என்று அவ ருடைய பங்களா வாயிலினின்றும் பவானியையும் அவரு டைய இருதயத்தையும் கவர்ந்துகொண்டு கிளம்பிவிட்டது.

விருந்தினர்கள் போனதும் தனியே தன் பிள்ளையைச் சந்தித்த கனகவல்லியம்மாள், ''தம்பீ அந்தப் பெண் நன்றாக இருக்கிறாளே பார்ப்பதற்கு. இன்னும் கலியாணமாகவில்லையாமே?'' என்று கேட்டாள்.

''அதற்கு என்னம்மா செய்யச் சொல்றீங்க!'' என்று மகன் சலிப்பாக பதிலளித்ததைக் கேட்டுத் திகைப்படைந்த தாயார், பிள்ளையை உற்று நோக்கினாள். சற்று முன் பிரகாசமாயிருந்த அவர் வதனம் களை இழந்திருந்தது. கனகவல்லியம்மாள் மேலே பேசாது மௌனமானாள்.

# 16

லக்ஷ்மிபுரத்தில் வனஜா தனது துன்ப வாழ்க்கையை ஆரம்பித்து ஏழெட்டு மாதங்கள் ஆகிவிட்டன. ஐப்பசி மாதத்தின் அடைமழை அந்த வருஷம் எல்லா வருஷங் களையும்விட மும்முரமாகப் பெய்து கொண்டிருந்தது.

வெள்ளிக்கிழமை சந்தியா காலமானதால் வனஜா பூஜையறையில் குத்து விளக்கை ஏற்றி வைத்துவிட்டுக் கொல்லையில் பூத்திருந்த முல்லைப்பூக்களை மாலையாகக் கட்டி வீட்டுக் குலதெய்வமான மரகதவேல் படத்திற்குப் போட்டு நமஸ்கரித்தாள்.

முத்துப்பிள்ளை வெளியே போயிருந்தார். அபிராமி யம்மாள் கோடிவீட்டுக் குப்பம்மாளிடம் ஏதோ அலுவலாகப் போனவள் இன்னும் வீட்டிற்குத் திரும்பிவரவில்லை. தனியே வீட்டிலிருந்த வனஜாவிற்கு அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்க்க வேண்டுமென்று மனம் துடித்தது. காலை யில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து அபிராமியம்மாளுக்குக் கொடுத்துப் போனான். தூரத்தே யிருந்து அதைப் பார்த்த வனஜா அது ஷண்முகத்திட மிருந்து வந்திருந்ததென்பதைக் கையெழுத்திலிருந்து உடனே கண்டு கொண்டாள்.

பல நாட்களுக்குப் பிறகு அவர் கடிதம் எழுதியிருக்கி றார். அதில் என்ன விசேஷம் இருக்கக்கூடும் என்றெல் லாம் குழம்பின வனஜா, ''எப்படியும் கடிதத்தைப் படிக்க அபிராமியம்மாள் தன் உதவியைத்தான் நாட வேண்டும். பார்த்துக் கொள்ளலாம்'' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். ஆனால் அவளுக்கு ஏமாற்றந்தான் ஏற் பட்டது. கடிதத்தைக் கையில் வாங்கினதுமே அவளுடைய மாமி கொட்டுகிற மழையில் அதை எடுத்துக்கொண்டு எதிர் வீட்டுக்குள் ஓடினாள் வீட்டுக்காரச் சின்னய்யாவின் பேரப் பிள்ளையைப்படிக்கச்சொல்லிக் கேட்டால் போகிறதென்று அவள் எண்ணம் போலும்!

தன் கணவனிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தைப் பற்றி தான் அறிந்துகொள்ளக் கூடாதென்று ஏன் மாமி இப்படி மறைக்க வேண்டும்! வனஜாவிற்கு அவள் செய்கை மகத்தான துயரத்தைக் கொடுத்தது.

அந்தக் கடிதத்தை அபிராமியம்மாள் எங்கே வைக்கிறாள் என்பதைக் கண்குத்திப் பாம்புபோல் வனஜா தனது வேலைகளுக்கு நடுவே கவனித்துக் கொண்டிருந்தாள்.

அபிராமியம்மாள் கடிதத்தின் சாராம்சத்தை அறிந்து கொண்டு திரும்பி வந்தவள், கொல்லை ரேழிப் பக்கத்து நெல் குதிரிடுக்கிலிருந்த மாடத்தில் அதை வைப்பதை வனஜா பார்த்தாள். மாமனும் மாமியும் இல்லாத சமயத்தை உபயோகப்படுத்திக்கொண்டு வனஜா சட்டென்று அந்த மாடத்திலிருந்த கடிதத்தை ஓடிப்போய் எடுத்து வந்து பரபரப்புடன் குத்துவிளக்கு வெளிச்சத்தில் படித்தாள். அது ஷண்முகம் தாயாருக்கு எழுதியிருந்த கடிதம். அதில், தான் பம்பாயில் வேலை தேடிக்கொண்டு விட்டதாகவும், தாயைப் பார்க்க வேண்டுமென்று அவன் மனம் துடிப்பதாகவும், இன்னும் என்னவெல்லாமோ எழுதியிருந்தான். ஒரு வார்த்தைகூடத் தன்னைப்பற்றி அவன் எழுதியிராததைக் கண்ட வனஜாவின் பேதை மனம் வேதனைப்பட்டது. தலைப்பில் எழுதப்பட்டிருந்த அவன் விலாசத்தை மனப்பாடம் செய்துகொண்டு, கடிதத்தை மடித்து இருந்த இடத்தில் வைத்துவிட்டு அவள் திரும்பிக் கூடத்திற்கு வந்ததும் அபிராமியம்மாள் வந்ததும் சரியாக இருந்தது.

கொஞ்ச நேரமாக விட்டிருந்த மழை திரும்பவும் பிடித்துக் கொண்டது. கொல்லைப் பக்கம் கொட்டிலில் நின்றுகொண்டிருந்த கன்றுக்குட்டி கத்துவதைக் கேட்ட அபிராமியம்மாள், ''கன்றுக்குட்டிக்குச் சாரல் அடிக்குதோ என்னவோ! கத்துது. போய்ப் பார்!'' என்று வனஜாவிற்கு உத்தரவிட்டாள்.

கொட்டிலில் மழைச்சாரலில் அவதிப்பட்டுக்கொண்டிருந்த தன் ஆசைக் கன்றுக்குட்டி மணியை அவிழ்த்து



வேறு இடத்தில் கட்டிவிட்டு மற்றப் பசுக்களுக்கும் புல்லை அள்ளிப் போட்டுவிட்டுத் திரும்ப உள்ளே நுழைந்த வனஜாவிற்குக் கொள்ளை காரியங்கள் காத்துக் கொண்டிருந்தன.

கூடத்தில் அரிக்கன் விளக்கை ஏற்றி வைத்தவள், அதன் மங்கிய வெளிச்சத்தில் சுவரில் மாட்டப்பட்டிருந்த தன் கணவனின் போட்டோவை உற்று நோக்கினாள். சுருண்ட கிராப்புத் தலையும், தீக்ஷண்யமான கண்களை அலங்கரிக்கும் கறுப்பு பிரேமிட்ட கண்ணாடியுமாக அதில் ஷண்முகம் காட்சியளித்தான். 'உங்களுக்கு இன்னுமா என் விஷயத்தில் மனம் கல்லாயிருக்கிறது. அத்தான்!' என்று தனக்குள்ளே அந்தப் படத்தைப் பார்த்து முனகிக் கொண்ட அவளால் துக்கம் தாங்க முடியவில்லை.

அவள் தனது கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வதைக் கண்டுவிட்டு அபிராமியம்மாள், ''பொழுது சாயும் வேளையில், நீ இப்படி திதக்கும் புலம்ப ஆரம்பிச்சுட்டா, வீடு எப்படி உருப்படும்? இந்தக் கல்யாணம் ஆன நாளிலிருந்து உன் ரோதனையைத்தான் பார்த்துக் கொண்டு வரேனே! அழுகையை நிறுத்தி விட்டுப் போய் ராத்திரி சமையலைக் கவனி!'' என்று வெடுவெடுத்தாள்.

மகன் வீட்டை விட்டுப் போன நாளிலிருந்து அபிராமியம்மாள் வனஜாவிடம் தன்னுடைய மனக்கொதிப்பைக் காட்டிக் கொண்டுதான் வருகிறாள். முத்துப்பிள்ளை மட்டும் மருமகளிடம் அவ்வளவு பிரியமாக நடந்து கொண்டிராவிடில் இத்தனை நாட்களுக்குள் வனஜா தற்கொலை பண்ணிக் கொண்டிருந்தாலும் ஆச்சரியமில்லை. என்ன செய்வது! தலைவிதியை ஒவ்வொருவரும் அனுபவித்துத் தானே ஆக வேண்டும்?

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாக வனஜா வேகமாகத்தான் காரியங்களைச் செய்து முடித்தாள். முதல் நாள் இரவெல்லாம் தன் கணவனைப்பற்றி நினைத்துக் கொண்டு படுத்திருந்த அவள் மனதில், தானே ஷண்முகத்திற்கு ஒரு கடிதம் எழுதி மாமன் மாமி முதலியவர்களுக்குத்

தெரியாமல் தபாலில் சேர்த்துவிடுவது என்ற தீர்மானம் ஏற்பட்டிருந்தது. ஆதலால் அவளுக்கு அன்று வேறு எதிலும் புத்தி செல்லவேயில்லை.

பகல் போஜனத்திற்குப் பிறகு முத்துப்பிள்ளை தமது கயிற்றுக் கட்டிலில் முடங்கிக் கொண்டார். மழை காலமாதலால் அவருக்குச் சோம்பேறித்தனம் அதிகமாய் விட்டது. 'குடும்ப வைத்தியன்' புத்தகம் அலமாரியில் தூங்கிக் கொண்டிருந்தது. மனதில் குஷி இருந்தால்தானே மருந்துகள் செய்ய முடியும்? அபிராமியம்மாள் போஜனத்திற்குப் பிறகு வழக்கமாக வம்பளக்கச் செல்லும் குப்பம்மாள் வீட்டுப் பக்கம் கம்பி நீட்டி விட்டாள்.

சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் வனஜா ஷண்முகத்திற்கு ஒரு கடிதம் எழுதினாள். அதை எழுதும்போது பொங்கி வந்த கண்ணீரை அடக்கச் சக்தியற்றுப்போய் விட்டதால் அந்தக் கடிதம் பல இடங்களில் கண்ணீரால் நனைக்கப்பட்டது.

''தன்னை வந்து பார்க்க இஷ்டப்படா விட்டாலும் போகிறது. மனம் ஒடிந்து கிடக்கும் தந்தைக்காகவாவது சதா துயரத்தில் மூழ்கியிருக்கும் தாயாருக்காகவாவது அவன் கட்டாயம் லக்ஷ்மிபுரம் வந்து சேர வேண்டும்'' என்று அந்தக் கடிதத்தில் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாள் வனஜா. எப்பேர்ப்பட்ட கல்மனதையும் கரைத்துவிடும் கடிதம் அது. எழுதி உறையில் இட்டு, மாமா வைத்திருந்த தபால் தலையொன்றைத் துணிகரமாக அவரைக் கேட்காமலேயே எடுத்துஒட்டித் தாழங்குடையுடன் போஸ்டாபீஸிற்கு கிளம்பிவிட்டாள் வனஜா.

போஸ்ட் மாஸ்டர் பொன்னம்பலம், போஸ்டாபீஸ் என்று சொல்லப்பட்ட அந்த சிறு அறையின் ஜன்னல் வழியாக கொட்டுகிற மழையையே வேடிக்கை பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.

தாழங்குடை பாதி முகத்தை மறைக்க, தெருவில் ஓடும் மழை ஜலத்தில் நடந்து கொண்டு, புடவை தண்ணீரில் நனையாதவண்ணம் தனது சிவந்த கணுக்கால்



தெரிய அதைத் தூக்கிப் பிடித்தவண்ணம் வரும் வனஜாவைக் கண்டு அவன் மனம் மகிழ்ச்சியடைந்தது.

தபால் பெட்டியில் கடிதமொன்றைப் போட்டுக் கொண்டிருந்த வனஜாவை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த பொன்னம்பலம், ''ஸ்டாம்ப் வேணுமா?'' என்று அனாவசியமாக ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்.

பொன்னம்பலத்தின் பக்கங்கூடப் பாராமல் 'வேண்டாம்' என்று கூறிவிட்டு, வனஜா திரும்பி போய்விட்டாள். பொன்னம்பலத்தின் மீசை படபடத்தது. ''இன்னும் இந்தப் பொண்ணுக்கு இவ்வளவு அகம்பாவமா?'' என்று கருவினான் அவன்.

பொன்னம்பலம் காலஞ்சென்ற நல்லாப்பிள்ளையின் ஒரே மகன். ஏழெட்டு வகுப்புவரை படித்துவிட்டு, கொஞ்சம் மைனராக ஊரில் திரிந்த பேர்வழி. ஏதோ அதிர்ஷ்டவசத்தால் லக்ஷ்மிபுரத்து போஸ்ட் மாஸ்டர் வேலை அவன் கையில் சிக்கிக்கொண்டது. சுமாராக சொத்தும், ஒரு வேலையும் கொண்ட தனக்கு வனஜாவைக் கட்டிக் கொடுக்கும்படி இரண்டு வருஷங்களுக்கு முன்பு தன் தாயைவிட்டு முத்துப்பிள்ளையிடம் கேட்டுவர ஏவினான். முத்துப்பிள்ளை வனஜாவை ஷண்முகத்திற்கு நிச்சயித்திருந்தார். போதாதற்கு பொன்னமபலத்தின் நடத்தை அவருக்குப் பிடிக்காது. அதனால் ஒரே பிடியாக அவர் பெண் கொடுக்க மறுத்துவிட்டார். வனஜா ஷண்முகத்தை மணந்துகொண்டாள் என்றாலும் பொன்னம்பலத்திற்கு இன்னமும் அவள் மீது சபலம் இருக்கத்தான் செய்தது.

வனஜாவின் உருவம் தூரத்தில் மறைந்ததும் பொன்னம்பலம் அவசரமாகத் தபால் பெட்டியைத் திறந்தான். அதில் ஷண்முகத்தின் விலாசமிட்ட கவரைத் தேடிப் பிடிக்க அவனுக்கு அதிக நாழியாகவில்லை. கவரைக் கிழித்து உள்ளே இருந்த கடிதத்தைப் பிரித்துத் தைரியமாகப் படித்தபோது அவன் மனம் குமுறியது.

''அப்பப்பா! எப்படிக் கெஞ்சுகிறாள் இவள், அந்த நாய்ப் பயலை. என்னை மணந்து கொண்டிருந்தால் ராணி

போல் வைத்துக்கொண்டிருப்பேனே?'' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். வனஜாவின் அழகை நினைத்துக் கொண்ட அவனுக்குப் பொறாமை தாங்க முடியவில்லை. பயித்தியக்காரன்போல் அந்தக் கடிதத்தை சுக்கல் சுக்கலாகக் கிழித்துத் தன் எதிரில் குவித்தான். வாயிலே ஒரு சிகரெட்டைக் கௌவிக் கொண்டு, ''ஷண்முகம் இந்தப் பக்கம் வராமலே போய்விட்டானானால் எனக்கு ஒரு சமயம் அனுகூலம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்'' என்று கெட்ட எண்ணம் ஏற்பட்டவனாக ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்து, கடிதத் துண்டுகளைச் சொக்கப்பானை கொளுத்தினான். ''அசட்டுப் பெண் ஓடிப்போனவனுக்கு உருகுகிறாள்!'' என்று தனக்குள்ளே சிரித்துக்கொண்டு, அதே நெருப்புக் குச்சியால் வாயிலிருந்த சிகரெட்டையும் பற்ற வைத்துக்கொண்டான்.

தான் எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு ஷண்முகம் மனமிரங்கிப் பதில் போடுவான் என்ற நம்பிக்கையுடன் வனஜா வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். பேதைப் பெண்!

## 17

பூஞ்சோலை பங்களா மாடி வராந்தாவில் ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு வெளியே தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் பவானி. இலை உதிர்ந்து போனதால் மொட்டையாக நின்று கொண்டிருந்த பங்களாவின் வாசல் புறத்துத் தோட்ட மரங்கள் இப்பொழுது இளந்தளிர் இலைகளைச் சுமந்து ஒய்யாரமாகத் தென்றல் காற்றுக்குத் தலையசைத்துக் கொண்டிருந்தன.

பவானி மின்னூரைவிட்டு வந்து எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. அத்தை சிவகாமி அம்மாளுக்கு இன்னும் வேலைகள் சரியாக இருந்தன. மின்னூரில் அவள் பவானியுடன் கொஞ்ச காலம் தங்க வேண்டியிருந்ததனால் அரை



மனதுடன் விட்டுப் போயிருந்த பங்களா, பங்களாவாகவா அவள் திரும்பி வந்தபொழுது காட்சியளித்தது?

சிவஞானம்பிள்ளையின் தலையில் மிளகாயை அரைத்து விட்டு வேலைக்காரர்கள் எல்லோரும் கொழுத்துத் திரிந்து கொண்டிருந்தார்கள். சிவகாமி அம்மாள் திரும்பி வந்து தங்கள் பங்களாவின் அலங்கோல நிலைமையைக் கண்டு ரத்தக் கண்ணீர் வடித்தாள்.

தை மாத அறுவடையில் மானேஜர் அய்யர் எத்தனை கலம் நெல்லைத் தமது வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்த்துக் கொண்டாரோ? அந்த வருஷம் இவ்வளவு தேங்காய்தானா வீட்டிற்கு வந்தது? பண்ணை லேலையாட்கள் எத்தனை ஆயிரம் காய்களைச் சூறையாடினார்களோ? கொட்டில் பசுமாடுகளைப் பாவிகள் இப்படியா எலும்புக் கோலமாக்குவார்கள்! சம்பளம் கொடுக்கிறோமே, சரியாக வேலை வாங்குவோம் என்று அண்ணன் சிவஞானம் கண்டிப்பாயிருந்தால் தோட்டத்து பூஞ்செடிகள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் வாடிக் கிடக்குமா? தவசிப்பிள்ளை பரமசிவம் பார்ப்பதற்கு யானையாகவல்லவா பருத்து விட்டான்? கையிலே எஜமானர் உக்கிராண அறையின் சாவியைக் கொடுத்துவிட்டால் கேட்பானேன்! நெய்யையும் பாலையும் எடுத்துக் கொட்டிக் கொண்டிருக்கிறான்! ஆளுவார் அடக்குவார் யாருமின்றி, ஆட்கள் அத்தையம்மாள் இல்லாத சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு கொட்டமடித்திருக்கிறார்கள்.

பதவியை மீண்டும் ஏற்ற அத்தை அம்மாள், பங்களாவின் அலங்கோல நிலையைத் திருத்தி, அதைப் பழையபடி கொண்டு வருவதற்குள் எத்தனையோ நாட்கள் ஆகி விட்டன.

சிவஞானம்பிள்ளை அத்தனை நாட்களாகக் கஷ்டத்துடன் நிர்வகித்து வந்த அந்தப் பொறுப்பைச் சிவகாமி அம்மாளிடம் 'விட்டது சனியன்!' என்று தள்ளி விட்டு மீண்டும் பழையபடி தமது புஸ்தகங்களுக்குள் மூழ்கினார்.

அத்தை அம்மாள் விதைவிதைக்கும் வேளைகளில் நெல் அளந்து வியாபாரிக்குப் போடும் காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாள். அவளுக்கு பவானியுடன் பேசக்கூட நேரமில்லை. ''பாப்பா! இன்னிக்கு விதை விதைக்க நெல்லெடுத்துக் கொடுக்கணும். கிட்ட இருந்து அளந்து கொடுக்காட்டா இந்தப் பாவிப் பயல்கள் பத்துக் கலத்தை ஒரு கலமாக அளந்து எடுத்துப் போய்விடுவாங்க. நான் வரத்துக்காக நீ காத்திருக்க வேண்டாம். சமையல் ஆனதும் சாப்பிட்டுவிடு. அவங்க அவங்க காரியங்களை அவங்க அவங்க பார்த்துக்கிட்டாலே அதுவே எனக்குப் போதும். தெரிஞ்சுதா! மசமசன்னு உட்கார்ந்து கிடக்காதே!'' என்று அதட்டிய குரலில் சொல்லிவிட்டு அத்தையம்மாள் புடவை தலைப்பை இழுத்து சுட்டிக்கொண்டு சண்டைக்குச் செல்பவள்போல் கிளம்பிவிட்டாள்.

பவானிக்கு வாழ்க்கையே சுவாரஸ்யமற்றதாகத் தோன்றியது. காலையில் எழுந்திருப்பதும், சாப்பிடுவதும் தோட்டத்தைச் சுற்றி வருவதும், தூங்குவதுமாகப் பொழுது கழிந்து கொண்டு வந்தது. எப்பவும் தொணதொணவென்று பேசும் அத்தைக்குக்கூட வேலைகள் இருந்தன.

''சீ! இதென்ன வாழ்க்கை!'' என்று ஒருநாள் மனம் கசந்து கொண்டு உட்கார்ந்திருந்த பவானியின் சிந்தனைகள் மின்னூர்ப் பக்கம் சென்றன. ''அவர் ஒருநாள் வருகிறேன் என்றாரே! ஏன் வரவில்லை? ஒரு சமயம் நம்மைப் பற்றி மறந்தே போய்விட்டாரோ, என்னவோ? ஆமாம், அவருக்கு இருக்கும் பல நோயாளிகளில் நாமும் ஒருத்தி. நோயாளிகளைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கத்தான் அவருக்கு நேரம் இருக்கிறதா?'' என்று பவானி எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

என்ன ஆச்சரியம்! பங்களாவின் கேட்டிற்குள் அந்தக் கறுப்புக் கார் நுழைவதைக் காண பவானியின் இருதயம் ஒரே துள்ளளில் வாய்க்குள் வந்துவிட்டதுபோல் தோன்றியது.



''ஆயுசுநூறு அவருக்கு!'' என்று தனக்குள் மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொண்டே தன்னை ஒரு தடவை கவனித்தாள். காலையில் குளித்து காப்பி சாப்பிட்டுவிட்டு வந்தவள் தலைகூட வாரிக் கொள்ளாமல் உட்கார்ந்து விட்டாள். இந்த நிலையில் அவர் முன் எப்படிப் போவது? ஒரே பாய்ச்சலில் மான்போல் பவானி தன் அறைக்குள் நுழைந்தாள்.

கொஞ்ச நேரம் கழித்துக் கீழே ஹாலுக்குள் நுழைந்த பவானி, டாக்டர் சுந்தரவதனம் ஒரு சோபாவிலும், அத்தை சிவகாமி அம்மாளும், சிவஞானம்பிள்ளையும் முறையே எதிரில் இரு சோபாக்களிலும் உட்கார்ந்து அவருடன் வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''பாப்பா! கடைசியிலே டாக்டர் மனசு வச்சு நம்ப வீட்டுக்கு விருந்து சாப்பிட வந்துவிட்டார்'' என்று பழக்கமான உற்சாகக் குரலில் கத்திக்கொண்டு பவானியின் பக்கம் திரும்பிய அத்தை அம்மாள் பிரமித்தே போய்விட்டாள். என்றுமில்லா சோபையுடன் பவானி அன்று அந்த மஞ்சள் பட்டுப் புடவையில் விளங்கினாள்.

பவானியைக் கண்ட சுந்தரவதனத்தின் முகம் பிரகாசமடைந்தது. ''சௌக்கியமா?'' என்று அவர் அவளைக் கேட்பதற்குள், ''வந்ததைப்பற்றி சந்தோஷம்'' என்று சொல்லிக்கொண்டு பவானி தன் அத்தையின் அருகில் அமர்ந்து கொண்டாள்.

''கடைசியிலே அம்மாவைக் கூட்டிவர மறந்துவிட்டீர்களே! அடுத்த வாட்டி வரும்போதாவது அவங்களைக் கூட்டி வராவிட்டால் எனக்குக் கோபம் வரும்'' என்று உரிமையுடன் அத்தை அம்மாள் சுந்தரவதனத்தை கடிந்து கொண்டு பேசினாள். கொஞ்சம் பழகிவிட்டால் அத்தை எல்லோரிடமும் உரிமை பாராட்டி அதட்டிப் பேசுவாள் என்று பவானிக்குத் தெரியுமாதலால், அவள் அத்தையின் உற்சாகத்தைக் கண்டு தனக்குள்ளே லேசாகச் சிரித்துக் கொண்டாள்.

''நான் திருச்சிக்கு ஒரு கேஸ் விஷயமாகப் போயிருந்தேன். இப்பொழுதுதான் மின்னூருக்குத் திரும்புகிறேன். உங்கள் எல்லோருடைய ஞாபகமும் வந்தது. பார்த்துப் போகலாமென்று வந்தேன். உடனே போக வேண்டும். என் வரவிற்காகக் கேஸ்கள் காத்துக் கொண்டிருக்கும்'' என்று சுந்தரவதனம் அத்தை அம்மாளுக்குப் பதிலளித்தார்.

''பேஷாயிருக்கு! இங்கே சாப்பிட்டுவிட்டு, சாயங்காலத்திற்கு மேல்தான் போகவேண்டும்; வாங்க காப்பி பலகாரம் சாப்பிட'' என்று உபசரித்துக் கொண்டு எழுந்திருந்தாள் அத்தை அம்மாள்.

ஹாலில் கொஞ்ச நேரம் கழித்துத் தனியே விடப்பட்ட டாக்டர் சுந்தரவதனத்தைப் பார்த்து பவானி, ''எங்களுடைய பங்களாவைச் சுற்றிக் காண்பிக்கிறேன், வருகிறீர்களா?'' என்று புன்னகையுடன் அழைத்தாள்.

பவானியும் சுந்தரவதனமும் தோட்டத்தையும் பங்களாவையும் சுற்றி வந்தார்கள். பங்களாவின் ஒவ்வொரு பாகத்தையும் அவருக்குக் காட்டி அலுத்துப் போன பவானி, மேலே என்ன செய்வதென்று தெரியாமல் மாடியினின்று தூரத்தே தெரியும் ஒரு சிறு வாய்க்கால் பாலத்தைச் சுட்டிக் காட்டி, ''அதோ தெரிகிறது பாருங்கள். அந்த வாய்க்கால் என் பாட்டனார் வெட்டியது. அந்த வாய்க்காலுக்குப் பெரிய பிள்ளை வாய்க்கால் என்று பெயர். இவ்வளவு அருகில் காவேரி நதி ஓடினாலும் இங்கே அந்தக் காலத்தில் பாசன வசதி அதிகம் இருந்ததில்லையாம். சர்க்காருக்கு மனுப் போட்டு அவர்கள் மனமிரங்கி வாய்க்கால் வெட்டி கொடுக்கும்வரை என் பாட்டனார், காத்திருக்கவில்லை. தமது சொந்தச் செலவிலேயே வாய்க்கால் வெட்டிவிட்டார். அவருடைய அந்தக் காலத்து முயற்சியே எங்கே திரும்பினாலும் கண்ணிற்குப் பச்சையாகத் தோன்றும் வயல்களாக இப்பொழுது காட்சியளிக்கிறது'' என்று மொழிந்தாள்.

பெருமை பொங்கி வழியும் அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்த சுந்தரவதனம், ''மிஸ் பவானி! நீங்கள்



பரம்பரையாகப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா?'' என்று கேட்டார்.

அவருடைய குரலில் தொனித்த சோகம் பவானியைத் திடுக்கிடச் செய்தது. அவர் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

''பச்சை மரகதப் பாய் விரித்தது போல் கண்களுக்குக் குளிர்ச்சியாகத் தோன்றும் அதோ தெரியும் உங்கள் நிலங்களைப்போல நான் பிறந்தபொழுது ஒரு அடி நிலங்கூட எனக்குச் சொந்தமாயிருந்ததில்லை. அதனால் எனக்கு விவசாயத்தைப்பற்றி அதிகம் தெரியாது'' என்று அவர் தமது வரிசையான பற்கள் தோன்றச் சிரித்தார்.

அவர் சிரித்துப் பேசினாலும் அவர் முகத்தின்மீது தோன்றிய கவலைக் குறிகளைக் கண்ட பவானி மிகவும் மனம் பதைத்தவளாய், ''உங்களுக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றிப் பேசிப் பொழுதைக் கழிக்கிறேனே! என்ன அசட்டுத்தனம்! வாருங்கள் சாப்பிடப் போகலாம்'' என்று விழுங்கினாள்.

சாயங்கால சூரியனின் பொற்கிரணங்கள் தோட்டத்துக் கோடியில் நின்றுகொண்டிருந்த மகிழ மரத்தின் கிளைகளை ஊடுருவிக் கொண்டு அதன் அடியில் உட்கார்ந்திருந்த பவானியின்மீது விழுந்தன. மகிழ மரம் புஷ்பிக்கும் காலம் மாறிவிட்டபோதிலும் இங்குமங்கும் தரைமீது அபூர்வமாக விழுந்துகிடந்த சில புஷ்பங்களைப் பொறுக்கிக் கைகளில் சேர்த்து வைத்துக்கொண்ட பவானியின் கவர்ச்சிகரமான முகம் அப்போது வாடிப் போயிருந்தது.

'நான் பெரிய இடத்துப்பெண் என்று பெருமையடித்துக் கொள்வதாகவல்லவா அவர் நினைத்துக்கொண்டு விட்டார்?' என்று எண்ணியவள் கையிலிருந்த புஷ்பங்களை முகர்ந்து பார்த்துக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தாள்.

யாரோ பின்னால் நடந்துவரும் சத்தம் கேட்ட பவானி திரும்பிப் பார்த்தபோது சுந்தரவதனம் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள். படபடத்த நெஞ்சுடன் கையிலிருந்த புஷ்பங்களைக் கீழே கொட்டிவிட்டு எழுந்து நின்றாள்.

அவளுடைய தடுமாற்றத்தைக் கண்ட சுந்தரவதனம் சிரித்துக்கொண்டே, ''மிஸ் பவானி! உங்களுடைய ஏகாந்தத்தைக் கலைத்ததற்கு மன்னிக்கவும். நான் ஊருக்குப் போக வேண்டும். உங்களிடம் சொல்லிக் கொள்ளத்தான் வந்தேன்'' என்றார்.

அதைக் கேட்ட பவானியின் முகம் சுண்டிவிட்டது. ''இதற்குள்ளாகவா போகவேண்டும்?'' என்று அழமாட்டாக் குறையாக வினவினாள்.

''இந்த ஊர் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இருந்தாலும் நான் மின்னூர் போகத்தானே வேண்டும்?'' என்று அவர் சொன்னதைக் கேட்ட பவானிக்குக் கோபமும் துக்கமும் சேர்ந்தார்போல் வந்தன.

'கூடமாகவே பேசிக் காலத்தை ஓட்டாமல் பளிச்சென்று மனதில் உள்ளதைச் சொல்லி விட்டால்தான் என்ன? நல்ல மனுஷர்!' என்று மனதிற்குள் அவரைக் கடிந்துகொண்டவள் துக்கத்தினால் துடிக்கும் தனது உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

பவானி பேசாப் பதுமையாக நிற்பதைக் கவனித்த சுந்தரவதனம் தமது மனதிலே போராடிக் கொண்டிருந்த உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவராய் மிகவும் சங்கோசதுடன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''மிஸ் பவானி, திருச்சிக்கு ஒரு கேஸ் விஷயமாகப் போனவன் திரும்பி ஊருக்குப் போய்க் கொண்டிருப்பதாக நான் காலையில் சொன்னேனே, அது பொய். நான் நேரே மின்னூரிலிருந்துதான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு மேலே பேசத் தயங்கினவராய் மரத்தடியில் 'முன்னும் பின்னுமாக உலாவினார்.

பவானியின் நெஞ்சு படபடத்தது. ''என்னைப் பார்க்க வேண்டியல்லவா வந்திருக்கிறார்?'' என்று நினைத்தாள். சட்டென்று 'திரும்பிய சுந்தரவதனம், ''எனக்கு முப்பத்தைந்து வயதாகிறது! ஏற்கனவே ஒரு மனைவியை இழந்தவன். ஒரு குழந்தைகூட இருக்கிறது. இந்த நிலையில்



பரம்பரையான பணக்காரக் குடும்பத்தில் உதித்த ஒரு அழகான படித்த பெண் என்னைக் காதலிப்பாள் என்று எதிர்பார்க்க முடியுமா? என் அசட்டு மனம் என்னவோ உன்னை என் நர்சிங் ஹோமில் ஏற்றுக் கொண்ட அன்றைய தினத்திலிருந்து என்வசம் இல்லை. பவானி! நான் உன்னை மனமாரக் காதலிக்கிறேன் என்பதை நீ அறியமாட்டாய். உன்னை மணந்து கொள்ளத் தகாதவன் நான். அதனால்தான் ஊருக்குப் போகிறேன்!'' என்று கூறி முடித்தார். அவருடைய வார்த்தைகள் தடுமாறின.

பவானியின் கண்களில் நீர் நிறைவதைக் கண்ட சுந்தரவதனம் பதைபதைத்துப் போய் ''பவானி!'' என்று அவள் அருகில் நெருங்கினார்.

''இதைத்தானா சொல்ல வந்தீர்கள்? நான் ஒரு ஏழைப் பெண்ணாகப் பிறந்திருக்கப்படாதா?'' என்று அவள் விம்மினாள்.

சுந்தரவதனத்தின் முகம் பிரகாசமடைந்தது. ''அப்படியானால் 'பவானி' நீயும் என்னை...'' என்று அவர் முடிப்பதற்குள் ''ஆமாம்'' என்று பவானி கணீர் எனப் பதில் அளித்தாள். கண்ணீர் வெள்ளத்திடையே அவள் கருவிழிகளிரண்டும் சந்தோஷத்தினால் ஜ்வலித்தன.

''நீ என்னை மணந்துகொள்வாய் என்பதை என்னால் கனவில்கூட நினைத்துப் பார்க்கமுடியாதே, பவானி. நிஜமாகவா சொல்லுகிறாய்?'' என்று அவளுடைய கரங்கள் இரண்டையும் ஆவலுடன் பற்றினார் சுந்தரவதனம்.

தென்றல் காற்றுக்குத் தலையசைத்த மகிழ மரத்தினின்று இரண்டு புஷ்பங்கள் அவர்கள்மீது உதிர்ந்தன.

## 18

ஷண்முகம் பம்பாய் வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது. லக்ஷ்மிபுரத்தில் தன் தாய்க்கு மட்டும் அவன் எப்பொழுதாவது கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். அவளிடமிருந்து அவைகளுக்கெல்லாம் பதில் வந்தன. வீட்டிற்குத் திரும்பி

வந்து தன்னைப் பார்க்கவேண்டுமென்று அவனைத் தாயார் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாள் அந்தக் கடிதங்களில். மறுபடி அவன் எப்படி லக்ஷ்மிபுரம் போக முடியும்? அவனுடைய தந்தை முத்துபிள்ளை முகத்தில் எப்படி விழிப்பது? வீட்டு வாசற்படி ஏறினால் அவர் காலை முறித்துவிடுவாரே! இருந்தாலும் அம்மா அபிராமி அம்மாவைப் பார்க்காமல் எத்தனை நாட்கள்தான் கழிக்க முடியும்? இதைப்பற்றி என்ன செய்யலாம் என்று யோசனை செய்து வில்லியத்திடம் கலந்து ஆலோசிப்பதுதான் சரி என்று தீர்மானித்து அன்று சாயங்காலம் ஷண்முகம் மாதுங்காவிற்குப் புறப்பட்டான். அங்கேதான் வில்லியம் வசித்துக் கொண்டிருந்தான்.

பாரதி தனக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்குச் சட்டை தைத்துக் கொண்டிருந்தாள். அன்று விடுமுறை தினமாகையால் வில்லியம் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு அதை ஊதி மகிழ்வதில் ஈடுபட்டவனாய்ச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். ஷண்முகத்தைக் கண்ட தம்பதிகள் அவனைக் குதூகலத்துடன் வரவேற்றார்கள்.

''என்னாங்க பிரதர் இப்பத்தான் ஏன் உங்க சிநேகிதர் இந்தப் பக்கம் வரதே காணோம் என்று இது என்னைக் கேட்டுக் கொண்டிருந்தது. நான் பதில் சொல்வதற்குள் நீங்களே வந்துவிட்டீங்க'' என்று வில்லியம் பல்லைக் காட்டிக் கொண்டே ஷண்முகத்திற்கு ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டான்.

வில்லியத்திடமும் அவன் மனைவி பாரதியிடமும் ஷண்முகம் நன்றாகப் பழகி விட்டதனால் அவன் தன்னுடைய குடும்ப ரகஸ்யம் முழுவதையும் அந்தத் தம்பதியிடம் வெகு நாட்களுக்கு முன்பே சொல்லிவிட்டான். வில்லியம் மரியாதையை உத்தேசித்து ஷண்முகத்துடன் அவனுடைய குடும்ப விஷயங்களைப்பற்றியே ஏதும் பேசுவதில்லை. ஆனால் அவன் மனைவி அப்படியல்ல. ஷண்முகத்தைக் கண்டபொழுதெல்லாம் ஏதாவது லக்ஷ்மிபுரத்தைப் பற்றிக் கேள்விகள் கேட்டுவிடுவாள். அவளுக்குப் பதில்



சொல்ல முடியாமல் ஷண்முகம் மனக்கிலேசத்துடன் தவிப்பான்.

நாற்காலியில் உட்கார்ந்த ஷண்முகத்தினிடம் அவள் ''அன்னிக்கு நான் உங்களைப்பற்றி பேச ஆரம்பித்ததிலிருந்து இந்தப் பக்கம் வருவதையே நிறுத்திக்கொண்டு விட்டீர்களே!'' என்று கேலியாகக் கேட்டாள்.

ஷண்முகத்தின் முகத்தில் அசடு வழிந்தது. ''இல்லை இல்லை! வேலை எனக்குச் சரியாயிருக்கிறது. மேலும் அடிக்கடி வந்து உங்களைத் தொந்தரவு செய்ய எனக்கு இஷ்டமில்லை'' என்று மென்று விழுங்கினான். ''இவளுக்கு என்னவோ உங்கள் மனைவி விஷயத்தில் மகத்தான பச்சாதாபம் ஏற்பட்டு விட்டது. தினம் உங்களை அழைத்து வரும்படி என்னை நிர்ப்பந்திக்கிறது! என்னவோ உங்கள் மனைவி விஷயமாகப் பேசவேண்டுமாம்'' என்று வில்லியம் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான்.

வனஜாவைப்பற்றி ஷண்முகம் பாரதியிடம் பேச விரும்பவில்லை; தான் வனஜாவை விட்டு ஓடி வந்த விஷயத்தை அவனிடம் சொன்னது பெருந்தப்பாகவல்லவா போய்விட்டது? அபத்தமாக என்ன பேசப் போகிறாளோ என்று ஷண்முகம் பயந்தே போய்விட்டான்.

தான் பார்த்திராத வனஜாமீது பாரதிக்கு அசாத்தியமான பச்சாதாபம் ஏற்பட்டிருந்தது. தன்னை ஒத்த ஒரு சிறு பெண், கல்யாணமான நாளிலிருந்து கணவனிடமிருந்து ஒருவிதமான ஆதரவும் பெறவில்லையென்றால், பாவம், அவள் நிலைமை எத்தனை பரிதாபத்திற்கு உரியதாகும்! தாய் தந்தையற்ற பெண்—அவள் கணவனைத் தவிர வேறு யாரிடம் அடைக்கலமடைய முடியும்? என்று வனஜாவின்மேல் பச்சாதாப உணர்ச்சிகளைச் சேகரித்து வைத்திருந்தது அவள் உள்ளம்.

''நீங்க வனஜாவிற்குக் கடிதம் எழுதினீர்களா?'' என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டாள் அவள்.

CONNEMARA PUBLIC LIBRARY
MAR 2004

ஷண்முகத்திற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ''இல்லை, அம்மாவிற்குத்தான் எழுதினேன். அவர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறது. ஊருக்கு வர வேண்டுமென்று அம்மா எழுதியிருக்காங்க. உங்களிடம் அதைப்பற்றி ஆலோசனை கேட்கத்தான் இன்றுவந்தேன்'' என்று கூறினான் கடைசியில்.

''நீங்க ஊருக்குப் புறப்படுமுன் உங்கள் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டுப் போகவேண்டும்'' என்று உத்திரவிடும் தோரணையில் பாரதி கூறியதைக் கேட்ட ஷண்முகம் திடுக்கிட்டு, ''வனஜாவிற்கு எதற்குக் கடிதம் எழுத வேண்டும்?'' என்று முனகினான்.

''எதற்காகவா? உங்கள் மனைவி என்ற பட்டம் அடைந்த ஒரு பெண் உங்களிடமிருந்து ஒரு கடிதத்தைக் கூட அடையக் கூடாதா?'' என்று எகத்தாளமாக அவள் கேட்டாள்.

''நான் அவளை ஒரு பொழுதும் இஷ்டப்பட்டு மணந்து கொள்ளவில்லையே'' என்று ஷண்முகம் மேலே சொன்னது அவள் கோபத்தைத் தூண்டிவிட்டது.

''இஷ்டப்பட்டீர்களோ இல்லையோ! நீங்கள் வீணாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்து விட்டீர்கள். கல்யாணம் செய்து கொள்ளாமல் ஓடி வந்திருந்தாலும், அவள் வேறு யாரையாவது மணந்துகொண்டு சுகமாக இருப்பாள். கல்யாணம் என்று ஒன்றைச் செய்துகொண்ட பிறகு அவளை விட்டு விட்டுக் கோழைபோல் ஓடிவந்து விட்டீர்கள். இது சரியா? இனி அவளுடைய வாழ்க்கையின் முடிவு என்ன? உங்களுடைய சமூகத்தின் கட்டுப்பாடுகளைப் பற்றி எனக்குத் தெரியாதா? நீங்கள் புருஷர்; இஷ்டப் பட்டால் ஆயிரம் ஸ்திரீகளை மணந்து கொள்ளலாம். பாவம் அவள் கதி?'' என்று மிகவும் படபடப்பாகப் பேசினாள் பாரதி.

வில்லியம் தன் மனைவியின் சாதுர்யமான பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தித்தவனாய் ''பாரதி! உன்னை உங்கப்பா 'சட்ட'த்திற்குப் படிக்க வைக்காமல் எனக்குக்



கல்யாணம் பண்ணிக் கொடுத்தது தப்பு?'' என்று ஹாஸ்யமாகக் கூறினான்.

''இந்த சமயம் நீங்கள் என்னைப் பரிகாசம் செய்ய வேண்டாம். நான் உண்மையைத்தானே கேட்கிறேன்? ஏன் உங்கள் சிநேகிதர் பதில் பேசமாட்டேன் என்கிறார்'' என்று பாரதி தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

ஷண்முகத்திற்கு பாரதி கேட்ட கேள்விக்குச் சட்டென்று பதில் சொல்ல நா எழவில்லை. அவள் சொன்ன வார்த்தைகளைக் கவனித்துப் பார்த்தான். அதில் கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்தது.

''வேறொரு பெண்ணின்மீது மனதை வைத்திருந்த எனக்கு வனஜாமேல் இஷ்டம் ஏற்படவேயில்லை. என்ன செய்வேன்?'' என்று சலிப்பாகப் பதிலளித்தான் ஷண்முகம். ''அந்த வேறொரு பெண்ணின்மீது இன்னுமா உங்கள் மனம் இஷ்டப்படுகிறது? யோசித்துச் சொல்லுங்கள்'' என்று பாரதி துணிச்சலுடன் கேட்டாள்.

ஷண்முகம் கொஞ்ச நேரம் சிந்தித்து விட்டு, ''இல்லை இப்பொழுது அவளைப்பற்றிய ஞாபகமே இல்லை. அவளைக் காதலித்ததாக ஒரு காலத்தில் முட்டாள்தனமாக எண்ணிக்கொண்டிருந்தேன்'' என்று முகத்தில் அசடு வழியப் பதிலளித்தான்.

பாரதி கலகலவென்று தனது கணவனைப் பார்த்துச் சிரித்தாள். ''காலம் என்பது எவ்வளவு வேடிக்கைகள் செய்கின்றன. பார்த்தீர்களா? உயிருக்கு உயிர் என்று கருதி வரும் ஒருவரைக் காலக்கிரமத்தில் மறந்துவிடுகிறோம். அதேபோல் விஷமென்று கருதி வெறுக்கும் ஒருவரை காலக்கிரமத்தில் அமிர்தமென்று ஆசைகொண்டும் விடுகிறோம். எல்லாம் மனதுதானே காரணம்? இந்த மனதைக் காலப் போக்கிலே கட்டுப்படுத்துவது மிகவும் சுலபம். இவ்வளவுதானே?'' என்றாள்.

''நீ சொல்வது உண்மைதான் பாரதி! என்னைக் கல்யாணம் செய்து கொள்ளுமுன் உன்னைப்பற்றி நான்

கேட்டது கூடக் கிடையாது. காதலித்த பிறகுதான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்த எனக்கு முன்பின் தெரியாத உன்னைக் கொண்டுவந்து கட்டி வைத்தார்கள். பார்த்தே இராத ஒரு பெண்ணுடன் குடித்தனம் நடத்தவேண்டும் என்று நான் மனக் கசப்புடன்தான் வாழ்க்கையை ஆரம்பித்தேன். ஆனால் இன்று நம்மைப்போல் அன்பு கொண்ட தம்பதிகள் இந்தப் பெரிய நகரத்தில் மிகச் சிலர்தான். ஒருநாள் என் கூட நீ இல்லாவிட்டால் என் உயிர் போய்விடும் போலிருக்கிறது'' என்று வில்லியம் தன் மனைவியைப் பார்த்துக் கூறினான். நாணம் மிகுந்த அவள் தனது முகத்தை ஒருபுறம் திருப்பிக் கொண்டாள்.

''உங்கள் விஷயம் வேறு. என் விஷயமே வேறு. அதற்கும் இதற்கும் ஒற்றுமை பார்ப்பது மதியீனம்'' என்று ஷண்முகம் வில்லியத்தைப் பார்த்து முணுமுணுத்தான்.

பாரதிக்கு கோபம் வந்தது. ''என்ன வேற்றுமை இருக்கிறது? நீங்கள் வனஜாவுடன் அதிக தாராளமாகப் பழகினதில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் அவளை வெறுக்கவில்லை. அது நிச்சயந்தானே?'' என்று கேட்டாள்

ஷண்முகம் யோசித்தான். வனஜாமீது அப்படி வெறுக்கும்படியாக அவ்வளவு துவேஷம் அவனுக்கு ஒருநாளும் இருந்ததில்லை.

''இல்லை?'' என்றான் அவன்.

''பார்ப்பதற்குக் குரூபியாய் இருக்கமாட்டாள் என்று நினைக்கிறேன்'' என்று மேலே தொடர்ந்தாற்போல் பாரதி கேட்டதும், ஷண்முகத்தின் முகம் சிவந்தது. வனஜாவைக் குரூபி என்று யார் சொல்லுவார்கள்? தாழம்பூவைப் போன்ற நிறமும், சுருட்டை சுருட்டையாகக் கூந்தலுமாக அவள் பதுமையைப் போலல்லவா இருப்பாள்?

''பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருப்பாள்'' என்று கொஞ்சம் பெருமை தொனிக்கும்குரலில் கூறினான் அவன்.

''படித்திருக்கவில்லை, என்ற குறையாக்கும் உங்களுக்கு?'' என்று பாரதி விடாமல் கேட்டாள்.



''ஸ்கூல் பைனல்வரை படித்தவள்தான்'' என்று ஷண்முகம் இழுத்தான்.

''இப்படியெல்லாம் இருந்தும் நீங்கள் வனஜாவை நேசிக்க முயற்சித்ததில்லை என்றால் வேடிக்கைதான்'' என்று பாரதி முகவாய்க்கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு எழுந்திருந்து உள்ளே சென்றாள்.

அவள் போன பிறகு வில்லியம ஷண்முகத்தின் குழப்பத்தைப் போக்க எண்ணி, வேறு பல விஷயங்களைப் பற்றிப் பேசினான். அவன் பேசினதில் ஒரு வார்த்தைகூட ஷண்முகத்தின் காதுகளில் விழவில்லை. பாரதி கடைசியில் சொன்ன விஷயம் அவன் மனதை ஒரேயடியாகக் கலக்கி விட்டது.

உள்ளே சென்ற பாரதி இரண்டு கோப்பைகளில் டீ தயாரித்துக் கொண்டு வந்தவள் அவைகளை மேஜைமீது வைத்துவிட்டு ஷண்முகத்தின் அருகில் வந்து நின்றாள். தன் எதிரில் வைக்கப்பட்ட டீ கோப்பையையே பார்த்துக் கொண்டு மௌனமாய் இருந்த ஷண்முகத்தை நோக்கி, அவள், ''மிஸ்டர் ஷண்முகம்! வனஜாவைப்பற்றி என்னவோ என் மனம் கரை காணாத பச்சாதாபம் அடைகிறது. அவள் தற்போது அனுபவிக்கும் வாழ்க்கை எப்படிப்பட்ட துன்பமான வாழ்க்கை என்பது எனக்குத் தெரியும். பெண்களின் மனக்கஷ்டத்தைப் பெண்கள்தான் சரியாக அறிந்துகொள்ள முடியும். உங்களை நான் ஒன்று கேட்கிறேன், செய்வீர்களா?'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

ஷண்முகத்தினால் அவளுடைய வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. ''முடிந்தால் செய்கிறேன்'' என்றான் அவன்.

''பரிட்சையில் தவறும் மாணவர்களுக்குக்கூட சர்வகலா சாலையர், 'இத்தனை தடவைகள் ஒரு பரிட்சைக்கு உட்காரலாம்' என்று சில சந்தர்ப்பங்களை அளித்திருக்கிறார்கள். ஒரு தடவை தவறினாலும் இன்னொரு தடவையிலாவது வெற்றியடையட்டுமே என்ற எண்ணத்தினால்தானே

சந்தர்ப்பங்கள் அளிப்பது? அப்படி இருக்கையில் வாழ்க்கை என்னும் பரிட்சையில் முயற்சித்துப் பார்க்க வனஜாவிற்கு நீங்கள் ஒரு சந்தர்ப்பம் அளிக்கக்கூடாதா? அதுதான் நான் கேட்டுக் கொள்வது'' என்று உணர்ச்சி ததும்ப அவள் பேசினாள். அவள் விழிகளில் இரண்டு சொட்டுக் கண்ணீர் துளிர்த்துக்கொண்டிருந்தது!

பாரதியின் வேண்டுகோள் ஷண்முகத்தின் இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்துவிடவே, ''சரி, உங்கள் இஷ்டப்படியே வனஜாவிற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறேன்'' என்றான்.

''சந்தோஷம், இன்றே வனஜாவிற்கு ஒரு கடிதம் எழுதுங்கள். அவளை பம்பாய்க்கு அழைத்துக் கொண்டு வர, நீங்கள் சீக்கிரம் லக்ஷ்மிபுரத்திற்கு வரப்போவதாக அதில் எழுதுங்கள். அவளுடன் கொஞ்ச நாள் வாழ்க்கை நடத்தியும் உங்களுக்கு அவளைப் பிடிக்கவில்லை என்றால் பிறகு உங்கள் இஷ்டம்'' என்று பாரதி சொன்னாள்.

''சரி, அப்படியே செய்கிறேன்'' என்று ஷண்முகம் சிரித்துக்கொண்டே சொன்னான்.

''இன்றுதான் என் மனம் சந்தோஷம் அடைந்தது'' என்று கூறிக்கொண்டே அங்கிருந்த நாற்காலியொன்றில் ஆயாச மிகுதியால் பாரதி சாய்ந்துகொண்டாள்.

வில்லியம் சாப்பிட்டுக் கொண்டிருந்த டீயைச் சட்டென்று கீழே வைத்துவிட்டு மனைவியிடம் ஓடினான். ''பாரதி! பாரதி! உனக்கு உடம்புக்கு என்ன?'' என்று பதறினான்.

''ஒன்றுமில்லை, கொஞ்சம் மயக்கமாக இருக்கிறது. அவ்வளவுதான்'' என்று அவள் ஹீனஸ்வரத்தில் பதில் அளித்தவள் கண்களை மூடிக்கொண்டாள்.

''இதற்குத்தானே நான் அம்மாவை வரவழைக்கிறேன் என்றேன்! நீ வேண்டாமென்று தடுத்துவிட்டாய்! எத்தனை நாள் இனி நீ வேலை செய்ய முடியும்?'' என்று அன்புடன் அவளைக் கடிந்துகொண்டு, குளிர்ந்த ஜலத்தால் அவள் முகத்தைத் துடைத்தான் வில்லியம்.



அவர்களிடையேயிருந்த அன்பைக் கண்ட ஷண்முகத்தின் மனம் பாகாய்க் கரைந்தது. ''அப்பப்பா! தம்பதிகள் என்றால் இவர்களைப்போல் அல்லவா இருக்கவேண்டும்'' என்று அவன் நினைத்துக்கொண்டான்.

## 19

பவானி அந்த அறையிலிருந்த பெரிய நிலைக் கண்ணாடியின் முன் நின்றுகொண்டு வெளியே புறப்படுவதற்கு முன்பு ஒருமுறை தன்னை நன்றாகக் கவனித்துக் கொண்டாள்.

சுந்தரவதனத்திற்கு மிகவும் பிடித்தமான அந்த நீலப் பட்டுப் புடவையைத்தான் உடுத்திக் கொண்டிருந்தாள். கண்ணாடியில் தோன்றிய தனது கவர்ச்சிகரமான பிரதிபிம்பத்தைப் பார்த்துத் திருப்தியடைந்த பவானி அறையை விட்டு வெளிவரத் திரும்பினாள்.

அதற்குள் அவரே—அவர்தான், அவளுடைய கணவன் சுந்தரவதனம்—உள்ளே வந்துவிட்டார்.

''இன்னுமா, பவானி டிரஸ் செய்து கொண்டிருக்கிறாய்! நாழியாகவில்லை?'' என்று அவர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

''இரண்டொரு பாட்டுகள் ஆகிவிட்டால் போகட்டும் சபையில் கச்சேரி ஆரம்பிப்பதற்கு முன்பே நாம் போய் விட்டால் எல்லோரும் நம்மையே முறைத்துப் பார்க்கிறார்கள். எனக்கு உள்ளே நுழையக்கூட வெட்கமாகயிருக்கிறது'' என்று பவானி உதட்டைக் குவித்துக் கொண்டு கொஞ்சினாள்.

''சுந்தரவதனத்தின் மனைவியைப் போன்ற அழகியை அவர்கள் இதுவரை பார்த்ததில்லை. அதனால்தான் முறைத்துப் பார்க்கிறார்கள். அதற்கு என்ன செய்வது'' என்று அவர் சிரித்துக்கொண்டு சொன்னபொழுது பவானியின் கன்னங்கள் லேசாகச் சிவந்தன.

''ஆமாம், என்னைப் பரிகாசம் செய்யாவிட்டால், உங்களுக்குப் பொழுதுபோகாதே'' பொய்யான கோபத்

துடன் பவானி புருவத்தை நெறித்தாள். அவளுடைய முக பாவங்களில் ஏற்படும் விசித்திர மாறுபாடுகளில் மயங்கின வராய் சுந்தரவதனம் தம்மை மறந்துபோய் அவளையே பார்த்துக்கொண்டு நின்றார்.

தலையில் சூடிக்கொண்டிருந்த மல்லிகை சரத்தை மறுபடியும் சரிப்படுத்திக் கொண்டு அதன் அழகைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு நின்ற பவானிக்குத் திடீரென பூஞ்சோலையின் நினைவு வந்துவிட்டது. உடனே அத்தை அம்மாள் அவளுடைய மனக்கண்முன் வந்து நின்றாள்.

அப்பா! அத்தை சிவகாமி அம்மாள் லேசில் பவானியின் கல்யாணத்திற்குச் சம்மதித்தாளா?

அன்று சாயங்காலம் மகிழ மரத்தடியில் தன் மனதை எடுத்துக்கூறிய சுந்தரவதனம், தங்களுடைய விவாகத்தைப் பற்றிச் சிவஞானம் பிள்ளையின் அனுமதியைப் பெற எண்ணி அவருடைய புஸ்தக அறைக்குள் நுழைந்தார்.

அவர் வெளியே வருவதற்குள் ஒருயுகம்போல் தோன்றி யது பவானிக்கு. மாடி வராந்தாவிலேயே நின்றுகொண்டு, ''அப்பா என்ன சொல்வாரோ?'' என்று குழம்பிக்கொண் டிருந்த அவள் முன் சுந்தரவதனம் சந்தோஷத்துடன் வந்து நின்றார். ''உனக்கு இஷ்டமிருந்தால் உன் தந்தைக்கு ஆட்சேபணை இல்லையாம். உன் சம்மதத்தைப்பற்றிக் கூடிய சீக்கிரம் எனக்குக் கடித மூலமாக அறிவிப்பதாகச் சொல்லிவிட்டார். நான் போய் வருகிறேன்'' என்று அவளிடம் அவசரமாகச் சொல்லிவிட்டு விடுவிடுவென்று மாடிப்படிகளில் இறங்கி ஓடினார்.

தூரத்தே மறையும் அவருடைய கறுப்புக் காரைப் பார்த்துக் கொண்டு தன்னை மறந்து நின்ற பவானி, தன் பெயரைச் சொல்லி சிவஞானம்பிள்ளை அழைப்பதைக் கேட்டு, ''அப்பா, இதோ வந்துவிட்டேன்'' என்று அவரு டைய அறைக்குள் நுழைந்தாள்.

''என்ன பவானி! சுந்தரவதனம் சொல்வதெல்லாம் உண்மைதானே? நீ அவரை மணந்து கொள்ள சம்மதித்து



விட்டாயா?'' என்று பிள்ளை கேட்டவண்ணம் தமது இடத்தை விட்டு எழுந்திருந்தார்.

தந்தையைப் பார்த்துப் பேச சங்கோஜமடைந்த பவானி 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிக் கொண்டே ஜன்னல் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

''நீ இது விஷயமாக ஒன்றும் அவசரப்பட்டுக்கொண்டு சொல்லாதேயம்மா. எனக்கிருப்பது ஒரே பெண் நீ! உனக்கு எல்லாவிதத்திலும் நான் பூரண சுதந்திரம் கொடுத்திருக் கிறேன். அதைச் சரியாக உபயோகப்படுத்திக் கொள். சுந்தரவதனத்திற்கு முப்பத்தைந்து வயதாகிறது. முதல் மனைவியால் ஒரு குழந்தை வேறு இருக்கிறது. உனக்கோ வயது இருபத்திரண்டுகூட ஆகவில்லை.' உங்களிடையே இருக்கும் வயது வித்தியாசம் எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஒரு சமயம் நீ முதல் முதலில் சந்திக்கும் மனிதன் இவர்தானோ என்னவோ! அதனால் இதைக் காதல் என்று எண்ணி தப்பு செய்து விடாதே. கல்யாணம் என்பது மாற்றக்கூடிய விஷயமல்ல, பவானி! யோசித்துச் சொல். இதில் அவசரமே வேண்டாம்'' என்று பிள்ளை சொல்லிக்கொண்டே தமது மகள் அருகில் வந்து அவளது நெற்றியில் தவழ்ந்த கூந்தலை அன்புடன் ஒதுக்கினார்.

''அவரை எனக்கு ரொம்பவும் பிடிக்கிறது! அப்பா இதில் யோசிப்பதற்கு ஒன்றுமில்லை'' என்று பவானி தீர்மானமான குரலில் பதிலளித்தாள்.

சிவஞானம் பிள்ளை மகளுடைய முடிவான பதிலைக் கேட்டு ஒரு பெருமூச்சு விட்டார். கொஞ்சநேரம் யோசித்து விட்டு முடிவில், ''பவானி! உன் இஷ்டப்படியே அவரை மணந்துகொள், போய் உன் அத்தையை வரச்சொல்'' என்று அன்புடன் அவள் கன்னத்தைத் தட்டினார்.

தந்தையிடம் அத்தனை சுலபமாக உத்தரவை வாங்கி விட்ட சந்தோஷத்தினால் பவானி, பல நாட்களாகத் தூங்கிக் கொண்டிருந்த வீணையை எடுத்து வைத்துக்

கொண்டு குதூகலம் மிகுந்த மனத்துடன் மெதுவாகப் பாடிக் கொண்டிருந்தாள்.

''என்ன பாப்பா இதென்ன, அண்ணன் சொல்றது நிசமா?'' என்று கூறியவண்ணம் அத்தை சிவகாமிஅம்மாள் ஓடிவந்து அங்கிருந்த சோபா ஒன்றின்மீது தொப்பென விழுந்தாள்.

''ஆமாம், அத்தை! நான் அவரைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று தைரியமாக அத்தையிடம் பதில் அளித்தபவானியின் விரல்கள் வீணைத் தந்திகளை மெல்லத் தட்டிக் கொண்டிருந்தன.

''என்ன! இரண்டாந்தாரமாகவா அவரைக் கட்டிக்கப் போகிறாய்? பாப்பா! உனக்கு புத்தி கித்தி தடுமாறிப் போச்சா?'' என்று அத்தை கத்தினாள்.

பவானி வீணையைக் கீழே தரையில் வைத்துவிட்டு ''ஏன் அத்தை, அவர் நமக்கு எந்த விதத்தில் குறைந்து விட்டார்?'' என்று கோபமாகக் கேட்டாள்.

''அவர் பெரிய டாக்டர்தான். இல்லையென்று நான் சொல்லவில்லை. நம்ப அந்தஸ்துக்கு நம்ப பொண்ணை ரெண்டாந்தாரமாகக் கொடுப்பது கேவலம். என் பாப்பா உன்னைக் கட்டிக்கொள்ள எத்தனையோ ஜமீன்தார்கள் காத்துக் கொண்டிருக்காங்களே? இவர் என்னாத்துக்கு? வேண்டாம்!''

''என் அத்தை பூஞ்சோலை சிவஞானம் பிள்ளையின் மகள் பவானி பி. எக்கும், சொட்டுப்பட்டி ஜமீன்தார் மகன் குண்டுமணிக்கும் விமரிசையாக விவாகம் நடந்தேறியது. கல்யாணத்திற்குக் காட்டுப்பாக்கம் ராஜாவும் ராணியும், திம்மப்பட்டி மிட்டாதாரும் மற்றப் பிரமுகர்களும் வந்திருந்தார்கள். நடன ராணி ரங்காபாயின் நாட்டியக் கச்சேரியைக் கண்டு கோடி ஜனங்கள் ஆனந்தித்தனர்' என்று கொட்டையாய் விளம்பரம் செய்ய முடியாதே என்று வருந்துகிறீர்களா? என் விவாகத்தைப்பற்றி எல்லோரும் அறிய வேண்டாம். வெள்ளிமலையான் சன்னதியில் மிக ஆடம்பரமின்றி நான் கல்யாணம் செய்து



கொள்ளப் போகிறேன். மணந்தால் இவரைத்தான் மணப்பேன்; இல்லாவிட்டால் இப்படியேதான் இருப்பேன்'' என்று பரிகாசமாகப் பேச ஆரம்பித்த பவானி, பயமுறுத்தலோடு முடித்தாள்.

அத்தை அம்மாளுக்கு துக்கம் தொண்டையடைத்துக் கொண்டது. ''உனக்கு எத்தைக் கண்டுதான் அவர்மேல் இவ்வளவு மோகம் ஏற்பட்டதோ தெரியவில்லை. தலையெழுத்து!'' என்று மனக்கொதிப்புடன் கூறிக்கொண்டு எழுந்து சென்றாள்.

''எத்தைக் கண்டு நீ இச்சை கொண்டாயடி
என் மகளே''

என்ற பாட்டை பவானியின் வாய் முணுமுணுத்தது.

அவர்கள் கல்யாணம் அந்த மாதத்தின் முடிவிலே வெள்ளிமலையான் சன்னதியில் மிகவும் ஆடம்பரமின்றி நடந்தேறியது.

தமது தாயாரை முதல் நாளே மின்னூருக்கு அனுப்பி விட்டு சுந்தரவதனம் தமது புது மனைவியுடன் அன்று பூஞ்சோலையைவிட்டுக் கிளம்பினார்.

எத்தனை கோபம் கொண்டிருந்தாலும் சிவகாமி அம்மாள் பவானி புக்ககம் போகிறாள் என்பதைக் கேட்டதும் விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள். பெற்றவனுக்கு மேல் வளர்த்த அவளுக்குப் பவானிமீது அத்தனை பாசம்!

''அப்பா, போய்விட்டு வருகிறேன்'' என்று சொன்ன பவானியைக் கண்டு கண்வ முனிவர் சகுந்தலையைப் பிரியும்போது கலங்கினாற்போல் சிவஞானம் பிள்ளை கலங்கி விட்டார். பவானியின் கால் எலும்பு ஒடிந்து விட்டதென்ற பொழுதுகூட அவர் அவ்வளவு அசந்து போய்விடவில்லை. ''பவானி, போய் புத்திசாலியாக இரு'' என்று பிள்ளை மகளை ஆசீர்வதித்தார். அதற்குமேல் பேச முடியாமல் துக்கம் அவரது தொண்டையைப் பிடித்துக்கொண்டு விட்டது.

''பாப்பா! போனதும் கடிதாசு போடு!'' என்று அத்தை அம்மாள் பவானியைக் கடைசியாக ஒரு தடவை கட்டிக் கொண்டு கதறினாள்.

இரண்டு பக்கமும் செக்கச் செவேலென சிவந்த மண் பூமியைக் கொண்ட சேலம் ரோட்டின்மீது வேகமாக மின்னுரை நோக்கிக் காரை விட்டுச் சென்ற சுந்தரவதனம் நடுவில், பக்கத்தில் உட்கார்ந்திருந்த தமது புது மனைவியைத் திரும்பிப் பார்த்தார். விம்மி விம்மி அவள் முகம் சிவக்க அழுதுகொண்டிருந்தாள்.

''பவானி! அப்பா, அத்தை முதலியவர்களிடமிருந்து உன்னைப் பிரித்துக்கொண்டு வந்துவிட்டேன் அல்லவா?'' என்று அன்புடன் அவள் காதருகில் குனிந்து கேட்டார் சுந்தரவதனம்.

''உங்களோடு எப்பொழுதும் இருக்க அழைத்துப் போகிறீர்களே!'' என்று பவானி பதில் அளித்துவிட்டுத் தனது மிருதுவான கன்னம் அவர் தோள்மீது படும்படி சாய்ந்து கொண்டாள்.

இதையெல்லாம் நினைத்துக்கொண்ட பவானியின் கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் பொங்கிக் கன்னங்களின்மீது வழிந்தது.

தமது ஆசை மனைவியின் கண்களில் திடீரென நீர் நிறைவதைக் கண்ட சுந்தரவதனம் திடுக்கிட்டு ''பவானி! இதென்ன, ஏன் அழுகிறாய்''? என்று கேட்ட வண்ணம் அருகில் நெருங்கினார்.

''பூஞ்சோலையை விட்டு வந்து ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டதே. அத்தை, அப்பா எல்லோரும் எப்படி இருக்கிறார்களோ என்று நினைத்துக் கொண்டேன். அவ்வளவுதான்!,' என்று பவானி வெட்கத்துடன் கூறி, கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

''சீ! இதற்காகவா அழுவது; சின்னக் குழந்தையா நீ! வேண்டுமென்றால் ஒருநாள் பூஞ்சோலைக்குப் போய்விட்டு வந்தால் போச்சு, இவ்வளவுதானே?'' என்று சிரித்துக் கொண்டே அவர் அவளுடைய முகவாய்க்கட்டையை நிமிர்த்தினார்.

சங்கீதக் கச்சேரியிலிருந்து திரும்பி வந்த அவர் இரவு போஜனத்திற்குப் பிறகு ஹாலில் தனியாக உட்கார்ந்து



கொண்டு வைத்தியப் புஸ்தகமொன்றை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பின்னால் வந்து நின்ற பவானி தனது மென்மையான கரங்களை அவருடைய தோள்மீது வைத்துக்கொண்டு ''உங்களிடம் ஒரு வார்த்தை'' என்று காதருகில் கொஞ்சினாள்.

''என்ன வேண்டும்?'' என்று சுந்தரவதனம் கேட்பதற்குள் பவானி ''நமது பெண் ராதா இருக்கிறாளே அவளை நீங்கள் இங்கே கொண்டுவர வேண்டும். தாயார் நான் இருக்கும்போது அவளை பாட்டியார் வீட்டில் இனியும் தங்க அனுமதிப்பது தகாது'' என்றாள்.

சுந்தரவதனத்தின் முகத்தில் கவலைத் திரைகள் திடீரென்று தோன்றின. அவர் புஸ்தகத்தைக் கீழே போட்டுவிட்டு ''பவானி! அந்தப் பெண் இங்கே வந்தால் உனக்கு இடைஞ்சலாக இருக்காதா?'' என்று சாந்தமாகக் கேட்டார்.

''என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நான் தாயின் அன்பை அனுபவித்ததில்லை. அதனால் தாயற்ற ராதாவிற்குத் தாயாராயிருக்க நான் முன் வந்திருக்கிறேன். என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? கட்டாயம் ராதா நம்மிடந்தான் இருக்கவேண்டும்'' என்று பவானி வற்புறுத்திக் கூறினாள்.

''பவானி, என் வாழ்க்கையையே நீ சுவர்க்கமாக மாற்றிவிட்டாய். இந்த இன்பம் என்றும் நிலைத்திருக்குமா என்று என் மனம் என்னவோ நடுங்குகிறது'' என்று உணர்ச்சியுடன் கூறிக்கொண்டு தமது தோள்மீதிருந்த அவளுடைய கரங்கள் எங்கே தம்மைவிட்டுப் போய்விடுமோ எனப்பயந்தவர்போல் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் சுந்தரவதனம்.

## 20

அன்று புது வருஷம் பிறந்த நாள். காலையிலே எழுந்து ஸ்நானம் செய்துவிட்டுச் சமையலறைக்குள் புகுந்த வனஜாவிற்கு வேலை சரியாக இருந்தது.

கொஞ்ச நாட்களாகவே அவளுக்கு தனது சக்தி குறைந்து வருவதைப்போன்ற ஒரு உணர்ச்சி தோன்றிக் கொண்டிருந்தது. ''மனதில் சந்தோஷம் இருந்தால்தானே உடம்பிலே சக்தியிருக்கும்?'' என்று அசட்டையாக இருந்தாள் அவள். வனஜா ஷண்முகத்திற்கு இதுவரை குறைந்தது ஆறு கடிதங்கள் எழுதிவிட்டாள். ஒன்றுக்காவது அவனிடமிருந்து பதில் வரவில்லையென்றால் மனதில் எப்படி உற்சாகம் ஏற்படும்? ''உடம்பு எக்கேடும் கெட்டுப் போகட்டும். இப்படிப்பட்ட சீர்கெட்ட ஜன்மங்கள் எதற்கு உயிருடன் இருக்கவேண்டும்?'' என்று அலட்சியமாக இருந்து விட்டாள்.

வனஜா தன் வீட்டில் ஒரு சன்யாசினி போன்று இருப்பதைக் கவனித்த முத்துப்பிள்ளையின் மனம் பாகாய்க் கரைந்தது. பாவம், தாய் தந்தையற்ற பெண் தன் மகனைக் கட்டிக்கொண்டாவது சுகப்படுவாள் என்று எண்ணி முத்துப்பிள்ளை செய்த அசட்டுக் காரியத்தினால் அவள் வாழ்க்கை இன்னும் துன்ப மயமாகி விட்டதே!

தன் மகனை நினைத்துக்கொண்ட போதெல்லாம் முத்துப்பிள்ளைக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ''அந்தப் படுபாவிப்பயலை நினைத்துக் கொண்டல்லவா இந்த பெண் இப்படி இளைத்துத் துரும்பாகிக் கொண்டு வருகிறாள்! ஒரு பூ வைத்துக் கொள்கிறதா இந்தப் பெண்! ஒரு அலங்காரமுண்டா? ஒன்றுமே இச்சை கொள்ளாதபடி மனதை ஒடித்துவிட்டுப் போய்விட்டானே ஷண்முகம்!'' என்று முத்துப்பிள்ளை எண்ணி எண்ணித் தமது மருமகளுக்காக மனம் புண்ணானார். தமது கவலைகளைக் கொஞ்சம் மறந்திருக்க மறுபடியும் 'குடும்ப வைத்தியனை'க் கையில் எடுத்துக் கொண்டார்.

அபிராமி அம்மாளோ வனஜாவிற்குக் கல்யாணம் ஆனதிலிருந்து, அடுப்பங்கரைப் பக்கம் போவதை நிறுத்திக் கொண்டு விட்டாள். காலையில் ஸ்நானம் செய்துவிட்டு மரகதவேலனுக்கு விளக்கேற்றி வைப்பாள். பிறகு பகல்



போஜனத்தை இரண்டே வாயில் போட்டுக்கொண்டு, கோடி வீட்டுக் குப்பம்மாள் கிரகத்தின் பக்கம் நடையைக் கட்டினால் விளக்கு வைக்கும் பொழுதுதான் வீடு திரும்புவாள். வீட்டிலே வனஜாவைப் பார்த்தால் அவள் மனம் கஷ்டப்படுகிறதாம். எங்கேயாவது சற்றுக் கவலைகளை மறந்து இருக்கலாமேயென்று வெளியே போய் வருவதாக அவள் சாக்கு.

காலை, ஐந்து மணிக்கு எழுந்திருந்தால் வனஜாவிற்கு வீட்டிலிருக்கும் சகலவிதமான வேலைகளையும் செய்துவிட்டு ஓய்ச்சல் மிகுதியால் இரவு கீழே தலையை சாய்ப்பதற்குள் மணி பதினொன்றாகிவிடும். கொஞ்சம்கூட ஓய்வின்றி அந்தக் குடும்பத்திற்கு உழைத்துப் போட்டு அவள் ஓடாகிப் போய்விட்டாள்.

வருஷப் பிறப்பிற்காக உள்ளே அடுப்பில் வடையைச் சுட்டுக்கொண்டிருந்த வனஜா யோசனையில் மூழ்கிவிட்டாள். ''எத்தனை கடிதங்கள் போட்டேன்! பதிலே போடவில்லையே அவர். ஏன் அப்படி மனம் கல்லாகி இருக்கிறார்? ஒரு சமயம் அங்கு வேறு யாராவது ஒரு பெண் அவருடைய மனதைக் கவர்ந்துவிட்டாளோ?'' என்று பலவாறு யோசித்து வனஜா மனம் நொந்து போனாள்.

அதே சமயம் கூடத்தில் தலையை ஆற்றிக்கொண்டு நின்ற அபிராமி அம்மாள் குப்பம்மாளுடன் தொண்டை கிழியப் பேசிக் கொண்டிருந்தாள்.

''அதென்னவோ எழவு! என் கழுத்தையறுக்கத்தான் வந்திருக்கு அந்தப் பெண். ஒரு பேச்சுக் கேட்டாத்தானே? இல்லாதவன் வீடா இது? சோறு சாப்பிடறதை யாராவது கைபிடிக்கிறாங்களா, புருஷன் தன்னை திரும்பிப் பார்க்க மாட்டேங்கறானுட்டு சோறு வேளா வேளைக்குச் சாப்பிடாமல் பட்டினி கிடந்தால் இந்த கருமாந்திரங்களுக்கு நான் என்ன செய்யட்டும்'' என்று தலையில் அடித்துக்கொண்டு வெடுவெடுத்தாள் அபிராமி அம்மாள்.

''அதென்ன விசித்திரமோடி உன் மருமகள் விசயம். நாளுக்கு நாள் நானுந்தான் பார்த்துகிட்டு வரனே. ஒரே முட்டா வெளேர்னு பாச்சைக் குஞ்சாட்டமா வெளுத்துக் கொண்டு வாராளே அவள்! என்ன வியாதியோ தெரியலை. எந்த வைத்தியர் கிட்டயாவது கையைக் காட்டித் தொலை'' குப்பம்மாள் கவலையுடன் சொன்னாள்.

''மனசு வியாதிக்கு மருந்து என்ன தர முடியும்? எதாச்சும் அவருகிட்ட சொல்லலாமின்னா, அவர் நாயாட்டம் விழுகிறார். இந்த பொண்ணு நம்ப சொன்ன பேச்சைக் கேட்கிறதில்லை. பையனோ எனக்குக் கடிதாசு போடறானே ஒழிய, அவளுக்காவது சரி, அவன் அப்பாவுக்காவது சரி, கடிதாசு போடறதில்லை. போன வெள்ளிக்கிழமை கூட ஒரு தபால் வந்தது. அவன் சௌக்கியமாய் இருக்கிறானாம். புளியங்காய்க்குள்ளே புளிப்பைப் புகுத்த முடியுமா? அவனா பெண்டாட்டியைப் பத்தி எழுதாதபோது நான் எதாச்சும் எழுதி வச்சா, அவன் எனக்கு கடிதாசு எழுதறதையும் நிறுத்திக் கொள்ளுவானே! தானே விட்டுப் பிடிச்சா சரியாகி விடுமின்னு நான் சும்மா இருக்கிறேன். இது தெரியறதா உலகத்திற்கு! மருமகளுக்கும் மகனுக்கும் நடுவே நான் புகுந்து அவர்களைச் சேரவொட்டாமே அடிக்கிறேன்னு அது நினைக்குது! என் தலை விதியம்மா, இந்த கண்றாவியை எல்லாம் பார்த்துக்கிட்டிருக்க'' என்று அலுத்துக்கொண்டே அபிராமி அம்மாள் பெருமூச்சு விட்டாள்.

''உனக்கு உன் பிள்ளை கஷ்டம். எனக்கு என் மகன் கஷ்டம். எங்கே போனாலும் இதே ரோதனைதான், போ. என் மகன் மேலே ஏகப்பட்ட புகார் வந்து கிடக்கிறதாம். இந்த ஊர் சுத்த பொறாமைக்காரப் பயல்க ஊரு. என் மகன் போஸ்மாஸ்டர் வேலை பார்க்கறது பல பேருக்கு பிடிக்கலை. என்னமோ காயிதங்களைக் கிழிச்சி போட்டு விடுகிறான்னுட்டும் அவன் மேலே ரங்கப்பிள்ளை மகன் பொட்டையன் புகார் எழுதிப் போட்டானாம். அதுக்கு மேல் ஆபீசு துரைக்கிட்டயிருந்து என் மகனுக்குப் பெரிய கடிதாசு ஒண்ணு வந்திருக்கு. அதைப் பார்த்த



பையன் இரண்டு நாளா அசந்துபோய் கிடக்கான். என் பிள்ளை ஒருத்தர் விசயத்திலும் தலையிடமாட்டான். அவனைப்பத்தி இப்படியெல்லாம் அவதூறு எழுதி போட்டிருக்காங்க இந்த ஊர்க்காரப் பயல்கள்'' என்று குப்பம்மாள் புலம்பினாள்.

சமையலறையிலிருந்த வண்ணம் கூடத்தில் நடந்த சம்பாஷணையைக் கேட்ட வனஜா திடுக்கிட்டாள்—ஒரு சமயம், தான் அத்தனை நாட்களாகப் போட்ட கடிதங்கள் ஒன்றும் ஷண்முகத்திற்குப் போய்ச் சேரவில்லையோ என்னவோ! 'பொன்னம்பலம் பிறர் வீட்டுக் கடிதங்களைப் பிரித்துப் படிக்கிறான்' என்ற புகார் ஊரில் தீவிரமாகப் பரவி இருந்தது. ஒரு சமயம் அவன்தான் அவளுடைய கடிதங்களை எல்லாம் படித்துக் கிழித்து விட்டானோ?—

''செய்திருப்பான், தடியன். அவன், அவள் போஸ்டாபீஸ் சென்ற பொழுதெல்லாம் எப்படி விறைத்துப் பார்ப்பான்! பிறன் மனைவியை அப்படி விழித்துப் பார்ப்பதில் என்ன லாபம்? அதேபோல் அவன் அப்படியே அவரிடமிருந்து வந்த கடிதங்களைப் பட்டுவாடா பண்ணாமல் தானே எடுத்துக் கொண்டு விட்டான் போலிருக்கிறது! பாவி, அப்படிச் செய்திருந்தால் அவன் உருப்படுவானா? இதுமாதிரி திரிசமக்காரர்களை யார் கேட்பது? தெய்வந்தான் கேட்க வேண்டும்'' என்று வனஜா எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். அவள் மனம் தீயிலிட்ட புழுப்போல் பல விஷயங்களை எண்ணித் துடித்துக் கொண்டிருந்தது.

வெளியே போய்விட்டு அப்பொழுதுதான் முத்துப் பிள்ளை வீடு திரும்பினார். குப்பம்மாள் அவரைக் கண்டதும் சம்பாஷணையை முடித்துக்கொண்டு தன் வீட்டிற்கு நடையைக் கட்டினாள்.

''வனஜா! மாமன் வந்திருக்கிறார். கால் கழுவ ஜலங் கொண்டு வந்து கொடு'' என்று அதிகாரமாக உத்தர விட்டாள் அபிராமி அம்மாள் கூடத்திலிருந்த வண்ணம்.

வீட்டில் ஒரு சொட்டு ஜலம் இல்லை. இனிமேல் கிணற்றிலிருந்துதான் இறைத்துக்கொண்டு வரவேண்டும்

என்பதைக் கண்ட வனஜா, கை வேலைகளை அப்படியே போட்டுவிட்டுப் பெரிய குடமொன்றை எடுத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் ஓடினாள்.

சித்திரை மாதத்தின் வரவை அறிவிப்பதுபோல் தோட்டத்து வேப்பமரங்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. எங்கே பார்த்தாலும் பசுமையான தோற்றத்துடன் தோட்டம் பார்க்க ரம்யமாக இருந்தது.

கொட்டிலில் கட்டியிருந்த கன்றுக்குட்டி மணி வனஜாவின் காலடி ஓசையைக் கேட்டதும் துள்ளிக் குதித்துக்கொண்டு உற்சாகத்துடன் கத்தியது. ''உனக்குக் கொம்பு முளைக்க ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சது; யாரை முட்டலாமின்னு துருதுருன்னு அலையறையே, போக்கிரிக் கழுதை!'' என்று கன்றுக்குட்டியின் முதுகை செல்லமாகத் தடவிக் கொடுத்துக் கொண்டே வனஜா தான் வந்த வேலையை மறந்து அங்கே நின்றாள்.

தோட்டத்து மூலையில் வேப்பங்கன்று ஒன்றின்மீது படர்ந்துகொண்டிருந்த கொடி சம்பங்கி, புஷ்பக்கொத்துக் களைத் தாங்கிக்கொண்டு நிற்பதைக் கண்ட அவள், ''அத்தான் வைத்துப் போன அந்தக் கொடிகூடப் பூக்க ஆரம்பித்து விட்டது!'' என்று எண்ணமிட்டுக் கொண்டு அப்படியே நின்றுவிட்டாள்.

''வனஜா அடுப்பு எண்ணெய் காய்ந்து போகுதே!'' என்ற மாமியின் குரல் அவளுடைய ஸ்வப்பனத்தைக் கலைத்தது.

பரபரப்பாக ஒரு குடம் ஜலத்தை கிணற்றிலிருந்து இறைத்து இடுப்பில் வைத்துக் கொண்டு உள்ளே ஓடி வந்தாள்.

அவளுடைய கால்கள் தள்ளாடின. இதென்ன வேடிக்கை. உலகமே சுற்றுவதைப் போலல்லவா இருக்கிறது! இடுப்பிலே குடத்துடன் வனஜா கூடத்தை மிதித்தவள் திடீரென்று கீழே சாய்ந்து விட்டாள்.



''ஐயோ பாவிப் பெண்ணே! குடத்தைப் போட்டு நசுக்கிவிட்டாயே!...'' என்று அபிராமி அம்மாள் அலறிக் கொண்டு ஓடி வந்தாள்.

''குடமாம் குடம்! அது போகட்டும். அந்தப் பெண்ணைத் தூக்கு முதல்லே. அதுக்கு எதாவது காயம் பட்டதான்னு சட்டுனு பாரு'' என்று ஆத்திரமாக கத்திக் கொண்டு முத்துப்பிள்ளை தாது நாற்காலியை விட்டுத் துள்ளி எழுந்தார்.

## 21

லேடிஸ் கிளப்பிற்கும், கிராமத்து ஆற்றங்கரைக்கும் வித்தியாசம் அதிகம் ஒன்றுமில்லையென்ற உண்மையை மின்னூர் லேடிஸ் கிளப்பின் அங்கத்தினராகச் சேர்ந்த மூன்றாவது நாளே பவானி கண்டு பிடித்துவிட்டாள். நான்கு ஸ்திரீகள் சேர்ந்துவிட்டால் போதும்; அந்த இடம் வம்பர் சபையாக மாறிவிடும். படித்த பெண்கள் வம்பு பேச மாட்டார்கள் என்பதாகச் சொல்ல முடியாது. அவர்கள் கூடினால் பேசும் வம்புகள், ஆற்றங்கரை அம்மாமிகளால் கூடப் பேச முடியாது. அவ்வளவு விசித்திரமாக இருக்கும்.

மின்னூர் லேடீஸ் கிளப்பிற்கு விஜயம் செய்த ஸ்திரீகள் நானாவிதமானவர்கள். ரிடையர்டு ஆபீஸர்களின் மனைவிகள், படித்துக் கொண்டிருக்கும் கலாசாலை மாணவிகள், நாகரிகத்திற்கு வழிகாட்டி நிற்கும் பெரிய மனிதர்கள் வீட்டு வேலையற்ற பெண்மணிகள் முதலியவர்களே!

பவானி லேடீஸ் கிளப்பில் மெம்பராகச் சேர்ந்த கொஞ்ச காலத்திற்குள் அதையே வெறுக்கும்படியான சம்பவம் ஒன்று நடந்தது.

அப்போது வந்திருந்த வளையல்களைப்பற்றியும் மரகதக் கலர் புடவைகளைப் பற்றியும் பேசித் தீர்த்துவிட்டு மின்னூர் ஸ்திரீகள் புதிதாக வந்து சேரும் அங்கத்தினருடைய குடும்ப விஷயங்களைப்பற்றி வம்பளந்தார்கள். அன்று அவர்கள் பவானியைப்பற்றித் தமக்குத் தோன்றிய

அபிப்பிராயங்களை, அவள் அடுத்த அறையில் உட்கார்ந்து கொண்டு பத்திரிகையொன்றைப் படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அறியாமல் உரத்த குரலில் வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''என்னவோ நானுந்தான் பார்த்திருக்கிறேன் பெண்களை! டாக்டர் சுந்தரவதனத்தின் மனைவியைப் போன்ற கர்வியைக் கண்டதே இல்லை. அப்படி அவள் நம்மைவிட என்ன விதத்தில் உயர்ந்தவள்? லேடீஸ் கிளப்பிற்குத்தான் வருகிறாளே, நம்மிடம் முகம் கொடுத்து பேசுகிறாளா?'' என்று மிஸஸ் சரளா உரத்த குரலில் பவானியைப் பற்றிய தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

''நாமெல்லோரும் வம்படித்துக் காலங் கழிப்பவர்கள் என்பது அவள் எண்ணம். அதனால்தான் இத்தனை நாட்களாகக் கிளப் மெம்பராகக் கூடச் சேர மறுத்து விட்டாளாம்'' என்று நாராயணி கூறினாள்.

''அதுதான் போலிருக்கிறது அவள் எண்ணம். இங்கே வந்தால் நம்முடன் கலந்து பேசுவதே கிடையாது'' என்று காந்தாமணி பி.ஏ. பல்லைக் கடித்தாள்.

''அவள்கூட ஒரு பெண் வருகிறதே அது யாரடி?'' என்று கவலையுடன் விசாரித்தாள் ராஜம்.

''அதுவா! அதுதான் அவளுடைய மூத்தாள் பெண்ணாம். கன்னங்கரேலென்று அனலுக்கு அபிஷேகம் பண்ணினாப் போலிருக்கிறது அதன் நிறம்'' என்று முடித்தாள் வைதேகி ராமசுப்பன்.

''டாக்டர் சுந்தரவதனத்தின் இரண்டாவதுமனைவியா பவானி? இதென்ன கூத்து? எனக்கு இந்தச் சங்கதியே தெரியாதே! அவருக்கு இன்னும் கல்யாணமே ஆகலேன்னு நான் நினைத்துக் கொண்டிருந்தேன்?'' என்று ஆச்சரியப்பட்டாள் மிஸஸ் சோணாசலம்.

''அவர் முதல் மனைவி இந்த ஊரில்தானே செத்துப் போனா! உனக்குத் தெரியாது. நீ அப்ப இங்கில்லை. அடுத்த வருஷந்தான் உங்க வீட்டுக்காரர் இங்கே



வேலையாக வந்தார். உனக்கெப்படி அதைப்பற்றித் தெரியும்? பவானியை டாக்டர் இந்த நர்ஸிங்ஹோமில்தான் பிடித்தாராம்'' என்று குறும்புத்தனமாக பிரகுஜா கூறிச் சிரித்தாள்.

''ஏன் பார்ப்பதற்கு பவானி ரொம்ப அழகாயிருக்கிறாளே. பி.ஏ. பட்டம் பெற்றவளாம். லக்ஷாதிபதியின் ஒரே பெண்ணாம். அவளுக்கு இருக்கிற பணத்திற்கு ஒரு பெரிய ஐ.ஸி.எஸ். மாப்பிள்ளையாகப் பிடித்திருக்கலாமே'' என்று சந்தேகப் பிராணியான மிஸஸ் சாம்பசிவம் கேட்டாள்.

''நான் நினைக்கிறேன், அப்பா பெரிய லக்ஷாதிபதி என்பதெல்லாம் சுத்த ஹம்பக்காக இருக்கும். அவர் ஒரு இன்ஸால்வெண்டு பேர்வழி போலிருக்கு. படிக்கிறேன் படிக்கிறேன்னுட்டு இந்தப்பெண் ஏதாவது தன் மேலே கொஞ்சம் கதைகள் வாங்கிக் கட்டிக்கொண்டிருப்பாள். எவன் தலையிலாவது கட்டிவிட்டால் போதுமென்று அவர் அப்பா ஏமாந்த சோணகிரியான டாக்டர் தலையில் கட்டி விட்டிருப்பார். இல்லாவிட்டால் ஒரு படித்த பெண், கொஞ்சம் அழகானவள், பணக்காரி, இரண்டாந்தாரமாக ஒரு மனிதனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாள் என்றால் நம்ப முடியுமா?'' என்று ஒரு போடு போட்டாள் முத்துமணி தேவி.

''அப்படித்தான் இருக்கும். இவள்மேல் ஏதாவது கோளாறு இல்லாமலிருந்தால் மூத்தாள் பெண் ஒருத்தி இருக்கையிலே இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் படுவாளா?'' என்று சிரித்தாள் காமாக்ஷி.

பவானிக்கு அதற்குமேல் அந்த வம்பைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. கையில் பிடித்துக் கொண்டிருந்த பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டுப் பதைபதைக்கும் மனத்துடன் அவ்விடத்தைவிட்டு வெளியே கிளம்பினாள்.

தங்களைத் தாண்டிச் சென்ற பவானியைக் கண்ட அந்த வம்பிகள் திடீரென்று தங்கள் சம்பாஷணையை மாற்றிக் கொண்டார்கள்.

''ஒரு சமயம் நாம் பேசினது அவள் காதில் விழுந்து விட்டதோ என்னவோ?'' என்று சந்தேகத்துடன் பயந்து கொண்டே கேட்டாள் மிஸஸ் சாம்பசிவம்.

''விழட்டுமே! நமக்குத் தோணினதைத்தானே சொன்னோம்? எங்கே அவள் மட்டும் என்னிடம் ஏதாவது கேட்கட்டும்? எனக்குச் சரியாகப் பதில் கொடுக்கத் தெரியும்'' என்று அரட்டலாகக் கூறினாள் முத்துமணிதேவி.

அன்று வேலையை முடித்துக்கொண்டு வீடு நோக்கி ஆவலுடன் வந்த சுந்தரவதனம் தனது மனைவியின் சப்தத்தையே வீட்டில் காணாததால் ''அம்மா! அவள் எங்கே?'' என்று தாயாரைக் கேட்டார்.

லேடீஸ் கிளப்பிலிருந்து வந்த தனது மருமகள் முகம் சிவந்தவளாய் மாடிப்படியில் தடதடவென்று ஏறி ஓடுவதைக் கண்ட கனகவல்லி அம்மாள் அதுசமயம் பவானியிடம் என்ன விஷயமென்று கேட்டுத் தெரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. ஆகவே, ''அவள் மாடியில் இருப்பாள்'' என்று ஒரு வார்த்தையில் தனது பதிலை முடித்துக் கொண்டாள்.

மாடி அறையை அடைந்த சுந்தரவதனம் அறையை இருள் கவிழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு, ''இன்னுமா விளக்கேற்றவில்லை?'' என்று கேட்ட வண்ணம் மின்சார விளக்கின் 'ஸ்விச்'சைத் தட்டிவிட்டார். பளிச்சென்று கிளம்பிய விளக்கின் ஒளியில் அவர் கண்ட காட்சி அவரை திடுக்கிடச் செய்தது. பவானி கட்டிலின்மீது சுருண்டு படுத்துக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தாள்.

''பவானி! உனக்கென்ன?'' என்று பதறிக்கொண்டு அவள் அருகில் போய் உட்கார்ந்து கொண்டார் சுந்தரவதனம்.

பவானி அவரைக் கண்டதும் இன்னும் பலமாக விம்மினாள். மிகவும் கெஞ்சிக் கேட்ட பிறகுதான் பவானி அழுவதன் காரணம் அவருக்கு விளங்கியது. லேடீஸ் கிளப்பில் சில ஸ்திரீகள் பவானியைப்பற்றி அவதூறாகப் பேசியதுதான் அவளுடைய அழுகைக்குக் காரணம் என்பதைக் கேட்ட சுந்தரவதனம் கடகடவென்று சிரித்தார்.



''நீ என்னைக் காதலித்துத்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டாய். நீ நிஜமாகவே பெரிய லக்ஷாதிபதியின் ஏக புத்திரி என்ற விஷயம் அவர்களுக்குக் கட்டாயம் தெரியத்தான் வேண்டுமோ, பவானி'' என்று அவர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

''இல்லை. பிறகு அவர்கள் அப்படிச் சொல்கிறார்களே?'' என்று பவானி விம்மினாள்.

''நாளைக்குக் காலை மின்னூர் முழுவதும் பவானி என்னைக் காதலுக்காகத்தான் மணந்து கொண்டாள். என் மீது கொண்டிருக்கும் பிரேமை காரணமாக அவள் என்னுடைய பத்தாவதுமனைவியாக வேண்டுமானாலும் இருக்கத் தயார். நாங்கள் ஒருவரையொருவர் பரஸ்பரம் காதலிக்கின்றோம்'' என்று பறைசாற்றச் செய்கிறேன் சரிதானே!'' என்று அவர் பரிகாசமாகச் சொன்னதைக் கேட்ட பவானி கண்ணீரிடையே புன்னகை பூத்தாள்.

''அம்மா!'' என்று கூப்பிட்ட வண்ணம் ஒன்பது வயது ராதா உள்ளே அது சமயம் ஓடிவந்தாள். டாக்டர் சுந்தரவதனம் ஓடி அவளைத் தூக்கி வந்து மடியில் வைத்துக் கொண்டு, ''பவானி உன் பெண் உன்மீது பிரியமாயிருக்கிறாள் அல்லவா?'' என்று கேட்டார். அவர் முகத்தில் சந்தோஷம் பொங்கிக் கொண்டிருந்தது.

பவானியின் மனதில் அன்று பெரும் மாறுதல் ஏற்பட்டிருந்தது. ராதாவை அவளுடைய தாய் வழிப்பாட்டன் வீட்டிலிருந்து அழைத்து வரும்படி கணவனைத் தூண்டியவள் பவானிதான். குழந்தை வீட்டிற்கு வந்த அன்றிலிருந்து அவள் மனம் ஒருநிலையில் இல்லை. கணவன் மனது நோகக் கூடாது என்ற ஒரு எண்ணத்திற்காக மட்டும் பவானி ராதாவிடம் பிரியமாக நடந்து கொள்ள முயற்சித்தாள். என்னதான் ராதா சுந்தரவதனத்தின் பெண்ணாக இருந்தாலும் அவள் பவானியின் பெண் அல்லவே!

# 22

நாளாக நாளாக பவானிக்கு ராதாவின்மீது காரணமில்லாத ஒருவித துவேஷம் வளர்ந்து கொண்டே வந்தது. குழந்தையிடம் சுந்தரவதனம் அன்பு பாராட்டும் போதெல்லாம் பவானிக்கு மனதை என்னவோ செய்தது. ராதா மட்டும் இல்லாதிருந்தால் அவருடைய அன்பு முழுவதையும் பவானி தனியே அனுபவித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா?

ராதா பார்ப்பதற்குக் கறுப்பாகத்தான் இருந்தாள். மானைப்போல் மருண்டு கொண்டு அவள் தனது சித்தியை நோக்கும்போது ராதாவின் தாய் கோதையின் ஞாபகம் பவானிக்கு வந்துவிடும். தன் கணவன் சுந்தரவதனம் ராதாவின் தாயுடன் வாழ்ந்தார் அல்லவா என்று எண்ணிப் பொறாமைப்பட ஆரம்பித்து விட்டாள் பவானி.

அன்று 'லேடீஸ் கிளப்பு' ஸ்திரீகள் சொன்ன கடுஞ்சொற்கள் பவானியின் மனதை ராதாவின்பால் மேலும் கல்லாக்கி விட்டன. ''அம்மா!'' என்று ராதா தன்னை அழைத்தால் பவானிக்குச் கோபம் பொத்துக்கொண்டுவர ஆரம்பித்தது. 'அம்மாவாம்! அம்மா?' என்று பல்லைக் கடித்தாள் அவள்.

ராதா சின்னக் குழந்தையாய் இருந்தாலும் சித்தி முன்போல் தன்னிடம் அன்பாயிருப்பதில்லை என்பதை எப்படியோ தெரிந்து கொண்டு விட்டாள். சில சமயங்களில் அவளுக்கு பவானியின் முன்னால் வருவதற்கே பயம் ஏற்பட்டுவிடும். அது மாதிரி சந்தர்ப்பங்களில் அவள் தன் பாட்டி கனகவல்லி அம்மாளிடம் அடைக்கலமடைந்து விடுவாள்.

தகப்பன் வீட்டிற்கு வந்த புதிதில் சித்தி பவானியின் தோற்றத்தில் ராதா மயங்கிப் போயிருந்தாள். ஜிலுஜிலுவென்று உடைகள் உடுத்திக்கொண்டு வெளியே கிளம்பினால் ராதா குதூகலத்துடன் அவளைச் சுற்றிச் சுற்றி வருவாள். சித்தியின் பளபளப்பான பட்டுப்புடவையைத் தொட்டுப் பார்ப்பதில் அவளுக்கு ஒருவித ஆனந்தம்.



ஆனால் பவானி இப்பொழுதெல்லாம் ராதா தன்னை வந்து கட்டிக்கொள்வதை விரும்பவில்லை. ''புடவையைக் கசக்காதே போ? குளிக்கக்கூட இல்லை நீ, அழுக்கு மயமாயிருக்கியே!'' என்று எரிந்து விழுவதைக் காண ராதாவின் சின்னஞ் சிறு மனம் வேதனைப்பட்டது. அதனால் அவள் யாருடனாவது சிநேகிதம் பிடித்துக் கொள்ள ஆசைப்பட்டாள்.

''டிரைவர் எனக்கு ஒரு பூனைக்குட்டி வாங்கித் தா. பக்கத்து பங்களாவிலே சீனு வச்சிருக்கானே, அது போலவே வெள்ளைக்குட்டி வேணும்'' என்று ராதா ஒரு நாள் மோட்டார் டிரைவரிடம் கெஞ்சினாள்.

டிரைவருக்கு அந்த வீட்டில் வேலை ஒன்றுமே கிடையாது. காரைத் துடைத்து விட்டு அதைச் சுற்றி இரண்டொரு தடவை பார்க்க வேண்டியதுதான் அவன் வேலை. இந்த நிலைமையில் எஜமானிடம் சம்பள உயர்வு எப்படிக் கேட்கிறது என்று அவன் கலங்கிக் கொண்டிருந்தான். அது சமயம் ராதா தனக்குப் பூனைக்குட்டி வேண்டுமென்று கேட்கவே பெண் கேட்டதை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தால் எஜமான் தன்மீது சந்தோஷப்பட்டுக் கொள்வார் என்று எண்ணி மறுநாளே ராதாவிடம் ஒரு அழகிய வெள்ளைப் பூனைக் குட்டியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டான்!

பவானி வெளியே போகும் பொருட்டு தன்னை அழகாக உடுத்திக் கொண்டு கீழே வந்தவள், ஹால் சோபாக்களில் ஒன்றின்மீது ஒரு வெள்ளைப் பூனைக்குட்டி ஒய்யாரமாகப் படுத்துத் தூங்குவதைக் கண்டு திகைத்துப் போனாள்.

''யார் இதை இங்கே கொண்டு வந்தது?'' என்று அவள் ஒரு அதட்டல் போட்டாள். பூனைக்குட்டி, நாய்க்குட்டி முதலியவைகளைக் கண்டால் அவளுக்கு அத்தனை அருவருப்பு!

''டிரைவர் கொடுத்தான் அம்மா! வெள்ளைப் பூனைக் குட்டி!'' என்று சந்தோஷத்துடன் கூறிக்கொண்டு ராதா ஓடி வந்து அதை எடுத்துத் தன் மார்பில் அணைத்துக் கொண்டாள்.

''பூனைக்குட்டி, நாய்க்குட்டி இதற்கெல்லாமா சோபா கேட்கிறது! இந்தச் சனியனை முதல்லே கொண்டு போய் வெளியில் தொலை! உங்கப்பா வரட்டும், சொல்றேன். உனக்கு விளையாட வேறே பொம்மைகள் கிடைக்க வில்லை?'' என்று ராதாவை மிரட்டினாள் பவானி.

குழந்தையின் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. தனது பூனைக்குட்டியைப் பிரிய நேரிடுமே என்ற அதிர்ச்சியை அவளுடைய சிறிய இருதயம் தாங்க முடியவில்லை. ஆகவே அவள் பதில் சொல்லாமல் பூனைக்குட்டியை இறுக அணைத்துக்கொண்டு விம்மினாள்.

பவானிக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. அவள் ராதாவை என்ன சொல்லிவிட்டாள்? அதற்குள் அந்தப் பெண் பிரமாதமாக அழ ஆரம்பித்துவிட்டதே! மேலே வாய்பேசாது தனக்கிருந்த ஆத்திரத்தில் பூனைக் குட்டியின் காதைப் பிடித்துத் தூக்கி ஜன்னல் வழியே நிர்தாக்ஷண்யமாக வீசி எறிந்தாள் பவானி

அது ''மியாவ் மியாவ்'' என்று பயங்கரமாகக் கத்தி யது. ராதாவும் கூட ஓவென்று அலறினாள். அப்பொழுது உள்ளே நுழைந்த கனகவல்லி அம்மாள் ''பூனைக்குட்டி யைத் தூக்கி எறியக் கூடாது அம்மா. அது செத்து வைத் தால் மகா பாவம்!'' என்றாள் மெதுவான குரலில்.

பவானியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''பாவம் கீவம் என்பதெல்லாம் சுத்த மடத்தனம்!'' என்று வெடுக்கென்று மாமியாருக்குப் பதிலளித்துவிட்டு, அவள் மிடுக்காக வீட்டைவிட்டு வெளியேறினாள். கனகவல்லி அம்மாள் அதற்குமேல் பேசாது மௌனமாகத் திரும்பி விட்டாள்.

பூனைக்குட்டியைத் தூக்கியெறிந்த சம்பவத்திற்குப் பிறகு சில தினங்கள் சென்றன. ஒரு நாள் வானத்திடையே கருமேகங்கள் சூழ்ந்து கொண்டு பலத்த மழை பெய்வதற்கு அடிகோலிக் கொண்டிருந்தது. பவானிக்கு என்னவோ அன்று பகலில் தூக்கமே வரவில்லை. சமையற்காரன் காப்பி போட்டிருந்தாலாவது சாப்பிட்டுவிட்டு வெளியே போய்



வரலாமென்று எண்ணியவள் கீழே இறங்கி வந்து சமையற்கட்டிற்குள் நுழைந்தாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளைத் தூக்கி வாரிப்போட்டது.

வெண்கல உருளியில் காப்பிக்காக வைத்திருந்த பாலுக் குள் அந்தப் பூனைக் குட்டியின் தலையை முழுகவிட்டுக் கொண்டிருந்தாள் ராதா!

''மறுபடியும் பூனைக் குட்டியைக் கொண்டுவந்து விட்டியா, அது சாப்பிடவா பால் வாங்கி வைத்திருக்கு?'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு அதட்டினாள் பவானி.

அதில் பயந்துபோன குழந்தை உருளியைத் தட்டி விட்டாள். மடாரென அது கவிழ, பாலெல்லாம் தரையில் வழிந்தோடியது. அன்று காப்பியின் வாயில் மண் என்பதை உணர்ந்த பவானி, ஆத்திரம் தாங்காதவளாய் ''இனிமேல் இப்படி விஷமம் பண்ணாதே'' என்று மிரட்டிக்கொண்டே ராதாவின் கன்னத்தை திமிண்டினாள்.

''மாட்டேன். அம்மா! தெரியாமல் செய்துட்டேன்'' என்று ராதா தேம்பிக்கொண்டே பதிலளித்தாள்.

''உங்கப்பா வரட்டும். உன் உயிரை எடுக்கச் சொல் கிறேன். பூனைக்குட்டியைச் சமையலறைக்குள் கொண்டு வர உனக்கு அவ்வளவு துணிச்சலா?'' என்று பவானி பல்லைக் கடித்துக்கொண்டே ராதாவின் கன்னத்தில் ஒரு அறையும் வைத்துவிட்டாள்.

''ஹோ''வென்று ராதா வாய்விட்டு அலறுவதைக் காணச் சகியாத பவானி, ''மூச்சுவிட்டாயானால், தெரி யுமா சேதி! வாயை மூடு! கொலைசெய்து விட்டாப்போல் கத்தறியே தரித்திரமே!'' என்று விழித்துப் பார்த்தாள்.

ராதா பயம் மிகுந்தவளாய் உடனே வாயைக் கை யினால் பொத்திக்கொண்டு நடுக்கத்துடன் சித்தி முன்பு நின்றாள். பவானியை அந்தக் கோப நிலையில் அவள் அது வரை பார்த்ததில்லை யாகையால் அவள் பத்ரகாளித் தோற்றம் ராதாவைக் கிடுகிடுவென நடுங்க வைத்தது.

''என் கண்முன் நிற்காதே! எங்கேயாவது தொலை பீடை! என்று பவானி மேலும் அதட்டவே ராதா சமைய லறையை விட்டு வெளியேறினாள்.

பவானியின் கோபக்குரலைக் கேட்டுத் தூக்கத்தி லிருந்து விழித்துக் கொண்ட கனகவல்லி அம்மாள் ''என்ன சத்தம்?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை! உங்கள் பேத்தி காப்பிக்கு வைத் திருந்த பாலைக் கீழே கொட்டிவிட்டாள், அவ்வளவுதான்'' என்று சட்டெனப் பதிலளித்து விட்டு மாடியறைப் பக்கம் சென்றாள் பவானி.

பளீர் பளீர் என்ற மின்னல் ஒளியுடனும் திடுதிடு வென்ற இடியுடனும் மழை சோ என்று பொழிந்து கொண் டிருந்தது.

இரவு மணி ஒன்பதாகிவிட்டதனால் பவானி தன் கணவன் வருகைக்காகக் கீழே வந்தவள், கனகவல்லி அம்மாள் குழந்தை ராதாவைத் தேடிக் கொண்டிருப்பதைக் கண்டு பயந்தே போய்விட்டாள்.

''குழந்தையைக் காணோமே, சாப்பிடுவதற்காக அப்போ பிடித்துத்தேடுறேன்,'' என்று கனகவல்லி அம்மாள் கவலையுடன் கூறினாள். பவானி அதற்கு ஏதோ பதில் சொல்ல வாயைத் திறந்தாள். அதற்குள் சுந்தரவதனமே ஹாலுக்குள் நுழைந்துவிட்டார்.

கோட்டைக் கழற்றிக்கொண்டு சோபாவின்மீது சாய்ந்து கொண்ட அவர், ''பவானி! உன் பெண் சாப்பிட்டு விட்டாளா?'' என்று கேட்டார்.

பவானி குற்றவாளியைப்போல் விழித்துக்கொண்டு கனகவல்லி அம்மாளை நோக்கினாள்.

''குழந்தையை சாயங்காலம் பிடிச்சுக் காணோமப்பா'' என்று கனகவல்லி அம்மாள் மெதுவாக இழுத்தாற்போல் கூறினாள்.

''ராதாவைக் காணோமா? ஹூம்! இந்த மழையில் எங்கே போயிருப்பாள்?...பவானி! நீ குழந்தையை ஏதாவது சொன்னாயா?'' என்று அவர் பதறிக்கொண்டே கேட்டது பவானிக்குச் சுறுக்கென்று பட்டது.



அவள் நடந்ததை விடுவிடுவென்று கூறிவிட்டு ''உங்கள் பெண்ணை நான் கொன்று விடவில்லை. மிரட்டினேன். அவ்வளவுதான்!'' என்று வெடுக்கென பதிலளித்தாள்.

சுந்தரவதனம் திடுக்கிட்டுப் போனார். பவானியா அவரிடம் அப்படிப் பேசுகிறாள்?

''அம்மா, குழந்தையைத் தேட நீ இதுவரை முயற்சிக் கவேயில்லையா?'' என்று அவர் கவலை கலந்த குரலில் கேட்டபொழுது கனகவல்லி அம்மாள் ''பங்களா முழுவதும் தேடிவிட்டேன். இன்னும் வெளியே போய்த் தேடிவர சமையற்காரப் பையனையும் தோட்டக்காரனையும் அனுப்பி இருக்கிறேன்'' என்று முடித்தாள்.

சுந்தரவதனம் கையில் டார்ச்சு விளக்கொன்றை எடுத்துக் கொண்டு அவசரமாக வெளியே புறப்படுவதைக் கண்ட பவானி, தானும் ஒரு குடையை எடுத்துக்கொண்டு கூடவே கிளம்பினாள்.

''இந்த மழையில் நீ எங்கே வருகிறாய்?'' என்று அதட் டினார் சுந்தரவதனம். ''நானும் குழந்தையைத் தேட வரு கிறேன்'' என்று பிடிவாதமாக அவர் பின்னால் சென்றாள் அவள்.

கொட்டுகிற மழையில் தோட்டம் முழுவதும் தம்பதிகள் தேடிவிட்டனர். ராதாவைக் காணோம். பதைத்துப் போனாள் பவானி. நிமிஷத்திற்கு நிமிஷம் அவள் திகில் அதிகரித்துக்கொண்டே வந்தது.

கடைசியாக பங்களாவின் பின்புறம் வேண்டாத சாமான்கள் போட்டு வைக்கும் 'அவுட்ஹவு'ஸின் பக்கம் தேடிக்கொண்டுவந்த சுந்தரவதனம் கையிலிருந்த டார்ச்சை நாலாபுறமும் சுழற்றிப் பார்த்தார்.

அறையின் ஒரு மூலையில் அவர் கண்ட காட்சி மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. ராதா தன் பூனைக் குட்டியை அணைத்துக்கொண்டு ஈரத்தரையில் பழைய மோட்டார் டயர்களின் நடுவே சுருண்டு படுத்து அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தாள்.

ஓடிப்போய் அவளை வாரியணைத்துத் தூக்கிக் கொண்ட அவர், பவானியின் வரவிற்குக்கூடப் பார்க்காமல் ஒரே எட்டில் பங்களா ஹாலையடைந்தார்.

குழந்தையைத் தொட்டுப் பார்த்த கனகவல்லி அம்மாள், ''ஜுரம் அடிக்கிறாற்போல் இருக்கேயப்பா!'' என்று பதறிப் போய் கேட்டாள்.

''ஆமாம், அம்மா! ஏதாவது சுடச்சுடக் கொண்டுவா முதல்லே'' என்று கூறிக்கொண்டு சுந்தரவதனம் ராதாவின் நெற்றியை அன்புடன் வருடினார்.

பவானி ஈரப்புடவையுடன் அங்கே நின்றுகொண்டிருந்தாள். அவள் மனதில் பல உணர்ச்சி அலைகள் வீசிக் கொண்டிருந்தன. தன் பக்கமே கணவன் திரும்பாதது கண்டு அவள் மனம் கசந்தவளாய் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

நாட்கள் சென்றன. குழந்தை ராதாவிற்கு ஜுரம் மிகவும் வேகமாக அடித்தது. சுந்தரவதனம் குழந்தையருகில் உட்கார்ந்து கொண்டு இரவில் வெகுநேரம் கண்விழித்து சிசுருஷைகள் செய்வதைக் கண்டு பவானியின் மனம் தத்தளித்தது.

அன்று இரவு மணி மூன்றாகியும் சுந்தரவதனம் ராதாவின் பக்கத்திலேயே விழித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்ட பவானி மனம் தாளாமல் அங்கே வந்தாள். ''நீங்கள் போய்த் தூங்குங்கள். நாளைக்கு உங்களுக்குக் கேஸ்கள் வேறு கவனிக்க வேண்டுமே! நான் குழந்தையைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்று மிகவும் வினயமாய்ச் சொன்னாள்.

''குழந்தைக்கு சிசுருஷைகள் செய்ய வேண்டியது என் கடமை'' என்று அவர் சட்டென்று பதிலளித்ததைக் கேட்ட பவானிக்கு அழுகை வந்துவிட்டது.

''பாவி! உன்னால்தானே என் குழந்தைக்கு இப்படி ஜுரம் வந்துவிட்டது? ராக்ஷஸி! என் முன் நில்லாதே!'' என்று அவர் அவளை மனமாறத் திட்டியிருந்தால்கூட



பவானி பொறுத்துக் கொள்வாள். ''என் கடமை!'' என்று அவர் சொன்ன அந்த ஒரு வார்த்தை அவளைச் சித்திர வதை செய்துவிட்டது.

''என் குழந்தையாயிருந்தால் நான் அன்று மிரட்டியிருந்திருக்க மாட்டேனா? இவர்தானே இப்பொழுது என் கடமை உன் கடமை என்று வித்தியாசம் பாராட்டுகிறார்?'' என்று எண்ணிக் கோபமடைந்த பவானி நீர் நிறைந்த கண்களுடன் படுக்கையறைக்குள் சென்றுவிட்டாள்.

''ஏனப்பா அவளைக் கோபித்துக் கொள்கிறாய்? கர்ப்பிணியான பெண். மனசு கஷ்டப்பட ஒன்றும் சொல்லாதே'' என்று கனகவல்லி அம்மாள் பரிந்துகொண்டு பேசியதைக் கேட்ட சுந்தரவதனம், ''ராதாவின் தாயாரினால்தானே அம்மா எனக்கு இந்த வாழ்வெல்லாம்? அவள் பெண்ணிற்கு சிசுருஷை செய்ய வேண்டியது என் கடமை தானே?'' என்று கேட்டார்.

கனகவல்லி அம்மாள் மேலே பேசவில்லை. மாடியறையில் பவானி விம்மும் சப்தம் அவள் மனதைக் கலக்கியது. இனிமேல் இந்த வீட்டில் சந்தோஷம் என்பதில்லை என்று அறிவிப்பது போலிருந்தது பவானியின் விம்மல்.

## 23

அன்று சாயங்காலம் ஷண்முகம் சஞ்சலத்துடன் தனது அறையில் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தான்.

வனஜா அவனை நேசிக்கவில்லைஎன்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. இத்துடன் குறைந்தது எட்டு கடிதங்களாவது அவன் அவளுக்கு எழுதியிருப்பான். ''எதற்காவது அவள் பதில் போட்டாளா! தானே வீடு தேடி வரட்டும். இவனுக்குக் கடிதம் என்னத்திற்கு எழுதவேண்டும் என்ற எண்ணத்தினாலா மௌனமாய் இருக்கிறாள்? அல்லது, அவள் வேறு யாரையாவது...சீ, இதென்ன முட்டாள் தனம்! வனஜாவைப்பற்றி தப்பாக நினைப்பதே பாவம்'' என்றெல்லாம் எண்ணி மனம் புண்ணானான் ஷண்முகம்.

திடீரென்று நினைத்துக் கொண்டவன் அன்று ஒருநாள் படுக்கையடியில் ஒளித்து வைத்திருந்த அவனுடைய போட்டோவைப் புஸ்தகத்திற்குள்ளிருந்து எடுத்து உற்றுப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! போட்டோ நல்ல வேளையாகக் கழுத்தின் கீழ்தான் கிழிக்கப்பட்டிருந்தது. முகம் அப்படியே இருந்தது.

போட்டோவைக் கவனிக்க கவனிக்கத்தான் அவனுக்கு வனஜாவின் அழகு முழுவதும் விளங்கியது. 'குனிந்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும் குமிழ் சிரிப்பு'மாக வனஜா அதில் ஒரு தேவமங்கை போல விளங்கினாள்.

ஷண்முகம் நடந்த விஷயங்களைப்பற்றி யோசித்துப் பார்த்துவிட்டுச் சற்று அம்மானமடைந்தான். இந்த அழகு வனஜாவை விட்டா ஓடி வந்தேன்? முட்டாள்தனத்தினால் இத்தனை நாட்கள் வீணாக வாழ்க்கையைப் பாழ் அடித்துக் கொண்டு விட்டேனே! தெரியாத்தனத்தினால் அப்பாவின் விரோதத்தையுமல்லவா சம்பாதித்துக்கொண்டேன்! வனஜா மட்டும் என்னை நேசித்தால் அப்பாவை சமாதானப்படுத்தி விடுவது சுலபம். காலடியில் விழுந்தாவது அவர் மன்னிப்பை அடைந்து விடலாம். வனஜா நான் போட்ட கடிதமொன்றிற்கும் ஏன் பதிலே போடவில்லை என்று சிந்தித்துப் பெருமூச்சு விட்டான் அவன்.

எதையோ நினைத்துக் கொண்டவன் சட்டென்று அறைக் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே கிளம்பினான். நேரே அவன் கால்கள் வில்லியத்தின் கிரகத்திற்கு அவனை இழுத்துச் சென்றன.

''என் பெண்ணிற்கு வனஜா என்ற பெயரையே வைத்து விட்டேன். நேற்று வில்லியம் ஒரு நாய்க்குட்டி வாங்கி வந்தார். அதற்கும் வனஜா என்ற பெயரையே வைத்து அழைக்கப் போகிறேன். இங்கே வந்தீர்களானால் வனஜா என்ற பெயரைக் கேட்டு உங்கள் காது புளித்துப் போகும்! எங்கே திரும்பினாலும் வனஜா மயம் என்றாலாவது உங்கள் மனம் அவள்பால் இரக்கப்படும் என்றுதான்



செய்தேன்'' என்று பாரதி சிரித்துக்கொண்டே தன் பெண் குழந்தையைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டாள்.

''என்னாங்க பிரதர்! நானும் பாரதியும் எவ்வளவோ சொல்லியும் நீங்கள் உங்கள் மனைவியை அழைத்து வர மாட்டேன் என்கிறீர்கள் என்று வில்லியம் சொன்னதும் ஷண்முகத்திற்கு அழுகை வந்துவிட்டது.

''உங்கள் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கேட்டு என் கௌரவத்தைக் கூட விட்டு அவளுக்கு எட்டுக் கடிதங்கள் எழுதிவிட்டேன், பதிலே இல்லை. இன்னும் நான் என்ன செய்யட்டும்! பதில்கூடப்போடாமல் அவள் இருக்கும்போது நான் எப்படி லக்ஷ்மிபுரம் போக முடியும்? தப்பு என்னவோ என் பேரில்தான் இருக்கிறது. அதை உணர்ந்து நான் மன்னிப்பைக் கோருகிறேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படியான பரந்த குணம் அவளிடம் இல்லை. இனி அந்தப் பக்கம் நான் ஏன் போகிறேன்?'' என்று ஷண்முகம் துக்கத்துடன் சொன்னான்.

பாரதி மனம் இரங்கினவளாய், அந்தப் பெண் பதில் போடாததற்கு ஏதாவது காரணம் இருக்கும். எதற்கும் நீங்கள் நேரே போய் வருவதுதான் நல்லது'' என்றாள்.

''உங்கள் தாயாரிடமிருந்து கடிதங்கள் வருகின்றனவோ?'' என்று வில்லியம் கேட்டான்.

''என் தாயார் எழுதுகிறார்கள். அதில் மருமகளைத் தவிர ஊரில் நடக்கும் சகல விஷயங்களும் இருக்கின்றன'' என்று சலிப்பாக ஷண்முகம் பதிலளித்தான். அவன் முகம் வாடி வரண்டு போயிருந்தது.

பாரதிக்குக் கூட சற்று வனஜாமீது கோபந்தான் ஏற்பட்டது. அவளுக்காகப் பரிந்துகொண்டு அவள் ஷண்முகத்தைக் கடிதங்கள் எழுதச் சொன்னாள். பாவம், அவள் சொற்படி வனஜாவிற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க அவன் முயற்சித்தான். ஏன் வனஜா அதை உபயோகப் படுத்திக் கொள்ள முன் வரமாட்டேன் என்கிறாள்? இதையெல்லாம் யோசித்த அவள் ''உங்கள் தாயாருக்குத்தான் வனஜா

விஷயமாக ஒரு கடிதம் எழுதிப் போடுங்களேன். இதில் ஏதோ தவறு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது'' என்றாள்.

ஷண்முகத்திற்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ''உங்களுடைய பேச்சைக் கேட்டுத்தான் நான் என் கௌரவத்தை இழந்தேன். வனஜாவிற்கு அவ்வளவு கர்வம் இருந்தால் அங்கேயே இருக்கட்டும். இனி நான் கடிதமே எழுதப் போவதில்லை'' என்று உறுமினான்.

பாரதியின் மனம் மிகவும் கஷ்டப்பட்டது. வனஜா புருஷனுடன் வாழட்டும் என்று தான் செய்த முயற்சிகளில் ஒன்றும் பயன் ஏற்படவில்லையே என வருந்தினவளாய், ''வனஜா சிறு குழந்தை. தெரியாத்தனத்தினால் அசட்டுத் தனமாக நடந்து கொண்டாலும் நீங்கள்தான் மன்னித்து அவளை அழைத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும். அந்தப் பேதைப் பெண்ணிடம் கோபங்கொள்ளாதீர்கள்'' என்று ஷண்முகத்தைத் தேற்றினாள்.

மறுபடியும் ஹோட்டலுக்குத் திரும்பிய ஷண்முகத்தின் மனம் என்னவோ பாரதியின் வார்த்தைகளைக் கேட்டு சமாதானமடையவில்லை. விவரிக்க முடியாத சஞ்சலம் ஒன்று அவன் மனதைக் கவ்விக்கொண்டு அவனைத் தூங்க விடாமல் அடித்தது.

## 24

பவானி தொட்டிலில் தன் ஏழு மாதக் குழந்தை கண்ணனை இட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

கண்ணன் ஏழு மாதக் குழந்தையாக இருந்தாலும் 'கிண்' என்று இரண்டுவயது குழந்தைபோல் செழுமையாக இருந்தான். அப்பாவைப் போன்ற சிவந்த நிறம். கன்னத்திலும் முகத்திலும் வந்து கொஞ்சும் சுருண்ட தலைமயிர். பொக்கை வாயைக் காட்டிச் சிரிக்கும்போதெல்லாம் அம்மாவைப்போல் கன்னத்தில் ஒரு சிறு குழி விழும். போக்கிரிப்



பையன் எப்போதும் துறுதுறுவென்று காலையும் கையையும் ஆட்டிக்கொண்டு விளையாடிக் கொண்டிருப்பான்.

''சீ, கழுதை! உன்னைத் தூங்க வைக்க நான் பாடினால் சுவாரஸ்யமாக கேட்டுக் கொண்டிருக்கிறாயே. கண்ணைப் பார் கண்ணை, வண்டைப்போல'' என்று பவானி தனது தூங்காத பிள்ளையைத் தூக்கி அணைத்துக் கொண்டு கொஞ்சினாள்.

பகல் முழுவதும் மாட்டைப் போன்று உழைத்துவிட்டு மிக்க களைப்புடன் வீடு வந்த சுந்தரவதனத்திற்கு அன்றிரவு தமது மனைவியுடன் சினிமாவிற்குப் போக வேண்டுமென்று ஆசை தோன்றியது.

சாப்பிட்டுவிட்டு நேரே மாடியையடைந்த அவர், பவானி குழந்தையுடன் கொஞ்சிக் கொண்டிருப்பதைக் கண்டு சிரித்த வண்ணம், ''பவானி, 'ராயல் டாக்கீ'ஸில் இன்று ஒரு புதுப்படம் வந்திருக்கிறது. போய்ப் பார்க்கலாம், வராயா?'' என்று கூப்பிட்டார்.

''எனக்குத் தூக்கம் வருகிறது!'' என்று பவானி அவரைப் பாராமலேயே பதிலளித்தாள் சட்டென்று.

''எனக்காக ஒரு நாள் கொஞ்சம் தூக்கத்தை ஒத்திப் போடக் கூடாதா? அந்தப் படம் ரொம்ப நன்றாயிருக்கிறதென்று கேள்விப்பட்டேன். நீ பார்த்தால் கட்டாயம் சந்தோஷப்படுவாய் என்று நினைக்கிறேன்'' என்று கொஞ்சும் குரலில் அவள் அருகில் வந்தார்.

''குழந்தையை விட்டு நான் வெளியே வர இஷ்டப்படவில்லை. அவன் அழுவான்'' என்று பவானி மறுத்தாள்.

''அம்மாவிடம் குழந்தையை விட்டு விட்டு வந்தால் போச்சு, அம்மாவிற்குக் குழந்தையைப் பார்த்துக்கொள்ளத் தெரியாதா என்ன?'' என்று அவர் சற்று எரிச்சலுடனே கேட்டார்.

பவானிக்கு அவர் பேசியது பிடிக்கவில்லை. ''நான் இன்று வெளியே வரப்போவதில்லை'' என்று தீர்மானமாகக் கூறிக்கொண்டு கண்ணனை மார்புறத் தழுவிக் கொண்டாள்.

சுந்தரவதனம் பவானிக்குப் பதில் அளிக்கத் தெரியாமல் சஞ்சலத்துடன் முன்னும் பின்னும் உலாவினார். பவானி தன்னுடன் வெளியே வர மறுத்தது அன்றுதான் முதல் தடவையல்ல. அவள் கொஞ்ச நாட்களாகவே தன்னுடன் கொஞ்சம் மனஸ்தாபமாக நடந்து வருவதை அவர் கவனித்து வந்தார்.

ராதாவிற்கு உடம்பு அசௌக்கியமாக இருந்தபொழுது சுந்தரவதனம் பவானிமீது சற்று கோபமடைந்திருந்தார் என்பது என்னவோ உண்மைதான். அவளுக்குப் பயந்து கொண்டுதான் குழந்தை மழையில் ஓடி ஒளிந்து கொண்டு ஜுரத்தை வரவழைத்துக் கொண்டாள் என்பது அவர் அபிப்ராயம்.

ராதாவிற்கு உடம்பு கடவுள் புண்ணியத்தில் சரியாகி விட்டது. இராப் பகலாய் தமது மகளை அன்புடன் கவனித்து வந்த சுந்தரவதனம், அவள் சுகமடைந்ததும், முதலில் அவளைக் கொண்டுபோய் அவள் தாய்ப்பாட்டன் வீட்டில் விட்டு வந்தார். அதைக் கண்ட பவானி தன்னை அவமானப் படுத்துவதற்காக அவர் வேண்டுமென்றே செய்வதாகக் கோபமடைந்தவள், பிரசவிக்கும் சாக்கை வைத்துக் கொண்டு உடனே பிறந்தகம் சென்று விட்டாள்.

கண்ணன் பிறந்து நாலைந்து மாதங்கள் கழித்த பிறகு தான் அவள் திரும்ப மின்னூருக்கு வந்தாள். புக்ககம் வந்த பவானி, சுந்தரவதனத்திடம் எந்தச் சின்ன விஷயத்திற்கும் மனஸ்தாபப்பட ஆரம்பித்து விட்டாள்!

''உங்கள் பிள்ளையைப் பாருங்கள், அப்பாவைப்போல படிக்கப் போகிறேன் என்கிறான்'' என்று பவானி கண்ணனைக் கொஞ்சிக் கொண்டே சுந்தரவதனத்தைப் பார்த்துச் சிரிப்பாள்.

''எவ்வளவுதான் படித்திருந்தாலும் ஒரு ஸ்திரீ குழந்தையொன்றை அடைந்து விட்டால் எல்லோரையும் போலதான் நடந்து கொள்கிறாள். படிப்பிற்கும் தாய் என்ற உணர்ச்சிக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது போலிருக்கிறது! படித்த



பெண்கூடத் தன் குழந்தை என்று ஏற்பட்டுவிட்டால் அசட்டுப் பிசட்டென்று பேசிக் குலாவுகிறாள். வேடிக்கைதான் உலகம்'' என்று சுந்தரவதனம் வேதாந்தம் பேசுவார்.

பவானிக்கு கோபம் பொத்துக் கொண்டு வரும். ''படித்த பெண்கள் என்றால் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்க வேண்டுமாக்கும்?'' என்று அவள் தன் கணவனிடம் சண்டை போடுவாள்.

''குழந்தையின் மேலே என்ன பாருங்கள். சிகப்புப் புள்ளிகள் போல என்னமோ வந்திருக்கிறதே! அம்மையா!'' என்று கவலையுடன் அவள் கண்ணனைத் தன் புருஷனிடம் காண்பிப்பாள்.

''ஒன்றுமில்லை! கொசுக்கடி. பெரிய பிரமாதப்படுத்தாதே நீ இதற்கெல்லாம்'' என்று அவள் அறியாமைக்காகச் சிரிப்பார் அவர்.

''பெரிய பெரிய வியாதிகளைப் பார்த்துப் பழகின உங்கள் கண்களுக்கு இதெல்லாம் துச்சமாகத்தான் தோன்றும். குழந்தை நேற்று ராத்திரியெல்லாம் தூங்காமல் கத்தினது எனக்கல்லவா தெரியும்?'' என்று அவரைக் கோபித்துக் கொள்வாள்.

பொழுது விடிந்து அஸ்தமிக்கும்வரை அவள் கவனத்தைக் கண்ணன் கவர்ந்திருந்தான் என்பது என்னவோ உண்மைதான். இருந்தபோதிலும் ஏன் அவள் தன் கணவனிடமிருந்து அப்படி விலகிப் போக வேண்டும்? முன்போல் அவர் வீடு திரும்பும்வரை அவள் காத்திருப்பதில்லை. அவர் சாப்பிடும்போது பக்கத்திலிருந்து உபசரிப்பது கிடையாது. 'நர்ஸிங்ஹோமி'லிருந்து அவர் இரவு வீடு திரும்பும் பொழுது தனது மைந்தனை மார்புறத் தழுவிக்கொண்டு அவள் இன்ப நித்திரையிலாழ்ந்து கிடப்பாள்.

அவளுடைய மனமாற்றத்தின் காரணம் என்னவாகத்தான் இருக்கக்கூடும் என்று சிரித்துக்கொண்டே உலாவிக் கொண்டிருந்த அவர் திடீரென்று அவள் பக்கம் திரும்பி, ''பவானி, நீ இன்று என்னுடன் கட்டாயம் சினிமாவுக்கு

வரவேண்டும். நாம் இருவரும் தனித்து வெளியே போய் எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன'' என்று உத்தரவிடும் தோரணையில் சொன்னார்.

''ஏன், இன்று உங்களுடன் வெளியே வர அந்த 'நர்ஸ்' மறுத்துவிட்டாளோ?'' என்று பவானி எகத்தாள மாகக் கேட்டவண்ணம் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாள்.

சுந்தரவதனத்திற்கு விஷயம் ஒருவாறு விளங்கிவிட்டது. பவானி அவர் நடத்தையில் சந்தேகங்கொண்டு அவரிடம் மனஸ்தாபமாயிருக்கிறாள் என்று ஒரு வினாடியில் புரிந்து கொண்ட அவர் திகைப்புடன், ''எந்த நர்ஸ், பவானி?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

''ஒன்றுந் தெரியாதவர்போல் நடிக்க வேண்டாம். நீங்கள் நர்ஸ் மார்க்கரட்டுடன் சினேகமாக இருக்கிறீர்கள் என்பதைக் கடந்த இரண்டு மாதங்களாகவே அறிவேன்'' என்று பவானி கோபத்துடன் மொழிந்தாள்.

''பவானி நீ தப்பாக யாரோ உளறின கதையை வைத்துக் கொண்டு சந்தேகப்படுகிறாய் போலிருக்கிறது!'' என்று பதறிய வண்ணம் சுந்தரவதனம் தமது மனைவியின் அருகில் வந்தார்.

''நான் கண்கூடாகவே பார்த்தாகிவிட்டது. போன ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் அவளை உங்களுடைய காரில் பார்த்தேன். இந்த சமாசாரத்தைப்பற்றி நான் வெகுநாட்களாகக் கேள்விப்பட்டுக் கொண்டுதான் இருந்தேன். கண்ணாலேயே பார்த்த பிறகு என் சந்தேகம் தீர்ந்தது.

''பவானி, நான் சொல்வதைக் கேள் சற்றுப் பொறுமையுடன். எனக்கும் அந்த நர்ஸிற்கும் ஒரு விதமான பற்றுதலும் கிடையாது. அவள் அவசரக் கேஸ்களில் உதவி செய்வதில் மிகவும் கெட்டிக்காரி. அதனால்தான் வெளிக் கேஸ்களுக்கு அவளை நான் உதவிக்கு அழைத்துக்கொண்டு போவது வழக்கம்'' என்று அவர் கூறியதை பவானி சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளாமல், ''கேஸ்களுக்காக அவளை அழைத்துச் செல்லுகிறேன் என்று என் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவவேண்டாம். நீங்கள் சொல்லும் நொண்டிச் சமாதானங்களை நான் கேட்டுக் கொண்டு உங்களை இனி நம்பிக் கொண்டிருக்கப் போவதில்லை'' என்று சீறினாள்.



சுந்தரவதனத்திற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அனாவசியமாக பவானி தம்மீது வீண் பழியைச் சுமத்திவிட்டு, அதற்குத் தான் சொல்லும் சமாதானத்தையும் கேட்க மறுக்கிறாள் என்று வெறுப்படைந்த அவர், ''பவானி, வைத்தியத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கும் என்மீது நீ சந்தேகப்பட்டால் சாத்யப்படாது. ஸ்திரீ நோயாளிகளிடமும், நர்ஸ்களிடமும் தினம் பழகுகிற வைத்தியன் அவர்களிடமெல்லாம் மனதைப் பறிகொடுத்து விட்டான் என்று நினைத்தால் அதைப்போன்ற முட்டாள் தனம் வேறு ஒன்றும் இல்லை'' என்று கோபமாகப் பதில் அளித்தார்.

''உள்ளதைச் சொன்னால் உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்? நீங்கள் எனக்கு துரோகம் செய்கிறீர்கள் என்று நான் மனம் இடிந்து போய்விடப் போவதில்லை. சாதாரண ஸ்திரீகளைப்போல கணவன் அன்பை இன்னொரு ஸ்திரீ கவர்ந்துகொண்டு விட்டாளேயென்று நான் மூலையில் உட்கார்ந்துகொண்டு அழப்போவதில்லை. என் கண்ணன் என்னிடம் இருக்கும்வரை உங்களுடைய துரோக நடத்தை எனக்குத் துச்சந்தான். நீங்கள் வெளியே இஷ்டப்படி மனம் போனபடி ஸ்திரீகளுடன் உறவாடிவிட்டு திரும்பிவந்தால் பவானி உங்களை ஏற்றுக்கொள்வாள் என்று மட்டும் நினைக்க வேண்டாம்'' என்று பவானி ஆத்திரத்துடன் சுந்தரவதனத்தைப் பார்த்து வார்த்தைகளைக் கொட்டினாள்.

'உங்கள் துரோகத்தைக் கண்டு நான் சாதாரண ஸ்திரீயைப்போல் மூலையில் உட்கார்ந்து கொண்டு அழப் போவதில்லை' என்று அவள் வெளிக்கு மிடுக்காகக் கூறினாலும் அவள் கண்களில் கண்ணீர் நிரம்பிவிட்டது.

''பவானி, வீணாக நீ என்மேல் கொண்டிருக்கும் சந்தேகத்தால் மனம் போனபடி பேசுகிறாய். உன் பேச்சு என் மனதை எப்படிப் பாதிக்கிறதென்பதை நீ யோசிக்கவே யில்லை. இருந்தபோதிலும் உன்மேல் நான் கொண்டிருக்கும் அன்பிற்காக உன் கொடுமையான வார்த்தைகளை நான் மனதில் எடுத்துக்கொள்ளப் போவதில்லை'' என்று சாந்தமாகக் கூறியவண்ணம் அருகில் நெருங்கிய சுந்தர வதனம் அவளுடைய கரத்தைப் பிடித்தார்.

''இந்தப்பசப்பு வார்த்தைகளுக்கெல்லாம் நான் மயங்கி விடப் போவதில்லை! என்னை விடுங்கள். உங்கள் மனம் தனிமையில் தவித்தால் இருக்கவே இருக்கிறாள் அந்த நர்ஸ்! அழைத்துக் கொண்டு போங்கள் அவளை''. என்று எகத்தாளமாகச்சொல்லிவிட்டு, பவானி அவர் பிடியிலிருந்த கரத்தை வெடுக்கென்று விடுவித்துக் கொண்டாள்.

மனைவியின் மிடுக்கான பேச்சில் அவமானமடைந்த சுந்தாவதனம் ''பவானி, நிறுத்து! அதிகப் பிரசங்கித்தன மாகப் பேசவேண்டாம். நான் யாரை அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று நீ எனக்குச் சொல்லித் தர வேண்டியதில்லை, எனக்குக் கோபம் வந்தால் தெரியுமா!'' என்று பல்லைக் கடித்தார்.

''அடேயப்பா, கோபம் வந்தால் என்னை விழுங்கிவிடு வீர்களாக்கும்!'' என்று பவானி மேலும் அவருடைய எரிச்சலை கிண்டி விட்டுக் கொண்டே தனது மகன் கண்ணனைத் தொட்டிலில் இட்டாள்.

சுந்தரவதனம் திகைத்துப் போய்விட்டார். பவானியைப் பேய் ஏதாவது பிடித்துக்கொண்டு விட்டதா, என்ன? ஏன் இப்படி ஒரேயடியாக மாறிவிட்டாள்? அவர், அவள் வருத்தத்தைப் போக்க முயற்சிப்பதைத் தப்பர்த்தம் செய்து கொள்ளுகிறாளே?

அவளுடன் மேலும் விவாதம் செய்ய இஷ்டப்படாத சுந்தரவதனம், ''நீ மிகவும் விசித்திரமான பெண்தான், உன்னுடைய விதண்டா வாதங்களுக்குப் பதிலளிக்க



எனக்குத் தெரியாது'' என்று எரிச்சலாகச் சொல்லிவிட்டுக் கோபத்துடன் வெளியே சென்றார்.

''கிர்'' என்ற சத்தத்துடன் புறப்படும் காரில் அவர் வெளியே போகிறார் என்பதை உணர்ந்த பவானி, ''அப்பா கோபமாகப் போகிறார்? ஏண்டா கண்ணா! அவர் எனக்கு துரோகம் செய்வது சரியாடா, நீ சொல்'' என்று மகனிடம் கேட்டுக்கொண்டே தொட்டிலை ஆட்டினாள்.

தாயின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிவதை அறியாத கண்ணன் தன் பொக்கைவாயைக் காட்டிக் கொண்டு அவளைப் பார்த்துச் சிரித்தான்.

## 25

ஒரு கூடைப் பச்சிலைகளுடன் முத்துப்பிள்ளை கூடத்தில் உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றிலும் சில சீசாக்களும், மண் கலயங்களும் பரப்பப்பட்டிருந்தன. பொறுமையுடன் அவர் தழைகளைக் கிள்ளிக் கலுவத்தில் போட்டு அரைத்துக்கொண்டிருப்பதை தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த வனஜா கவனித்துக் கொண்டிருந்தாள்.

வனஜா மயக்கமடைந்து குடத்தைப் போட்டுக்கொண்டு விழுந்த அன்றிலிருந்து, படுத்த படுக்கையாகி விட்டாள். முத்துப்பிள்ளை இந்த மட்டிலாவது ஒரு நோயாளி தனக்குக் கிடைத்தாளே என்ற சந்தோஷத்தில் ''குடும்ப வைத்திய''னில் சொல்லப்பட்டிருந்த, சகலவிதமான தைலங்களையும், லேகியங்களையும் செய்து அவளுக்குக் கொடுத்து நோயைத் தீர்க்க முயற்சித்தார். முடியவில்லை.

கட்டிலிலே அவள் கஷ்டத்துடன் சுவாசித்துக் கொண்டு புரளுவதைக் கண்ட முத்துப்பிள்ளை தமது வேலைகளை நிறுத்திவிட்டு அருகில் ஓடிவந்து, ''என்னம்மா செய்யுது உடம்பு?'' என்று அன்புடன் கேட்டார்.

''மாமா! ஒரு விஷயம்?'' என்று ஹீனமான குரலில் அவள் சொன்னதும் முத்துப்பிள்ளைக்கு அழுகை வந்து விட்டது.

தாழம்பூவையொத்த அவள் மேனி சாம்பல் பூசினாப் போல் வெளுத்துப் போயிருந்தது. நீலம் பாய்ந்த அவ்ள் உதடுகள்; ஏக்கம் நிறைந்த கண்கள். மாமன் முத்துப் பிள்ளையினால் அவளுடைய கோலத்தைக் காணச் சகிக்க முடியவில்லை. ''என்னம்மா வேணும்?'' என்று கேட்டார் மறுபடியும்.

''மாமா! நீங்கள் அவருக்கு ஒரு தந்தியடித்து வர வழைக்க வேணும்'' என்று கெஞ்சும் குரலில் கேட்டுக் கொண்டு வனஜா பெருமூச்சு விட்டாள்.

முத்துப்பிள்ளைக்கு தூக்கி வாரிப் போட்டது. கல்யாண மானதிலிருந்து அதுவரை அவள் ஷண்முகத்தைப்பற்றி மாமனிடம் ஒன்றுமே பேசியதில்லை. அன்று துணிவுடன் அவள் தன் கணவனை வரவழைக்க வேண்டுமென்று கேட்டது முத்துப்பிள்ளைக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

''அவனையா பார்க்கணும்? அந்தப் படுபாவிப் பயலையா?'' என்று முத்துப்பிள்ளை பல்லைக் கடித்தார்.

''மாமா அவரைத் திட்டாதீங்க அவர் என்ன செய்வார்? என் தலைவிதி!'' என்று வனஜா சொல்லிவிட்டுத் தேம்ப ஆரம்பித்து விட்டாள்.

முத்துப்பிள்ளையால், அந்த நோயாளிப் பெண் அழு வதைப் பார்க்கச் சகிக்கவில்லை. ''நீ வருத்தப்படாதே யம்மா. கட்டாயம் அவன் வரணுமின்னு நீ சொன்னா, வேணுமானா தந்தியடிக்கிறேன். அவன் அட்ரஸ்கூட எனக்குத் தெரியாதே. அவன் அம்மாவுக்குக் கடுதாசி போடறானேயொழிய எனக்குப் போடுவதே கிடையாது'' என்று சலிப்புடன் சொன்னார்.

''எனக்குத்தெரியும் மாமா, நான் தருகிறேன். 'வனஜா விற்கு உடம்பிற்கு அதிகமாயிருக்கிறது. உடனே வர



வேண்டும்'' என்று தந்தி அடியுங்கள்'' என்று கூறிக் கொண்டு தான் ஒரு காலத்தில் குறித்து வைத்திருந்த ஷண்முகத்தின் அட்ரஸைத் தலையணை அடியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

கசங்கிப்போன அந்தக் காகிதத் துண்டை வாங்கிப் படித்துப் பார்த்த முத்துப்பிள்ளை, ''எது உனக்குக்கூட அவன் அட்ரஸ் தெரிஞ்சிருக்காப்பலே இருக்கே! உனக்கு அவன் கடிதாசி போட்டானா என்ன?'' என்று பரிகாசமாகக் கேட்டார்.

வனஜாவின் கன்னங்கள் சிவந்தன. ''இல்லை மாமா, மாமிக்கு வந்த கடிதத்திலிருந்து இந்த விலாசத்தை எடுத்துக் குறித்து வைத்துக்கொண்டேன்'' என்றாள்.

முத்துப்பிள்ளை அவள் வார்த்தையைக் கேட்டு மனமிளகிவிட்டார். பேதைப் பெண்! அவன் லட்சியம் செய்யாதபோதுகூட அவன் விலாசத்தைத் தேடி எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறாளே! என்ன ஆசை இவளுக்கு அந்த உதவாக்கரை நாய்மீது!'' என்று எண்ணினார்.

''சரி, உடனே உன் இஷ்டப்படி தந்தி அடித்துவிட்டு வருகிறேன். நீ இந்த மாத்திரைகளை முழுங்கிவிடு'' என்று கூறிக்கொண்டு பிள்ளை தாம் தயாரித்த மாத்திரைகளில் இரண்டை அவளிடம் கொடுத்தார்.

''மாமா ஒரு விஷயம்'' என்று வனஜா கெஞ்சும் குரலில் முத்துப் பிள்ளையைப் பார்த்துச் சொன்னாள்.

வெளியே போக இருந்த அவர் ''என்னம்மா?'' என்று கேட்டுக்கொண்டு, திரும்பி அவள் அருகில் வந்து நின்றார்.

''அவர் ஒரு சமயம் தந்தியைப் பார்த்துவிட்டு இங்கே வந்தால் நீங்க நடந்த விஷயங்களைக் குறித்து அவரைக் கோபித்துக் கொள்ளக்கூடாது. மாமா, அதுதான் நான் கேட்டுக் கொள்வது'' என்று அவள் பரிதாபமாகக் கெஞ்சி னாள்.

முத்துப்பிள்ளைக்கு மகன்மீது எவ்வளவு துவேஷம் இருந்தபோதிலும், வனஜாவின் அன்புள்ளத்திலிருந்து

வந்த அந்த வேண்டுகோளை மறுக்க மனம் வரவில்லை. ''நான் அவனைக் கோபித்துக் கொள்ளமாட்டேன். கவலைப்படாதே! இதோ போஸ்டாபீஸிற்குப் போய் வருகிறேன்; நீ அந்த மாத்திரைகளைச் சட்டென்று சாப்பிட்டு விடு, அம்மா'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

மாமா கொடுத்துப்போன மாத்திரைகளை வனஜா தூர விட்டெறிந்தாள். இனிமேல் மாமாவின் மருந்துகளைச் சாப்பிடுவாளா? ஷண்முகம் தந்தியைப் பார்த்து விட்டு ஒருக்கால் வரக்கூடும். அவள் உயிருடன் இருந்து அவனை வரவேற்க வேண்டாமா?

அதுவரை வெளியே போயிருந்த அபிராமி அம்மாள் உள்ளே நுழைந்தாள். அவளுடன் கூட ஒரு இங்கிலீஷ் வைத்தியர் மருந்துப் பெட்டியுடன் நுழைந்தார்.

''இந்தப் பொண்ணுதான் நான் சொன்ன வியாதிக்காரி. நாலு மாசமா படுத்துக் கிடக்கு. வீட்டில் அவருக்கு நாட்டு வைத்தியத்திலே பயித்தியம். அதனாலேதான் இத்தனை நாளா ஒருத்தர்கிட்டேயும் கையைக் காட்டலை'' என்று சொல்லிக்கொண்டு அபிராமி அம்மாள் கூடத்து நாற்காலியை இழுத்துப் போட்டு டாக்டரை உபசரித்தாள்.

வனஜாவைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டருடைய முகத்தில் கவலைக் குறிகள் தென்பட்டன.

''ரத்த சோகை! ரொம்ப முற்றிப் போயிருக்கிறதே. இத்தனை நாளாகத் தூங்கிக்கொண்டா இருந்தீர்கள்? பிழைக்கிறது மிகவும் கஷ்டமாச்சே!'' என்று அபிராமி அம்மாளிடம் ரகசியமாகக் கூறினர்.

அதுசமயம் உள்ளே நுழைந்த முத்துப்பிள்ளை இங்கிலீஷ் வைத்தியர் ஒருவர் தமது உத்தரவின்றி வீட்டில் பிரவேசித்திருப்பதைக் கண்டு கோபமடைந்தாலும் மரியாதைக்காகப் பேசாமல் பெஞ்சிமீது உட்கார்ந்து கொண்டார்.

''நாகம்மா வீட்டுக்கு அரியலூரிலிருந்து ஒரு வைத்தியர் வாராருன்னு சொல்லிக்கிட்டிருந்தேனே, அவர்தான் இவர். வனஜா கையைக் காட்டலாமின்னு அழைச்சிக்கிட்டு



வந்தேன்'' என்று கூறிவிட்டு அபிராமி அம்மாள் தனது கணவனுக்கு ஏதோ ஜாடை காட்டினாள்.

முத்துப்பிள்ளை அதை அறிந்து எழுந்திருந்து காமிரா உள்ளுக்குள் சென்றார். அங்கே தனியாகக் கணவனைச் சந்தித்த அபிராமி அம்மாள், ''ரத்த சோகை முத்திப் போச்சாம். பிழைக்கிறது கஷ்டமின்னு சொல்றாரே என்ன செய்வேன் நான்!'' என்று ரகஸ்யமாகச் சொன்னாள்.

''பிழைப்பது கஷ்டம்'' என்ற வார்த்தையைக் கேட்ட முத்துப்பிள்ளை திகிலடைந்து போய்விட்டார். ஒரு சமயம் தமது வைத்தியத்தினால்தான் வனஜாவிற்கு அந்த நிலைமை ஏற்பட்டதோ என்னவோ என்று நடுங்கியவராய் அவர் அவசரமாக வெளியே வந்து, ''நீங்க ஏதாவது வைத்தியம் செய்துவிடுங்க. பணம் எவ்வளவு ஆனாலும் சரி. பெண் பிழைத்தெழுந்திருக்க வேண்டும். அவ்வளவுதான்'' என்று டாக்டரிடம் கெஞ்ச ஆரம்பித்தார்.

டாக்டர் ஒரு கடிதத்தில் ஒரு பெரிய ஜாபிதாவை எழுதிக் கொடுத்துவிட்டு, ''இந்த மருந்துகளையெல்லாம் வாங்கி வாருங்கள். பிறகு வந்து பார்க்கிறேன'' என்று மிடுக்காகக் கூறிவிட்டு வெளியேறினார்.

தனியே கணவனை மறுபடியும் கொல்லைப் பக்கத்தில் சந்தித்த அபிராமி அம்மாள், ''நான் சொன்னேனே கேட்டீங்களா, அந்தப் பெண் வியாதி உங்க மருந்துகளாலே தீராதுன்னுட்டு! ஏதாவது வந்து தொலைஞ்சா என் தலையைத்தானே போட்டு உருட்டுவாங்க? பணத்தைப் பத்திப் பார்க்க வேண்டாம். அது பொழச்சி எழுந்திருக்கட்டும். அதுபோதும். தம்பிக்கு ஒரு காகிதமாவது இதைப் பற்றிப் போட்டா என்ன?'' என்று புலம்பினாள்.

''அவனுக்குத் தந்தியடிச்சிருக்கேன், வரதுன்னா வரட்டும், நாய்ப் பயல். சும்மாத் தொண தொணக்காதே, போ!' என்று பிள்ளை எரிந்து விழுந்தார்.

தமது மருந்துகள் வனஜாவின் நோயைத் திர்க்கவில்லை என்ற கோபம் அவருக்கு!

# 26

சினிமாவிற்குத் தான் வர மறுத்த அன்றிலிருந்து சுந்தரவதனம் தன்னிடம் கொஞ்சம் மனஸ்தாபமாக இருப்பதைப் பவானி கவனிக்காமல் இல்லை. எனினும் அதை அவள் பெரிதாக லட்சியம் செய்யவில்லை. கண்ணன் தன் பக்கத்திலே இருக்கும்போது அவளுக்குச் சுந்தரவதனத்தின் கோபம் துச்சமாகத் தோன்றியது.

''வெள்ளி மலையானுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். உடனே குழந்தையுடன் புறப்பட்டு வரவும்'' என்று அத்தை சிவகாமி அம்மாள் போட்ட கடிதத்தைக் கண்டதும் பவானி உடனே பூஞ்சோலைக்குப் புறப்பட்டு விட்டாள். தமது மனைவியைத் தடுக்கவில்லை சுந்தரவதனம்.

பூஞ்சோலைக்கு வந்த அவள் அங்கே பல நாட்கள் தங்கிவிட்டாள். தனது மகன் தீர்க்காயுசுடன் இருக்க வேண்டுமென்று எல்லாத் தெய்வங்களுக்கும் அபிஷேகம் செய்தாள். ஒரு நல்ல நாள் பார்த்துக்கொண்டு மின்னூருக்குப் புறப்பட நினைத்த சமயம், குழந்தையின் உடம்பு கதகதவென்றிருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். உடனே பிரயாணத்தை ஒத்திப் போட்டாள்.

''ஒண்ணுமில்ல, பாப்பா. ஓமத்தையும் வெற்றிலையையும் வச்சு அரைச்சு இரண்டு சங்கு போட்டினால் சரியாகிவிடும். புதுத் தண்ணியோல்லியோ? குழந்தைக்கு ஒத்துக் கொள்ளவில்லை'' என்று பவானியைச் சமாதானப்படுத்தினாள் அத்தை.

மறுநாள் காலை குழந்தை கண்ணன் சிரமப்பட்டுக் கொண்டு மூச்சு விடுவதைக் கண்ட பவானி திகிலடைந்து போய், உள்ளூர் டாக்டரை அழைத்து வர ஆட்களை ஏவினாள்.

கண்ணனைப் பரிசோதித்துப் பார்த்த உள்ளூர் வைத்தியர், குழந்தைக்கு 'டிப்தீரியா' என்னும் வியாதி வந்திருப்பதாகவும், மிகவும் அபாய நிலைமையில் இருப்பதால் உடனே மருந்துகள் திருச்சியிலிருந்து தருவித்துக் கொடுக்க வேண்டும்'' என்றும் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்.



''ஐயோ அத்தை! கண்ணன் அப்பாவுக்கு ஆள் அனுப்புங்கள். யாராவது திருச்சிக்குப் போய் டாக்டர் கேட்ட மருந்துகளை வாங்கி வாருங்கள். என் கண்ணனுக்கு ஒரு ஆபத்தும் வரக்கூடாது'' என்று பவானி கூக்குரலிடத் தொடங்கினாள். பங்களா அல்லோல கல்லோலப்பட்டது.

சுந்தரவதனத்திற்கு ஆள் வந்து கண்ணனின் தேக நிலைமையைப் பற்றித் தெரிவித்தபொழுது நன்றாக இருட்டி விட்டிருந்தது. போதாதற்கு அவர் ஒரு ஆபரேஷன் கேசை கவனித்துக் கொண்டிருந்ததால் உடனே புறப்பட்டு வர முடியவில்லை.

மறுநாள் காலை விடிவதற்குள் அவரும் கனகவல்லி அம்மாளும் பூஞ்சோலைக்குப் பறந்தோடி வந்தார்கள்.

பங்களாவின் வாசல் புறத்தை அடைந்த கனகவல்லி அம்மாளுக்குத் திக்கென்றிருந்தது. அதனுடைய தோற்றம். முகத்தில் ஈயாடாது நின்று கொண்டிருந்தான் பண்ணையாள் நாச்சியப்பன். அவனைக் கண்ட கனகவல்லி அம்மாள், ''குழந்தைக்கு எப்படியிருக்கு?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

''போயிட்டுதம்மா!'' என்றான் அவன் தீனமான குரலில்.

''என்ன! போய்விட்டதா?'' என்று அலறினார் சுந்தரவதனம்.

''ஆமாம், நேத்து ராத்திரியே உயிர் போய் விட்டதுங்களே! நீங்க வருவீங்கன்னு காத்துகிட்டு இருக்காங்க'' என்று தெரிவித்தான் அவன். சுந்தரவதனத்தினால் அந்த துக்க சமாசாரத்தைத் தாங்க முடியவில்லை.

கனகவல்லி அம்மாளைக் கண்ட சிவகாமி அம்மாள் ''ஓ'' வென்று அலறிக்கொண்டு ஓடிவந்தாள். விம்மி விம்மி அழுதுகொண்டிருந்த பவானி தன் கணவனைக் கண்டதும் முகத்தை மூடிக்கொண்டு பலமாக அழுதாள். மகளின் துக்கத்தைக் காணச் சகியாத சிவஞானம் பிள்ளை ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். சுந்தரவதனம் சோகம் தாங்காதவராய் தொப்பென்று சோபா ஒன்றில் சாய்ந்து சிலைபோல் உட்கார்ந்து விட்டார்.

துக்ககரமான அந்தச் சம்பவத்திற்குப் பிறகு சுந்தரவதனம் பவானியைத் தம்முடன் அழைத்துக்கொண்டு மின்னூருக்கு வந்து சேர்ந்தார். சோகத்தின் உருவமாயிருந்த பவானி, உணர்வை இழந்தவள் போல் கட்டிலின் மீது வதங்கிக் கிடந்த காட்சி அவருடைய மனதை வதைத்தது.

''பவானி, துக்கப்பட்டு என்ன பயன், போனவன் திரும்பி வரப்போவதில்லை'' என்று அவர் அன்புடன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு தேற்ற முயன்றார்.

''உங்களுக்கு இப்பொழுது மனம் குளிர்ந்திருக்குமென்று நினைக்கிறேன்'' என்று பவானி வெடுக்கென்று கேட்டுக்கொண்டே தனது கரங்களை அவரது பிடியினின்று விடுவித்துக் கொண்டாள். சுந்தரவதனம் திடுக்கிட்டுப் போனார். ''என்ன அப்படிச் சொல்கிறாய்?'' அவர் கேட்பதற்குள், ''கண்ணன் சாகட்டும் என்றுதானே நீங்கள் உடனே புறப்பட்டு வரவில்லை? நொண்டிச் சாக்கெல்லாம் சொல்ல வேண்டாம். என் கண்ணன் ஒரு பெரிய வைத்திய நிபுணரின் மகன். அவர் வந்து மருந்து கொடுக்காமலே உயிர் துறந்தான். அவன் இருப்பதனால்தான் நான் உங்கள் துரோகத்தை லக்ஷ்யம் செய்யவில்லை. அவன் போய்விட்டால் வேறு வழியின்றி நான் உங்கள் காலடியில் விழுந்து அன்புப் பிச்சை கேட்பேன் என்று மனதில் எண்ணிக் கொண்டிருந்தீர்கள் அல்லவா! உங்கள் இஷ்டப்படியே கண்ணன் போய் விட்டான். என்னுடைய துரதிர்ஷ்டமான நிலைமையைக் குறித்து இப்போது உங்கள் மனம் குளிர்ந்ததா?'' என்று பவானி ஆத்திரமாகக் கேட்டுவிட்டுப் படுக்கையிலே குப்புறக் கவிழ்ந்துகொண்டு தேம்பினாள்.

சுந்தரவதனம் தனது தலைமீது ஒரு இடி விழுந்ததைப் போன்ற உணர்ச்சியையடைந்தார். பவானிக்கு ஏதாவது பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன? முன்பு அவள் தனக்கு துரோகம் செய்கிறார் என்ற ஒரு பழியை அவர்மீது சுமத்தினாள். இப்பொழுது கண்ணன் சாக வேண்டுமென்று அவர் மனம் ஆசைப்பட்டதாக இன்னொரு பழியை அவர்மீது



சுமத்துகிறாள். ''வேடிக்கையான பெண்தான் பவானி!'' என்று துயரமும் வியப்பும் அடைந்து அசைவற்று நின்றார் சுந்தரவதனம்.

## 27

வனஜாவிற்கு உடம்பு அதிகமாயிருக்கிறது என்ற தந்தியைக் கண்ட ஷண்முகம் நடுங்கிப் போய்விட்டான். ''அவளுக்கு என்ன உடம்புக்கு? இதுவரை ஒரு கடிதத்திலும் அப்படி அம்மா எழுதவேயில்லையே'' என்று கவலைப்பட்டவன் தனது பெட்டி படுக்கை முதலியவைகளைக் கட்டித் தயாராய் எடுத்துக்கொண்டு ஒருமாத லீவில் அன்று லக்ஷ்மிபுரத்திற்குப் புறப்பட ஆயத்தமானான்.

''இதைக் கொண்டுபோய் உங்கள் மனைவியிடம், கொடுங்கள். நான் கொடுத்ததாகச் சொல்லுங்கள்'' என்று புன்னகையுடன் கூறிக்கொண்டு தங்களிடம் சொல்லிப் போக வந்த ஷண்முகத்தினிடம் பாரதி ஒரு சிறு பொட்டலத்தைக் கொடுத்தாள்.

வனஜா அங்கே வந்தால் கொடுக்க வேண்டுமென்று பல நாட்களுக்கு முன்பு பாரதி தன் கையாலே தைத்த பொன்நிறப் பட்டுச்சட்டை அந்தப் பொட்டலத்திற்குள் இருந்தது.

''கவலைப்படாதீர்கள், ஷண்முகம்! உங்கள் மனைவி கட்டாயம் பிழைத்துக் கொள்வாள்!'' என்று வில்லியம் தேறுதல் சொன்னான்.

''கடிதம் போடவில்லையென்று வருந்தினீர்களே! பாவம், அந்தப் பெண் படுத்த படுக்கையாயிருக்கும்போது எப்படிக் கடிதம் போட முடியும்? வீணாகச் சந்தேகப்பட்டீர்கள்'' என்று சொல்லிவிட்டு பாரதி, ''சீக்கிரம் நீங்கள் இருவரும் திரும்பி வரவேண்டுமென்று கடவுளைத் தினம் பிரார்த்திப்பேன்; கவலை வேண்டாம்'' என்று முடித்தாள்.

ரயிலில் தன்னை ஏற்றிவிட்டு, வண்டி புறப்படும் வரை கூட இருந்து புத்தி சொல்லி வழியனுப்பின அந்த

அந்யோன்ய தம்பதியை நினைத்துக்கொண்ட ஷண்முகத்தின் நெஞ்சம் பாகாய்க் கரைந்தது.

வில்லியத்தின் மனைவி அந்தக் குறுகிய காலத்திற்குள் தன் சொந்த சகோதரி போன்ற ஸ்தானத்தில் அவனது இருதயத்திற்குள் அமர்ந்துவிட்டாள். கண்ணால் கண்டிராத வனஜாமீது அவளுக்கு எவ்வளவு அனுதாபம்! பாவம். அவன் மனதை வனஜாவின்பால் திருப்ப அவள் தான் எவ்வளவு கஷ்டப்பட்டாள்!

திரும்பி வனஜாவுடன் பம்பாய்க்கு வந்ததும், வில்லியத்தையும் அவன் மனைவியையும் தன் வீட்டிற்கு அழைத்து விருந்தளிக்க வேண்டும் என்று சிந்தித்துக்கொண்டே சென்ற ஷண்முகத்திற்கு வண்டி ஊர்வதைப்போலிருந்தது.

பல நாட்களுக்குப் பிறகு ஊருக்குத் திரும்புகிறோம் என்ற சந்தோஷம் ஒரு பக்கம் அவன் மனதில் இருந்தாலும் வனஜா உடம்பு சரியாகிப் பிழைத்தெழ வேண்டுமே என்ற கவலையும் ஒரு பக்கம் அமுக்கியது.

என்ன ஆச்சரியம்! லக்ஷ்மிபுரத்தை விட்டு ஓடி வந்த பொழுது அவன் வனஜாமீது வெறுப்புடன் இருந்தான். இப்பொழுது அவள்மீது கரைகாணாக் காதலுடன் திரும்புகிறான்!

சென்னைக்குப் போனதும் வனஜாவுக்கு வேண்டிய பழங்கள் முதலியன கட்டாயம் வாங்கிக்கொண்டு போக வேண்டும் என்று தீர்மானித்த அவன், வண்டியின் ஆட்டத்தில் கண்களை மூடினான்.

சிவந்த சோளக் கதிர்களைத் தாங்கி நிற்கும் பசுமையான நிலங்கள் கொண்ட லக்ஷ்மிபுரம் அவனது கனவில் வந்து கூத்தாடியது.

## 28

கண்ணனை இழந்த பவானிக்கு உலகமே சூன்யமாகத் தென்பட்டது. சரியாகச் சாப்பிடுவதில்லை. அவள் முன்போல் தன்னை விதவிதமாகச் சிங்காரித்துக் கொள்வ



தில்லை. சதா துக்கமே குடிகொண்ட முகத்துடன் ஒளியிழந்தவளாய் மாடியில் தனது படுக்கையறையே கதியெனக் கிடந்தாள்.

மருமகள் துக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதைக் கண்ட கனகவல்லி அம்மாள் மனம் இடிந்து போய்விட்டாள். ஒரு வருஷத்திற்கு முன்பு குதூகலம் தாண்டவமாடிய அந்த வீட்டில், களை என்பது மருந்துக்குக் கூட கிடைக்காது போலிருந்தது.

சுந்தரவதனமும் மனைவியின் சோகத்தைத் தீர்க்க வழி தெரியாமல் தாமும் துக்க சாகரத்தில் மூழ்கிவிட்டார். 'நர்ஸிங் ஹோமி'லிருந்து எப்பொழுது திரும்பி வருவார் என்று பார்த்து, முன்மெல்லாம் பங்களா வாசலிலேயே சிரித்த முகத்துடன் வரவேற்கும் பவானி, அவரை ஏறெடுத்துக்கூடப் பார்ப்பதில்லை. கண்ணா! கண்ணா என்று அவள் சதா புலம்பிக் கொண்டு இளைத்துத் துரும்பாகி வருவதைக் காண அவர் மனம் தவித்தது.

கண்ணனை இழந்த அவள் பெற்ற மனம் கொதித்துக் கொண்டிருந்தது என்னவோ உண்மைதான். அவளைத் தேற்றும் வழிதான் அவருக்குத் தெரியவில்லையே! அவளும் தன் வருத்தத்தை அவருடன பங்கிட்டுக் கொண்டு மனந் தேற மறுக்கிறாளே? பவானி! இவ்வளவு படித்திருந்தும் நீ கடைசியில் ஒரு அசட்டுப் பெண்தானா!'' என்று எண்ணி அவர் ஏங்கினார்.

வானத்திடையே பூர்ண சந்திரன் தனது அமுத கிரணங்களைப் பொழிந்துகொண்டிருந்தான். பட்டப்பகல்போல் வீசும் நிலவொளியை ஜன்னல் வழியே நோக்கிய பவானியின் மனம் துக்கத்தில் ஆழ்ந்தது. கண்ணனது சுருண்ட கூந்தலின் அழகை நினைத்துக்கொண்டு அவள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

பின்னாலேயே வந்து நின்ற சுந்தரவதனம் அவள் தோள்மீது தமது கரங்களை அன்புடன் வைத்துக்கொண்டார். பவானி பேசவில்லை. நீர் நிறைந்த கண்களுடன்

வானத்தினிடையே தவழ்ந்து கொண்டிருந்த மேகக் கூட்டங்களை அவள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பவானி! இப்படி அழுது அழுது உடம்பை அலட்டிக் கொள்கிறாயே! இதனாலெல்லாம் ஏதாவது பிரயோஜனம் உண்டா?'' என்று சாந்தமாகக் கேட்டவண்ணம் சுந்தரவதனம் அவள் அருகில் உட்கார்ந்து கொண்டார்.

''என் கண்ணனை மறக்க முடியவில்லையே!'' என்று அவள் விம்மினாள்.

''உன்னை இப்படியே விட்டுவிட்டால் நீ துக்கத்திலே மடிந்து போய்விடுவாய். பவானி, அதோ பார் வானத்திலே வெண்ணிலாவை! எழுந்திருந்து முகத்தைத் துடைத்துக் கொள். உன்னைத் தோட்டப்பக்கம் அழைத்துப் போகிறேன். குளிர்ந்த காற்றுப்பட்டால் உன் மூளையின் கொதிப்பு சற்று அடங்கும். உனக்கு மல்லிகைப் புஷ்பம் என்றால் மிகவும் பிடிக்குமல்லவா? இன்று 'நர்ஸிங் ஹோமி'லிருந்து திரும்பி வரும்பொழுது வழியில் ஒரு கூடைக்காரியிடம் வாங்கி வந்தேன். இந்தா, வைத்துக் கொள்'' என்று கூறியவண்ணம் அவளது கைகளில் மல்லிகைச் சரமொன்றை வைத்தார். பூத்திருந்த அந்த மாலையிலிருந்து குப்பென்று மணம் பவானியின் முகத்தில் வீசியது. அவளுடைய அன்பு ததும்பும் அழகிய விழிகள் கணவனைக் குரோதத்துடன் உற்று நோக்கின.

''உங்களுடைய கபட எண்ணம் எனக்கு புரியவில்லை என்றா எண்ணுகிறீர்கள்? குழந்தை இறந்து இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. அதற்குள் மனைவியுடன் உல்லாசமாக நிலவொளியில் உலாவ ஆசைப்படுகிறீர்கள். புருஷர்களாகிய உங்கள் மனம் கல் என்பதில் சந்தேகம் என்ன இருக்கிறது! என் பெற்ற மனம் துடிப்பதை நீங்கள் அறிவீர்களா? என் கண்ணன் பக்கத்தில் இருப்பதால் சகித்துக்கொண்டு விடுகிறேன் என்று என் பிள்ளையை உள்ளூர வெறுத்தீர்கள். என் துரதிருஷ்டத்தின் பயனாக அவன் என்னை உங்களிடம் தவிக்கவிட்டுப்போய்விட்டான்.



எனக்கா பூ! என் பிணத்திற்கு வேண்டுமானால் போட்டு மகிழுங்கள்'' என்று படபடவென்று வார்த்தைகளைக் கொட்டினாள். கையிலிருந்த மாலையைக் கசக்கி ஜன்னல் வழியே விட்டெறிந்து விட்டுப் படுக்கையில் குப்புறப்படுத்துக் கொண்டு குலுங்க குலுங்க அவள் அழுதாள்.

சுந்தரவதனம் திகைத்துப் போய்விட்டார். பவானியை ஏதாவது பேய் பிடித்துக்கொண்டு விட்டதா? ஏன் இப்படி மாறிவிட்டாள்? சொல்வதையெல்லாம் தப்பாக அர்த்தம் செய்து கொள்ளுகிறாளே!

பரிதாபமாக அழும் அவள் கோலத்தைக் காணச் சகியாத அவர், ''பவானி மனதை ஏன் இப்படிப் பிய்த்துக் கொள்கிறாய்!'' என்று அன்புடன் தேற்றியவண்ணம் அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டார்.

''போதும் என்னைத் தனியாக விடுங்கள்'' என்று பவானி எரிச்சலுடன் பதிலளித்தவள், சுந்தரவதனத்தின் கரங்களை வெறுப்புடன் தட்டிவிட்டாள்.

அவர் பல்லைக் கடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினார். அவர் ஒரு புருஷர் இல்லையா? பவானியின் துடுக்கான பேச்சுக்களையும் அலட்சிய தோரணையையும் எத்தனை காலந்தான் சகித்துக் கொண்டிருப்பார்?

## 29

புதிதாகத் துளிர்த்த தளிர் இலைகளுடன் கண்களுக்கெட்டிய தூரம் தோன்றிய ஒரே பசுமைக் காட்சி வசந்த காலத்தின் வருகையை அறிவித்துக் கொண்டிருந்தது.

காற்றோட்டத்திற்காக வேப்ப மர நிழலில் தோட்டப் பக்கம் கட்டிலில் படுத்திருந்த வனஜா, தோட்டத்தின் அழகில் லயித்துப் போயிருந்தாள்.

''வனஜா, நீ கஞ்சி சாப்பிடவேயில்லையென்று அம்மா புகார் சொல்றாங்க. உடம்பு எப்படித் தேறும் சரியா சாப்பிடா விட்டா?'' என்று கேட்டுக் கொண்டு ஷண்முகம் கட்டிலில் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

வனஜாவின் முகம் சிவந்தது. ''இல்லை, அத்தான்! பசிக்கவே இல்லையே, என்ன செய்வேன்?'' என்றாள் அவள்.

அத்தான் வந்து விட்டான் என்ற சந்தோஷத்தில் அவளுக்குப் பசியே இல்லை. தன்னை ஏறெடுத்துக் கூடப் பார்க்காத ஷண்முகம் திடீரென அவள்மீது அன்பு மழை பொழிந்தான். அவளால் அந்த சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை.

ஷண்முகம் வந்ததும் முத்துப்பிள்ளை அவன் எதிர் பார்த்தபடி கோபத்துடன் கூச்சலிடவில்லை. அதற்குப் பதில் அசடு வழிய அவர் அவனைப் பார்த்துச் சிரித்தார். அபிராமி அம்மாள் மகனைக் கண்டதும் 'கோ'வென்று கதறிவிட்டாள். வனஜாவின் வெளேரென்ற முகம் அவன் வந்து விட்டான் என்றதும் பிரகாசமடைந்தது. நேரே வனஜாவிடம் ஓடிய அவன், ''வனஜா வனஜா!'' என்று அன்புடன் கூப்பிட்டான். கண்களைத் திறக்க வெட்கிய வனஜா ''அத்தான்! வந்துவிட்டீர்களா?'' என்று சந்தோஷத்துடன் விசாரித்தாள்.

வந்த ஒரு வாரத்திற்குள் அவன் வனஜாவிற்கு வில்லியத்தைப்பற்றியும் அவன் மனைவியைப்பற்றியும், பம்பாய் நகரைப்பற்றியும் விதவிதமான பல கதைகளைச் சொல்லித் தீர்த்துவிட்டான்.

''வனஜா! மருந்து சாப்பிட நேரமாகலை! ஊசி போட்ட இடத்தில் வலிக்கிறதா? ஆரஞ்சுப் பழங்களை உனக்காகத் தானே டவுனிலிருந்து தருவித்தேன்? சாப்பிட மாட்டேன் என்றால் சரியா?'' என்றெல்லாம் ஷண்முகம் அவளிடம் தனது அன்பை அள்ளி வீசினான். வனஜாவிற்குச் சில சமயங்களில் தான் காண்பது கனவுதானோ என்று கூடச் சந்தேகமாயிருந்தது!

அபிராமி அம்மாளுக்குக் கூடக் கொஞ்ச நாட்களாக வனஜாமீது பிரியம் ஏற்பட்டிருந்தது. 'மகன் திரும்பி வந்து விட்டான். அவனுக்கே பெண்டாட்டிமீது ஆசை வந்து விட்டது. நமக்கென்ன? என்று அவள் மனம் சமாதானமடைந்து விட்டாள்.

வைத்தியர் வந்து தினம் வனஜாவின் தேக நிலையை பரிசோதித்து விட்டு, தக்க மருந்துகள் கொடுத்து விட்டுப்



போனார். ''ஹிருதயம் மிகவும் பலஹீனப்பட்டுப் போயிருக்கிறது. சரியாகக் கொஞ்ச நாளாகும்'' என்று அவர் தினம் ஒரே பல்லவியைப் பாடிவிட்டுப் போனார்.

காற்றோட்டத்திற்காகக் கொல்லை வேப்பமர நிழலில் கட்டில் போட்டு வனஜாவைப் படுக்கவைத்து அவள் அருகில் உட்கார்ந்து கொண்டு நாள் பூராவும் பேசிப் பேசியும் ஷண்முகத்திற்கு அலுக்கவில்லை.

ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல அவனுக்கு வனஜாவின் அழகு மேலும் மேலும் கண்களுக்குப் புலப்பட்டது. சாதுர்யமாக அவள் பேசும்போதெல்லாம் ''இதெல்லாம் தெரியாமல் முட்டாள்தனமாக இவளை விட்டு ஓடிப்போய் அவள் மனதைப் புண்படுத்தினேனே'' என்று பச்சாதாபப் பட்டான்.

தனக்கு வனஜா எழுதிய கடிதங்களும், தான் அவளுக்கு எழுதிய கடிதங்களும் முறையே வராது போனதன் மர்மத்தைக் குறித்துக் தம்பதிகள் இருவரும்பேசி பொன்னம்பலம்தான் அவைகளை எடுத்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள்.

''அவனைக் கொன்று தின்றுவிடலாமா என்று எனக்குக் கோபம் வருகிறது'' என்று ஷண்முகம் பல்லைக் கடித்தான்.

''போகிறான், அவனை விடுங்கள்! இந்த சமயம் தப்பிக் கொண்டால் அவன் இன்னொரு சமயமாவது தனது குறும்புத்தனத்திற்குத் தக்க தண்டனை அடையாமல் போக மாட்டான். நீங்கள் வந்துவிட்டீர்கள் என்ற சந்தோஷத்தில் நீந்திக் கொண்டிருக்கும் எனக்கு அந்தப் பாவியைப் பற்றி ஞாபகப் படுத்தாதீர்கள்'' என்று வனஜா தன் கணவனிடம் கெஞ்சினாள்.

''வனஜா உன்னைப்போல பெண்கள் உலகில் இருக்கிறார்களா? நீ எனக்குத்தானே சொந்தம்?'' என்று பிதற்றிய வண்ணம் ஷண்முகம் அவளுடைய கரங்களை மார்புடன் அணைத்துக் கொண்டான். நாட்கள் இப்படியே இன்பமாக ஓடிக்கொண்டிருந்தன அந்தத் தம்பதிகளுக்கு.

அன்று தன் பக்கத்தில் வந்து உட்கார்ந்த ஷண்முகத்தைப் பார்த்த வனஜா, ''அத்தான், உங்களிடம் சில விஷயங்கள் பேசவேண்டும்'' என்று தடுமாற்றத்துடன் மொழிந்தாள்.

அவளுடைய அழகிய நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே ஷண்முகம், ''என்ன பேசவேண்டும்'' என்று வினவினான்.

''அத்தான், நீங்கள் என்னை வெறுக்கவில்லை என்பதை அறிந்த என் மனம், சில நாட்களாகச் சந்தோஷத்தினால் துள்ளிக் கொண்டிருக்கிறது. இதே இன்பத்தில் நான் உயிரை விட்டால்கூடப் போதும். அத்தான் ஒரு சமயம் நான் இறந்துவிட்டால் இனிமேலாவது உங்களுக்குப் பிடித்த ஒரு பெண்ணை மணந்து கொண்டு சுகமாயிருங்கள். அதை நான் சூக்ஷம உடலிலிருந்து தரிசித்து மகிழ்வேன்'' என்று முடித்தாள்.

ஷண்முகம் அந்த வார்த்தைகளைக் கேட்டுப் பதறிப் போய்விட்டான். ''வனஜா! நீ போன பிறகுகூட எனக்கு வாழ்வு உண்டா? இனிமேல் இந்த மனதால் இன்னொரு பெண்ணை நினைக்க முடியுமா? நீ உடம்பு தேறுவாய்; உன்னுடன் சந்தோஷமாக நிலவொளியிலே வார்த்தையாடவேண்டும். அமராவதி நதிக்கரைமீது உனது மலர்க்கரங்களைப் பிடித்துக்கொண்டு உலாவ வேண்டும்; பம்பாயில் உன்னுடன் சிறு வீட்டில் காதல் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்றெல்லாம் பல மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறேன், வனஜா! எனது ஆசையில் மண்ணை அள்ளிப் போடாதே! நீ எப்பொழுது எழுந்திருந்து நடமாடப் போகிறாய் என்று நான் ஏங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்று அவன் உணர்ச்சியுடன் பேசினான். அவன் கண்களில் நீர் ததும்பியது.

''அத்தான்! எனக்கு மட்டும் உயிருடன் இருந்து உங்களுடன் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்ற ஆசை இல்லையா? திடீரென தோன்றிய இந்த ஆனந்தத்தை



என் தேகம் தாங்குமா என்றுதான் சொன்னேன்'' என்று அவள் கூறி முடிப்பதற்குள் ஷண்முகம் அவளுடைய பவள உதடுகளைக் கையினால் பொத்தி ''வனஜா! போதும்! அசட்டுத்தனமாக உளறாதே. நீ பிழைத்தெழுந்திருக்கப் போகிறாய். நாம் இருவரும் பம்பாய்க்குப் போகப் போகிறோம்'' என்று படபடத்தான்.

''சரி, அத்தான்! உங்களிஷ்டப்படிதான் நடக்கட்டுமே!'' என்று பலஹீனமான குரலில் வனஜா சொன்னாள். அவளுடைய பவள உதடுகளில் ஒரு மோகனப் புன்னகை தவழ்ந்தது.

## 30

வானத்திலே தோன்றிய கருமேகக் கூட்டங்கள் ஒரு பெரு மழையைப் பொழியக் காத்திருந்தன. மின்னூருக்கு இவ்வளவு நல்ல மழையா!'' என்று பொறாமைப்படுவதைப் போல் பயங்கரமான புயல் ஒன்று விசி மேகக் கூட்டங்களைக் கலைக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. மரங்களை வேருடன் புரட்டிவிடுவது போன்று கோரமாக வீசும் புயற்காற்றைக் கண்டு மேனி நடுங்கினவளாய் பவானி தனது அறையில் படுத்துக் கொண்டிருந்தாள்.

''நல்ல பேய்க்காற்று! சனியன்!'' என்று பவானி கடுகடுத்துக்கொண்டே ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு பீரோவில் பதித்திருந்த பெரிய நிலைக்கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். மகன் இறந்த நாலைந்து மாதங்களில் அவள் பாதியாகவல்லவோ போய் விட்டாள்?

''கண்ணா! உன்னுடன் என்னையும் அழைத்துக் கொள்!'' என்று துக்கத்துடன் முனகிக்கொண்டு திரும்பப் படுக்கையில் படுத்தாள்.

பங்களாவின் கொல்லைப் பக்கத்திலிருந்த மரம் ஒன்று காற்றில் சாய்ந்துவிட்டது. அது செய்த கோர சப்தத்தைக் கேட்ட பவானி பயந்து போய்க் கட்டிலைக் கெட்டியாகப்

பிடித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்துவிட்டாள். 'நர்ஸிங் ஹோா'மிலிருந்து பங்களாவிற்கு வரும் ரோட்டில் இப்படி எத்தனை மரங்கள் வீழ்கின்றனவோ! சுந்தரவதனம் இன்னும் வீடு திரும்பவில்லையே!''

கணவனைப்பற்றிக் கவலைக்குள்ளாகிய பவானிக்கு அவர்மீது கோபம் உண்டாகியது. அவளுந்தான் பார்த்துக் கொண்டே வருகிறாள். ஒருநாள் போல அவர் வீட்டிற்கு இரவு வெகுநேரம் கழித்து வருகிறாரே; காலையில் அவள் எழுந்திருந்து பார்ப்பதற்குள் வெளியே போய்விடுகிறாரே.

கட்டாயம் அவருக்கு இரவு ஒரு மணிவரை தினமும் 'நர்ஸிங்ஹோா'மில் வேலைகள் இருக்காது. பிறகு அவர் தினம் வீட்டிற்கு நேரம் கழித்து வருவதற்கு என்ன காரணம் இருக்கக்கூடும்? சந்தோஷமாக இருப்பதற்காக அவர் பிற ஸ்திரீகளின் உறவை நாடிவிட்டார் என்பதில் பவானிக்குச் சந்தேகமில்லை.

'நர்ஸிங்ஹோா'மிலேயே அந்த மார்க்கரட் என்ற நர்ஸைத்தவிர இன்னும் எத்தனையோ நர்ஸ்கள் அவருக்கு அடிமையாக இருக்கத் தயார்!

''முட்டாள்தனமாக அவரை விட்டு விட்டோமே! வேறொரு மங்கையின் வலையில் சிக்கிய அவரைப் பிறகு தன் பக்கம் திருப்புவது எவ்வளவு கஷ்டம்?'' என்றெல்லாம் சிந்தித்த பவானிக்குத் தூக்கம் வரவில்லை. பளீர் என்று கண்ணைப் பறிக்கும் மின்னலையும், விர் என்று வீசும் காற்றையும் லட்சியம் செய்யாமல் படபடத்த நெஞ்சுடன் கணவன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

இரவு 'டங்' என்று கடிகாரத்தில் மணி ஒன்று அடித்தது. புயற்காற்று சற்று ஓய்ந்தாற்போல் தோன்றியது. அதற்குப் பதில் பலத்த மழையொன்று 'சோ'வென்று கொட்ட ஆரம்பித்து விட்டது.

'பாம் பாம்'என்ற ஹார்ன் சத்தத்தைக் கேட்ட பவானி ஒரே துள்ளலில் தனது அறையை விட்டு இறங்கி மாடிப் படிகளை நாலே தாவலில் கடந்து ஹாலையடைந்து விட்டாள்.



உள்ளே நுழைந்த சுந்தரவதனம் மாடிப்படியருகில் அவிழ்ந்த கூந்தலுடன் அலங்கோலமாக நிற்கும் மனைவியைக் கண்டு ஆச்சர்யமடைந்தவராய் அவளையே நோக்கினார்.

''ஏன் இத்தனை நாழி வீட்டிற்கு வருவதற்கு?'' என்று பவானி மிரட்டும் குரலில் வினவினாள்.

இதை எதிர்பாராத சுந்தரவதனம் திடுக்கிட்டுப் போனார். ''காரணத்தைக் கட்டாயம் சொல்லித்தானாக வேண்டுமோ!'' என்று அவர் எகத்தாளமாகக் கேட்டதை பவானியால் தாள முடியவில்லை. ''உங்கள் மனைவியான எனக்கு நீங்கள் தினம் நேரங்கழித்து வீட்டிற்கு வரும் மர்மம் தெரியக்கூடாதா?'' என்று எரிச்சலோடு கேட்டாள்.

''உனக்குத்தான் நான் நேரங் கழித்து வரும் காரணம் தெரியுமே? இத்தனை நாள் இல்லாத அக்கறை உனக்கு இன்று என் விஷயத்தில் ஏற்பட்டிருக்காப் போலிருக்கிறது'' என்று அவர் கூறிக்கொண்டு தமது உடைகளைச் சாவதானமாகக் கழட்டி வைத்துக்கொண்டிருந்தார்.

பவானியின் முகம் அவர் வார்த்தைகளைக் கேட்டு அவமானத்தினால் சிவந்தது. ''இத்தனை நாட்கள் நீங்கள் என்னதான் உத்தேசித்திருக்கிறீர்கள் என்று பேசாமலிருந்தேன். இனியும் என்னால் பொறுக்க முடியவில்லை. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். ஊரைச் சுற்றி வளைக்க வேண்டாம்'' என்று உரக்கக் கத்தினாள் அவள்.

''உஸ்...பவானி! கத்தாதே. பங்களாவிலிருக்கும் எல்லோரும் ஏதோ கொள்ளை போவதாக அலறியடித்துக் கொண்டு வந்துவிடப் போகிறார்கள். நான் நேரங்கழித்து வீட்டிற்கு வருவதன் மர்மத்தைச் சொல்லப் போவதில்லை'' என்று பல்லைக் கடித்தார் சுந்தரவதனம்.

பவானிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ''நான் உங்கள் மனைவியென்ற ஹோதாவில் கேட்கிறேன். கட்டாயம் சொல்லித்தான் ஆகவேண்டும்!'' என்று பிடிவாதமாக அவள் கூச்சலிட்டாள்.

''இத்தனை நாட்களாக நீ என் மனைவி என்பதை மறந்துபோய் விட்டிருந்தாயே'' என்று அவர் மறுபடியும் ஏளனமாகக் கூறிக்கொண்டு சோபாவில் உல்லாசமாகச் சாய்ந்து கொண்டார்.

அவருடைய ஒவ்வொரு செய்கையையும் கண்டு மென்மேலும் கோபமடைந்த பவானி, ''எகத்தாளமாகப் பேசி என்னை அவமதிக்க வேண்டாம். மனைவியின் மனநிலைக்காகப் பச்சாதாபப்படாத நீரும் ஒரு மனிதரா?'' என்று உச்சஸ்தாயியில் கத்தினாள். சுந்தரவதனத்திற்குப் பிரமாதமாகக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

''உரக்கச் சத்தமிடாமல் பேசு, பவானி!'' என்று அவர் அவளை எச்சரித்தார்.

''இரவு வெகுநேரம் வரை வெளியே திரிந்துவிட்டு வரும் உங்களுடைய கேவலமான நடத்தை எல்லோருக்கும் தான் தெரியட்டுமே! அப்படித்தான் கத்துவேன்!'' என்று பவானி கூச்சலிட்டாள்.

''பவானி, உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா என்ன?'' என்று அதட்டினார் சுந்தரவதனம் கோபம் தாங்க மாட்டாமல்.

''யாருக்குப் பைத்தியம்? உங்களுக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறது? 'ஸ்திரீகள்' பைத்தியம் பிடித்திருக்கிறது! உமது பேச்சையும், நடிப்பையுங்கண்டு நான் ஏமாந்து போய் உங்களை மணந்துகொண்டேன். இப்பொழுதுதான் தெரிகிறது நீங்கள் பெரிய மோசக்காரர் என்று. நீங்கள் எனக்கு இன்னமும் துரோகம் செய்கிறீர்கள். உங்கள் நடத்தையை வெறுக்கிறேன். ஏன்! உங்கள் மீதுகூட எனக்கு வெறுப்புத்தான் வருகிறது'' என்றுபவானி படபடத்தாள். துக்கம் தாங்காத அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

''உன் மனதில் இருப்பதை வெளியே சொன்னதற்கு ரொம்ப சந்தோஷம். போய்த் தூங்கு. நாளைக்குப் பேசிக்கொள்ளலாம்'' என்று அவர் மெதுவான குரலில் பதிலளித்தார்.



''உங்கள் சந்தோஷம் நாசமாய்ப்போக! இவள் போனால் இன்னொருத்தி என்ற மனப்பான்மையினால் தானே இப்படி கர்வமாகப் பதிலளிக்கிறீர்கள்! நீங்கள் புருஷர். இஷ்டப்பட்டால் எத்தனை பேரை வேணுமானாலும் மணந்துகொள்ளலாம் என்ற அகந்தையால்தானே அப்படிப் பேசுகிறீர்கள்? தன் மனைவியை அகௌரவமாக நடத்தும் ஒருவன் மனிதனா? சீ? உணர்ச்சியற்ற மிருகம்!'' என்று கத்திவிட்டு கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்ட பவானி ஹால் கதவு பக்கம் ஓடினாள்.

''பவானி! எங்கே போகிறாய்? நில்?'' என்று அதட்டிக்கொண்டு எழுந்திருந்த சுந்தரவதனம் ஓடிப்போய் ஹால் கதவை சாத்தித் தாழ்ப்பாளிட்டு விட்டு அவளைக் கோபக் கனல் வீசும் கண்களால் விழித்துப் பார்த்தார்,

பவானியின் உடல் கிடுகிடுவென்று நடுங்கியது. அவருக்குக் கோபம் வந்தால் எரிமலையைப் போலல்லவா தோற்றமளிக்கிறார்!

''நான் இனி இந்த வீட்டிலிருக்கப் போவதில்லை! நான் வெளியே போகவேண்டும், என்னை விடுங்கள்'' என்று பவானி பிடிவாதமாகக் கூறிக்கொண்டு தாழ்ப்பாளைத் திறக்க முயற்சித்தாள்.

''உன்னை இங்கே இருக்க நிர்ப்பந்திக்கவில்லை. இந்தக் கொட்டுகிற மழையில் நீ எங்கே போவாய்?'' என்று பல்லைக் கடித்தார் அவர்.

''எங்கே வேணுமானாலும் போவேன். வழியை விடுங்கள்'' என்று அவள் கத்தினாள்.

''மாடிக்குப் போய் உன் அறையில் படுத்துக்கொள். போ மேலே! நான் சொல்வதைக் கேள்'' என்று அவர் அதட்டினார்.

''நீர் சொல்வதை நான் ஏன் கேட்க வேண்டும்'' என்றாள் பவானி மிடுக்குடன்.

''நீ என் மனைவி. அதைச் சற்று முன்புதானே ஒப்புக்கொண்டாய்? இன்று என் கட்டளைக்கு நீ கீழ்ப்படிய

வேண்டும். போ மேலே'' என்று அவர் கோபாவேசத்துடன் அவள் அருகில் நெருங்கினார்.

''மாட்டேன்! உமது கட்டளைக்குப் பணிய நான் அடிமையா என்ன? எனக்குச் சம உரிமை இல்லையா?'' என்று பவானி மறுத்தாள்.

''உன் உரிமையை நீ வீணாக்கிக்கொண்டு விட்டாய். உன்னுடன் வாதாட எனக்குப் பொறுமையில்லை!'' என்று பல்லைக் கடித்த சுந்தரவதனம் ஒரே எட்டில் பவானியின் கரங்களைப்பற்றி, தரதரவென்று மாடிப் பக்கம் அவளை இழுத்துச் சென்றார். ''ஐயோ அம்மா!'' என்று வீடே இடிந்து விடும்படி கூக்குரலிட்டாள் பவானி.

''இதென்னப்பா தம்பி, ரகளை!'' என்று அதுவரை நடந்த விஷயங்களைக் கவனித்துக் கொண்டிருந்த கனகவல்லி அம்மாள் பொறுமையை இழந்தவளாய்க் கேட்டாள். அவளுடைய சிறிய தேகம் என்ன நடக்குமோ என்ற கிலியில் நடுங்கிக்கொண்டிருந்தது.

''நீ சும்மா இரு அம்மா, இவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது'' என்று தன் தாயாரிடமும் ஒரு அதட்டல் போட்டுவிட்டு, சுந்தரவதனம் ஒரே நொடியில் பவானியைக் கொண்டு வந்து படுக்கையறைக்குள் சேர்த்தார்.

''போய் தூங்கு. கொதிக்கும் மூளைக்கு ஓய்வு கொடுத்தால் நல்லது. காலை விடிந்ததும் உன் இஷ்டப்படி செய்யலாம்'' என்று பவானியை அவளது படுக்கையின் பக்கம் கொண்டு வந்து நிறுத்தினார் சுந்தரவதனம்.

அவரது பலமான பிடியில் திமிர முடியாமல் தவித்த பவானி, ''காலை விடிந்ததும் இங்கிருந்து போய்விடுவேன். மானமுள்ள மனிதராயிருந்தால் நீர் என்னைத் திரும்ப அழைத்துக்கொள்ள முயற்சிக்க மாட்டீர்! இனி உமக்கு இஷ்டமான பெண்களுடன் என் தொல்லையின்றி சந்தோஷமாயிருக்கலாம்'' என்று அழுதுகொண்டே தடுமாற்றத்துடன் கூறினாள்.



''சந்தோஷம்'' என்று பதிலளித்த சுந்தரவதனம் அவளைத் தனியே அறையில் விட்டுக் கதவை வெளியே சாத்திப் பூட்டிவிட்டார்.

''என்ன தைரியம்! உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுப் போகிறாரே, நான் என்ன இவர் கைதியா?'' என்று பவானி உறுமிய வண்ணம் படுக்கையின்மீது குப்புற விழுந்தாள்.

'கதவை எதுக்காகப்பா பூட்டினே? தன்னை உள்ளே தள்ளிப் பூட்டினதாக அது தப்பர்த்தம் பண்ணிக்கொண்டு விட்டால்...?'' என்று கவலையுடன் கனகவல்லி அம்மாள் கேட்டாள்.

''என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். இந்த இருட்டு வேளையில் பயித்தியக்காரி மாதிரி வெளியே ஓடிவிட்டால் என்ன செய்வது என்றுதான் பூட்டினேன். காலையில் வெளியே போவதற்கு முன் திறந்துவிட்டுத்தான் போவேன்'' என்று ஆயாசத்துடன் கூறிவிட்டு ஹால் சோபாவில் சாய்ந்துகொண்டார்.

அன்றிரவு வெளியே புயல் ஓய்ந்தும் மூவர் இதயத்தில் மட்டும் பெரும்புயல் வீசிக்கொண்டிருந்தது.

## 31

அன்று காலையிலிருந்து வனஜா மிகவும் பிரகாசமாகக் காணப்பட்டாள். ''எனக்கு என்னவோ ரொம்ப சந்தோஷமாயிருக்கிறது. அத்தான்!'' என்று அவள் ஷண்முகத்திடம் சிரித்துக்கொண்டே கூறினாள்.

நாட்டுப் பெண்ணின் கூந்தலை வாரிப் பின்னிவிட்ட அபிராமி அம்மாள் சம்பங்கிப் பூக்களை மாலையாகக் கட்டி அந்தக் கூந்தலில் வைத்தாள்.

''வனஜாவைப் பார்த்தால் யாரும் நோயாளி என்றே சொல்ல மாட்டாங்க! அவ்வளவு தெளிவோடே இருக்கிறது அது'' என்று முத்துப்பிள்ளை தனது மருமகளைப்பற்றி மனைவியிடம் புகழ்ந்துகொண்டார்.

''எழுந்திருந்து உட்கார்ந்து கொண்டு உடம்பை அலட்டிக் கொள்ளாதே நீ! படுக்கையை விட்டு அசையக் கூடாதென்று டாக்டர் சொல்லியிருக்கிறார்'' என்று ஷண்முகம் கடிந்து கொண்டான் வனஜாவை.

''இல்லை, அத்தான். படுத்துப் படுத்து எனக்கு அலுத்துப் போச்சு. கொஞ்சம் உட்கார்ந்தால் தேவலை போலிருக்கிறது'' என்று வனஜா ஹீனமான குரலில் பதிலளித்தாள்.

''என்மீது சாய்ந்துகொண்டு உட்கார்ந்துகொள்'' என்று கூறியவண்ணம் தனது மனைவியை மார்பின்மீது சாத்திக்கொண்டு ஒரு விசிறியினால் மெல்ல அவள் முகத்தில் காற்றுப் படும்படி விசிறினான். ஷண்முகம்.

கணவன் அருகில் இருக்கிறோம் என்ற இன்ப உணர்ச்சியில் வனஜா மயங்கியவளாய் கண்களை இறுக மூடிக் கொண்டு மௌனத்தில் ஆழ்ந்திருந்தாள்.

''மரகத வேலனுக்கு அபிஷேகம் பண்ணி வரச்செய்தேன். இந்தத் துண்ணூறை அவ நெத்தியிலே பூசு! தம்பி!'' என்று அபிராமி அம்மாள் ஒரு காகிதப் பொட்டலத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

கடவுளின் பிரசாதத்தை மிகவும் பயபக்தியுடன் வாங்கிய ஷண்முகம் தனது மார்பின்மீது கிடந்த வனஜாவின் நெற்றியில் லேசாகப் பூசிவிட்டுத் தன் நெற்றியிலும் பூசிக் கொண்டான்.

அவனது கை நெற்றியிலே பட்டதும் விழித்துக்கொண்ட வனஜா ''அத்தான்!'' என்று அழைத்தாள்.

''என்ன வனஜா! நான் இங்கேதானே இருக்கிறேன்!'' என்று கவலையுடன் வினவினான்.

''உடம்பென்னவோ செய்யறது. மூச்சுவிட முடியவில்லையே!'' என்று திணறினாள் அவள்.

''அம்மா, இங்கே ஓடிவா!'' என்று ஷண்முகம் கூக்குரலிட்டான்.

முத்துப்பிள்ளை பதறிப் போய் டாக்டரைக் கூட்டிவர வெளியே ஓடினார்.



''ஒண்ணுமில்லை, பயப்படாதேடி, என் தங்கம்!'' என்று அபிராமி அம்மாள் வனஜாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தேற்றினாள்.

சற்று நேரம் கழித்து வந்த வைத்தியர் வனஜாவைப் பரிசோதித்து பார்த்துவிட்டு. இருதயம் மிகவும் பலஹீனமாயிருப்பதாயும், அதிர்ச்சியொன்றும் கொடுக்கக் கூடாது என்றும் கூறிவிட்டு நோயாளிக்கு நிம்மதி கொடுக்கவேண்டி சில மருந்துகளைக் கொடுத்துவிட்டுப் போனார்.

''நான்தான் சொல்றேனே, வீட்டுக்குள்ளே ஒருத்தரையும் விடாதேன்னுட்டு! பக்கத்து வீட்டுக்காரியும், கோடி வீட்டுப் பெண்ணும் விசாரிக்காவிட்டால் வனஜா உடம்பு தேவலையாகாதா? வர்தால் பேசாமல் போகிறாங்களா வம்பிகள்! லொட லொடன்னு ஒரு நோயாளியிருக்காளேன்னு கூட யோசனை இல்லாமெ கத்திக் கொண்டிருக்காங்க. யாராவது இன்னிக்கு வரட்டும் சொல்றேன்!'' என்று முத்துப்பிள்ளை ஒரு ஆவர்த்தனம் தமது மனைவியைப் பார்த்துக் கத்திவிட்டு வாசல் கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்தார்.

மருந்தைச் சாப்பிட்டுவிட்டுக் கண்ணயர்ந்து தூங்கும் வனஜாவையே பார்த்துக் கொண்டிருந்தான் ஷண்முகம். கள்ளங் கபடமற்ற அவள் வதனம் சிறு குழந்தையினுடையதைப் போலிருப்பதைக் கண்ட அவனுடைய மனம் கரை காணாப் பச்சாதாபத்தில் தத்தளித்தது.

சாயங்காலம் விளக்கை ஏற்றிவைத்த அபிராமிஅம்மாள் காலையிலிருந்து தூங்கிக் கொண்டிருக்கும் வனஜாவின் பக்கத்தில் கவலையுடன் உட்கார்ந்து கொண்டாள். முத்துப்பிள்ளைக்கு வேலை ஓடவில்லை. கூடத்தில் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தார்.

திடீரென்று கண்களை விழித்துக் கொண்ட வனஜா ''அத்தான்! நீங்கள் என்னைவிட்டு எங்கே போய்விட்டீர்கள்?'' என்று முனகினாள்.

திகிலடைத்த ஷண்முகம் விசிறியைத் தூக்கி எறிந்துவிட்டு வனஜாவைத் தூக்கித் தன் மடிமீது சாத்திக்கொண்டு

''இதோ பார், இங்கேதானே இருக்கிறேன், பயப் படாதே!'' என்று அவளுடைய நெற்றியை வருடினான்.

''விளக்கேற்ற வில்லையா, மாமி' ஒரே இருட்டாக இருக்கிறதே?'' என்று வனஜா அர்த்தமற்றுச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அபிராமி அம்மாள் நடுங்கிக் கொண்டு, ''வனஜா ஏம்மா இப்படிப் பேசறே? உனக்கு என்ன செய்யுது?'' என்று அவளுடைய கால்களைத் தொட் டுப் பார்த்தாள்.

''மாமா! எங்கம்மா என்னைக் கூப்பிடறாங்க'' என்று வனஜா தடுமாறி முடிப்பதற்குள் முத்துப் பிள்ளை, ''டாக்டரைப் போய் கூட்டி வரட்டுமா?'' என்று பதறினார்.

''மாரடைக்கிறது. அத்தான்! என்னைப் பிடித்துக் கொள்ளுங்களேன்!'' என்று வனஜா பிதற்றினாள்.

ஷண்முகம் அவளைத் தன் மடிமீது நன்றாகத் தாங்கிக் கொண்டு, 'வனஜா!'' வனஜா!'' என்று அரற்றினான்.

அபிராமி அம்மாள் சமயலறைக்குள் ஓடி ஒரு கூஜா தண்ணீரைக் கொண்டு வந்தாள்.

வனஜாவின் முகம் திடீரெனப் பிரகாச மடைந்தது. கண்களைத் திறந்து எல்லோரையும் ஒரு முறை நன்றாகப் பார்த்து விட்டுப் புன்னகையுடன் கண்களை மூடிக்கொண் டாள். மடிமீது இருந்த அவளுடைய தலை துவளுவதைக் கண்ட ஷண்முகம் ''ஐயோ வனஜா!'' என்று கூக்குர லிட்டான்.

அவனது இதயத்தில் பூத்து நின்ற காதல் மலராகிய வனஜாவை, மரண தேவதை தன் பனிக்கரங்களால் வெடுக் கென்று கிள்ளிவிட்டாள். அவள் கைபட்ட மலர் கருகி விட்டது.

முத்துப்பிள்ளை குலுங்கக் குலுங்க அழுதார். 'அம்மா! வனஜா, உன்னோட என் வம்சமே போயிட்டுதே'' என்று அவர் வாய்விட்டுக் கதறினார்.

''தங்கக் கட்டி வனஜா! இந்தப் பாவி வீட்டிலே இருக் கப்படாதுன்னு போய்ட்டியாடி மகராசி!'' என்று அபிராமி அம்மாள் தலையிலடித்துக் கொண்டு தரைமீது விழுந்து புலம்பினாள்.



''வனஜா! வனஜா! ஐயோ! இனி நான் என்ன செய் வேன்!'' என்று கண்ணீரிடையே பைத்தியக்காரன் போல் கத்தினான் ஷண்முகம்.

''தானே உன்னைத் தேடி அவள் உன் காலடியில் விழுந்த பொழுது நீ ஒதுக்கித் தள்ளிவிட்டு ஓடினாயே அசட்டு மனிதா! ஆசைப்பட்டுக் கொண்டு திரும்பிவரும் வரை அவள் ஏனோ உனக்காக காத்திருப்பாள்? துக்கப்படு. நன்றாகத் துக்கப்படு!'' என்று பரிகசிப்பதுபோல் தூரத்தே ஆந்தையொன்று பயங்கரமாக அலறியது.

## 32

இலையெதிரே உட்கார்ந்து வெறுப்புடன் சாப் பாட்டை இரண்டு வாயுடன் முடித்துக்கொண்டு எழுந்து விட்ட தன் மகனைக் கனகவல்லி அம்மாள் பார்த்துப் பெரு மூச்சு விட்டாள். சுந்தரவதனத்தின் பரந்த நெற்றியில் விசனத் திரைகள் விழுந்திருப்பதைக் கவனித்த அவளுடைய தாயுள்ளம் கலங்கியது.

சுந்தரவதனம் வாழ்க்கையில் முன்னரே எவ்வளவோ கஷ்டப்பட்டார் என்பதைக்கனகவல்லி அம்மாள் அறிவாள்.

ஏழ்மையிலே திண்டாடிய அவர் படிப்பிற்காகப் பட்ட கஷ்டங்களை யெல்லாம் நினைத்துக் கொண்டால் கூடக் கனகவல்லி அம்மாளுக்குக் கண்ணீர் வரும். சொல்லத் தரமற்ற அவ்வளவு துன்பங்களை எதிர்த்து நின்றார் சுந்தரவதனம்.

மனதிலே கொஞ்சங்கூட ஆசையில்லாவிடினும் படிப் பின்மேல் கொண்ட மோகத்தினால்தான் அவர் கோதையை முதலில் மணந்து கொண்டார் என்பது கனகவல்லி அம்மா ளுக்குத் தெரியாத விஷயம் அல்ல. மருமகள் என்று அவள் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியாதவாறு, கோதை நோயாளியாகவே காலங் கடத்திவிட்டு மறைந்தாள். அவளால் ஒரு சுகமும் தன் மகன் உலகில் அனுபவிக்க வில்லை என்று மனம்நொந்து போயிருந்த சமயம், ரதிதேவி போன்ற பவானி சுந்தரவதனத்தின் வாழ்க்கையில் நுழைந் தாள்.

மகனுக்கேற்ற மனைவி வந்து விட்டாள் என்ற மகிழ்ச்சியில் கவலை தீர்ந்து இருந்த கனகவல்லி அம்மாள் இப்படி அந்த சந்தோசம் அல்பாயுசுடன் மறைந்து விடுமென எதிர்பார்க்கவில்லை.

பவானியை மணப்பதற்குமுன் சுந்தரவதனம் வாழ்க்கையில் கஷ்டப்பட்டவர்தான். ஆனால் தற்போது இருந்தாற்போல் அவர் அப்பொழுது ஒரே முட்டாக இடிந்து போய் விட.வில்லை. பவானி தன்னை வெறுத்துவிட்டு அகன்றது அவருடைய பெருந்தன்மை வாய்ந்த மனதை உடைத்து விட்டது. பைத்தியம் பிடித்தவன் போன்று அர்த்தமற்ற பதில்கள் சொல்லிக்கொண்டு தமது வேலைகளில் உற்சாகமற்றிருக்கும் மகனைக் காணும்போதெல்லாம் தாயார் கவலைக்குள்ளானாள்.

அன்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு பவானி மாமியாரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் ஒரு காகிதத்தில் இரண்டு வரிகள் எழுதி வைத்துவிட்டு, விடிந்ததும் விடியாததுமாகப் பூஞ்சோலைக்கு ஒரு 'டாக்ஸி' அமர்த்திக் கொண்டு போய் விட்டாள். அவள் போவதற்கு முன்பே 'நர்ஸிங் ஹோம்' பக்கம் சென்றிருந்த சுந்தரவதனம் திரும்பி வந்து பார்த்த பொழுது பவானி வீட்டில் இல்லை. அவள் தமக்காக வைத்து விட்டுப்போயிருந்த கடிதத் துண்டைப் படித்துப் பார்த்த அவர் பைத்தியம் பிடித்தவர்போல் ஆனார்.

''பூஞ்சோலைக்குப் போகிறேன். என்னைத் திரும்ப அழைத்துப் போக முயற்சிக்க வேண்டாம்!''

அந்தக் கடிதத்தின் வார்த்தைகள் அவருடையநெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்டன. பாவனி அவரை வெறுத்துப் பிறந்தகம் போகிறாள். மனதால்கூட நினைக்க முடியாத வார்த்தைகள்! அன்பு கனியும் கண்களுடன் தன்னை நோக்குவாளே, பவானி! அவளா இப்போது அவரை வெறுக்கிறாள்?

தோட்டத்துப் பூச்செடிகள் எல்லாம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. பவானியின் கூந்தலில் இல்லாத எங்கள்



ஜன்மம் பாழ் என்று கூறுவதுபோல் அவைகள் தினம் பறிப்பாரற்று வாடி உதிர்வதைக் கவனித்த சுந்தரவதனத்தின் மனம் வேதனைப்பட்டது.

''புஷ்பங்கள் என்றால் அவளுக்கு எத்தனை ஆசை! எந்தப் புஷ்பத்தையும் தலையில் எடுத்து ஆசையுடன் சூட்டிக்கொண்டு விடுவாளே!'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார்.

அன்றிரவு சோபாவின்மீது உட்கார்ந்து கொண்டு கன்னத்தின்மீது கை ஊன்றியவராய்ச் சிந்தனையுடன் வெகு நேரம் தூங்காது அவர் உட்கார்ந்திருப்பதைக் கண்ட கனகவல்லி அம்மாள், ''தம்பி! இன்னுமா நீ தூங்கலை? இப்படி நிதமும் கண் விழிச்சேன்னா உடம்பு என்னத்துக்கு ஆகும்? நாளைக் காலையில் உனக்கு வேலை ரொம்ப இருக்குமே!'' என்று சோகம் ததும்பின குரலில் கூறினாள்.

''அம்மா! நர்ஸிங்ஹோமை' நான் மூடிவிடப் போகிறேன்'' என்று அவர் துக்கத்துடன் பதிலளித்ததைக் கேட்ட கனகவல்லி அம்மாள் திடுக்கிட்டவளாய் தனையனை நோக்கினாள்.

''மூடுவதற்காகவா அப்பா இவ்வளவு பணச் செலவில் கட்டினாய்! என்று அவள் சிரித்துக்கொண்டே மெதுவாகக் கேட்டாள்.

''வாழ்க்கையில் எனக்குக் கசப்பேற்பட்டு விட்டதம்மா. எங்கேயாவது போனால் தேவலை போலிருக்கிறது' 'நர்ஸிங்ஹோ'மின் பொறுப்பை யாரிடமாவது கொடுத்து விட்டு... என்று அவர் முடிப்பதற்குள் மகனின் சோகத்தின் காரணத்தையறிந்து கொண்ட கனகவல்லி அம்மர்ள்; தம்பி! உன்னால் முடியாதென்றால் நானாவது பூஞ்சோலைக்குப் போய் அவளைக் கெஞ்சிக் கூட்டி வருகிறேன். நீ இப்படி உருகி ஓடாகப் போகிறதைக் காண என்னால் சகிக்கவில்லை அப்பா'' என்றாள். அவளுடைய கண்களில் நீர் ததும்பியது.

'அவள்' என்றதும் சுந்தரவதனம் ஹாலின் முக்கியமான இடத்தில் மாட்டப்பட்டிருந்த புவானியின் போட்டோவை

நோக்கினார். பெரிதாக்கப்பட்டிருந்த அந்தப் போட்டோவில் சிரித்த முகத்துடன் பவானி தென்பட்டாள். அவளுடைய அழகிய தோற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரவதனம், ''அம்மா! அவள்தான் என்மேல் பிரியமில்லாமல் போய்விட்டாளே, நீ போய் அழைத்து என்ன பிரயோஜனம்? 'என்னை அழைத்துப் போக முயற்சிக்க வேண்டாம்' என்று கண்டிப்பாக எழுதியிருக்கிறாள். நீ போய் எனக்காக அவமானப்பட வேண்டாம், அம்மா!'' என்று தடுமாற்றத்துடன் மொழிந்தார்.

''விளையாட்டைப்போல அவள் போய் ஆறுமாதத்துக்கு மேலாகிறதேயப்பா, நீயும் ஒரு கடிதாசுகூட அவளுக்குப் போடமாட்டேங்கறே! அவளும் எழுதுவதில்லை. அறியாப் பெண் கோபத்தில் ஏதோ உளறியதைப் பிடித்துக்கொண்டு நீ என்னையும் அங்கே போக வேண்டாம் என்கிறே. என் பெத்த மனம் உன் கஷ்டத்தைப் பார்த்துப்படுகிற அவஸ்தை உனக்குத் தெரியுமா, தம்பி!'' என்று கனகவல்லி அம்மாள் துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்னாள்.

''அம்மா, என்னால் உனக்கும் துக்கந்தான். நான் என்ன செய்வேன்!'' என்று பெருமூச்சு விட்டார் சுந்தரவதனம்.

## 33

'ஏம்மா? அய்யா வந்து எப்ப உங்களைக் கூட்டிப் போகப் போறாங்க?'' என்று வேலைக்காரி மாரியாயி தரையைப் பெருக்கிக்கொண்டே பவானியைக் கேட்டாள்.

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று பவானிக்கு மனம் கூசியது, ''வருவார்!'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு மேலே அது விஷயமாகப் பேச இஷ்டப் படாதவளாக அவ்விடத்தை விட்டு பங்களா வாசல்புறம் வந்து நின்றாள்,

சிவஞானம் பிள்ளை, காலை வேலைகளில் தோட்டப் பக்கம் வழக்கமாக உலாவச் செல்பவர், அன்று திரும்பி பங்களாவிற்குள் வந்து கொண்டிருந்தார். தோட்டக்காரன்



மனைவி பெருந்தேவி இரண்டு நாட்களுக்கு முன்புதான் குழந்தையொன்றைப் பறிகொடுத்தவள் கணவனுடன் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு அவனுக்கும் புகையிலை கிள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். எஜமானனைக் கண்ட தோட்டக்காரன் புகையிலையை மனைவி கையிலிருந்து வாங்கி வாயில் அடைத்துக்கொண்டு செடிகளுக்கு எருப்போடுவதில் முனைந்தான்.

வாயிலில் நின்றுகொண்டு அவனையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த பவானி தன் தந்தையைக் கண்டதும், ''அப்பா! மனிதர்களில் முக்கால்வாசிப் பேர் உணர்ச்சியற்ற மிருகங்கள்'' என்றாள்.

''சிவஞானம்பிள்ளை தமது மகளின் புதிரை அறியாமல் ''நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே, பவானி?'' என்று கூறிய வண்ணம் சிரித்துக்கொண்டு ஒரு பெஞ்சியின் மீது உட்கார்ந்து கொண்டார்.

''குழந்தை இறந்து இரண்டு நாட்கள்கூட ஆகவில்லை. அதற்குள் தோட்டக்காரன் மனைவி துக்கத்தையெல்லாம் மறந்து கணவனுடன் நிம்மதியாகப் பேசுவதைப் பாருங்கள்! இவர்கள் எல்லாம் மனிதர்களா, அப்பா?'' என்று மனக்கசப்புடன் பவானி மொழிந்தாள்.

மகளுடைய முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த சிவஞானம்பிள்ளை புன்னகையுடன், ''குழந்தை குழந்தை என்று உயிரையே விட்டால் பிறகு அவள் தன் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகள் இல்லையா? அவர்களுக்கு மட்டும் பிள்ளை போன துக்கம் இருக்காதா? அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு கணவனையும் அந்தத் துக்கத்திலிருந்து மீட்க முயற்சிக்கிறாள் அவள். அவளை எப்படி உணர்ச்சியற்ற மிருகம் என்று சொல்ல முடியும்? நாம் செய்வதுதான் சரி என்று நாம் நினைப்பது தப்பல்லவா? மேலும், உணர்ச்சி உணர்ச்சியென்று நாம் அவைகளுக்கு அடிமையாகிவிட்டால் சாதாரண உலகில் வாழ முடியுமா? உணர்ச்சிப் பித்தர்கள் சாதாரண வாழ்க்

கையில் ஒரு நாளும் அமைதியைக் காணமாட்டார்கள். அதனால் நாம் அதிகமாக உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் புத்தியை உபயோகப்படுத்தி வாழ்க்கையை வகுத்துக் கொள்ள வேண்டும், இல்லையா பவானி?'' என்று அவர் சொன்னார்.

தந்தை சிரித்துப் பேசினாலும் அவர் தன்னை குறித்துத் தான் ஏதோ சொல்லுகிறார் என்பதை உணர்ந்த பவானியின் முகம் குபீரென்று சிவந்தது. அப்பாவிற்குக் கூடத் தன் உண்மையான மனநிலை விளங்கிவிட்டதா என்று மனம் பதைபதைத்தவளாய் மேலே பேசாது உள்ளே சென்று விட்டாள்.

பவானி திடீரென்று ஒருநாள் பூஞ்சோலையில் டாக்ஸி ஒன்றில் வந்து இறங்கியதைக் கண்ட அத்தை அம்மாளும் சிவஞானம் பிள்ளையும் திகைத்துப் போய்விட்டனர்.

கொஞ்ச நாள் பிறந்தகத்திலிருந்து தன் மகன் பிரிவை மறக்க உத்தேசித்து வந்திருப்பதாக பவானி அத்தை அம்மாளிடமும் தந்தையிடமும் கூறினாள். அவள் வந்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இனியும் அவர்கள் பவானியின் பேச்சை நம்பிக்கொண்டிருப்பார்களா?

''உண்மையை அறிந்தால் அப்பா என்ன சொல்வாரோ?'' என்று கலங்கிய மனதுடன் பவானி உள்ளே நுழைந்தவள், வேலையாள் நாச்சியப்பன் அன்று வந்த கடிதங்களை ஹால் மேஜைமீது வைத்துவிட்டுப் போவதைக் கண்டு, அவைகளைக் கிண்டிப் பார்த்தாள். தப்பித் தவறி தன் விலாசமிட்ட கடிதம் 'அவ'ருடைய சாய்ந்த கையெழுத்துக்களுடன் அதில் இருக்கும் என்று அவள் பேதை மனம் எண்ணியது.

அப்பாவிற்கு வந்திருந்த கடிதங்கள் பல இருந்தன. அத்தை அம்மாளுக்குக்கூட யாரோ எழுதியிருந்தார்கள். ஆனால் பவானி தேடிய கடிதம் அதில் இல்லை. அவர் அவளுக்குக் கடிதம் எழுதவேயில்லை.

அவள்தான் அவரை வெறுப்பதாகச் சொன்னாளே! வெறுக்கும் ஒரு புருஷனிடமிருந்து கடிதத்தை ஏன் அவள் எதிர்பார்க்க வேண்டும்?



என்ன முயற்சித்தாலும், இதென்ன ஆச்சரியம்! பவானியினால் அவரை வெறுக்கவே முடியவில்லையே! அவரை நினைக்கும்போதெல்லாம் கரைகாணாத அந்த இன்ப உணர்ச்சி தானாகவே அவள் மனதில் தோன்றுகிறதே! சுந்தரவதனத்தை வெறுப்பது இந்த ஜன்மத்தில் முடியாது போலிருக்கிறது!'' என்று பவானி பெருமூச்சுவிட்டாள்.

''கட்டாயம் அவர் என்னை நேசிக்கவில்லை என்று தான் புலப்படுகிறது. என்மீது உயிராக இருப்பதுபோல் அவர் நடித்தாரே ஒரு காலத்தில்! உண்மையாக காதலித்திருந்தால் நான் சொன்னதையெல்லாம் மன்னித்துவிட்டு ஓடோடியும் வந்து என்னை அழைத்துப் போயிருப்பார் அல்லவா? ஆனால் அவருக்கென்ன கவலை? இப்பொழுது எந்த நர்ஸுடன் காதல் நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறாரோ? சுயநலக்கார மனிதர், கல்நெஞ்சர்!...என்னதான் முயற்சித்தாலும் அவரை மறக்க முடியவில்லையே! நானே போய் அவர் பாதங்களில் விழுந்து ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வேண்ட முடியுமா? பெண்மைக்கே இழிவல்லவா அது!'' என்று பலவாறு சிந்தித்த பவானிக்கு அழுகை வந்துவிட்டது.

ஹாலுக்குள் அந்தச் சமயம் நுழைந்த அத்தை சிவகாமி அம்மாள் முகத்தில் கோபம் தாண்டவமாடியது.

''நான்தான் கேட்கிறேன், பாப்பா! நீ இங்கே வந்து ஆறு மாசமாகப் போகிறதே. அவர் எப்ப உன்னை வந்து அழைச்சுக் கொண்டு போகப் போகிறாராம்?'' என்று அவள் படபடவென்று கேட்டாள்.

''தெரியாது, அத்தை!'' என்று பவானி ஹீனமான குரலில் பதில் அளித்தாள்.

''பாப்பா, நீ எனக்குக் காது குத்த வேண்டாம். நீ வந்து இங்கே இருப்பதன் அர்த்தம் தெரியாதுன்னு நினைக்காதே. நீங்க ஒருத்தருக்கொருத்தர் கடுதாசி போட்டுக் கொள்கிற லட்சணத்தைத்தான் நான் பார்த்துக்கிட்டு வரேனே? அவருக்கிட்ட சண்டை போட்டுக்கொண்டு

வந்திருக்கேன்னு எனக்குத் தெரியும்'' என்று அத்தை கோபமாகப் பேசினாள்.

''ஆமாம், அத்தை! அதற்கென்ன செய்யச் சொல் றீங்க?'' என்று பவானி கோபமும் அவமானமும் தாங்காத வளாய்ப் பதிலுக்குக் கத்தினாள்.

''என்ன செய்யச் சொல்வதா? ஊருக்குப் போய்ச் சேர். 'பூஞ்சொலையார் மகள் புருஷனை விட்டு ஓடினாள்' என்ற பழிச்சொல் எங்களுக்குப் பாக்கி வேணுமா?'' என்று அத்தை சிவகாமி அம்மாள் கேட்டாள்.

''அவருக்கு என்னைக் கண்டால் பிடிக்கவேயில்லை அத்தை. அதனால்தான் நான் வந்துவிட்டேன்'' என்று பவானி சொல்லிவிட்டுத் தேம்பினாள்.

''அவருக்குப் பிடிக்காட்டியும் நீ போய் இருக்கவேண்டி யதுதான். நீ இப்படி அவரை விட்டுவந்த சங்கதி நம்ப பந்து ஜனங்களுக்குத் தெரிந்தால் கைகொட்டிச் சிரிப்பாங்களே! நாங்க ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கிறோம் என்று சொல்லி விட்டு அவரைக் கட்டிக் கொண்டாயே. இவ்வளவு தானோ உங்கள் காதல் கீதல் எல்லாம்! பிடிக்குதோ பிடிக்கல லையோ, நீ போய் அங்கே சேரவேண்டியது, அவ்வளவு தான்?'' என்று அத்தை ஒரு பிரசங்கம் செய்தாள். அவளுக்கு மூச்சுத் தடுமாறியது.

''அவர் கூப்பிடாததற்கு முன் போனால் அவமான மில்லையா அத்தை?'' என்று பவானி தேம்பினாள்.

''வேடிக்கைதான்! எங்க வீட்டுப் பெண்ணை வெளியே துரத்த அவருக்கு என்ன தைரியம்! நான் போய் கேட் கிறேன் அந்தக் கனகவல்லி அம்மாளை! மருமகளை அடிச்சு விரட்டணும்மின்னுதான் எங்க பெண்ணை உன் பிள்ளைக் குக் கட்டி வைச்சியான்னு கேட்கிறபடி கேட்டால் தானே நடுங்கிக்கொண்டு உன்னைக் கூட்டிப் போகச் செய்கிறேன் பார்'' என்று அத்தை ஆக்ரோஷம் மிகுந்தவளாய் எழுந் திருந்தாள்?

அவள் எங்கேயாவது மின்னூருக்குப் புறப்பட்டுவிடப் போகிறாளே என்று பயந்த பவானி, ''எனக்கு அவரைக்



கண்டால் பிடிக்கவில்லை. இனி அவரோடு நான் வாழப் போவதில்லை'' என்று கத்தினாள்.

திடுக்கிட்ட சிவகாமி அம்மாள், ''பாப்பா! என்ன சொன்னே?'' என்று கேட்டாள்.

''நீங்கள் போய் அவரைக் கூட்டிக்கிட்டு வந்தால் நான் ஏதாவது விஷத்தை எடுத்துச் சாப்பிட்டு விடுவேன். அவ ரோடு இனிமேலே நான் இருக்க முடியாது!'' என்று பட படத்துக்கொண்டே மாடிப் பக்கம் சென்று விட்டாள் மவானி.

அழுது கொண்டே பெட்டியைத்திறந்த பவானி புடவை களின் அடியிலிருந்த 'வானவில்' வர்ண ஸில்க் புடவையைக் கையிலெடுத்தாள். அன்று ஓடி வந்த அவசரத்தில் அவள் பெட்டியில் தனது புடவைகளில் சிலவற்றை எடுத்துப் போட்டுக் கொண்டவள் தவறிப் போய் அவளுக்காக அவர் ஒரு காலத்தில் வாங்கிக் கொடுத்த அந்தப் புடவையையும் கொண்டு வந்து விட்டாள்.

டில்லிக்கு வைத்திய விஷயமாக ஒரு சமயம் போயிருந்த சுந்தரவதனம் தமது மனைவிக்கு வாங்கி வந்த புடவை அது. முன்பின் புடவை வாங்கியறியாத அவர், கண்களைப் பறிக்கும் பல வர்ணங்கள் கலந்து அசம்பாவிதமான தோற்றம் கொண்ட ஒரு புடவையை அதிகப் பணம் கொடுத்து வாங்கி வந்திருந்தார்.

சில புருஷர்களைப் போலன்றிராமல் சுந்தரவதனம் ஸ்திரீகளுடைய புடவை, நகைகள் முதலிய நாகரிகத்தைப் பற்றி ஒன்றும் அறியாத வெள்ளை மனம் படைத்தவர் என்பதைப் பற்றி பவானிக்கு எப்பவும் அவர்மீது கொஞ்சம் பெருமையுண்டு. தனது கணவர் அசட்டுத்தனமாக வாங்கி வந்த அந்த விசித்திர வர்ணப் புடவையை பார்த்துச் சிரித்துக் கொண்டு, ''உங்களை யார் புடவை வாங்கி வரச் சொன்னது? பணத்தைக் கொட்டிப் புலி வேஷம் மாதிரி ஒரு வர்ணப் புடவையை வாங்கி வந்திருக்கிறீர்களே! உங்க ளைப் போல ஏமாந்தவர்கள் வரட்டுமென்று கடைக்காரன்

இது மாதிரிப் புடவையை வைத்திருந்தான் போலும்!'' என்றாள் பரிகாசமாக.

''அடுத்தமுறை வாங்கும்போது பார் என் சாமர்த்தியத்தை. இதுதான் முதல் தடவை நான் புடவைக் கடைக்குள் நுழைந்தது. முதல் முயற்சிக்கு இவ்வளவு வெற்றி போதாதா?' என்று 'அவரும் கூடவே குழந்தை போல் வெகுளியாய்ச் சிரித்தார்.

அந்தச் சம்பவத்தை நினைத்துக்கொண்ட பவானி அந்தப் புடவையைத் தன் மார்புடன் வைத்துக்கொண்டு விம்மினாள். ''ஐயோ! அவர் ஒரு காலத்தில் எப்படி என்னைக் காதலித்தார்? அவரை இன்னொரு ஸ்திரிக்கு அர்ப்பணம் செய்து விட்டு வந்துவிட்டோமே'' என்று அவள் மனம் வெதும்பியது.

## 34

லக்ஷ்மிபுரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய விஷயங்கள் இனி கொஞ்சம்தான் இருக்கின்றன. வனஜா மறைந்த பிறகு முத்துப்பிள்ளை 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என்ற முடிவிற்கு வந்துவிட்டார். 'குடும்ப வைத்திய'னையும் தமது வைத்தியப் பெட்டியையும் தூக்கிக் கொல்லைக் குப்பைமேட்டில் வீசி எறிந்துவிட்டுத் தாயுமானவர் பாடல் புஸ்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு கதற ஆரம்பித்துவிட்டார். தாங்கமாட்டாத துயரத்தை அடைந்து தவிப்பவர்கள் உள்ளம் பகவானைத் தவிர வேறு யாரிடம் சரணாகதி அடைய முடியும்?

ஷண்முகம் அன்று சென்னைக்குப் பிரயாணமாகப் பெட்டிப் படுக்கை முதலியவைகளைத் தயார் செய்து கொண்டிருந்தான்.

''அதுதான் போச்சு, தம்பி. அந்தப் பொண்ணு இந்த வீட்டில் விளக்கேத்தி வைக்க நாம் கொடுத்து வைக்கலை. அதுக்காக ஒரே முட்டாக நீ சன்யாசியாகப் போய்விட முடியுமா? தம்பி ஷண்முகம், இனிமேலாவது உனக்கிஷ்டமான பெண்ணைக் கட்டிக் கொண்டு வீடும் விளக்குமாய் இரு, அப்பா, எனக்கு என்ன, சின்னஞ்சிறு வயசா? கடைசி காலத்தில் இந்தத் துக்கமெல்லாம் அனுபவிக்கணுமின்னு என் தலையெழுத்தாப்பா''' என்று கண்ணீர் விட்ட வண்ணம் அபிராமி அம்மாள் தன் மகனிடம் சொன்னாள்.



''அம்மா! இனிமேலேகூட எனக்குக் கல்யாணம் வேண்டுமா! வனஜாவைப்போல் இன்னொரு பெண் உலகத்தில் இருக்கிறாளா? அவள் போய் ஒரு மாதங்கூட ஆகவில்லை. நீ என்னிடம் கல்யாணத்தைப் பற்றிப் பேசாதேயம்மா! இன்னிக்கு மெட்ராஸ் போகிறேன். ஆகாயப் படையிலே சேருவதற்கு முன் வந்து பார்க்க வேண்டுமென்று கடிதம் வந்திருக்கு. அதற்காகப் போகிறேன்'' என்று துக்கத்துடன் ஷண்முகம் சொன்னதைக் கேட்ட அபிராமி அம்மாள் திடுக்கிட்டுப் போனாள்.

''தம்பி, சண்டையிலா சேரப் போகிறாய்? வேண்டாம்! எனக்கு இருக்கிறது ஒரே பிள்ளையப்பா. வனஜாவோட வாழ்வெல்லாம் போச்சுன்னு எண்ணாதே, தம்பி! நான் தள்ளாத வயசிலே என்ன செய்வேன்?'' என்று புலம்பினாள்.

''என்னைத் தடுக்காதே, அம்மா! திரும்பி வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்!'' என்று வெதும்பிய மனத்துடன் ஷண்முகம் தீர்மானமாகச் சொன்னான்.

முத்துப்பிள்ளையும் அபிராமி அம்மாளும் எவ்வளவோ தடுத்தும், ஷண்முகம் பிடிவாதமாகச் சென்னைக்குப் புறப்பட்டுவிட்டான்.

போகு முன்பு ஒரு கடிதத்தை வில்லியத்திற்கு எழுதித் தபாலில் சேர்த்தான்.

''என் பிரியமுள்ள வில்லியம்,

''நீயும் உன் மனைவியும் வனஜாவின் பிரிவிற்கு வருந்துவதாக எழுதியிருந்த அனுதாபக் கடிதத்தைப் படித்தேன். என் நிலைமைக்காக நீங்கள் வருந்துவதனால் என்ன பிரயோஜனம்? எனக்கு வாழ்க்கையே மிகவும் கசந்து போய்விட்டது.

பம்பாய் வேலையை ராஜினாமா செய்துவிட்டேன். அங்கிருந்து புறப்படுமுன் இனியாவது வனஜாவுடன் இன்ப வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற பகற் கனவுடன் பெரும் நம்பிக்கை கொண்டவனாய் வந்தேன். என் ஆருயிர் வனஜாவை இழந்த மகத்தான துக்கத்தைத் தாங்கிக்கொண்டு லக்ஷ்மிபுரத்தில் இருக்க என் மனம் சம்மதிக்கவில்லை. ஆகவே யுத்தத்தில் சேர்ந்தாலாவது துக்கத்தை மறக்கலாம் என்ற நம்பிக்கையுடன் இன்று லக்ஷ்மிபுரத்தை விட்டு சென்னைக்குப் புறப்படுகிறேன்.

வாழ்விலே நான் சாதித்த காரியங்கள் என்ன? வனஜாவின் பேதை இதயத்தை ஒடித்தேன், அவ்வளவுதான் நான் ஒரு பாவி! இன்று என் மனதையும் ஒடித்துக்கொண்டு துக்கச் சுமையை தாங்க மாட்டாதவனாய் ஊரை விட்டு ஓடப் பார்க்கிறேன்.

வில்லியம்! உலகத்தில் மூன்று பெயர்களை நான் என் இதயத்தில் வைத்து என்றும் பூஜிப்பேன். ஒன்று வனஜா, மற்றிரண்டு பேர், நீயும் உன் மனைவியும். மறுபிறப்பில் எனக்கு நம்பிக்கையுண்டு. ஏழேழு ஜென்மத்திற்கும் வனஜாவே மனைவியாகவும், உன் மனைவி என் சகோதரியாகவும், நீயே என் நண்பனாகவும் இருக்க என்மனம் ஆசைப்படுகிறது. துக்கத்திலே தத்தளிக்கும் இந்தப் பாவியின் மனம் சாந்தமடைய நீங்கள் இருவரும் எனக்காகக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளவும்.

நான் யுத்த முனையினின்று திரும்பி வந்தால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு
உங்கள் அன்புமிக்க சினேகிதன்,
ஷண்முகம்

இந்தக் கடிதத்தைப் படித்தால், கட்டாயம் வில்லியம் தம்பதிகள் மனமுருகிப் போவார்கள்.



துக்கத்தின் உருவமாகச் சென்னைக்குப் புறப்பட்ட தன் மகனைக் கடைசியில் வழியனுப்பிவிட்டு வந்த அபிராமி அம்மாளுக்கு உலகமே சூன்யமாகத் தென்பட்டது. பிரதி சனிக்கிழமை தோறும் லக்ஷ்மிபுரத்து சிவன் கோயிலில் வீற்றிருக்கும் சனீச்வர பகவானுக்கு அவள் விளக்கு ஏற்றி வருகிறாள். துக்கக் கடலிலே தத்தளிப்பவர்கள் நம்பிக்கை என்ற துரும்பைப் பிடித்துக் கொண்டதும் மனதில் சாந்தி தானாகவே ஏற்பட்டுவிடுகிறது.

''ஷண்முகம் திரும்பி வருவான்!'' என்ற நம்பிக்கையை அபிராமி அம்மாள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்.

## 35

அத்தையிடம் கோபமாகப் பேசித் தனது தீர்மானத்தைத் தெரிவித்துவிட்ட பவானிக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. நாளாக நாளாக இனி என்ன செய்வோம் என்ற எண்ணம் அவள் மனதை அரித்துக் கொண்டிருந்தது. அத்தை சிவகாமி அம்மாளுக்கு பவானி நடந்துகொண்ட விதம் கட்டோடு பிடிக்கவில்லை. 'தத்தாரிப் பெண்! பெரியவர்கள் பேச்சைக் கேட்காமல் குட்டிச்சுவராய்ப் போகட்டும்' என்று பவானிமீது கொண்ட கோபத்தில் அத்தை அம்மாள் முன்போல பவானியிடம் சகஜமாகப் பேசுவதையே விட்டுவிட்டாள்.

குற்றவாளியைப் போல் அந்த வீட்டில் தங்கியிருக்க பவானிக்கு அருவருப்பாக இருந்தது. சிவகாமி அம்மாளாவது அவளிடம் மறுபடியும் சுந்தரவதனத்தைப்பற்றி ஏதாவது பேசிச் சண்டைக்கிழுத்தால் கூடத் தேவலை என்றிருந்தது அவள் மனம். அவள் தந்தை சிவஞானம்பிள்ளையும் பவானியிடம் மனதைவிட்டு அவள் விஷயமாகத் தமது அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லாமலே இருந்தார். சுந்தரவதனமும் அவளது பிரிவை லட்சியம் செய்வதாகத் தோன்றவில்லை. பூஞ்சோலையிலேயே அவள் எத்தனை

நாட்கள் இருக்க முடியும்? சிந்தித்துச் சிந்தித்து மனம் கலங்கிப்போன பவானிக்கு கடைசியில் ஒரு யோசனை தோன்றியது. காவேரிக்கு அக்கரையில் ஆலந்தூரில் பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்றை அந்த ஊர் ஜமீன்தார் ஆரம்பித்து வைத்திருந்தார். அதைத் திறமையுடன் நடத்த உபாத்தியாயனிகள் தேவை என்று கொஞ்ச நாட்களுக்கு முன்பு பவானி பத்திரிகையொன்றில் படித்தாள். 'நாம் ஏன் அந்த வேலைக்கு மனுப்போடக் கூடாது! பி.ஏ. பட்டம் பெற்றிருக்கிறோம். எங்கேயாவது கௌரவமாக இருக்க வேண்டும், அவ்வளவுதானே?'' என்று எண்ணினாள்.

விடுவிடுவென்று அந்த விளம்பரம் வந்த பத்திரிகையைத் தேடி அந்த விலாசத்திற்கு ஒரு மனு எழுதினாள். அன்று தபாலில் அதை அனுப்பிவிட்டு உட்கார்ந்திருந்தவள் முன்னால், நாச்சியப்பன் அன்று தபாலில் வந்த ஒரு கவரைக் கொண்டு வந்து கொடுத்தான். கையெழுத்திலிருந்து அது சுந்தரவதனத்திடமிருந்து வரவில்லையென்று ஊகித்துக் கொண்டு, ஆவல் மிகுதியினால் படித்துப் பார்த்தாள்.

''அன்புள்ள பவானி,

தாங்கள் எப்பொழுது மின்னூருக்கு வருவதாக அபிப்ராயமோ தெரியவில்லை. தங்களைத் தேடிக் கொண்டு இரண்டு தடவைகள் பங்களாவிற்குப் போயிருந்தேன். பூஞ்சோலைக்குப் போயிருப்பதாகத் தங்கள் மாமியார் சொன்னார்கள். நமது 'நர்சிங்ஹோ'மில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைப் பற்றித் தாங்கள் அறிவீர்கள் என்று நினைக்கிறேன். 'ஆபரேஷன்' கேசுகளில் உதவி செய்வதில் திறமை வாய்ந்தவளான ''மார்க்கரட்'' என்னும் நர்ஸ் சென்ற மாதம் கல்யாணம் செய்து கொண்டு வேலையை விட்டு விலகிப் போய்விட்டாள். அவளுடைய ஸ்தானத்தில் இப்பொழுது என்னை அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பிரசவக்



கேஸ்களை கவனிப்பதற்கென்று இரண்டு மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட தனி வார்டு போன வாரம்தான் திறக்கப்பட்டது. அதை நன்றாகக் கவனித்து நடத்த 'தமயந்தி' என்று ஒரு லேடி டாக்டர் வந்து வேலையை ஒப்புக் கொண்டிருக்கிறார். அவரை டாக்டர் சுந்தரவதனத்திற்கு மிகவும் பிடித்திருக்கிறது. சிரித்துப் பேசும் சுபாவமுடைய அந்த அம்மாளை யாருக்குத்தான் பிடிக்காது? நீங்கள் எப்போது வருகிறீர்கள்? உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு தங்கள் அன்புள்ள,
நர்ஸ் ஜானகி.''

கடிதத்தைப் படித்த பவானியின் மூளை கிறு கிறுத்தது. மார்க்கரட் என்ற நர்ஸ் அவ்விடத்தை விட்டகன்றாள் என்று படித்தவுடன் அவள் அடைந்த அமைதி, புதிய லேடி டாக்டர் ஒருத்தி வந்திருக்கிறாள்; அவளை அவருக்குப் பிடித்திருக்கிறது என்பதை அறிந்தவுடன் கலைந்து விட்டது.

'தமயந்தி, மிகவும் அழகான பெயர்தான். பெயரைப் பார்த்தால் கொஞ்சம் அழகானவளாக இருப்பாள் போலத்தான் இருக்கிறது. பவானியைவிட இன்னும் கவர்ச்சிகரமான தோற்றமுடையவளாக அவள் இருக்க வேண்டும். சுந்தரவதனர் மிகவும் கெட்டிக்காரர்தான். அழகுள்ள ஸ்திரீகளாகவேதான் பார்த்துத் தமது வலையில் வீழ்த்திக் கொள்கிறார்?' என்று எண்ணிப் பல்லைக் கடித்த பவானியின் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தது. அவளுடைய மனம் பொறாமையினால் குமுறியது. படுக்கையில் குப்புற விழுந்து தேம்பித் தேம்பி இருதயம் வெடிக்கும்படி அழுதாள்.

## 36

ஆலந்தூர் பெண்கள் பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயினி வேலையை பவானிக்குத் தருவதாகவும் உடனே அவள் புறப்பட்டுவந்து வேலையை ஒப்புக்கொண்டால் கோடை காலத்திற்குப் பிறகு திறக்கப்போகும்

பள்ளிக் கூடத்தை நிர்வகிக்கும் பொறுப்பைப்பற்றி நன்றாக அறிந்து கொள்ள சௌகரியமாயிருக்குமென்றும் தனக்கு வந்த கடிதத்தை பவானி திரும்பத் திரும்பப் படித்தாள். டாக்டர் சுந்தரவதனத்தின் மனைவி என்றதால் கடைசியில் வாழ்நாள் முழுவதையும் குப்பைக் காட்டில் பள்ளிக்கூட வாத்தியாரம்மாளாகக் கழிக்க நேரிட்டதே என்ற துக்கம் அவள் மனதைப் பிய்த்தெடுத்தது.

'என்னதான் அவள் தப்பு செய்திருந்தாலும், மனைவி மீது கொஞ்சமாவது அபிமானமிருந்தால் சுந்தரவதனம் தானாகவே பூஞ்சோலைக்கு வந்து அவளை அழைத்துக் கொண்டு போயிருப்பார் அல்லவா? லட்சியம் செய்யாத மனிதருடைய காலடியில் போய் விழ அவள் நிலைமை அப்படி மோசமாகி விட்டதா என்ன? வாழ்நாட்களே இதனால் வீணானாலும் சரி, அவரைப் போய் வேண்டுவதில்லை. பாசமற்ற மனிதர் அவர். அவருடன் நிரந்தரஸ்பாவம் உடைய எந்த ஸ்திரீதான் வாழ்வாள்?' என்றெல்லாம் பலவாறு நினைத்த பவானி ஆலந்தூர் வேலையை ஒப்புக் கொள்வதைப்பற்றிச் சிவஞானம் பிள்ளையிடம் யோசனை கேட்பதென்ற முடிவுக்கு வந்தாள்.

புஸ்தகம் ஒன்றில் மூழ்கித் தமது நினைவின்றியிருந்த பிள்ளையிடம் பவானி வந்து நின்றாள். சம்பாஷணையை எப்படி ஆரம்பிப்பது என்று முதலில் மனம் கூசிய அவள், கடைசியில் ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தந்தையிடம் தனக்கும் சுந்தரவதனத்திற்கும் இடையே நடந்த எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றிச் சொல்லி விட்டு, தான் கடைசியில் உத்தேசித்திருக்கும் உபாத்தியாயினி வேலையைப் பற்றியும் கூறி முடித்தாள்.

மௌனமாக மகளுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சிவஞானம் பிள்ளை, ''உனக்கும் உன் புருஷனுக்கும் மனஸ்தாபம் என்பதை நீ வந்த அன்றே நான் அறிவேன். காலப்போக்கில்' சரியாகிவிடும் என்று நான் இவ்வளவு நாட்கள் சும்மா இருந்தேன்'' என்று சாந்தமாகப் பதிலளித்தார். பவானிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தெரிந்து கொண்டுதானா அதைப் பற்றிப் பேசாமலிருந்தார் அவர்?



''அவர் என்னை உள்ளே தள்ளிக் கதவைப் பூட்டிக் கொண்டு போய் மிகவும் கேவலமாக நடத்தினார் அப்பா! என்னிடம் கடுமையாக அவர் நடந்து கொள்ளும்படி நான் என்ன செய்து விட்டேன்?'' என்று கேட்டுக்கொண்டே பவானி துக்கந் தாளாமல் விம்மினாள்.

''காரணமின்றி அவர் அப்படி எல்லாம் செய்யமாட்டார் என்று நினைக்கிறேன். பவானி உன் புருஷர் ரொம்பப் படித்த மேதாவியாயிற்றே. ஸ்திரீகளை இம்சை செய்யும் கசடர்கள் வகையில் சேர்ந்தவர் இல்லையே அவர்'' என்று பிள்ளை சாவதானமாகக் கூறினார்.

பவானிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது! அப்பாவும் அவர் கட்சியில் சேர்ந்துகொண்டு பேசுகிறாரே.

''கண்ணனைப் பறிகொடுத்துவிட்டு நான் கலங்கிக் கொண்டிருந்தேன். என் மன நிலையை அறிந்துகொண்டு என்னைத் தேற்ற முயற்சிக்காமல் அவர் என்னைக் கொடுமையாக நடத்தினார். என் உணர்ச்சிகளை அலட்சியம் செய்தார். இன்று அதெல்லாம் நினைத்தால்கூட என் மனம் பதறுகிறது' என்று சொல்லிவிட்டு பவானி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

துக்கமே உருவாகி மனம் நொந்து போய்த் தமது எதிரில் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் ஒரே அருமைப் புதல்வி பவானியைக் கண்டு பிள்ளையின் மனம் கசிந்து விட்டது. ''பவானி, போன விஷயத்தைக் குறித்து வருத்தப்படாதேயம்மா, நமக்கு அவ்வளவுதான் பிராப்தம்!'' என்று அவளைத் தேற்ற முயன்றார்.

''அப்பா! கண்ணன் போன துக்கத்தின் வடு இன்னும் என் இதயத்தில் ஆறவில்லையே'' என்று பவானி அரற்றினாள்.

''காலக்கிரமத்தில் இதைவிடப் பெரிய துக்கமெல்லாம் ஆறிவிடும், பவானி! நீ எவ்வளவோ புத்திசாலிப் பெண்

என்று நான் நினைத்திருந்தேன். அசட்டுத்தனமாகப் பேசுகிறாயே. உன் தாயார் என்னைத் தவிக்க விட்டுப் போனாளே, அப்பொழுது என் மனம் எவ்வளவு பாடுபட்டிருக்குமென நினைக்கிறாய்? நளினா என்று யாராவது சொன்னால் கூட எனக்கு அப்பொழுதெல்லாம் கண்களில் நீர் ததும்பிவிடும். ஆனால் இப்போது நளினா என்பவள் இறந்த மனைவி என்ற ஒரு மரியாதையான உணர்ச்சியைத் தவிர அவளை நினைக்கும்பொழுது துக்கம் ஏற்படுவதில்லை. இந்த மனமாற்றத்தின் மர்மம் என்னவென்று நினைக்கிறாய்? காலந்தான்! ஆகையினால் பவானி, நீயும் காலப்போக்கில் துக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்துவிடுவாய்'' என்று சிவஞானம் பிள்ளை சாந்தமாகச் சொல்லிவிட்டுத் தன் மகளைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

''என் மனதில் அமைதியே இல்லை அப்பா. எங்கேயாவது வேறு இடத்திற்குப் போனாலாவது மனதில் சாந்தி ஏற்படுமென்று ஆலந்தூர் உபாத்தியாயினி வேலையை ஒப்புக்கொள்ளலாமென்றிருக்கிறேன் அப்பா!'' என்று பவானி கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கூறினாள்.

''வேறு எங்கேயாவது போய்விட்டால் மட்டும் மனதில் சாந்தி ஏற்பட்டுவிடுமா பவானி? மனச் சாந்தி வேண்டும். மனச் சாந்தி வேண்டும் என்று நீ பதறிக்கொண்டு, ஆசிரமங்களுக்கும் கோயில்களுக்கும் சென்றால், ஒருக்காலும் மனதிற்கு அமைதி ஏற்படாது. எப்பொழுது நீ மனச் சாந்தி என்பதைக் குறித்துச் சிந்திப்பதை நிறுத்துகிறாயோ, அன்று தானாகவே அது உன்னை வந்தடையும். உபாத்தியாயினி வேலையை ஏற்பதனால் உனக்கு என்ன பிரயோஜனம்?'' என்றார் பிள்ளை சாந்தமாக.

''நாலு பச்சைக் குழந்தைகளின் முகங்களைப் பார்த்தாவது என் துக்கத்தை மறக்க முயற்சிப்பேன். என்னால் பிறருக்கும் ஏதாவது உபயோகம் இருக்கட்டுமே'' என்று பவானி கண்டிப்பான குரலில் கூறினாள்.



''நீ சுந்தரவதனத்திடம் திரும்பப் போவதில்லை என்று தீர்மானம் செய்துவிட்டாயாக்கும்!'' என்று தந்தை மகளைக் கேட்டார்.

''இல்லை அப்பா, அவர் என்னை அலட்சியம் செய்கிறார். மேலும் அவர் நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை. இரண்டொரு தடவைகள் அவர் ஒரு ஆங்கிலோ இந்திய நர்ஸைத் தமது காரில் அழைத்துச் செல்வதை என் கண்களாலேயே பார்த்தேன். அதைப்பற்றிக் கேட்டதற்கு, கேஸ் விஷயமாக அவளை அழைத்துப் போவதாக ஏதோ சொல்லி மழுப்பி விட்டார். ஒரு நாளைப்போல் இரவு சரியான நேரத்தில் வருவதில்லை...'' என்று பவானி மேலே கூற முடியாமல் விம்மினாள்.

''பவானி ஒரு சமயம் அவர் சொன்னது நிஜமாக இருக்கலாம். கேஸ் விஷயமாக நர்ஸை வெளியே கூட்டிச் செல்வது வைத்தியர்களுக்குள் சகஜந்தானே? அதற்காகச் சந்தேகப்பட்டால் சாத்தியமாகுமா?'' என்று பிள்ளை மெதுவாகச் சொன்னார்.

''அது போகட்டும். பிறகு அவர் ஏன் வீட்டிற்குத் தினம் வெகு நேரம் கழித்து வருவதன் காரணத்தைச் சொல்ல மறுத்தாராம்'' என்று பவானி கண்ணீரிடையே தந்தையைப் பார்த்து கோபத்துடன் கேட்டாள்.

''அவரை அறிந்துகொள்ள முயற்சிக்காமல் நீ அவர் நடத்தையில் சந்தேகம் கொண்டுவிட்டாய் பவானி! அதனால் நீ அவரை அலட்சியம் செய்ய ஆரம்பித்தாய். மனைவி தன்னை ஏறெடுத்துப் பார்க்கமாட்டேன் என்கிறான் என்று மனம் வெதும்பிய அவர் தமது மனக் கஷ்டத்தைப் போக்க எண்ணி வேறு ஏதாவது அலுவல்களில் நேரத்தைப் போக்க முயற்சித்திருக்கிறார்! ஒரு புருஷன் வீட்டிற்கு ஆவலுடன் ஓடிவருவதற்கு, மனைவி வரவேற்கத் தயாராய் இருந்தால்தானே உற்சாகம் இருக்கும்? படுக்கையிலே கண்ணீர் விட்டுக்கொண்டு வதங்கிக் கிடக்கும் மனைவியைப் பார்த்துத் தாமும் துக்கப்படுவதைவிட வெளியிலேயே சற்று நிம்மதியாக இருக்கலாமென்று

எண்ணி அவர் இரவு வேளைகளில் வெகு நேரம் கழித்து வீட்டிற்கு திரும்பி வந்திருக்கிறார். என்ன இருந்தாலும் அவர் ஒரு புருஷர் அல்லவா? நீ செய்யும் அலட்சியத்தைக் கண்டு தாம் மனம் ஒடிந்து போனதாக ஒத்துக்கொள்ள அவர் கர்வம் இடம் கொடுக்கவில்லை. உன் அன்புப் பிச்சைக்குத் தாம் ஏங்கி கிடப்பதாக வெளியில் சொல்ல அவருக்கு வெட்கமாக இருந்தது போலிருக்கிறது! நீயே யோசித்துப் பார்?''

''யோசித்துப் பார்ப்பதில் பயன் இல்லை அப்பா!'' என்று தடுமாறினாள் பவானி.

''உன் தாயாரின் கோர மரணம் எதனால் ஏற்பட்டது தெரியுமா பவானி? என் நடத்தையில் கொண்ட வீண் சந்தேகம்தான். கேவலம் ஒரு சந்தேகத்திற்கு அந்தப் பேதை தன் உயிரையே அர்ப்பணம் செய்தாள். அவளுடைய பெண்ணான நீயும் தாயைப்போல் சந்தேகத் திற்கு உன் சுகத்தையே பலி கொடுக்கச் சித்தமாயிருக் கிறாய் பவானி. வாழ்க்கையில் நாம் ஒருவரை ஒருவர் நம்பித்தான் ஆகவேண்டும். எதற்கும் சந்தேகமென்றால் உயிர் வாழ்வது சாத்தியமா? தப்பு உன் பேரிலிருக்கிறது. அதை உணர்ந்து அவரிடம் மன்னிப்பைக் கேட்டு அவருடன் வாழ முயற்சிக்க வேண்டியது உன் கடமை. நானே போய் அவரிடம் மன்னிக்கும்படி கெஞ்சுவதா? என்ற அகம்பாவத்திற்கு உன் வாழ்நாள் சுகத்தையே பலி கொடுக்கத் துணிந்து விட்டாய்! பவானி நீ இவ்வளவு படித் திருந்தும் என்ன பயன்? உனக்கு நான் கொடுத்திருந்த சுதந்திரத்தை வீணாக்கிக்கொண்டுவிட்டாய். உன்னைச் சொல்வதில் பிரயோசனம் இல்லை. என்னைத்தான் நொந்து கொள்ள வேண்டும்! ஒரே பெண் என்று உனக்கு நான் செல்லங்கொடுத்து நாளாவிதத்தில் அறிவை ஊட்டக் கஷ்டப்பட்டேனே, அது சுத்த மடத்தனம். கல்வியினால் நீ வீண் அகந்தையையும் குதர்க்க குணத்தையும் தரித்திர சுபாவத்தையும்தான் கொண்டாய் பவானி! என் ஒரே செல்லப் பெண்ணின் வாழ்க்கை வீணாவதைக் காண



என் மனம் கொதிக்கிறது'' என்று பிள்ளை படபடவென்று பேசினார்.

கோபமே கொள்ளாத தன் தந்தையே இப்படிப் பொரிந்து கொட்டியதைக் கண்ட பவானி நடுங்கிவிட்டாள். அவமானம் ஒரு பக்கமும், கோபம் ஒரு பக்கமுமாகப் பொங்கி வர அவள் இடத்தைவிட்டுப் பேசாமல் எழுந்து சென்றுவிட்டாள்.

ஆத்திர உணர்ச்சி தணிந்ததும் பவானி தன் தந்தை சொன்ன வார்த்தைகளைத் திரும்ப நினைத்துப் பார்த்தாள். 'ஒரு சமயம் அப்பா சொல்வது போலிருந்தால் தப்பு என் மேலல்லவா இருக்கிறது? என் அன்புக்கு உருகிக்கொண் டிருப்பவராய் இருந்தால் சுந்தரவதனம் ஏன் இத்தனை நாட்களும் சும்மா இருந்தார். ஜானகி பொய் சொல்ல மாட்டாள். தமயந்தி என்னும் லேடி டாக்டரை இவருக்கு மிகவும் பிடித்திருப்பதாக எழுதியிருக்கிறாளே? இருக்கட் டும். 'எப்படி இருந்தாலும் நான் போய் அவரைக் கெஞ்சப் போவதில்லை' என்ற முடிவுக்கு வந்தாள் பவானி.

## 37

ஆலந்தூர் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களை ஒரு சிறு கைப்பெட்டியில் பவானி அழகாக எடுத்து அடுக்கி வைத்துக்கொண்டாள். அப்பாவும் அத்தையும் என்ன புத்தி சொல்லியும் அவள் கடைசியில் ஆலந்தூர் உபாத்தியாயினி யாகவே காலங் கழிப்பதென்று தீர்மானித்து விட்டாள்.

பெட்டியினுள் கட்டாயம் இருக்க வேண்டுமென்று ஆசையுடன் எடுத்து வைத்துக்கொண்ட கண்ணனின் போட் டோவைத் திரும்ப எடுத்து ஒரு முறை பார்த்தாள். 'கண்ணன் உயிருடன் இருந்திருந்தால் கணவனின் அலட்சி யத்தைக் கூடச் சகித்துக்கொண்டு விடுவோமல்லவா?' என்று நினைத்துக்கொண்ட பவானிக்குப் பளிச்சென்று மகன் இறந்த தேதி ஞாபகம் வந்தது.

'கண்ணன் போன வருஷம் சரியாக நாளைத் தேதிக் கல்லவா என்னைவிட்டுப் போனான்?' என்று நினைத்தவள்

தன்னை மீறிப் பொங்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஆலந்தூர் போவதற்கு முன்பு அவன் சமாதிக்குப் புஷ்பங்கள் போட்டுவிட்டுப் போகவேண்டும் என்று தீர்மானித்தவளாய், மறுபடியும் அவன் படத்தை உற்று நோக்கினாள்.

''கண்ணா! உன் அப்பா உன்னை மறந்தவர், என்னையும் மறந்துவிட்டார். என்னையும் நீ இருக்குமிடத்திற்கே சீக்கிரமாக அழைத்துக்கொண்டு போ!'' என்று பயித்தியக்காரி போல் பிதற்றிவிட்டு விம்மினாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் காலை படுக்கையை விட்டு எழுந்திருந்த பவானி அவசரமாக ஸ்நானம் செய்து விட்டுத் தோட்டத்திற்குச் சென்று தன் கையினாலேயே பூக்களைப் பறித்து மாலையொன்று கட்டினாள். யாரையும் அழைத்துக் கொள்ளாமல் காரில் ஏறிக்கொண்டு, டிரைவரைப் பார்த்து, ''காவேரிக்கரைப் பக்கமாக வண்டியை விடு!'' என்று அதிகாரம் செய்தாள்.

சாலை ஆலமரத்தடியில் கார் நின்றதும் பூக்கூடையைக் கையிலெடுத்துக் கொண்டு இறங்கிய பவானி அப்படியே திடுக்கிட்டு விட்டாள்.

சுந்தரவதனத்தின் கறுப்புக் கார் அங்கே ஒரு மர நிழலில் நிறுத்தப்பட்டிருந்தது! பவானிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

'அவர் எதற்காக வந்திருக்கிறார்! பூஞ்சோலை கிராமத்தின் காவேரி நதியின் அழகைத் தனது காதலி டாக்டர் தமயந்திக்குக் காட்ட வந்திருப்பார் போலிருக்கிறது!'' என்று எண்ணமிட்ட பவானியின் கால்கள் தடுமாற கரையோரத்தில் சாலையிலிருந்து அரை பர்லாங் தூரத்தில் அமைக்கப்பட்டிருந்த, தனது மைந்தனின் சமாதியை நோக்கி நடந்தாள். அங்கே சமாதியருகே அவள் கண்ட காட்சி அவளை மூர்ச்சையடையும் நிலைமைக்கு கொண்டு வந்துவிட்டது.

ரோஜாப்பூ ஹாரங்களால் சமாதியை அழகுபடுத்தி விட்டு சுந்தரவதனம் தமது முதுகுப் பக்கம் பவானிக்குத்



தெரியும் வண்ணம் கொஞ்ச தூரத்தில் சமாதியையே பார்த்துக்கொண்டு அசையாமல் நின்று கொண்டிருந்தார்.

'அவர்கூட ஞாபகம் வைத்திருக்கிறாரா?' என்று ஆச்சரியமடைந்த பவானி தன்னையறியாமல் பாதைப் பக்கத்தில் உதிர்ந்து கிடந்த இலைச் சருகுகளின்மீது காலை வைத்து விட்டாள். சுந்தரவதனம் திடுக்கிட்டு திரும்பியவர் ஸ்தம்பித்துப் போய் ''பவானி!'' என்றார்.

அந்த வார்த்தைக்குத்தான் எத்தனை மகிமை இருக்க வேண்டும்! கருணை பொங்கும் வதனத்துடன் தன்னை நோக்கும் அவரைக் காணக் கூடிய பவானியின் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் வழிந்தோட ஆரம்பித்தது.

''பவானி! இதென்ன?'' என்று அவர் பதறிப்போய் அவள் அருகில் வருவதற்குள், பவானி பயித்தியம் பிடித்தவள் போல் முன்னால் ஓடிவந்து, அவர் காலடியில் சுருண்டு விழுந்து விட்டாள்.

பவானியின் செய்கையைக் கண்டு திகைப்படைந்த சுந்தரவதனம் அவளைச்சட்டென்று தூக்கித் தமது மார்பின் மீது சாத்திக்கொண்டு ''பவானி!'' என்று அன்புடன் அழைத்தார். ஆசை மனைவியைத் திரும்ப எதிர்பாராத விதத்தில் சந்தித்ததனால் ஏற்பட்ட பலவித உணர்ச்சிப் பெருக்கால் அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை.

''கண்ணனை நீங்களும் நேசித்தீர்கள் என்பது தெரியாமல் மோசம் போனேன்!'' என்று பவானி கண்ணீரிடையே திணறினாள்.

''அவன் என் பிள்ளையில்லையா, பவானி! போன வருஷம் இன்றுதான் நம்மைவிட்டுப் பிரிந்தான் என்பதை நான் நினைத்துக் கொண்டேன். அவனுடைய சமாதியையாவது பார்த்துப் போக வேண்டுமென்ற ஆசை தோன்றியது. உடனே ஓடிவந்தேன். நீயும் நானும் என்னதான் கதறினாலும் அவனுடைய மீளா நித்திரை கலையப் போவதில்லை!'' என்று சுந்தரவதனம் கூறிப் பெருமூச்சுவிட்டார்.

''கண்ணன் பிரிவிற்கு நீங்களும் துக்கப்பட்டீர்களா?'' என்று பவானி தேம்பினாள்.

''பரவாயில்லை, பவானி! வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே!'' என்று அவர் தடுமாற்றத்துடன் மொழிந்து கொண்டு அவளுடைய கண்ணீரைத் துடைத்தார்.

பரந்த அவரது மார்பின்மீது தலையை வைத்துக் கொண்டிருந்த பவானியின் உள்ளம் ஒரே வினாடியில் அமைதியை அடைந்து விட்டது. அவரும் பிள்ளையின் பிரிவிற்கு வருந்துகிறார் என்பது அவள் மனதில் ஒரே நிமிஷத்தில் சாந்தியை ஏற்படுத்தி விட்டது. என்ன ஆச்சரியம். கண்ணனைப்பற்றி அவள் கொண்டிருந்த துக்கம் அவர் அருகிலிருக்கும்போது பாதியாகவல்லவா போய் விட்டது? அன்பு கொண்ட இரண்டு உள்ளங்கள் ஒரு துக்கத்தைப் பகிர்ந்து அனுபவிப்பதனால் துக்கம் குறைந்தல்லவோ போய் விடுகிறது!

கண்களை மூடிக்கொண்டு கணவன் அருகிலிருக்கும் இன்ப நிலையில் ஆழ்ந்திருந்த பவானியிடம் குனிந்து சுந்தரவதனம் மெதுவாக காதருகில், ''என்னை இன்னும் வெறுக்கிறாயா, பவானி?'' என்று உணர்ச்சி ததும்பக் கேட்டார்.

கண்களைத் திறந்துகொண்ட பவானி ''வெறுப்பதா உங்களையா? என்னால் முடியவில்லையே?'' என்று சிவந்த கன்னங்களுடன் மெதுவாக மொழிந்தாள்.

''நிஜமாகவா, பவானி?'' என்று மறுபடியும் சுந்தரவதனம் கேட்டுக்கொண்டே கருணை ததும்பும் விழிகளால் அவளை நோக்கினார்.

''நிஜமாகத்தான் சொல்கிறேன். நீங்கள் யாரிடம் அன்பாயிருந்தாலும் சரி, என்னையும் கொஞ்சம் நேசியுங்கள். இதுதான் நான் கேட்டுக் கொள்ளும் அன்புப் பிச்சை'' என்று பவானி வெட்கத்துடன் தனது தோல்வியை ஒப்புக் கொண்டாள்.

''பவானி! உனக்கு நான் ஒருநாளும் துரோகம் செய்ததே இல்லை. என்னை நீ இதுபற்றி நம்பு. உன் மனதைத் தேற்றத் தெரியாது தவித்த நான் வைத்திய



விஷயமாக ஆராய்ச்சியொன்றில் தலையிட்டுக் கொண்டேன். 'இரவு நர்ஸிங் ஹோமி'லேயேபல மணிநேரம் கண் விழித்து நான் செய்த ஆராய்ச்சியின் பயனாக 'கான்ஸர்' என்னும் வியாதியை தொடக்கத்திலேயே தீர்க்கும் சிகிச்சையொன்றைக் கண்டு பிடித்து விட்டேன். என்னுடைய ஆராய்ச்சிகளை, அனுபவ உண்மைகளுடன் ஒரு கட்டுரையாக எழுதி 'அமெரிக்க கான்ஸர் ஆராய்ச்சி சங்க'த்திற்கு அனுப்பியிருக்கிறேன். அது ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் எனக்குப் பெரும் புகழும் கிடைக்கும்'' என்று குதூகலமாகக் கூறி முடித்த அவர் தமது மனைவியின் அழகிய முகத்தை ஊடுருவி நோக்கினார்.

''உங்களை நம்புகிறேன்'' என்று ஒரு வார்த்தையில் தனது உள்ளத்தைத் திறந்து காட்டிய பவானி அவருடைய கண்களைச் சந்திக்கச் சக்தியற்று, முதன் முதலாகத் தன் கணவனைச் சந்திப்பவள் போன்று வெட்கத்துடன் கண்களை மூடிக் கொண்டாள்.

அந்த இன்ப நிலையிலேயே தம்மை மறந்துபோயிருந்த சுந்தரவதனம் திடீரென உணர்வு பெற்றவர்போல், ''பவானி? டாக்டர் தமயந்தியும் நர்ஸ் ஜானகியும் காவேரி நதி அழகைப் பார்க்கப் போனவர்கள் திரும்பி விட்டார்கள். அதோ வருகிறார்கள். டாக்டர் தமயந்தி மிகவும் நல்ல குணமுடைய பெண்மணி. அவளை உனக்கு அறிமுகப் படுத்துகிறேன்'' என்றார்.

நர்ஸ் ஜானகியுடன் கொஞ்ச தூரத்தில் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்த டாக்டர் தமயந்தியைக்கண்ட பவானி கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தாள். ஆகாரம் விழுங்கிவிட்ட மலைப் பாம்பைப்போல் பெருமூச்சு விட்டுக் கொண்டு மிகவும் பருத்து ஐம்பது வயது மதிக்கும் லட்சணமற்ற உருவத்துடன் வரும் டாக்டர் தமயந்தியைக் கண்ட பவானிக்குத் தனது அசட்டுத்தனமான சந்தேகத்திற்காகச் சிரிப்புத்தான் வந்தது.

கண்ணனுடைய சமாதியில் தான் கொண்டு வந்த புஷ்பத்தைப் போட்டு ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்த

பவானியின் அருகில் வந்த நர்ஸ் மெதுவான குரலில் ''பவானி, நீங்கள் ரொம்பப் பொல்லாதவர். எங்கள் டாக்டரை மனமொடியச் செய்துவிட்டு பிறந்த வீட்டில் போய் ஒளிந்து கொண்டு விட்டீர்களே? அவருடைய பரிதாபகரமான முகத்தைக் காணச் சகியாத நான் உங்களுக்கு ஜாடையாகக் கடிதம் எழுதிக் கூடப் பார்த்தேன். பயனில்லை... எப்படியோ ரெண்டுபேரும் சிநேகிதமாகி விட்டாப் போலிருக்கிறது. ரொம்ப சந்தோஷம்'' என்று குறும்புத்தனமாகச் சிரித்தாள்.

பவானிக்கு வெட்கமாயிருந்தது. நர்ஸ் ஜானகி இன்னும் தனது குறும்பு சுபாவத்தைத் திருத்திக் கொள்ளவில்லை. சுந்தரவதனத்தின் பக்கம் பார்த்து, ''டாக்டர் நானும், தமயந்தி அம்மாளும் பவானி காரில் ஏறிக்கொள்கிறோம். நீங்களும் உங்கள் மனைவியும் உங்கள் காரிலே வாருங்கள்'' என்றாள்.

''ஆமாம் டாக்டர் என் ஒருத்திக்குத் தனிக் கார் ஒன்று வேண்டியதுதான்'' என்று டாக்டர் தமயந்தி தனது பருமனைக் குறித்துத் தானே ஹாஸ்யம் செய்துகொண்டாள்.

காரிலே தமது தோள்மீது மிருதுவான தனது கன்னம் படும்படி ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பவானியை நோக்கி சுந்தரவதனம், ''காரை எங்கே விடட்டும் பவானி?'' என்று கேட்டார்.

''நம்முடைய வீட்டுக்குத்தான்! ஆனால் போகும் வழியில் அத்தையிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு போக வேண்டும். இல்லாவிட்டால் என்னைக் காவேரி நதி முழுவதும் தேடிக் கொண்டிருப்பாள்'' என்று பவானி கூறி களுக்கென்று சிரித்தாள்.

'கிர்ர்ர்' என்ற சப்தத்துடன் அந்தக் கறுப்புக் கார் புறப்பட்டது. பலம் பொருந்திய அவரது தோள்மீது சாய்ந்து கொண்ட பவானி கவலையெல்லாம் மறந்து அமைதியான மனதுடன் கணவனுடன் மீண்டும் வாழ்க்கைப் பிரயாணத்தைத் துவக்கினாள்.

★